திருக்குற்றாலத் தலவரலாறு



திருவாவடுதுறை ஆதீனம்
1996

முனைவர் கஸ்தூரி நாகராஜன்

உ

சிவமயம்

திருக்குற்றாலத் தலவரலாறு

இது
திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்து மூன்றாவது குருமகாசந்நிதானமும்
அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி விழாபூஜைக் கட்டளை அத்தார்
அவர்களுமாகிய

சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

அருளாணையின் வண்ணம் திருக்குற்றாலம்
அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா
(யுவ - பங்குனி 23உ, 5-4-1996) அன்று வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
முனைவர் கஸ்தூரி நாகராஜன்
தமிழ்த் துறை
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

திருவாவடுதுறை ஆதீனம்
1996

உ

சிவமயம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக் கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாறும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

- தவத்திரு மாதவச் சிவஞான முனிவர்

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் குரு பரம்பரை விளக்கம்

சீகண்ட பரமசிவம்

|


திருநந்திதேவர்

சனகர் | **சனாதனர்** | **சனந்தனர்** | **சனற்குமாரர்**

சத்தியஞானதரிசனிகள்
பரஞ்சோதி முனிவர்
மெய்கண்ட தேவ நாயனார்
அருணந்தி சிவாசாரியார்
மறைஞான சம்பந்த சிவாசாரியார்
உமாபதி சிவாசாரியார்
உமாபதி சிவாசாரியார்
அருணமச்சிவாய தேசிகர்
சித்தர் சிவப்பிரகாசர்


1.	அருள்திரு **நமசிவாய மூர்த்திகள்** (ஆதினக் குருமுதல்வர்)		
2.	அருள்திரு மறைஞான தேசிகர்	1360	1621
3.	அருள்திரு அம்பலவாண தேசிகர்		
4.	அருள்திரு உருத்திரகோடி தேசிகர்	1621	1625
5.	அருள்திரு வேலப்ப தேசிகர்		
6.	அருள்திரு குமாரசுவாமி தேசிகர்		
7.	அருள்திரு பிற்குமாரசுவாமி தேசிகர்		
8.	அருள்தரு மாசிலாமணி தேசிகர்	1625	1658
9.	அருள்திரு இராமலிங்க தேசிகர்	1658	1678
10.	அருள்திரு வேலப்ப தேசிகர்	1678	1700
11.	அருள்திரு பின்வேலப்ப தேசிகர்	1700	1730
12.	அருள்திரு திருச்சிற்றம்பல தேசிகர்	1730	1770
13.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1770	1789
14.	அருள்திரு (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர்	1789	1845
15.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1845	1869
16.	அருள்திரு (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர்	1869	1888
17.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1888	1920
18.	அருள்திரு சுப்பிரமணிய தேசிகர்	1920	1922
19.	அருள்திரு வைத்தியலிங்க தேசிகர்	1922	1937
20.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1937	1951
21.	அருள்திரு சுப்பிரமணிய தேசிகர் 13-4-1951 முதல் 23-9-1967		
22.	அருள்திரு அம்பலவாண தேசிகர் 23-9-1967 முதல் 7-4-1983		
23.	சீர் வளர் சீர் **சிவப்பிரகாச பண்டாரசந்நிதி** அவர்கள்		

7-4-1983 முதல் இவ்வாதீன ஞானபீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.




சித்திரசபையில் அமைந்துள்ள வண்ண ஓவியம்.
பதம் தூக்கி ஆடும் பரமனின் ஆனந்த நடனம்
அண்டங்களையும் பிரமாண்டங்களையும் இயக்குகின்றது.

திருவாவடுதுறை ஆதீனம்



குருமுதல்வர் அருள்திரு நமச்சிவாய மூர்த்திகள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்
சீர்வளர்சீர் **சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்** அவர்கள்

நூற்குறிப்பு

நூற்பெயர்	:	திருக்குற்றாலத் தலவரலாறு
ஆசிரியர்	:	முனைவர் கஸ்தூரி நாகராஜன்
வெளியிடுவோர்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை அஞ்சல், நாகை மாவட்டம் - 609 803.
வெளியீட்டு எண்	:	433
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு, ஏப்ரல் 1996
வெளியீட்டு நாள்	:	5-4-1996
தாள்	:	மேப் லித்தோ
பக்கம்	:	192
நூல் அளவு	:	10" x 7.5"
எழுத்து	:	வள்ளுவன், 12 புள்ளிகள்
அச்சிட்டோர்	:	ரவிராஜ் ஃபைன் ஆர்ட் பிரிண்டர்ஸ், 6/92 A, அண்ணாமலையார் காலனி, சிவகாசி-626 123. போன் : 25708, 23465
புத்தகக்கட்டு	:	அட்டைக்கட்டு
பொருள்	:	சமயம்
விலை	:	ரூ. 90.00

பொருளடக்கம்

பதிப்புரை

"வம்பார் குன்றம் நீடுஉயர்ரசாரல் வளர்வேங்கைக்
கொம்பு ஆர் சோலைக் கோல வண்டு யாழ் செய் குற்றாலம்
அம்பால் நெய்யோடு ஆடல் அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்"

திருஞானசம்பந்தர்

பாண்டி நாட்டில் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற சிவத்தலங்கள் பதினான்கனுள் சிறந்து விளங்கும் திருக்குற்றாலம் உல்லாசப் பயணிகளின் உள்ளம் கவர்ந்த இடங்களில் ஒன்றாகவும் திகழ்வது. அன்பால் அகம் குழைந்து வழிபடுவர்க்கு அருள் நலம் பெருக்குபவர் குற்றாலநாதர். இயற்கை எழில் வளம் நிலவி உடலுக்கும் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்று சிறப்புகளும் நிறைந்து உயிர்க்கும் உறுதிபயக்கும் தனிச் சிறப்புடைய தலம். திருஞான சம்பந்தப் பெருமான் இவ்விரு நலன்களையும் போற்றிப் பரவும் இனிய தமிழ் கொண்ட பெருமையுடைய தலம்.

குற்றாலத் தலப் பெருமையையும் குற்றாலநாதர் அருட் சிறப்பையும் செந்தமிழில் இலக்கிய நலங்களெல்லாம் புலப்படத் திரிகூடராசப்பக் கவிராயர் எனும் புலவர் பெருமான் அருளிச் செய்துள்ள குற்றாலத் தலபுராணம் பொழிப்புரையுடன் திருவாவடுதுறை ஆதீனத்தில் (வெளியீடு எண் 275) 1973ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. இதனைத் தொடர்ந்து தற்போது அருள்மிகு குற்றாலநாதர் எழுந்தருளி அருள் நலம் பெருக்கும் திருக்கோயில் அமைப்பு, ஐந்து அம்பலங்களுள் சித்திர அம்பலமாக விளங்கும் சித்திர சபை, மலையின் மாட்சி, அம்மலை தரும் இயற்கைச் செல்வங்களாகிய மருத்துவப் பயனளிக்கும் மரம், செடி, கொடிகளின் தனிச்சிறப்பு, முத்தாரம் என இழியும் அருவிகள், அவற்றில் அன்பர்கள் நீராடுதற்கேற்ற வசதிகள், சாரற் பருவகாலச் சிறப்பு, உல்லாசப் பயணிகள் இன்பமுற பருவகாலங்களில் தங்கியிருப்பதற்கேற்ற வாழிட வசதிகள் இன்னபிற நலன்களையெல்லாம் யாவரும் எளிதின் அறிந்து பயன்கொளத் திருக்குற்றாலத் தலவரலாறு எனும்

நூலைப் பராசக்தி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருமதி முனைவர் கஸ்தூரி நாகராஜன் அவர்கள் இனிய நடையில் இயற்றி உதவியுள்ளார்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீன ஞானபீடத்து எழுந்தருளிய காலம் முதல் செந்தமிழ்ச் சிவநெறி வளர்ச்சிக்கும் சமுதாய நல மேம்பாட்டிற்கும் ஆற்றி வரும் நல்லறப் பணிகளின் சிறப்பினை தமிழுலகு நன்கு அறியும். சீர் வளர் சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் இயற்றப் பெற்ற இந்நூல் திருக்குற்றாலநாதர் திருக்கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழா நாளாகிய இன்று *(5-4-1996)* மலர்கின்றது.

அன்பர்கள், சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் அருளாசியொடு இந்நூலினைப் பெற்றுப் பயன் கொண்டு இன்புறுதலை விரும்புகிறோம்.

திருவாவடுதுறை
5-4-1996

திருவாவடுதுறை ஆதீனம்

முன்னுரை

“திருந்த மதிசூடித் தெண்ணீர் கடைக் கரந்து தேவி பாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் ஏலங் கமழ் சோலை யின
வண்டியாழ் செய்
குருந்த மண நாறுங் குன்றிடஞ் சூழ்தண் சாரற் குறும்பலாவே”
- திருஞானசம்பந்தர் தேவாரம்

தேமொழி வளர்ந்த தென்பாண்டி நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்த குற்றாலம்,

“சைவ சமயந் தழைத் தேற - மெய்யடியார்
பத்தி வளர்ந்தேறப் பரம்பொருள் மெஞ்ஞான மெனு
முத்திப் பயிர்கள் முளைத்தேற - சித்துடையான்
பாருடையா னண்டப் பரப்புடையான்”

திருக்குற்றாலநாதர் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

தேவர்களும், முனிவர்களும் விரும்பி வலம் வரும் வேதபூமி திரிகூட மலையிலுள்ள குற்றாலம். வருவோருக்கும், வணங்குவோருக்கும் ஞானத்தை வழங்குவது. இந்திரத்துய்மன் என்பவன் திரிகூட மலையை வலம் வந்ததால் யானை உரு நீத்துத் தேவ உருக் கொண்டு சுவர்க்கம் புகுந்தான். அத்தகைய சிறப்பு மிக்க குற்றாலம் மூர்த்தி, தீர்த்தம், தலப் பெருமையினைக் கொண்டது.

மன்னர்கள் உடல்நலம், மனநலம் காக்க கோயில்களை எழுப்பினர். அக்கோயில்களை நீர்வளமும், நிலவளமும், மிக்கப் பகுதிகளில் தோற்றுவித்து மனிதர்களைச் சான்றோர்களாக்கும் வழிகளைத் தேடித் தந்தனர். மனிதன் மனிதனாகவும், மாண்புடையவனாகவும், பண்பாளனாகவும், தீமைக்கு அஞ்சுபவனாகவும், நன்மையைப் போற்றுபவனாகவும், அன்புடையவனாகவும், அருளாளனாகவும், கண்ணோட்டமுடையவனாகவும், கட்டுப்பாடு

உடையவனாகவும் திகழ வேண்டும் என்னும் அரிய சிந்தனை நோக்குடன் எழுப்பப்பட்டன என்பதற்கு எடுத்துக்காட்டாகக் குற்றாலம் திருக்கோயில் விளங்குகின்றது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் போட்டியிடும் இக்காலத்தில் விஞ்ஞானம் எவ்வாறு காரணக் காரியத் தொடர்பு பெற்று விளங்குகின்றதோ அதே போன்று மெய்ஞ்ஞானமும் காரியத்திற்குரிய காரணத்தை விளக்கும் அறிவு பூர்வமானதே. கோயிலில் நடைபெறும் பூசைகளும் அபிடேகங்களும் விஞ்ஞான அடிப்படையிலேயே அமையும்படி அமைத்துள்ளனர். இத்தகைய விஞ்ஞான அடிப்படையில் அமைக்கப்பட்ட குற்றாலம் திருக்கோயில் அமைதியான சூழலில்அமைந்து பக்தர்களின் மன நலம் வளர்க்கும் உளவியல் கூடமாகவே அமைந்துள்ளது என்றால் அது மிகையன்று.

உடல் நலமும், மனநலமும் வழங்கும் குற்றாலம் வண்டு நுகரா செண்பகக்காடு, கண்டவர்க்கும் வந்தவர்க்கும், வணங்கியவர்க்கும் வரம் அருளும் குற்றாலம் சிவமது கங்கை, செண்பகா அருவி, ஐந்தருவி, பேரருவி, பழையகுற்றாலம், புலியருவி என்னும் அருவிகளால் சூழப்பட்டு இயற்கை எழில் தவழும் திருநகராகத் திகழ்கின்றது.

தரணி பீடத்தையும், சித்திர சபையினையும் கொண்டு விளங்கும் குற்றாலம் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றது. கோயில் வரலாறு என்பது கற்பனைக் கலைக்கூடமன்று. நம் நாடு கடந்து வந்த வரலாற்றினைத் தாங்கி நிற்கும் சின்னங்களே கோயில்கள். வரலாற்று மையமாகத் திகழும் குற்றாலத் திருக்கோயில் பாண்டியர், சோழர்களின் கலை நுணுக்கங்களையும் விஜயநகர ஆட்சிக் கால சிற்பத்திறனையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. பல மன்னர்களின் கலை வண்ணத்தில் மலர்ந்த திருக்குற்றாலத் திருக்கோயில் கூறும் வரலாறுகள் எண்ணில் அடங்கா.

மலைகளாலும், குகைகளாலும், பாறைகளாலும், நீர்நிலைகளாலும் சூழப்பட்ட குற்றாலம் சைவம் தழைத்தோங்கி நிற்கும் திருத்தலம். இத்தலத்தின்

வரலாற்றினை ஒரு நூலாக வடித்தமையைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். இப்பேற்றினை எனக்கு வழங்கியருளிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகா சந்நிதானம் சீர் வளர் சீர் **சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள் திருப்பாதங்களை என் உள்ளத் தடாகத்தில் மலர்ந்த நன்றி மலர்கள் தூவி வணங்குகிறேன்.

திருக்குற்றாலத் தல வரலாறு என்னும் நூலைப் படைப்பதற்கு எனக்குப் பலவகையிலும் உதவியாக இருந்து இந்நூல் வெளி வர ஆர்வம் காட்டிய திருவாவடுதுறை ஆதீனம் திருக்குற்றாலம் கிளை நிர்வாகி சகோதரர் எம். ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நூல் வெளி வருவதற்குத் துணை நின்ற திருக்கோயில் நிர்வாகத்தினர் அனைவருக்கும் என் நன்றி. நூலின் அச்சுப் பிரதியைப் பிழை திருத்தம் செய்து உதவிய பேராசிரியர் அறிவரசன், எழுத்தாளர் முகிலன், ஆய்வுமாணவி பி. சுலோசனா ஆகியோருக்கு என் நன்றி. மற்றும் பல வகையிலும் எனக்கு உதவிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் சிறப்பாக வெளிவருவதற்குக் காரணமாக இருந்த சிவகாசி, ரவிராஜ் ஃபைன் ஆர்ட் பிரிண்டர்ஸ் அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

கஸ்தூரி நாகராஜன்

குற்றாலம்

30.3.1996

A BRIEF HISTORY OF COURTALLAM

Courtallam, 'the Spa of South' can be rightly called an abode of Nature's bounty as Dame Nature has lavishly bestowed her riches everywhere offering to the observer a lingering sensation through its vast stretches of hills and dales, rambling brooks and ringing streams, silvery cascades and sonorous music of the majestic water flow, the carpet of verdent green and white clouds dallying with the blue sky and showers of breeze carrying the fragrance of forest blooms. All these splendours of nature cumulatively shed an aroma of a healthy climate and a pleasant atmosphere making us merge with its beautiful surroundings with lots of excitement. Courtallam not only gives us mental relaxation but also passes for a place of pilgrimage. As a pilgrimage centre it has its own importance and speciality.

At Courtallam Our Nirutha Samrat Nataraj has performed his Glittering Dance at Chithra Sabha, one among the five sabhas. When we hear the roaring sound of the falls it is assumed to be the orchestra to his majestic dance. Though Courtallam is popular among the people as a tourist spot, it has greater speciality for pilgrimage purposes too.

Now we shall turn back to enjoy the beauty of the Silver cascades. We have nine important eye-catching falls namely, 1. Honey falls, 2. Shenbagadevi falls, 3. Main falls, 4. Chitraruvi, 5. Five falls, 6. Orchard falls, 7. Tiger falls, 8. Old falls, 9. New falls.

Honey falls:

The name honey falls is derived due to the presence of millions of hives clustering around it and through which the water is forcing down. This falls is about 4 kms north east of Courtallam. The river Chitra Ganga has got an origin well over 300 ft. above honey falls and honey falls is the starting place of its journey. The peeping of sunrays through the tiny spaces between the trees makes the water twinkle like a star.

Shenbagadevi falls:

After its journey over 2 km the river Chitra Ganga likes to add to its beauty and elegance. Its fond desire to this effect is fulfilled with the formation of Shenbagadevi falls. The value of the falls lies in its immense medicinal plants and herbs flourishig on its course. The place of Shenbagadevi falls is blessed with a pleasant atmosphere.

Main falls:

After passing over Shenbagadevi falls, the river Chitraganga courses through a thick forest of giant trees and a number of medicinal herbs, falls into a deep sea called 'Pongu Mangadal' and showers throughout the entire rock. At main falls we can get sight of the actions, dances performed by our ancestors, the monkeys. Once we take bath at Main falls, it keeps us trim and healthy.

Chitraruvi:

Chitraruvi is a branch of Shenbahadevi falls. At chitraruvi the natural water flow is brought to bathrooms; therefore we have separate compartments for men and women for bathing.

Five falls:

About a distance of 3 km from Main falls, there is a beautiful falls called five falls. It appears like our five fingers. The water comes down through the bunch of tendrils.

Orchard Falls:

Near five falls there is a place belonging to the Department of Horticulture. They maintain the Orchard falls, which is meant only for VIPs. The place is surrounded by tall trees, fruit bearing trees and plants with beautiful flowers.

Tiger falls

About 1 km eastwards of Courtallam Main falls, we can find the Tiger falls. There is a belief that formerly tigers used to quench thirst and play with their mates at this place. It is also called as Pasupatha falls, from where Arjuna got the Pasupatham from Lord Siva.

Old Falls

About 7 km from Courtallam there is a very famous falls called the old falls. It is said that this is the most ancient of all falls. This is beautifully maintained by the Public Works Department. Here, the water flows from a great height with a roaring sound. Arrangements are made by the Public Works Department to reduce the intensity of water and provide facilities for bathing.

New falls

There is a falls above the Tiger falls called New falls. Arrangements are now made to have comfortable bathing.

Courtallam is an ideal pilgrim spot

In courtallam we have a famous temple for Courtallanadhar, the Siva. It is exclusively sung by Thirugnana Sambandhar. During the Divine wedding of Shiva and Goddess Uma there was a great crowd at Kailasa, so there arose an imbalance. To avoid this imbalance Sage Agasthya was told by Lord Shiva to stay at South for restoring balance. So Agasthya came to Pothigaimalai, where the peaks join triangularly. So the place is named as Thirukootachalan and the Deity is called Thirikootachalapathy, with his consort Goddess Kuzhalvoimozhi to his right and the sacred Darari peetan Sri Parasakthi to his left. The triangularly shaped peaks are the symbols of Brahma, Vishnu and Rudra. The entire area of Courtallam itself is in the conch shape.

The Courtallam falls is considered as a sacred one. The river Chitraganga is believed to be Ganges of the South. People believe that bathing in the falls purifies us of our sins. Also a sacred tree named Kurumpala is at Courtallam. This is the place where Gajendra Moksha happened. Lord Vishnu sees this sacred area seated on his Garuda Vahanam.

The word Kuthalam is defined as 'Ku'- the birth and 'Thalam'- to relinquish, that is, people obtain Mukthi by giving up all the sins. Hence Courtallam is an ideal pilgrimage spot.

Medicinal value


At Courtallam there are many medicinal herbs. There are more than 2000 medicinal herbs available at Courtallam. The salubrious climate in Courtallam favours the growth of these plants.

These medicinal plants can cure many incurable diseases. There are many mental asylums in Courtallam.

Chitra Sabai

There is one famous Chitra sabha which is one of the five sabhas of Lord Nataraja who performs the cosmic dance as admired by the great Gnanasambhandhar. The sabha is dedicated to Lord Nataraja and decorated with paintings of rural deities, devotees, puranic stories and religious events.

அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயில்
குற்றாலம்



சுவாமி உள்பிரகாரம்

1. அதிகாரநந்தி
2. சூரியன்
3. தெஷணாமூர்த்தி
4. மஹா விஷ்ணு
5. பிரமா
6. சண்டேஸ்வரர்
7. கும்பமுனி
8. பிரமா
9. ப்ராஹ்மி
10. மகேஸ்வரி
11. கௌமாரி
12. வைஸ்ணவி
13. வராகி
14. இந்திராணி
15. சாமுண்டி
16. மகாலெஷ்மி
17. அய்யனார்
18. ப்ராஹ்மி
19. நாராயணர்
20. மஹா விஷ்ணு
21. நரசிம்ம மூர்த்தி
22. கன்னி விநாயகர்
23. பஞ்சமூர்த்தி
24. சந்திரன்
25. வான்மீக நாதர்
26. சம்புகேஸ்வரர்
27. அண்ணாமலைநாதர்
28. காளத்தியப்பர்
29. ஸ்ரீ மூலநாதர்
30. ராமலிங்கம்
31. சுப்பிரமணியர்
32. சனீஸ்வரர்

வெளிப்பிரகாரம்

33. விநாயகர்
34. துவார பாலகர்
35. சுப்பிரமணியம்
36. நடராஜர் அபிசேக மண்டபம்
37. நந்தி
38. கொடிமரம்
39. நமஸ்கார மண்டபம்

அம்பாள் கோயில்

40. குழல்வாய்மொழி அம்மன்
41. கைலாசநாதர்
42. துர்க்கை அம்மன்
43. பள்ளியறை

தெற்கு வெளிப் பிரகாரம்

44. பூதம் பிரக நாதர்
45. அறுபத்தி மூவர்
46. வல்லப கணபதி
47. சைலப்பர்
48. நன்னகரம் பெருமாள்

மேல்பிரகாரம்

49. பாதுவினாசர்
50. உலகம்மாள்
51. நெல்லையப்பர்
52. காந்திமதிஅம்மன்
53. மணக்கோலநாதர்
54. நாரம்புநாதர்
55. சங்கரலிங்க நாதர்
56. பால்வண்ணநாதர்
57. ஒப்பனை அம்மன்
58. சொக்கலிங்கம்
59. மீனாட்சி அம்மன்
60. அய்யனார்
61. மதுநாதோல்வார்
62. அறம் வளர்த்த நாயகி
63. அகஸ்தியர்
64. வாசுகி
65. சோமலிங்கம்
66. சகஸ்தாலிங்கம்
67. மகாலிங்கம்
68. காசி விஸ்வநாதர்
69. விசாலாச்சி
70. சாஸ்தா

வடக்கு பிரகாரம்

71. சிவாலய முனிவர்
72. பைரவர்
73. பராசக்தி அம்மன்
74. யாகசாலை
75. நவகிரகம்

திரிகூட மண்டபம்

76. அம்பல விநாயகர்
77. ஆறுமுக நயினார்
78. திருவாதிரை மண்டபம்
79. வசந்த மண்டபம்

வெளிவீதி

80. செண்பக விநாயகர்
வடக்குவீதி (வாசல்)
81. கருப்பசாமி (பதினெட்டாம் படி)
82. சின்ன தம்பி

91.	குற்றாலநாத சுவாமி
92.	அணிக்கை விநாயகர்
93.	நடராஜர்
94.	உற்சவர்


திருவாவடுதுறை ஆதீனம் - குற்றாலம் கிளைமடம்




பிரதான அருவி



பழைய குற்றால அருவி




செண்பகாதேவி அருவி



ஐந்தருவி



திருக்குற்றாலத் திருக்கோயில் இராசகோபுரம்



கோல மாங்குயில் கூவும் குற்றாலம்
திருக்கோல உருவங்கள் திருவாயிலாகக் கொண்ட குற்றாலம்
திரிகூட மலை யன்ன இராச கோபுரம்
திகழ் திருக்குற்றாலத் திருக்கோயில்

இராச கோபுரத்தின் மற்றொரு தோற்றம்



திருக்குற்றாலத் திருக்கோயில் முன் வாயில் விதானம்



பொன்னின் மாமணி தூங்கும் விதானம்
கலைஞனின் கைவினையில் மிளிரும் விதானம்
தோற்றமும் ஒடுக்கமும் இலாத் திருக்குற்றாலம்
திருக்கோயில் நுழைவாயில் செம்மாந்த விதானம்

அம்பல விநாயகர்




"மாமதத் தருவி பாயு மலையென வளர்ந்த மேனி
காமலி தருப் போ லைந்து கைவலான்"
இரண்டாம் வாயில் இடம் நின்று பக்த கோடிகளுக்கு அருள் பாலிக்கிறார்.

இரண்டாம் நுழைவாயில் வரவேற்பு மண்டபக் கோபுரம்




திருத்தமிக்க வண்ணச் சோலையாம் வரவேற்பு மண்டபம்
வியக்கத் தக்க வண்ணமலர்க் கூட்டமாய்ப் பக்தர்கள்
அருள்பெற நுழைவாயிற் சிகரமாய் ஓங்கி
மர வண்ண மாச்சிற்பம் திருவாயிலுக்குத் தோரணமலை

பெரிய செம்புலி சின்னணஞ்சாத்தேவர் (கி.பி. 1660-1721)




குற்றாலத்திற்கு அருகிலுள்ள வடகரையில்
சிற்றரசாய்த் திகழ்ந்து சீராய்த் திருப்பணிகள்
திருக்குற்றாலத் திருக்கோயிலுக்குச் செய்வித்து
திருச் சபைக்குச் செப்பேடு வேய்ந்து
கோயில் வரலாற்றில் இடம் பெற்ற
பெரிய செம்புலி சின்னணஞ்சாத் தேவர்

சின்னப்பட்டம் இராசகோபாலத் தேவர்



வடகரை சிற்றரசாம் பெரிய செம்புலியின்
இளையபட்டம் சைவராய்த் திகழ்ந்து
திருக்குற்றாலக் கோயில் வளர்ச்சிக்கு
செம்மையாய் இயற்றிய திருப்பணிகள் எண்ணரியவாம்

முனிவர்



மலைகளால் சூழப்பட்ட திருக்குற்றாலத் திருத்தலக் குகைகளில் தவமியற்றிய தவமுனிவர்களின் திருவுருவச் சிலைகள் சிற்ப வல்லுநர்களின் சிந்தையில் மலர்ந்து கற்றூண்களில் பேசுகின்றன. அவற்றினுள் ஒன்று இங்குச் சிந்தையை தூண்டுகின்ற சிற்பமாக நுட்பமாக விளங்குகிறது.

முனிவர் சிற்பம்



உலகத்தார் உய்தியடைய உயர்ந்த வழியைச்
சித்தாந்தமாயும் ஞானக் கோவையாகவும் சமர்ப்பித்த
சித்தர்கள் கோடி வாழ்ந்து ஓம்நமசிவாய
வென்ற அட்சரத்தை போதிக்கும் வாகீசர்களாய்
விளங்கிய ஞானாசிரியர்கள் வாழ்ந்த திருக்
கையிலாய மலை என்னும் திருக்குற்றால
முனிவர் திருவுருவம் சிற்பமாய் நாக நிழலில்

அகத்திய முனிவர்




திருமாலைச் சிவனாக்கிய குறுமுனிவர்
மும்மூர்த்தி வடிவச் சிவலிங்கமூர்த்திக்கு மகுடாகம
மந்திரங்களைக் கொண்டு பூசித்து
மகிழும் திருக்காட்சி

குறுமுனிவர் திருஉருவச் சிலை



தமிழ் இலக்கணம் வகுத்த அகத்திய மாமுனிவர் தண் நிழல் சூழ் திருக்குற்றாலத்தில் பரசிவவடிவமாக்கி பரமனை வழிபட்ட கரகமாமுனி நிலவுலகத் திருக்கயிலையாம் திருக்குற்றாலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

சதாசிவம்



*"அஞ்சுமுகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே"*


(திருமந்திரம்)

குறும்பலாநாதர்



கங்கை வார்சடை யோகீ நமோநம
கஞ்சன் மாலறி யாதாம் நமோநம
மங்கை யாமளை பாகா நமோநம
மந்த்ர ஞானசொ ரூபா நமோநம
சங்க வீதவி லாசா நமோநம
சம்பு நாதவி னோதா நமோநம
செங்கை மான்மழு வாளா நமோநம
செண்ப காடவி நாதா நமோநம"
(திருக்குற்றாலத் தலபுராணம்)

குறும்பலா



கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ் சதுர் வேதங்கிளைக ளீன்ற
களையெலாஞ் சிவலிங்கங் கனியெல்லாஞ் சிவலிங்கங் கனிக ளீன்ற
சுளையெலாஞ் சிவலிங்கம் வித்தெலாஞ் சிவலிங்க சொரூகமாக
விளையுமொரு குறும்பலாவின் முளைத்தெழுந்த சிவக் கொழுந்தை வேண்டு"
(திருக்குற்றாலக் குறவஞ்சி)

சிற்பத்திறன்




திருக்குற்றாலத் திருக்கோயிலின் கலைஞர்களின்
கற்பனைத் திறன் மிளிர்கின்றது.

சிவலிங்கம்



திருக்குற்றாலநாதர் திருக்கோயிலில் நாக பீடத்தில்
சிவலிங்கம் அமர்ந்தருள்பாலிக்கும் சிற்பம்
நமஸ்கார மண்டபத் தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதி குறும்பலா




ஓங்காரத்தின் விரிவாகிய மறைகள்
குறும்பலா மரமாக நின்று தவங்கள்
இயற்றி ஞானமயமான தண்நிழல்
தரும் குறும்பலா.

வீரர் உருவச் சிற்பம்



வீரத்தின் விளை நிலமாம் தமிழ் மண்ணில்
வீரத்திருக்கூட்ட வீரவரலாறு ஏட்டில் மட்டும் அல்ல
கல் ஏட்டி லுமுண்டு சிற்பத் தூணிலுமுண்டு
திருக்குற்றாலத் தூண்கள் பேசுகின்ற வீரர்களின்
வீர வரலாறு எண்ணற்றவை.

சித்திரசபை மர விதானம்



சிவப்பு, பச்சை, வெண்மை, மஞ்சள் வண்ணங்களால்
பூவேலைப்பாடுடைய ஓவியங்கள் நிறைந்த மரவிதானம்

துவார பாலகர்



சித்திர சபையில் நாயக்கர்கால கலை நுணுக்கத்துடன் ஓவியமாக்கப்பட்ட துவாரபாலகர் கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் அளிக்கும் வகையிலுள்ளது.

சித்திர சபை




"போதவடி வாகியொரு பூத ஏறி யாத
நாதவெளி வீடுதனி லாடுமொரு நாதன்
ஆதிபரை காணவரு நாகநட மாடும்
தீதில்பர மானசபை சிற்சபை யதாமால்"

விநாயகர் ஓவியம்



சித்திரசபையின் மகாமண்டபச் சுவற்றில் விநாயகர் வண்ண ஓவியங்களாக இருந்து அருள்புரிகின்றார்.

வாசுகி




திருவைந்தெழுத்தை அகத்தியரிடம் பணிந்து பெற்று, திருவெண்ணீறு அணிந்து, சிற்சபையில் இறைவன் ஆடும் திருநடனம் காண தவம் செய்து, கோயிலில் தெய்வமாக வீற்றிருந்து அருள் புரியும் வாசுகி.

கங்காள மூர்த்தி



வாமன மூர்த்தி செருக்கடைந்த காலத்தில் அவர்
முதுகின் முழு வெலும்பாகிய கங்காளத்தை வீணாதண்ட
மாகக் கொண்டு வந்த சிவன் சித்திரசபையில்
ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளார்.

ஊர்த்த தாண்டவம்



சப்த தாண்டவங்களுள் ஒன்றான ஊர்த்த தாண்டவம் இறைவன் காளியுடன் ஆடியது. இத்தாண்டவம் சித்திரசபையின் வெளிப்புறச் திருச்சுற்றில் ஓவியமாக்கப்பட்டுள்ளது.

சித்திர சபையில் அன்னை மீனாட்சி ஓவியம்



இயற்கை மூலிகைககளையும் விலங்குகளின் கொழுப்பினையும் கொண்டு அழியா ஓவியங்கள் நிறைந்த சித்திர சபையில் அன்னை மீனாட்சியும் இறைவனும் கொலுவீற்றருளும் காட்சி, கருத்திற்குப் பெரும் காட்சி

காளி



கோபாக்கினியால் தாருகனை நீறாக்கியவளும், பைரவ மூர்த்தியைத் தோற்றுவித்தவளும், சிவமூர்த்தியிடம் நடனவாதம் செய்தவளும், காளன் என்னும் வீரபத்திரனை மணந்தவளுமாகிய காளி சித்திரசபையில் ஓவியமாகக் காட்சியளிக்கிறாள்.

திருக்குற்றாலத் திருத்தலம்

திருக்குற்றாலம் மூர்த்தி, தலம், தீர்த்தம், என்னும் மூவகையாலும் சிறப்புடைய தலம். திருவாரூர், காளகத்தி, தில்லை, மதுரை, காஞ்சி ஆகிய திருத்தலங்களில் இறைவன் ஒவ்வொருவருக்கும் அருள் செய்வதற்காக எழுந்தருளியுள்ளார். ஆனால் ஊழிதொறும் உலகமெல்லாம் மீண்டும் படைத்தற்காக இங்கு அருள் நிலையில் அமர்ந்து உலகமனைத்தும் உய்வதற்காக அமர்ந்துள்ளார். மூலக்கனலும், பிரசண்டவாயுவும், வெள்ளமும் அண்டங்களை அழிக்கும் போதும் அழியாது நிலைபெற்றிருக்கக் கூடிய புண்ணியத் தலம். தானமும் தவமும் ஒருவர் புரியினும் சிவமகிமை விளங்கும் திருக்குற்றாலத்துச் சிவபிரானைப் பணிவார்க்குத்தான் பாவம் நீங்கும். இதை,

"தருமமே கருதித் தானந் தவம்பல புரிந்தாரேனும்
திருவளர் திருக்குற்றாலச் சிவபிரான் சந்தி தானம்
துருவினர் பணிவார்க் கன்றித் தொலைத்திடலரிது பாவம்
பரிதிசன் னிதியி லன்றிப் பஞ்சினைச் சுடுமோ காந்தம்"

என்னும் தல மகிமைச் சுருக்கம் 9-வது பாடல் கூறுகின்றது.

உணர்வொருங்கு நினைந்தார்க்கு அருள் தருவது திருவருணை, தரிசித்தார்க்குப் பேறு தருவது சிதம்பரம், பிறந்தார்க்கு அருள் தருவது திருவாரூர், இறுதிக் காலத்தில் தங்கி இறந்தார்க்கு முத்தி தருவது காசி. பிறந்தார்க்கும், இறந்தார்க்கும் தரிசித்தார்க்கும், நினைத்தார்க்கும் அழியா முத்தியைக் கொடுப்பது குற்றாலம்.

குற்றாலம் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் 167 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. தென்னாட்டிலுள்ள பொதிகைமலையில் அமைந்துள்ள குற்றாலம் சைவத்திருத்தலமாகவும், சுற்றுலா மையமாகவும் அமைந்துள்ளது. குற்றாலம் 5 கிலோமீட்டர் கிழக்கில் உள்ள தென்காசியுடன் போக்குவரத்து சாலையினால் இணைக்கப்பட்டுள்ளது. தென்காசி இரயில் நிலையத்தில் இறங்கிக் குற்றாலம் வருவதே சாலச்சிறந்ததாகும்.

குற்றாலம் 1895 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டது. இந்நிலப்பரப்பில் நன்செய் நிலம் 617.50 ஏக்கரும் புன்செய் நிலம் 1080 ஏக்கரும், புறம்போக்கு நிலம் 197.50 ஏக்கரும் உள்ளன. இங்கு மொத்தக் குடியிருப்பு வீடுகள் 1462. குற்றாலத்தில் மொத்தம் 6810 ஆண்களும், 6906 பெண்களும் வாழ்ந்து வருகின்றனர். பள்ளி செல்லும் சிறுவர், சிறுமியர் மொத்தம் 669.

திரிகூடமலை சூழ்ந்துள்ள குற்றாலம் தேனருவி, செண்பகாதேவி அருவி, வடஅருவி அல்லது பேரருவி, சிற்றருவி, ஐந்தருவி, பழத்தோட்ட அருவி, புது அருவி, புலியருவி, பழைய அருவி, என்னும் அருவிகளால் சூழப்பட்ட அழகு மிளிரும் அற்புத நகர். இயற்கை வளமும் காடுகளும், சோலைகளும் நிறைந்த குற்றாலத்தை,

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பர்
கமன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரையெழும்பி வானின் வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே"

என்று திரிகூடராசப்பக் கவிராயர் பாடுகிறார்.

எல்லை

தொன்மையில் செண்பக மரங்களால் சூழப்பட்டு வண்டுகளின் இன்னிசையும், அருவியின் வீழிசையும் நிறைந்திருக்க குளிர்ச்சி பொருந்திய குற்றாலம் பச்சைக் காட்டில் கொலு வீற்றிருந்தது, அப்போது குற்றாலத்திற்கும் சிந்தாமணிக்கும் அருகிலுள்ள திட்ட விநாயகர் கோயில், செங்கோட்டையிலுள்ள நித்திய கல்யாணி அம்மன் கோயில், வல்லம் காட்டுவா பள்ளிவாசல், மத்தளம்பாறை ஆகியன எல்லைகளாக விளங்கின. இன்று கிழக்கே தென்காசி, தெற்கே மத்தளம் பாறை, வடக்கே செங்கோட்டை சூழ்ந்திருக்க குற்றாலம் வருபவர்க்குத் தென்றலை வாரி வழங்குகிறது.

குற்றாலத்தைச் சுற்றி, நன்னகரம், மேலகரம் என்று மறையவர் பொருட்டு உருவாக்கப்பட்ட பிரம்மதேயச் சிற்றூர்கள் இன்றும் உள்ளன. மேலகரம், நன்னகரம் ஊர்கள் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளன. மேலகரம் விநாயகர் கோயிலில் குற்றால நாதருக்குப் பூசைக்குரிய இறையிலி நிலங்கள் வழங்கப்பட்ட செய்தி இடம்பெற்றுள்ளது. கொல்லம் ஆண்டு 853 என்று ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளது. இதே மேலகரத்தில் கி.பி. 1854 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று துளசிமடம், என்னும் பெயருடைய மடத்தில் காணப்படுகிறது. ஓர் இஸ்லாமியரால் கொடுக்கப்பட்ட சர்வமான்யம் பற்றிய செய்தி இடம் பெறுகிறது.

நன்னகரத்திலுள்ள 'முத்தையா பண்டாரம்' மண்டபத்திலுள்ள கல்வெட்டு கி.பி. 1903 ஆம் ஆண்டைச் சார்ந்தது. பழனி பண்டாரத்தின் மகன் முத்தையா பண்டாரம், 'முத்தையா பண்டாரம்' மண்டபம் ஒன்று அமைத்து அதில் இறைவனையும் குழல்வாய்மொழியினையும் எழுந்தருளச் செய்வித்து தின பூசைகள் நடத்தி வந்துள்ளார். அதற்கான நிலமும் நன்கொடையாக வழங்கப்பட்ட செய்தி உள்ளது. நன்னகரம், மேலகரம் இரண்டும் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஊர்களாக இருந்து வந்துள்ளன. திருக்குற்றாலநாதர் கோயிலுக்கு கணக்கு எழுத நியமிக்கப்பட்ட கணக்கர்கள் வாழ்ந்த இடம் நன்னகரமாகும். சிவாச்சாரியர்கள் வாழ்ந்த இடம் மேலகரம். தற்போதுள்ள குடியிருப்பு என்னும் ஊர் தொன்மைக் காலத்தில் இல்லை. கோயிலைச் சார்ந்த வயல்கள் சூழ்ந்த இடமாகவே குடியிருப்பு இருந்துள்ளது. அங்கு ஒரு சாமியார் குடிசை அமைத்து வாழ்ந்து வந்ததால், "சாமியார் குடியிருப்பு" என்று அப்பகுதிக்குப் பெயர் ஏற்பட்டு, பின்னால் 'சாமியார்' என்னும் சொல் மறைந்து குடியிருப்பு என்னும் பெயர் நிலைத்து விட்டது.

ஞானசம்பந்தர் போன்றவர்களாலும் போற்றப்பட்ட நன்னகரத்திற்கு ஒரு முறை ஆண்டான்கவிராயர் வந்தருளினார். அவருக்கு அவ்வூரில் வாழ்ந்த மக்கள் உணவு வழங்க மறுத்ததனால், சிறுவயதிலேயே அறம் பாடும் திறமுடைய ஆண்டான் கவிராயர் "எவன் சொன்னான் இவ்வூரை நன்னகரம்" என்று கூற அவ்வூர் அழிந்ததாகக் கூறப்படுகிறது.

வடக்குத் திசையில் காசிமேஜர்புரம், இலஞ்சி போன்ற கிராமங்கள் உள்ளன. இலஞ்சி தொன்மையும், வளமையும் மிகுந்த இடம். நீர் நிலைகள்

சூழ்ந்த இடமே இலஞ்சி. இயற்கை நலம் மிக்க இலஞ்சியும் குற்றாலத் தலத்திற்குப் பெருமை சேர்க்கின்றது. தொன்மையில் குற்றாலத்திற்கு அருகிலுள்ள ஆயிரப்பேரி மிகச் சிறந்த நகரமாக விளங்கியுள்ளது. அங்கு வாழ்ந்த இராஜகோபாலத் தேவர் திருக்குற்றாலம் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ததாகக் கூறப்படுகின்றது. ஆயிரப்பேரியிலிருந்தவர்கள் வைணவர்கள். இவர்கள் நன்னகரப் பெருமாள் என்னும் வைணவத்திருக்கோயிலை அமைத்துப் பரிபாலனம் செய்து வந்தனர் என்பதாகச் செல்லப்பா என்பவர் கூறினார். தென்காசி நகரம் பராக்கிபாண்டியனால் உருவாக்கப்பட்ட பின் ஆயிரப் பேரியில் வாழ்ந்த வைணவர்கள் தென்காசிக்குக் குடியேறியிருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது.

பிற்காலப் பாண்டியர்களுக்கு முன் குற்றாலத்திற்குக் கடையநல்லூர், அச்சம்புதூர், வடகரை, காசிதர்மம், பண்பொழி வழியாகத் தான் மக்கள் வந்தனர்.

தற்போது சாம்பவவடகரை என்று அழைக்கப்படும் விந்தன் கோட்டையிலுள்ள திருக்கோயிலின் கருவூல அறையில் 1½ ஆள் உயரத்தில் குற்றாலம் கோயிலுக்கு வருவதற்குச் சுரங்கப்பாதை இருந்துள்ளது. அர்த்த சாம பூஜைக்கு மன்னரும் இராணியும் வருவதற்கு இச்சுரங்கப்பாதை பயன்பட்டதாகக் கூறப்படுகின்றது. தென்காசி குலசேகரநாதர் கோயிலுக்கும் குற்றாலநாதர் கோயிலுக்கும் சுரங்கப்பாதை இருந்ததாகவும் கருத்து நிலவுகிறது.

அகத்தியர் வருகை

இமயமலையில் பார்வதி திருமணம் நிகழ்ந்த நாளில் மூவுலகமும் அங்கு ஒருங்கு கூடியிருந்தமையால் வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர்ந்தது. தேவர் கூட்டத்திற்குச் சமமாக அகத்திய முனிவர் ஒருவரே இருந்ததால், அவரை இறைவன் திரிகூடமலைக்கு அனுப்பினார். உலகமாகிய பெரும் பாரத்தைத் தாங்கும் தராசுக்கோலில் இமயம் ஒரு தட்டாக அதற்கு நேர் எதிர்த் தட்டாக நின்றது குற்றாலம்.

குற்றாலம் திருக்கோயில் வைணவர் கோயிலாக முன் திகழ்ந்தமையால் மந்திரமும் மருந்துமாகிய திருவெண்ணீறும், உருத்திராக்கமும் தரித்துக்

கோயிலுக்குச் செல்ல முயன்றபோது அகத்தியர் தடுத்து நிறுத்தப்பட்டார் என்று புராணங்கள் கூறுகின்றன.

கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை பாண்டி நாட்டில் சைவசமயம் தீவிர வளர்ச்சியடைந்தது. பல்லவ மன்னர்களில் மகேந்திரவர்மன் சமண சமயத்தவனாக விளங்கியது போல பாண்டிய மன்னர்கள் சிலரும் சமணர்களாக விளங்கியதால் சமணசமயத்தின் ஆதிக்கம் படர்ந்திருந்தது. இதன் விளைவால் சைவசமயத்திற்குத் தீவிர ஆதரவு அளிக்கத் தலைப்பட்டனர். நாயன்மார்களைப் பாண்டிய நாட்டிற்கு வரவழைத்துச் சமயப் பணிகள் சிறக்கச் செய்தனர். நெடுமாறன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், ஆகியோரின் சைவ சமயப் பற்றுத் தீவிரமாக விளங்கியது.

நாயன்மார்களில் குறிப்பிட்டத் தக்கவர்களான அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் மூவரும் பாண்டிய நாட்டில் தீவிரச் சமயப்பணி ஆற்றியுள்ளனர். பக்தி இயக்கம் தோன்றியது. அப்போது இவர்கள் அரிய பணிகளைச் செய்தனர். தேவாரப் பாடல்கள் வழி மக்கள் மனத்தில் சைவச்சமயக் கருத்துகளை ஊன்றினர். கூட்டு வழிபாட்டின் விளைவால் சமுதாய ஒற்றுமைக்கு வழி காட்டினர். சாதி இன வேறுபாடுகள் பெருகிக் கொண்டிருந்த வேளையிலும் இவர்கள் மக்களை ஒன்றுபடுத்தும் கூட்டு முயற்சியில் சமயச் சேவை செய்தனர். சமயப் பணியுடன் சமுதாயப் பணியும் செய்த நாயன்மார்கள், பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்று வசதி படைத்தவர்களிடம் உதவி வேண்டிக்கரமும் நீட்டினர். நாயன்மார்கள் சைவசமயத்தை வளர்க்கச் சமயப்பணியையும் சமுதாயப் பணியையும் மேற்கொண்ட காலத்தில் வைணவர்களும் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

பன்னிரு ஆழ்வார்களுள் நால்வர் பாண்டிய நாட்டில் தோன்றியவர்கள். நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், மதுரகவியாழ்வார், ஆகிய நால்வரும் பாண்டி மண்டலத்துத் தோன்றியவர்கள் ஆவர். பாண்டிய மன்னர்களில் நெடுஞ்சடையன் பராந்தகன் ஆழ்ந்த வைணவன். இம்மன்னன் பரம வைணவன் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தான் என்பது

குறிப்பிடத்தக்கது. பாண்டிய நாட்டில் திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, திருவில்லிபுத்தூர், வானமாமலை ஆகியன வைணவத் திருப்பதிகளாகும்.

சைவ மதமும், வைணவ மதமும் தழைத்தோங்கிய காலத்தில் தங்களுக்குள் சமயக் காழ்ப்புணர்வு கொண்டு போராடிய செய்தியினையே அகத்தியர் புராணம் வெளிப்படுத்துகின்றது.

வைணவர்களால் தடுத்து நிறுத்தப்பட்ட அகத்திய மாமுனிவர் இலஞ்சிக் குமரனைச் சென்று வணங்கினர்.

"வேலை நெடுங் கடல் குடித்த வீர
நெடுங் குன்றிடித்த வேலினானே
காலை வரு செங்கதிரே மாலை மதியமே
கயிலைக் கடவுள் வாழ்வே
வாலை சவுந்தரி கௌரி திரு வயிறு
வாய்த்த முழு மணியென் பாற்
பாலையுந் தேனையு மதுரப் பாகையும்
மறை பொருளைப் பாலித் தானே"

(திருக்குற்றாலத் தலபுராணம் ப.356)

துதி நலம் உவந்த அகத்திய முனிவரிடம் "நினக்கு வேண்டும் வரமினைக் கேட்பாய்" என்றார். உடனே அகத்தியர் தனக்குக் குற்றாலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாட்டினைக் கூறினார். "வஞ்சக மறையோரை வஞ்சக வடிவத்தாலே வெல்ல வேண்டும். ஆதலால், நீ வைணவர் கோலத்தோடு கோயிலுட் சென்று திருமாலைச் சிவனாக்கி மகுடாகமப்படி வழிபடு" என்று குமரர் கூறியருளினார். உடன், அகத்தியர் மனம் மகிழ்ந்து சிவார்ச்சனை செய்யும் ஆகமங்களைத் தனக்கு உபதேசித்தருள வேண்ட, குமரக் கடவுள் 28 ஆகமங்களையும் ஓதினார். இந்த இருபத்தெட்டு ஆகமங்களும் இரு முனிவர்களுக்காகச் சிவபெருமானால் சொல்லப்பட்டவை. இறைவனின் ஐந்து முகங்களுள் ஒன்றிலிருந்து 28 ஆகமங்கள் தோன்றின என்பர்.

"திருப்பரங் குன்றிலிருக்கும் இறைவனே

திருச் செந்தூர் சேந்தனே! பழநிமலைத் தேவே!
சிவகுமாரனே! யோக வாழ்வே! பழமுதிர்சோலைக் கந்தா!
இலஞ்சி குமரதேசிகனே! போற்றி! போற்றி!"

என்று அகத்திய முனிவர் தொழுதார். அவருக்கிரங்கி முருகக் கடவுள் முனிவர் நினைத்ததெல்லாம் முடியும்படி வரங்கொடுத்தார். அவ்வரம் பெற்று அன்றிரவு அகத்தியர் வெண்மணலை இரண்டு இலிங்கமாகக் குவித்துச் சிவபூசை செய்து மறுநாள் விடியற்காலத்தும் அவ்வாறே பூசித்து இரண்டு இலிங்கங்களையும் ஒன்று சேர்த்து இருவாலுக நாயகன் (இரண்டு வெண்மணலாலாகிய இலிங்கம்) என்று திருப்பெயரிட்டுப் பின்னும் அருச்சனை இயற்றி பூருவயுகத்தில் அயன் மாலான மூர்த்தியைச் சிவலிங்கமாக்க விடை பெற்றுக் கொண்டு திரும்பினார்.

சிவபிரானே திரிகூடமலையிற் பிரமன் விஷ்ணுவாயினார். ஆதலாலே அவரைப் போற்றுதல் அவரடியார்களுக்கு முறையாமென்று வேதங்களெல்லாம் விரித்துச் சொன்ன பிரமாவின் புத்திரரான அகத்திய முனிவர் கணப்பொழுதினுள் வைணவர் போன்று வேடங்கொள்வாராய்த் துளசி மாலை அணிந்து, நெற்றியில் திருமண்சாத்தி, பஞ்சாக்கரத்தைத் தியானித்துப் பரமபாகவதராய்க் காதினில் துளசிமணி, சொர்ண குண்டலங்கள் சாத்தி, ஆதி அச்சுதன், கோவிந்தன், ஆலமர் கடவுளென்று சொல்லப்பட்ட சிவன், திருமால் பொதுப் பெயர்களைச் சொல்லிக் கொண்டு அருவியில் நீராடி, திருமாலை வணங்குபவர் போன்று வந்தார்.

வைணவர்கள் அனைவரும் குருவென்றெழுந்து வீழ்ந்து வணங்கினர். அவர்கள் 'எங்கிருந்து வந்தாய்?' என்று கேட்டதற்குத் திருமலைமுளரிக் கண்ணன் திருப்பதி என்னும் பதியினின்று வருகிறேன் என்று சிலேடையாகச் சொன்னார். திருமலைமுளரிக் கண்ணன் திருப்பதி என்பதற்குத் திருமலையாகிய தாமரைக் கண்ணனுடைய திருப்பதி என்றும், சிறந்த கயிலாயத்திலிருக்கும் முக்கண்ணன் சிவபிரான் திருத்தலம் என்றும் பொருள்படும் வகையில் கூறினார்.

பூசைக்கு வேண்டுந்திரவியமெல்லாங்கொணர்க என்று கூறி வேதியரை வீதியை விட்டு நீங்கச் செய்து, கொடிமரத்தை வழிபட்டு வடக்கு வாயில்

வழியாகக் கோயிலுக்குள் புகுந்தார். வடக்கு வாயிலிலுள்ள பைரவரை வணங்கி மேற்குத் திசையில் உள்ள இறைவனை வழிபடுவதற்கு முன்பு அனைத்துக் கடவுளரையும் வழிபட்டுச் சென்றார் என்று கூறப்படுகின்றது. குற்றாலம் திருக்கோயில் தொன்மைக் காலத்தில் வடக்குத் திசையிலுள்ள நுழைவாயிலையே முதன்மையான வாயிலாகக் கொண்டிருந்திருக்கிறது என்பது புலப்படுவதுடன் வடக்கு வாயிலுக்கு அருகில் தெற்குத் திசை நோக்கி உள்ள பைரவர் கோயிலும் திருவெளிச்சுற்றின் மேற்குத் திசையிலுள்ள சிவாலயமும் தொன்மையானதாக இருக்க வாய்ப்புள்ளதாகவே கருதப்படுகின்றது.

துவாரபாலரிலொருவர் இவர் நேற்று வந்தவர் என்று சுட்ட மற்றொருவர் நாமறியோம் என்று கூற இருவரையும் அகத்தியர் கையமர்த்திச் சென்றார் என்று கூறும் கருத்து நிலவுகிறது. அதனால், இன்றும் இடப்பக்கம் உள்ள துவார பாலகர் சுட்டுவிரலால் சுட்டிக் காட்ட (சூசி முத்திரை) வலப்புறமுள்ள துவார பாலகர் விஸ்மய முத்திரையுடன் வலக்கையை விரித்துக் காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளனர் போலும்.

உள்ளே சென்ற அகத்திய முனிவர் துளசிமாலையணிந்த மார்பினையுஞ் செம்பொற் கிரீடம் அணிந்த தலையினையுமுடைய திருமாலை வணங்கி கண்கள் களிப்படையும் வகையில் தரிசித்துக் கருணைக் கடலாய்த் திகழ்ந்தவருக்கு அருச்சனை செய்தார். வேதவிதி மந்திரத்தாலே ஆயிரத்தெட்டு வில்வங்கொண்டு அருச்சித்து மணங்கசியக் கண்கள் பனிப்பச் சரீரம் விதிர் விதிர்ப்ப நாமங்களைக் கூறினார்.

"பராங்குசா! பரசுபாணி! நிமலா! நித்தனே!
நிர்மலனே! திரிகூடத்திலே சராசரமெல்லாம்
பெற்ற தற்பரா! சிற்பரா! பிரமன்
மாலறியாத பரமனே! சண்பகடாவியாய்!
மரகதக் கொடி மருவிய மாணிக்க மலையே!
தென்பூமியின் குறையை நீக்கச் சிவமாகி நிறைந்தாய்!

என்று போற்றியேத்திப் புகழ்ந்து வீழ்ந்து வணங்கும் அகத்திய முனிவரை அங்கு நின்ற வைணவர்கள் 'நேற்றே வந்த பகைவன்' என்று எண்ணி இடையூறு வந்ததென்று உள்ளம் வருந்தி நிற்கும் போது சங்குசக்கரந் தாங்கித்

தாமரை பூத்த கருணைக் கடலாகிய திருமாலைக் காணாது வருந்தினர். அங்கு, சிவனைக் கண்டு அகத்திய முனிவர் மேற்கோபங்கொண்டனர். "கருமலை போன்ற மாயவனை நெற்றிக்கண்ணுடைய சிவனாக்கி நம்மிடத்தில் துக்கத்தையுண்டு பண்ணி நின்றவனைப் பாருங்கள்" என்று சினந்தனர். பின் அகத்திய முனிவர் கோயிலை விட்டு வெளியேறுவதற்கு முன்பு பிணித்துக் கட்டுவதற்கு முயற்சிக்கும் போது, அது உணர்ந்த அகத்திய முனிவர் ஒரு கையிலே தருப்பைப்புல்லை வாங்கித் திருக்குற்றாலநாதரை நினைத்து ஆயிரங்கோடி காகத்துக்கு ஒரு கல்லைப் போல விடுத்தனர். அத் தருப்பை சென்று வைணவர் நெருங்கித் தாக்கும் ஆயுதங்கட்கு ஆயுதமாகி மோதித் தாக்கியது. வைணவர்கள் ஓங்கி நிற்றலைக் கண்ட அகத்திய முனிவர் குற்றாலநாதரைச் சரணடைந்தார். இறைவனும் ''அஞ்சற்க'' என்று அருள்புரிந்தார். வைணவர்களும் முனிவரை வணங்கிச் சென்றனர்.

திருக்குற்றாலநாதர், திருமாலாய் இருந்த காலத்து கோயிலின் ஈசான மூலையில் (வடகீழ் திசை) சிவபெருமானுக்குக் கோயில் இருந்ததாகவும், அக்கோயிலுக்குப் பூசை செய்திருந்த சிவாச்சாரியர்களுக்கு அகத்திய முனிவர் வேதசிவாகமங்களை உபதேசித்ததாகவும் தலபுராணம் கூறுகின்றது.

கும்பராசி

இருபத்தேழு நட்சத்திரங்கள் இருப்பது போன்று பன்னிரண்டு ராசிகள் உண்டு. அவை மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம். கும்பமுனி என்பது கும்ப ராசியைக் குறிக்கும். கும்ப முனிவர் குடத்தில் தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. உமையம்மை திருமணத்தின் போது தென் திசையில் கும்பராசி நட்புக்கிரகங்களுடன் இணைந்து நன்மை செய்திருக்க வேண்டும். அந்த வான சாத்திரத்தைக் குறிக்கும் வகையில் அகத்திய முனிவர் வரலாறு தோன்றியிருக்கலாம் என்றும் கூற வாய்ப்புள்ளது.

வீதிகள்

திருக்குற்றாலம் சங்கு வடிவத்தில் அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த அமைப்பை, பேரருவியின் மேல் நின்று பார்த்தால் தான் தெளிவாகத்

தெரிந்து கொள்ள முடியும். இலக்கியங்கள் வசந்த வீதி பற்றி பேசுவதினின்றும் தொன்மையில் வசந்த வீதி என்ற முதன்மையான வீதி இருந்திருக்க வேண்டும். என்பது 'தெளிவாகின்றது. மற்றும் தென்றல் வீதி, அணந்தர் வீதி, சங்கமுக வீதி, இலக்குமிபுரம், போன்ற வீதிகள் இருந்துள்ளன. தற்போது 'இலக்குமிபுரம்' 'என்ற பகுதி' வழக்கில் உள்ளது. திருக்குற்றால அருவிகள், மலைகள் பாறைகளால் சூழப்பட்டுள்ளதால் நீண்ட வீதிகளைக் கொண்டது என்று இயலவில்லை. தற்காலத்தில் காடுகளையும், செண்பகவனங்களையும், மரங்களையும் அழித்து வணிகத்தின் பொருட்டு மேடும் பள்ளமுமாக அமைக்கப்பட்ட கடை வீதிகளே உள்ளன. பாறைகளின் பெயர்களையும், அருவிகளின் பெயர்களையும் கொண்டே இடங்கள் சுட்டி அழைக்கப்பட்டிருக்க வேண்டும் இன்றும், குற்றாலம் அருகில், திருவாவடுதுறை ஆதினம் மடத்திற்குச் சமீபம் உள்ள கோயில் பன்றி மாடசாமி கோயில் ஆகும். அது பாறைக்கு அடியொட்டிஇருந்திருக்க வேண்டும். எனவே அக்கோயிலை அடியொட்டிப் பாறை பன்றி மாடசாமி என்றே அழைக்கின்றனர்.

திருக்குற்றாலச் சுற்றுக் கோயில்கள்

குற்றாலத்தைச் சுற்றிக் கீழ்க்காணும் கோயில்கள் உள்ளன. அவை:

1. கூத்தர் கோயில்	-	குற்றாலம்
2. சித்ர சபை	-	குற்றாலம்
3. குற்றால நங்கையம்மன்	-	குற்றாலம்
4. பதினெட்டாம்படி கருப்பசாமி	-	குற்றாலம்
5. சின்னத் தம்பி	-	குற்றாலம்
6. அரசரடி விநாயகர்	-	குற்றாலம்
7. அடியொட்டிப் பாறை பன்றி மாடசாமி	-	திருவாவடுதுறை ஆதினம் அருகில்
8. ஆபரணப் பிள்ளையார்	-	குற்றாலம்
9. சம்பந்த விநாயகர்	-	குற்றாலம்
10. செண்பகா தேவியம்மன்	-	மலைக் கோயில்
11. நன்னகரம் பிள்ளையார்	-	நன்னகரம்
12. நன்னகரம் பன்றி மாடசாமி	-	நன்னகரம்

13. திட்டப் பிள்ளையார் - சிந்தாமணி
14. பாசுபதம் சாஸ்தா - மலைக் கோயில்
15. பாட்டப்பத்து சாஸ்தா - பாட்டப் பத்து கிராமம்.

சம்பந்த விநாயகர் கோயில் ஸ்ரீ பராசக்தி கல்லூரிக்கு அருகில் புலியருவிக்குச் செல்லும் பாதையில் உள்ளது. இக்கோயிலிலுள்ள பிள்ளையார் ஞானசம்பந்தருக்குக் குற்றாலநாதராகவே காட்சி தந்தருளியுள்ளதாகக் கூறுகின்றனர். செண்பக வனமாகத் திருக்குற்றாலம் இருந்த காலத்தில் வந்த ஞானசம்பந்தர் இத்திருக்கோயிலை வணங்கியதாகக் கூறப்படுகின்றது. இக்கோயிலுள்ள ஒரு கல்வெட்டும் சிதைந்த நிலையிலுள்ளது.

பன்றி மாடசாமி என்னும் கடவுள் திருமாலின் வராக அவதாரத்தையே குறிக்கின்றது. இறைவனின் அடி முடி தேடிய வரலாற்றை மையமாகக் கொண்ட கதையே இத்தெய்வத்திற்குரியதாக உள்ளது.

சின்னத்தம்பி என்னும் தெய்வம் குற்றாலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் வணங்கப்படுகின்றது. வீரனைத் தெய்வமாக வணங்கும் வழக்கத்தையே இவ்வழிபாடு குறிக்கின்றது.

முக்தி வழங்கும் தலம்

திருக்குற்றாலத்தில் பிறந்தவர்களுக்கு நாத ஒலி இயற்கையாகவே செவியில் கேட்பதால் முக்தி பெறுவர். இங்கு எவ்வடிவும் சிவ வடிவமாக இருத்தலால் இங்குள்ள பொருள்களைக் கண்டார்க்கு முக்தி வாய்க்கும். குற்றாலத்தின் எல்லையில் கூப்பிடு தூரத்தில் இறந்தவர் திருவைந்தெழுத்தைக் கேட்கப் பெற்றதால் முக்தி பெறுவர். ஞானம் வளரும் திருக்குற்றாலத்தை அறிந்து நினைப்பவர்க்கும் முக்தி எளிதாகும்.

குற்றாலத்தில் எழும் ஒலி

திருக்குற்றாலத்தில் கேட்கப்படும் அனைத்து ஒலிகளும் ஐந்தெழுத்து மந்திரமே என்று சான்றோர் உணர்ந்துள்ளனர். ஓங்காரம் எல்லா எழுத்துதொலிகட்கும் முதலாய் அகத்தும் புறத்தும் இயற்கையாய் ஒலிக்கும்

ஓசை. ஒருவர் தமது காதைக் கையால் அடைத்துக் கவனிக்கும் போது காதினுள் ஓ என்று இரைதலையும் புறத்தே காடுகள், சோலைகள், அருவிகளில் அவ்வொலி இசைத்தலையும் காணலாம். இந்த ஓங்கார ஒலி குற்றாலத்தில் செயற்கையாக எழும் ஏனைய ஓசைகளை அடக்கி ஒலித்துக் கொண்டுள்ளது. இந்த 'ஓ' கார ஒலி 'அஉம்' என்னும் மூன்றொலிகளாய்ப் பிரியும். அவற்றுள் 'அ'கர வொலி எல்லாச் செயற்கை ஒலிகளுக்கும் முன் பிறந்து படைத்தற் தொழிலைப் புரிவதாம். 'உ'கரவொலி அதன் பின் தோன்றி படைக்கப்பட்ட பொருள்களை நிலைப்பெறச் செய்யும். 'ம'கரவொலி நிலைபெற்ற பொருள்களை அழிந்து போகச் செய்யும். இம்மூன்றொலிகளாற் செய்யப்படும் முத்தொழில்களையும் அடக்கி நிற்கும் இயற்கை ஓசையாயிருக்கும் ஓங்காரம் குற்றாலத்தில் வியாபித்திருத்தலால் இவ்வொலியைக் குற்றாலத்திற்கு எழுந்தருளுபவர் செவியால் கேட்டாலே முத்தி பெறுவர். விந்துநாதச் சேர்க்கையான ஓங்காரத்தில் தனது சத்தியோடொன்றாய் திருக்குற்றாலத்தில் நின்று இறைவன் அருள் புரிகின்றார்.

திருக்குற்றாலம் இயற்கையான வண்டுகளின் இன்னிசை, அருவிகளின் வீழிசை, பறவைகளின் ஒலி, மரங்களின் உரசல் ஒலி மிருகங்களின் சத்தம் ஆகியனவற்றைத் தவிர வேறு எந்த வித செயற்கைச் சத்தங்களுமின்றி (Sound pollution) இயற்கை நலத்துடன் விளங்குவதால் அங்குள்ள ஒலி முத்தியினைத் தருமேயல்லாது, செவிக்கும் மனத்திற்கும் இடையூறுவிளைவிப்பதல்ல என்னும் கருத்தை விளக்கவே, அங்கு எழும் ஒலிக்கும் முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் இயற்கை ஒலி ஓங்காரமே என்பதையும் வலியுறுத்தலாம்.

திருக்குற்றாலம் என்று நினைப்பவர் பெறும் பயன்

சிவமது கங்கை, செண்பக தடாகம், வடவருவி, திரிகூடமலை சித்திரா நதி என்பனவற்றைக் காணுதற் பொருட்டுச் சுவர்க்கம் புகுந்தோரும் மீண்டும் குற்றாலத்தில் பிறப்பதற்குத் தவம் செய்யும் புண்ணிய பூமி. மும்மூர்த்திகளும் குழந்தைகளாகக் கிடத்தற்குரிய 'தாணுமாலயம் தொட்டில்', வேதமாகிய குறும்பலா, திருக்கோயில் ஆகியனவற்றின் மேல் உள்ள விருப்பத்தால் சிவபெருமான் யோகி வடிவம் நீங்கிப் பிரமனாகவும் திருமாலாகவும் இருந்து அருள் தருமிடம் குற்றாலம்.

அருவிகளில் நீராடி, மகிழ்வதற்கும், குகைகளையும், மலைகளையும் கண்டு களிப்பதற்கும் குளிர்ச்சி பொருந்திய தென்றல் காற்றினை நுகர்வதற்கும் மும்மூர்த்திகளும், சுவர்க்கம் சென்றவர்களும் குற்றாலத்திற்கு வருவதற்கு விரும்புகின்றார்ககள் என்றால் மானுடப் பிறவிகள், உலக சுகத்தையே நாடும் அவர்கள், புண்ணிய பூமியாம் குற்றாலத்தில் வந்து கூடுவதில் வியப்பொன்றும் இல்லை. ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் குற்றாலம் குளு குளு குற்றாலமாக மாறிவிடும். குற்றாலத்தில் வீசும் குளிர்த் தென்றல் தன் செண்பக மணமிக்க திருக்கரங்களால் அனைவரையும் வரவேற்கும். இங்கு விழும் மழைத்தூறல் பன்னீர் தெளித்து வருபவரை மகிழ்விக்கும். வெள்ளி நாணயங்களை அள்ளித் தருவது போன்று குற்றால மலை நீர்த்திவலைகளை வீசும். மூலிகை கலந்த நீரினைக் கொண்டு வந்து அருவிகள் தர அந்நீரில் மூழ்கி மகிழும் மனங்களோ கணக்கில் அடங்கா. உடலுக்கும் உள்ளத்திற்கும் உற்சாக மூட்டும் குற்றாலம் ஓர் இன்ப சாகரமே.

விரதமும் பயனும்

திருக்குற்றாலத்தில் ஒரு சிவராத்திரியில் ஊண் உறக்கமின்றித் தவம் செய்தால் அத்தவம் பிறிதோர் தலத்தில் பன்னிரண்டாண்டு ஊண் உறக்கமின்றி தவஞ்செய்யும் பயனைத் தரும். திருக்குற்றாலத்தில் ஓர் அமாவாசை திங்கட்கிழமை செய்யும் வழிபாடு கோடி சிவராத்திரி விரதம் மேற்கொண்ட பயனைத் தரும். திருக்குற்றாலத்தில் வாழும் இல்லறத்தார் முப்பத்திரெண்டு அறப் பயனையும் பெறுவர். பிற தலங்களில் ஒரு மாத காலம் உண்ணாநோன்பு இருந்த பயனை இத்தலத்தில் ஒரு பகல் உண்ணாநோன்பு இருந்தார் பெறுவர்.

குற்றாலத்தலத்தில் ஓர் இரவு உண்ணாநோன்பு நோற்றவர், சாந்திராயன விரதப் பயனைப் பெறுவர். சாந்திராயன விரதமாவது பிறை வளரும் போது ஒவ்வொரு பிடி கூட்டி உண்டு, தேயும்தோறும் ஒவ்வொரு பிடி குறைத்து உண்டு அமாவாசையில் உபசவாசம் இருத்தலாகும்.

ஒரு நாள் இத்தலத்திலிருந்து இரு பொழுதும் இறைவனை வழிபடுபவர்கள் ஓராண்டுகாலம் ஒரு பொழுது உணவு உண்டு நோற்ற பயன் கிடைக்கும். ஒரு சோம வாரம் இத் தலத்தில் இருந்தால் பிற ஊர்களில் இரண்டு மாதம்

நோற்ற பல விரதப் பயனைப் பெறலாம்.

திருக்குற்றாலத்தில் வாழும் இல்லறத்தார், துறவறத்தார் பெறும் பயன் பெறுவர். குறும்பலா நீழலில் சிறிது நேரம் சிவத்தியானத்துடன் ஐந்தெழுத்தை ஓதுவார் ஓராண்டு காலம் ஐவகைத் தீயின் நடுவில் இருந்து தவம் செய்தார் அடையும் பேற்றினை அடைவர். செண்பகவனத்தையுடைய திருக்குற்றால சங்க வீதியை ஒரு முறை வலம் வந்தால் பூவுகலத்தை உடல் வருத்தி வலம் வருவார் பெறும் பயனை எளிதாக அடையலாம். இத்தலத்தில் விருந்தோம்பும் அறத்தைச் செய்பவர் பதினாறு தானங்களில் எந்த தானத்தின் பயனையும் பெறுவர்.

திருக்குற்றாலத்தில் பெற்றோர்களுக்குச் செய்யப்படும் வழிபாடு வேதவிதிப்படிச் செய்யப்படும் அக்கிடோமம், சோதிடடோமம், இராசசூயம், சோமயாகம், அசுவமேதயாகம் என்னும் வேள்விகள் இயற்றிய பயனை வழங்கியருளும்.

திருக்குற்றாலத்தில் சிவராத்திரி விரதமிருத்தல், அமாவாசையுடன் வரும் திங்கள் கிழமை திருக்குற்றாலநாதரை வழிபடுதல், ஒரு பகல் திருக்குற்றாலத்தில் உபவாசம் இருத்தல், குறும்பலாமரத்தின் கீழ் சிறிது நேரம் நின்று ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுதல், சங்க வீதியை வலம் வருதல், யாத்திரையாக வந்து ஒரு நாள் தங்கிச் செல்லல், சித்திரை வருடப் பிறப்பில் திருக்குற்றாலநாதரை வணங்குதல், ஐப்பசி மாதப் பிறப்பில் குற்றாலம் கோயிலுக்கு வருதல் ஆகியன சிறந்த நற்பயனையும், நற்பேற்றினையும், பேரருளினையும் வழங்கும் என்பது ஆன்றோர் அருள் வாக்கு.

விரதம்	பயன்
1. சிவராத்திரியில் ஊண் உறக்கமின்றி விரதம் இருத்தல்	பன்னிரெண்டாண்டு ஊண் உறக்கமின்றித் தவஞ் செய்யும் பயன்
2. அமாவாசைத் திங்கள்கிழமை விரதம் மேற்கொள்ளுதல்	கோடிசிவராத்திரிவிரதம் மேற்கொண்ட பயன்

3. ஒரு பகல் உபவாசம்	ஒரு மாத உபவாச பயன்
4. ஓர் இரவு உண்ணா நோன்பு	சாந்திராயன விரதப் பயன் (சாந்திராயனவிரதமாவது பிறை வளரும் போது ஒவ்வொரு பிடிக் கூட்டி உண்டு, தேயும் தோறும் ஒவ்வொரு பிடி குறைத்து உண்டு அமாவாசையில் உபவாசம் இருத்தலாகும்)
5. ஒரு நாள் இத்தலத்தில் தங்கியிருந்து இருபொழுதுண்டு இறைவனை வழிபடுதல்	ஓராண்டு காலம் ஒரு பொழுது உணவு உண்டு நோற்ற பயன்
6. ஒரு சோமவாரம் இத் தலத்தில் இருத்தல்	பிற ஊர்களில் இரண்டு மாதம் நோற்ற பல விரதப் பயன்
7. குறும்பலா மரத்தின் கீழ் சிறிது நேரம் நின்று சிவத்தியானத்துடன் ஐந்தெழுத்து மந்திரம் ஓதுதல்	ஓராண்டு காலம் ஐவகை தீயின் நடுவில் இருந்து தவம் செய்தார் அடையும் பயன்
8. சங்க வீதியை ஒரு முறை வலம் வருதல்	பூவுலகத்தை உடல் வருந்த வலம் வருவார் பெறும் பயன்
9. தாய் தந்தையர்க்கு வழிபாடு செய்தல்	வேதவிதிப்படிச் செய்யப்படும் அக்கினிட்டோமம் சோதிடடோமம், இராசசூயம் சோமயாகம், அசுவமேதயாகம் என்னும் வேள்விகள் இயற்றிய பயன்

திருக்குற்றாலம் பழவினையினையும் அதன் காரணமாகத் தோன்றும் பாவத்தையும் போக்குவது. வேதக் கல்வியினையும் மெய்யுணர்வினையும் தருவது. திருக்குற்றாலம் தொன்மையில் வேள்விச் சாலைகள் நிறைந்த இடமாக இருந்தது. தவம் செய்வதற்கேற்ற இடம்.

சிவபெருமானுக்கு ஒப்பாகச் செந்தமிழை வெளியிட்ட அகத்தியர் தங்கியிருந்த தெய்வத் தன்மையுள்ள பொதிகை மலையில் நடுவில் தோன்றி சிவபெருமானின் தலை மீது இருந்த கங்கையின் அருவி நீரில் குளிர்ச்சியும் சந்தன மணமும் கமழும் தென்றல் காற்று.

"செந்தமிழ் உரைத்த குறு முனி இருந்த
தெய்வ மால் வரை" *(ஆரணியபருவம் 1279)*
"செந்தமிழ் வரை" *(ஆரணியபருவம் 1277)*

என்றெல்லாம் பாரதம் போற்றுகின்றது.

கல்வி நிலையங்கள்

இயற்கை அழகுடைய குற்றாலம், மக்கள் குடியிருப்புப் பகுதியாகவும் தன்னை மாற்றிக் கொண்டது. அதனால் கல்லூரியும் பள்ளிக் கூடங்களும் தோன்றிக் கல்வியை வளர்க்கும் தலமாகவும் மாறியுள்ளது.

குற்றாலத்தில் 1964 ஆம் ஆண்டு ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி தோன்றிச் சிறப்புடன் கல்விப் பணி ஆற்றிவருகின்றது. குற்றாலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் குடும்பங்கள் கல்வித் தரத்தில் உயர்ந்திருக்கின்றன என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீபராசக்தி கல்லூரியின் மகத்தான கல்விப் பணியே என்றால் அது மிகையன்று. தன்னாட்சி பெற்ற இக்கல்லூரி சீரும் சிறப்புடன் செயல் திறத்துடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பண்பொழில் தேவஸ்தானத்தால் நடத்தப்படும் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், ஸ்ரீபராசக்தி கல்லூரியின் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீபராசக்தி வித்யாலயா என்ற உயர்நிலைப் பள்ளியும் மாணவர் சமுதாயத்திற்குக் கல்விப் பணி செய்து வருகின்றன.

திருக்குற்றால ஊர்ப்பெயர் விளக்கம்

மனிதப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றுக்கும் தொல்பொருள் ஆய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அப்பங்கு இடப்பெயராய்விற்கும் உண்டு என்றும், தொல் பொருளாய்வில் காணப்படாததும், வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப்படுவதுமான செய்திகளை இடப்பெர்கள் தருகின்றன என்றும் கூறும் அறிஞர்கள் கூற்றிற்கு ஏற்பத் திருக்குற்றால ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன. திருக்குற்றாலத்திற்கு மொத்தம் 22 பெயர்கள் உள்ளன. அவை :

1. பிதுர்கண்டந்தீர்த்தபுரம் 2. சிவத்துரோகம் தீர்த்த மூதூர் 3. மதுவுண்டான் உயிர் மீட்டபுரம் 4. பவர்க்கம் மீட்டபுரம் 5. தென்றற்பேரூர் 6. முதுகங்கைவந்தபுரம் 7. திருநகரம் 8. நன்னகரம் 9. ஞானபுரி 10. வேடன்வலவந்தபுரம் 11. யானை பூசித்தபுரம் 12. சக்திபீடபுரம் 13. மும்மூர்த்திபுரம் 14. முனிக்குருகும் பேரூர் 15. தேவகூடபுரம் 16. திரிகூடபுரம் 17. புடார்ச்சுனபுரம் 18. குறும்பலாத்திருநகர் 19. தரிசனவேதி 20. குற்றாலம் 21. செண்பகாரணியம் 22. பஞ்சதரிசனம்

1. தரிசனவேதி

தன்னைக் கண்டோரை மேம்பட மாற்றுவது தரிசனவேதி. அன்பாய்த் திருக்குற்றாலம் அடைந்தாரைச் சீவன் முத்தர் ஆக்குகின்ற பெருமையுடைய தலத்திற்குத் தரிசனவேதி என்று பெயர்.

2. புடார்ச்சுனபுரம்

புடா + அருச்சுனன் + புரம். புடா என்பது வடமொழிச் சொல் மறைபொருள், பெட்டி என்பது இதன் பொருள்.

அருச்சுனன் தவம் செய்த இடத்தில் இறைவனைக் காணாது திருக்குற்றாலத்தில் பெட்டியுடன் சோதிவடிவமான இறைவன்

அருச்சுனனுக்குக் காட்சி தந்தருளிய இடமாகக் குற்றாலம் விளங்குவதால் புடார்ச்சுனபுரம் எனப்படுகிறது.

சிவபெருமானிடம் பாசுபதம் பெறுவதற்காக அருச்சுனன் ஐம்பொறிகளை அடக்கித்தவம் செய்துவந்தான். சிவபெருமானின் திருவுருவை உள்ளத்தில் கொண்டு சிவத்தியானம் செய்யும் போது துரியோதனன், அருச்சுனன் தவத்தைக் கெடுக்க மூகன் என்னும் அரக்கனை அனுப்பினான்.

சிவபெருமானையன்றி வேறு நினைவில்லாது வன்மையுடைய தவத்தால் ஐம்புலன்களையும் அடக்கிக் கயிலாய மலையில் இருந்து செய்யும் சிறந்த தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான், தவம் செய்யும் அருச்சுனனிடம் வந்தருளினார். சிவபெருமான் வேடனாக வந்து மூகனை வென்று அருச்சுனனைக் காப்பாற்றியருளினார். ஆனால், அருச்சுனன் வேடனாக வந்தது இறைவனே என்பதை உணராது, அவருடன் வாதிட்டான். வந்தது இறைவனே என்பதை உணர்ந்த போது இறைவன் மறைந்தருளினார். இதனால் அருச்சுனன் மிகவும் துன்புற்றான். சிவபிரானை மனமுருகி அழைத்தான். இறைவனைப் பூசை செய்து காணல் வேண்டும் எனக் கருதித் தான் தேடிப் பெற்ற ஆன்மார்த்த மூர்த்தியுள்ள இடத்திற்குச் சென்றான். அங்கு அம்மூர்த்தி சம்புடத்தோடு மறைந்திருந்தமையைக் கண்டு, உயிரை விட முயன்றான். அப்போது இறைவன் விடை மீது அமர்ந்து காட்சி கொடுத்துச் சம்புடத்தைத் திரிகூட மலையில் சென்று பெறும்படிக்கூறிப் பாசுபதம் அளித்தார் என்று தலபுராணம் கூறுகின்றது.

அருச்சுனன், திருக்குற்றாலத்திற்குப் பங்குனி உத்திரத்தன்று வந்து இறைவனை வழிபட்டு சம்புடத்தைப் பெற்றான். இச்சம்புடத்தில் வைக்கப் பெற்றிருந்த சோதிமயமான சிவலிங்கத்தையும் கண்டான்.

"புவிமீதிற் புடார்ச்சுனமா புரியா" என்று திருக்குற்றால யமகவந்தாதியும்
"ஆதி நாட் சம்புடங் கண்டருச்சுன னெடுத்த வாற்றால்
ஆதி சாதனத்தோர் போற்றும் புடார்ச்சுனபுரமா மிவ்வூர்"

என்று தலமகிமை 68ஆம் செய்யுளும் கூறுகின்றன.

குற்றாலம்

கு - வினைத்தொடர்ச்சி, தலம் - அவ்வினையை நீறாக்கும் அக்கினியின் நாக்கு

கு + தலம் = குத்தாலம் - குற்றாலம் என நின்றது. வினையை நீக்கிப் பிறப்பறுக்கும் தலம் குற்றாலம்.

அந்தணர் குலத்தில் தோன்றிய குசலன் என்பவன் புறச்சமயம் சார்ந்து குலத்துப் பெருமையை அழித்தான். வேதங்களைப் பொய்ப் பொருளென்று சொன்னான். பழவினையுமில்லை; செய்யும் வினையெல்லாம் உடனுக்குடன் அழிதலால் பாவமில்லை; கறந்த பால் மடி புகாது; விழுந்த பழம் கொம்பிற் சேராது; அது போல இறந்தவர் பிறப்பதில்லை. அவரவர் சரீரத்துக்கேற்ப உண்ணுதலே தரும மார்க்கம். பசியாற் சரீரம் வருத்தித் தவஞ் செய்தலே பாவமார்க்கம் என்றெல்லாம் கூறி நன்மார்க்கமுற்றவர்கள் மனத்தை மாற்றினான்.

வளைக்க வளையாத மூங்கில் போலுங்குசலன் தாழ்வடைந்து செல்வம் போய்த் தடுமாறிக் கடலில் கப்பல் கவிழ்ந்த வணிகன் போல் துன்புற்று, வறுமையில் வாடினான். சென்று யாசிக்கச் சக்தியின்றிப் பிச்சையிடுவாருமின்றிப் பதைபதைத்துக் கிடந்தவனைக் காலதூதர் வந்து பாசத்தாலிறுக்கிக் கட்டிப் பந்தடித்தல் போலடித்துச் சரீரமெல்லாஞ் சூலத்தாற் குத்திக் கொண்டு போயினர்.

தூதர்கள் போகும் வழித் திரிகூடமென்பதை உணர்ந்த குசலன் கையினால் கும்பிட முடியாது. வாயால் குற்றாலம் என்று ஒரு முறை உரைத்தான். அதன் பயனாக வினை தீர்ந்து சிவகணம் அழைக்கச் சிவலோகம் சென்றான். குற்றாலம் என்று கூறினாலேயே வினையைத் தீர்க்கும் பயன் உடையது என்பதால் திரிகூடமலைக்குக் குற்றாலம் என்ற பெயர் ஏற்பட்டது.

திரிகூடமலையை வலம் வருவோர் தீராத வினை தீர்ந்து உய்வது உறுதி. அதன் திசை நோக்கி இறைஞ்சுவோர் சிவத்தைப் பெறுவர்.

"திரிகூடத் திருமலையை வலஞ்செய்தார் தீராத வினை தீர்ந்தார்"

என்கிறது தலபுராணம்

4. மும்மூர்த்திபுரம்

திருக்குற்றாலத் திருத்தலத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று அருட்செயலை முறையே செய்யும் அயன், அரி, அரன், என மூவுருக் கொண்ட முதல்வனான சிவபெருமான் அருள்பாலித்து வருகின்றான். இங்குள்ள மூர்த்தியே மூலமூர்த்தி. இவர் உலகத்தைக் காத்தற்பொருட்டுத் திருமகள், பூ மகள் என்னும் இருவரையும் முறையே மார்பிலும், புயத்திதலும் ஏற்றுச் சங்கு, சக்கரமேந்திய திருமாலானான். இவனே, சிவனுமாய் இச்சை, ஞான, கிரியா சக்திகளுடன் பொருந்திப் பரநடனத்தையும், பஞ்சகிருத்திய நடனத்தையும் செய்து, திரிகூடத்தில் மூவராய் நின்று முத்தொழிலும் நடை பெற வைத்தான். எனவே தான் திருக்குற்றாலம் மும்மூர்த்திபுரம் எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

5. பஞ்ச தரிசனம்

பஞ்ச என்றாலே ஐந்து என்று பொருள்படும். அருச்சுனன் திருக்குற்றாலத் திருக்கோயிலில், சிவலிங்கமூர்த்தி, விநாயகர், சிகரம், மலை, தேனாறு என்னும் ஐந்தன் காட்சியை ஒருங்கே கண்டான். இதற்குப் பஞ்ச தரிசனம் என்பது பெயர். பஞ்சதரிசனத்திற்கு இடமாக இருக்கும் தலமாகிய திருக்குற்றாலம் பஞ்ச தரிசனம் என்று பெயர் பெற்றது.

6. தென்றற் பேரூர்

திருக்குற்றாலத்தைச் சூழ்ந்து வீசும் தென்றல் என்னும் மந்தமாருதத்தின் பெயரே ஊருக்கு ஆகிவந்துள்ளது. சாரூப, சாலோக, சாமீப பதங்களை நல்கக்கூடியது திருக்குற்றாலத் தென்றல்.

7. செண்பகாரணியம்

செண்பக மரங்கள் நிறைந்த காடாகத் திருக்குற்றாலமும் அதனைச் சார்ந்த தென்காசி போன்ற பகுதிகளும் விளங்கியதால் செண்பகக்காடு என்னும் பெயரைப் பெற்றது. சண்பக மணம் வீசும் செண்பகாரணியம் ஒழுக்கம் நிறைந்த பூமியாகவும், மந்திரம் சிறந்த மந்திரத்தலமாகவும் விளங்குகின்றது.

8. சிவத்துரோகம் தீர்த்த ஊர்

பிரமனின் மானசபுத்திரர்களில் ஒருவனான தக்கன் சிவமூர்த்தியை எண்ணித் தவஞ்செய்து உமையை மகளாகவும், சிவமூர்த்தியை மருமகனாகவும் பெற வரம் வேண்டிப் பெற்றான். உமாதேவிக்குத் தாக்ஷாயணி எனப் பெயரிட்டு வளர்த்துச் சிவபிரானுக்குத் திருமணம் செய்வித்தனன். ஒரு நாள் தக்கன் தன் மகளைக் காணத் திருக்கைலைக்குச் சென்ற போது பூதகணங்களால் தடுத்து நிறுத்தப்பட்டான். அதனால் சினமடைந்த தக்கன் விஷ்ணுவாதி தேவர்களை யாகத் தலைவராக்கி ஒரு வேள்வி செய்தான். அவ்வேள்வியில் கலந்து கொண்டதனால், தேவர்கள் செய்த சிவத்துரோகம் திருக்குற்றாலம் வந்து தவம் செய்ததால் நீங்கியது. எனவே திருக்குற்றாலத்திற்குச் சிவத்துரோகம் தீர்த்த ஊர் என்ற பெயரும் ஏற்பட்டது.

9. வேடன் வலம் வந்தபுரம்

பொதிகைமலையில் வலன் என்னும் வேடன் கொலைத் தொழிலின் வலிமையால் மலையில் பாம்பு போல் திரிவான். வஞ்சமாகிய நஞ்சிருக்கும் நெஞ்சையுடையவன். இவன் ஒரு நாள் ஊன் பொருட்டு நரி ஒன்றைப் பிடிப்பதற்காக அதனைப் பின் தொடர்ந்தான். திரிகூடமலை, வடஅருவி, சித்திராநதி ஆகியன சூழ்ந்த சங்க வீதியை வலஞ்சுற்றி நரியோட, அதன் பின் ஓடினான். இவ்வாறு வேடன் திருக்குற்றாலத்தை நரியைத் தேடி வலம் வந்த போது வினை நீங்கப் பெற்றான். சிவனருளால் வேடன் சிவகணத்துள் ஒருவரானான். திருக்குற்றாலத்தை வலம் வந்த வேடனுக்கு நோக்கம் வேறாக இருந்தாலும் தலத்தை வலம் வந்ததால் சிவனருள் பெற்றான் என்றால் திருக்குற்றாலத்தின் பெருமையைக் கூறவும் வேண்டுமோ! வேடன் வலம் வந்த ஊர் திருக்குற்றாலம் என்பதால் இதற்கு வேடன் வலம் வந்தபுரம் எனப் பெயர் உண்டாகியது.

10. யானை பூசித்த புரம்

நித்தியம், நைமித்திகம், காமியம் என்னும் மூன்றன் விதியினாலும், பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி என்னும் ஐவகைச் சுத்திகளோடு சிவாகமத்தில் விதித்துள்ளபடி சிவபிரானை மந்திரங்கள், தண்ணீர், மலர் முதலிய உபகரணங்கள் கொண்டு மன ஒருமையோடு பூசை செய்யும் முறை அறிய மாட்டாத கொலைத்தொழிலையுடைய யானை திருக்குற்றாலநாதனை ஒரு நாள் வந்து வழிபட்டு, நற்கதிபெற்ற வரலாற்றினைப் பெற்றுள்ள திருக்குற்றாலம், யானை பூசித்தபுரம் என்னும் பெயரைப் பெற்று உள்ளது.

11. சக்திபீடபுரம்

திருவருள்வடிவப் பராசக்தி பீடம் திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருப்பதால் இத்தலத்திற்குச் சக்திபீடபுரம் என்னும் பெயர் ஏற்பட்டது.

12. குறும்பலாத்திருநகர்

வேதங்கள், குறும்பலா மரமாகவும், அதன் மூலமாகிய பிரணவம் மரத்தின் வேராகவும், கருமஞான காண்டங்கள் என்னும் பகுப்புப் பெருங்கவடுகளாக, சுருதிகள் எல்லாம் பருத்த கிளைகளாக, உபநிடதம் தளிராக அமர்ந்திருக்கும் தலம் திருக்குற்றாலம் என்பதால் இதற்குக் குறும்பலாத்திருநகர் என்னும் பெயருண்டு.

வேதப்பலாவின் நிழலில் நெல், பொன், அன்னம், பசுவிற்குப் புல் என்னும் தானங்களைச் செய்வோர் தேவர்களால் விருந்தாக உபசரிக்கப்படுவர். தென்புலத்தார் கடனை அங்கிருந்து செய்பவர்கள் இருபத்தொரு தலைமுறையினரையும் உயர் கதியில் சேர்ப்பர். அத்தகைய குறும்பலா மரவழிபாடு பெற்ற தலத்தைக் குறும்பலாத்திருநகர் என்பது பொருத்தமே.

13. முதுகங்கைவந்தபுரம்

சிவபிரானின் அருளால், பல ஆண்டுகளாகத் தீர்க்கமுடியாத பாவத்தை ஒரு நாள் தங்கி வாழ்ந்தாலே தீர்க்கும் திரிகூடத்தலத்திற்குக் கங்கை வந்து, தான் செய்த பாவம் நீங்கத் தவம் செய்தாள். அருவி சொரியும் சிகரத்தில் சென்று அங்குள்ள சிவலிங்க மூர்த்தியைத் தேன் சொரிந்து வழிபட்டுத் துதிக்கும் போது, அவள் மகிழும் படிச் சிவபிரான் விடைமேல் தோன்றியருளினார். கங்கை, குற்றாலம் வந்து தவமிருந்த இடமாகையால் முதுகங்கை வந்தபுரம் என்னும் பெயர் பெற்றது. கங்கையாறு சிவமதுகங்கையில் தம்முடைய பாவத்தை நீக்கிக் கொண்டதைத் திருக்குற்றால யமகவந்தாதியும் கூறுகின்றது.

14. முனிக்குருகும் பேரூர்

அகத்திய முனிவருக்காகத் திருமால் சிவனாகிய தலவரலாற்றினைக் கொண்டுள்ள குற்றாலத்திற்கு முனிக்குருகும் பேரூர் என்னும் பெயருண்டு. அகத்திய முனிவர் குற்றாலத்தில் பலவகையான வேள்விகளைச் செய்து இறைவனை வழிபட்டார். குற்றால வரலாற்றோடு அகத்தியரின் வரலாறும் இணைந்து கிடக்கும் தலம் குற்றாலம்.

15. ஞானபுரி

ஞானநாயகனாகிய திருக்குற்றாலநாதர் ஞான சொரூபியாக இத்தலத்தில் நிற்பதுடன் அனைத்துமே ஞானவடிவமாக நிற்பதால் இத்தலத்திற்கு ஞானபுரி என்னும் பெயர் தோன்றியது.

16. தேவகூடபுரம்

திருக்குற்றாலத்தில் ஆதிசேடன் தங்குதலால் இது நாகர் உலகம் ஆகவும் தேவர் வந்து விளங்குவதால் துறக்கமாகவும், முனிவர், சித்தர், கின்னரர், முதலியோர் வந்து கூடுவதால் அவரவர் உலகமாகவும் விளங்குவதால் இதற்கு இணையாக வேறோர் ஊரைக் கூறுதல் இயலாது என்று திருக்குற்றாலத் தலபுராணம் கூறுகிறது.

"பன்னகர் பதியா என்கோ பாதலத்தரசின் வாழ்வால்
பொன்னக ரென்கோ புத்தேட் பொலிவினான் முனிவர் சித்தர்
கின்னரர் பதியா மென்கோ ஆங்கவர் கிளைக்குழாத்தால்
இந்நகர்க் கிணையா வோரு ரிசைக்கலாந் தகைமைத் தாமோ"
(திருக்குற்றாலத் தலபுராணம்)

தேவர்கள் கூடிச் சிவனை வழிபட்ட இடமாதலால் இத்தலம் தேவகூடபுரம் என்னும் பெயர் பெற்று விளங்கியது.

17. திரிகூடபுரம்

ஆதிசக்தி மூவரைப் பயந்ததால் குற்றாலம் திரிகூடம் என்ற பெயர் பெற்றது. இப்பராசக்தியே அரி, அயன், அரன், என்னும் மூவரையும் ஒவ்வொரு கர்ப்பத்தில் பயந்தாள் என்பதைக் குறித்துத் தாணுமாலயன் பூந்தொட்டில் இச்சந்நிதியில் ஆடிக் கொண்டிருக்கிறது.

குற்றாலமலை ஐயாயிரம் அடி உயரமே உள்ளமலை இம்மலை மூன்று சிகரங்களையுடைய காரணத்தால் திரிகூடமலை என்று வழங்கப்படுகிறது. இச்சிகரங்களில் உயர்ந்தது 5135 அடி உயரமுள்ள பஞ்சந்தாங்கியாகும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் முப்பாசங்களையும் நீக்குவது, செம்மை, வெண்மை, பசுமை என்னும் முந்நிறச்சுடர்களைத் தருவது, முப்பிறவி நோய் தீர்க்கும் மணி, மந்திரம், மருந்து என்னும் மூன்றினை உடையது என்பதால் இம் மலைக்குந் திரிகூட மலை என்னும் பெயர் தோன்றியது என்றும் விளக்கலாம். இத்தகைய திரிகூடமலையுள்ள தலத்திற்கு அம்மலையின் பெயரே ஆகி வந்துள்ளது.

18. பவர்க்கம் மீட்டபுரம்

பவர்க்கம் என்றால் நரகம் என்பது பொருளாகும். நரகத்திலிருந்து மீட்டபுரம் என்பது பொருள். நரகம் செல்லும் பாவங்களைச் செய்தவர்கள் குற்றாலம் திருத்தலத்தைக் கைகுவித்து வணங்கினாலும், மிதித்தாலும் அவர்களைக் காக்கும் தலம் குற்றாலம்.

கவுற்சனன் என்பவன் தன் குலத்திற்குரிய நல்லொழுக்கத்தில் தவறி ஒழுகியதன் காரணமாக நரகத்தை அடைந்தான். திருக்குற்றாலத்தின் மகிமையால் நரகத்தினின்றும் மீட்கப் பெற்ற செய்தியைத் தன்னகத்தே கொண்ட தலமாக விளங்குவதால் பவர்க்க மீட்டபுரம் என்னும் பெயரையும் தனக்குரிய பெயராகக் கொண்டு விளங்குகின்றது.

19. பிதுர் கண்டந்தீர்த்தபுரம்

சுகுற்சன் வேதபாடசாலையில் மறைச் சிறுவர்களுடன் பயின்று வரும் நாளில் சபை தோறும் தன் தந்தை செய்த பழி பாவங்களைப் பிறர் கூறக் கேட்டு வருந்தினான். பாற்கடலில் எழுந்த ஆலகாலவிடம் போல் இவன் தந்தை தோன்றியமைக்காக வருந்திய சுகுற்சன், தந்தை செய்த பாவத்தைப் போக்கத் தீர்த்த யாத்திரை மேற்கொண்டான். வடஅருவியில் நீராடி மகிழ்ந்த போது சுகுற்சன் நாரதரைச் சந்தித்தான். கவுற்சனன் மகன் சுகுற்சன் என்பதை அறிந்து, நாரதர் கவுற்சனன் நரகத்தில் பெறும் துன்பங்களை நீக்க வழிமுறையினைஅவன் மகனிடம் எடுத்துக் கூறியருளினார்.

"சுகுற்சனனே நீர் ஓர் ஆண்டு வடஅருவியில்
நீராடி உள்ளாய். அதில் உத்தராயணத்தில் மாசி
மாதத்தில் துவாதசியில் ஆடியதின் பயனைத்
தந்தைக்கே கொடு" என்றார்.

உடன் சுகுற்சன் மாசி மாதத்தில் பூருவபக்கத் துவாதசியில் ஆடிய பயனைத் தன் தந்தைக்கு எனத் தத்தம் செய்தான். இதன் பயனாகக் கவுற்சனன் தன்னை விழுங்கிய நரகம் எல்லாம் மீளக் கரை சேர்ந்து சிவலோகம் அடைந்தான். நல்லறிவுள்ள மகப் பேற்றால் தந்தை நலம் பெற்ற ஊர் குற்றாலம் என்னும் கருத்தை விளக்கும் பெயரே பிதுர் கண்டந்தீர்த்தபுரம். பிதுர் என்னும் சொல்லுக்குத் தந்தை, தென்புலத்தார், தந்தை வழியின் மூதாதையர் என்பது பொருள்.

20. மது உண்டான் உயிர் மீட்டபுரம்

மறையவன் சிவசாமி மறை, ஐவகை வேள்வி, அறுதொழில்கள்

என்பவற்றை உடையவன். எழுவகைப் பிறப்பின் இயல்பை உணர்ந்தவன். இவனுக்கும், வேதவல்லிக்கும் மகனாகப் பிறந்தவன் தருமசாமி. இவன் அழகும் காமத்தை விளைவிக்கும் இ ளமையும் காரணமாகச் செம்புப் பாத்திரத்தில் வைத்த பால் தன் குணம் கெடுதல் போலத் தன் குணம் மாறிப் பழகத் தகாத முரடரோடு பழகுவன் ஆயினான். காமுகனாகத் திரிந்தான்.

ஒரு நாள் அறிவு கெட்டு மது அருந்திய தருமசாமி, செய்த செயலுக்காக மயங்கி வருந்தினான். இதற்குக் கழுவாய் தேட வேண்டும் என எண்ணி அரவம் புண்பட்டான் போன்று மனம் துன்புற்று ஆகம நூல் வல்லார் அவையை நாடிச் சென்றான்.

கள் உண்ணல் பெரிய பிறவிக் கடலில் வீழ்ந்தவரைத் தலமாகிய கரை சேராதவகை சுழற்றி அமுத்தும் நீர்ச்சுழி போல்வது; அறிவாகிய ஆகாயத்திற்கு இருட்கூட்டம்; பழியாகிய கொடு நரகில் செலுத்தும் அங்குசம்; வீட்டு நெறியை வழியடைக்கும் கதவம் என்றெல்லாம் அவையினர் கூறித் தருமசாமிக்குத் தண்டனையும் விதித்தனர். அந்தணர் சபையில் நெருப்பின் மேல் கொதிக்கும் நெய்யைப் பருகும் தண்டனை வழங்கப்பட்டது. மனமுவந்து அதனைத் தருமசாமியும் ஏற்றுக் கொண்டான்.

அங்கு வந்த நாரதர், அந்தணர்களை நோக்கி, 'நெருப்பிற்காய்ச்சிய நெய்யை இவனுக்குக் கொடுத்தீர்களே, இவன் செய்த குற்றம் என்ன?' என வினவினார். உடன் அந்தணர்கள் வேதம் பயிலும் வாயில் கள்ளை உண்ட பாதகன் இவன் என்றனர்.

நாரதர், செய்த குற்றத்திற்குக் கழுவாய் இஃதல்ல; குற்றாலத்திலுள்ள தேன் அருவியில் மாசி மாதம் அனைத்து ஆறுகளும் தம் பாவம் கழுவவந்து மூழ்கும். அதே போன்று தருமசாமி வடஅருவியில் மாசிமாதம் மூழ்கி எழுந்தால் அவன் செய்த பாவம் நீங்கும் என்றார். தருமசாமி, நாரத முனிவரின் கருத்தை ஏற்று, வடஅருவியில் மூழ்கினான். உடன் கள் அருந்தியதால் உண்டான பாவம் நீங்கியது.

பாண்டி நாட்டின் தீர்த்த மகிமையைக் கண்டு அந்தணர்கள் நாரதரைப் போற்றினர். குற்றாலத்தின் புகழ் மூவுலகும் பரவியது. தருமசாமியின் பாவத்தை நீக்கிய தலத்திற்கு மது உண்டான் உயிர் மீட்டபுரம் என்றும் பெயர் ஏற்பட்டது.

21. நன்னகரம்

குற்றாலம் என்னும் பெயர் வழக்கில் அதிகமாக இருப்பது போன்று நன்னகரம் என்னும் பெயரும் குற்றாலத்தைக் குறிக்க அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. நன்மை + நகரம் = நன்னகரம் என்று வழங்கப்படுகின்றது. அனைத்து உயிர்களுக்கும் நன்மையை அருளும் தலமாக இருப்பதால் நன்னகரம் என்று பெயர் பெற்றது

22. திருநகர்.

திரு + நகர் = திருநகர்

திரு என்னும் சொல்லுக்கு அழகு, செல்வம் என்னும் பொருள்கள் உண்டு. இயற்கை அழகினையும், அதனால் வளத்தினையும் கொண்டு விளங்கும் தலம் குற்றாலம் என்பதால் "திருநகர்" என்னும் பெயர் வந்துள்ளது.

"மழைதரு முத்தும் வான மதிதரு முத்து நீண்ட
புழைதரு பணைக்கை நீலப் பொருப்பின்மா மருப்பின் முத்தும்
கழைதரு முத்துமேனக் களிறுகோ டுகுத்த முத்தும்
விழைதர வொளிருஞ் சாரல் மீனொளிர் வானம் ஏய்க்கும்"
(தலபுராணம் ப-58)

என்று குற்றால வளம் பேசப்படுகின்றது.

திருக்குற்றாலத்திற்குரிய 22 பெயர்களின் இறுதிச் சொல், தலம், புரம், நகர், ஊர் என்று முடிந்துள்ளது.

22 பெயர்களுள்	தலம்	என்று	-	1
” ”	ஊர்	”	-	3
” ”	நகர்	”	-	3
” ”	புரம்	”	-	11
” ”	புரி	”	-	1
” ”	வேதி	”	-	1
” ”	தரிசனம்	”	-	1
” ”	ஆரணியம்	”	-	1
				22

17, 18 ஆம் நூற்றாண்டில் ஊர்ப் பெயர்களில் வடமொழிப் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. ஊரைச் சுட்டுவதற்குப் புரம் என்ற விகுதிச் சொல் பெரும் வழக்கில் இருந்தது.

குற்றாலத்திற்குரிய ஊர்ப்பெயர்களை (1) புராணப் பெயர்கள் (2)இயற்கைப் பெயர்கள் (3) அடைமொழிப் பெயர்கள் (4) குணப் பெயர்கள் என நான்காகப் பிரிக்கலாம். இவற்றுள் புராணப் பெயர்கள் மிகுதியாக உள்ளன. இப்புராணப் பெயர்கள் திருக்குற்றாலத்தின் தலச்சிறப்பினை உணர்த்துவனவாக்வும், ஒழுக்கத்தையும், அறத்தையும் போதிப்பனவாகவும் அமைந்துள்ளன.

அருவிகள்

தென்காசி வட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ளது. இவ்வட்டத்தின் தலைநகரம் தென்காசி. இவ்வூரிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் தென்மேற்கு மலையடி வாரத்தில் குற்றாலம் உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகில் இருக்கும் குற்றாலத்திற்குத் திரிகூடமலை என்றும் பெயருண்டு. திரி என்றால் மூன்று; கூடம் என்றால் சிகரம்; மூன்று சிகரங்கள் உள்ளமையால் திரிகூட மலை என்று பெயர் பெற்றது. முத்திறச் சிகரம் என்றும் அழைக்கப்படுகின்றது. சிவபெருமான் எத்தலத்தை பிரியினும் பிரியாது தங்கியுள்ள பெரியமலை திரிகூடம் என்பதால் சிவபிரானின் பொன்மலை, வெள்ளிமலை, மந்தரம் என்னும் மூன்று மலைக்கும் திரிகூட மலையை ஒப்பிடுகின்றனர். திரிகூட மலை இயற்கை வளமிக்கது. மா, இருப்பை, மகிழ மரம், செண்பகம், தேவதாரு, வன்னி, தேக்கு, சந்தனம், நாவல், அத்தி, அரசு, ஆலம், மகாலிங்கம், கார் இஞ்சி, வெண்புளி, கோங்கு, வில்வம் போன்ற பல்வகை மரங்களால் சூழப்பட்டுக் காண்போர் வியக்கத்தக்க நிலையில் உள்ளது. பலவகை வண்ண மலர்களாலும் சூழப்பட்டு விளங்கும் திரிகூட மலைகளின் குகைகள் முனிவர்கள் இருந்து வேள்வி செய்யும் அறச்சாலைகளாக இருந்துள்ளன.

திரிகூடமலையை வலம் வருவோர் தீராத வினைதீர்ந்து உய்வது நிச்சயம்; அதனைத் திசை நோக்கி இறைஞ்சுவோர் சிவத்தைப் பெறுவர்; அதன் புகழ் கேட்டோர் தேவர் ஆவர்; அதன் கண் வாழ்வோர் பெருமையை அளவிட்டு உரைப்பது அரிது என்றும் வட அருவியாகிய கடலின் நீர் உண்டு மேகம் நீர்த்துளியைத் தரும் திரிகூட மலையில் உள்ள கல் எல்லாம் சிவலிங்கமாகிச் சிவவடிவாய் உள்ளன என்றும் கவிராயர் அவர்கள் பாடியுள்ளார்.

"திரிகூடத் திருமலையை வலஞ் செய்தார் தீராத வினைகள் தீர்ந்தார்
திரிகூடத் திருமலையைத் திசை நோக்கிப் பணிந்தவருஞ் சிவத்தைச்
சேர்ந்தார்
திரிகூடத் திருமலையின் கீர்த்தனங்கள் கேட்ட வருந்தேவரானால்
திரிகூடத் திருமலைசார்ந் திருப்பவர்கள் மகிமை துதி செய்யற்
பாற்றோ"

(திரிகூடமலைச் சருக்கம் பாடல் 42)

திரிகூடமலை மேலிருந்து தொடங்கித் தேனருவி, செண்பகாதேவி அருவி, பேரருவியாக வழிந்து திருக்குற்றாலநாதருடைய திருக்கோயில் வழியாக் வருவதே சிற்றாறு. திரிகூடமலையின் மேல் இருக்கும் பகுதிக்கு கைலாசபுரம் என்பது பெயர். கைலாசபுரத்தில் உற்பத்தியாகும் நீரே பல அருவிகளாக ஓடி வந்து விழுந்து மக்களை மகிழ்விப்பதுடன் குற்றாலத்தையும் செழிக்கச் செய்கிறது.

கைலாசபுரத்தில் உற்பத்தியாகும் நீரின் ஒரு பகுதி கேரளாவிற்கும் மற்றொரு பகுதி குற்றாலத்திற்கும் வருகின்றது. ஒரு முறை குற்றாலம் கானகத்தில் வாழும் பளியர்களுக்கும் அரசனுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக அரசன் பளியர் மக்களுக்கு வழங்கும் பொருளை நிறுத்தியதாகவும் அதனால் சினம் கொண்ட பளியர்கள் மருதங்காயைக் கைலாசபுரத்தில் நீர் உற்பத்தியாகும் பகுதியில் வீசியதாகவும் அதனால் காய்கள் எல்லாம் மருத மரங்களாய் வளர்ந்து குற்றாலம் வரும் நீரின் அளவைக் குறைத்ததாகவும் கருத்து நிலவுகின்றது. கைலாசபுரத்தினின்றும் உற்பத்தியாகும் நீர் கேரளாவிற்கு அதிக அளவில் ஓடி அப்பபகுதிக்குப் பயன் தருவதற்கு ஒரு கதையை இங்ஙனம் கூறுகின்றனர். குற்றர்லத்திற்கு வரும் நீர் மருத மரங்களின் வேரில் ஒழுகுவதையே இவ்வாறு கூறுகின்றனர். கைலாசபுரத்தின் மேட்டுப் பகுதியாகக் குற்றாலமும், தாழ்ந்த பகுதியாகக் கேரளாவும் இருப்பதால் நீர் வரத்துக் குற்றாலத்திற்குக் குறைவாக உள்ளது எனலாம்.

தொன்மையில், பளியருக்கும் அரசாங்கத்திற்கும் மன வேறுபாடு நிகழ்ந்திருக்கவும் வாய்ப்பு உள்ளது. ஏனெனில் கற்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கூறும் வரலாற்றுக்கு இருக்கும் வலிமை வாய்மொழி இலக்கியமாம் நாட்டுப்புறக் கதைகளுக்குமுண்டு. மற்றும் திரிகூடமலை வேங்கை மரங்கள் மிகுந்த பகுதி என்பதும் தெளிவாகின்றது.

பழைய குற்றாாலம்

கைலாசபுரத்தினின்று உற்பத்தியாகும் நீர் ஓடி வரும் பகுதியைக் குளிராட்டி என்று அழைக்கின்றனர். இப்பகுதியினின்றும் வரும் நீர் மாவடித்துறை ஆறாகப் பழையகுற்றால நீர் வீழ்ச்சி என்னும் பெயருடன்

மிக உயரத்திலிருந்து விழுகின்றது. இப்பழைய குற்றால அருவி குற்றாலம் பேருந்து நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. பழையகுற்றாலம் அருவியில் விழும் நீர் கானாறு, அழகனாறு என்னும் பெயர்களுடன் பல குளங்களை நிரப்பிச் சிற்றாற்றில் சென்று சேர்கிறது.

பழையகுற்றாலம் அருவி பிரமாண்டமான அளவில் மேலிருந்து விழும் அழகே அழகு. உவமிக்கும் கவிஞனும் உவமை தேடி அலைய வேண்டும். பழைய குற்றாலம் என்று கூறுவதினின்றும் இந்த அருவி பிற அருவிகளை விட மிகத் தொன்மையானதாக இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இப்பகுதி பழங்கால மக்கள் வாழ்ந்த பகுதியாகவும் இருந்திருக்க வாய்ப்புள்ளது. தமிழகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் பழையகுற்றால நீர் ஓட்டப் பகுதியில் நுண் கருவிகள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். இவை மிகவும் தொன்மையான காலத்தைக் குறிப்பவை. எனவே பழைய குற்றாலமே தொன்மையானது, அதற்குப் பின் தான் இப்போதுள்ள குற்றாலம் என்ற ஊர் தோன்றியிருக்க வேண்டும். முதுமக்கள் தாழிகளும் கிடைத்துள்ளன. இந்தக் காலப்பழமையை கி.மு. 8-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்துள் அடக்குவர்.

தேனருவி

குற்றாலத்தில் சிற்றருவிச் சாலையிலிருந்து மலைமேல் 5 கிலோமீட்டர் தொலைவில் பொதிகை மலை உச்சியில் அமைந்துள்ளது தேனருவி. செண்பகா தேவி அருவிக்கு மேல் இருக்கும் தேனருவிக்குச் செல்லும் வழிகள் தோறும் அடர்ந்த காடுகளும், மரங்களும், கொடிகளும், செடிகளும் உள்ளன. பாறைகளும் குகைகளும் நிறைந்த ஒற்றையடிப் பாதையில்தான் தேனருவிக்குச் செல்லவேண்டும். குரங்குகளின் கூட்டம் செல்வோர்தம் கண்ணுக்கு விருந்தளிக்கும். வண்டுகளின் ஒலி செவிக்கு இன்னிசை; மரங்களின் உரசல் மனவலிக்கு இதம் தரும் பிரணவம். குளிர்ந்த காற்று, மெல்ல உடலைத் தழுவிச் செல்லும் சுகமே சுகம். இத்தனையும் சூழ்ந்திருக்கும் தேனருவியை நெருங்க முடியாத அளவுக்குப் பெரும் பாறைகள் உள. காளையர்கள் ஒரு பாறையிலிருந்து மற்றொரு பாறைக்குத் தாவிச் செல்வர். முதிர்ந்தோர் இரு கைகளையும் கால்களாக்கி நான்கு கால்களால் நடப்பது போன்று நடந்து தேனருவியை நெருங்கிவிட்டோம் என்று பெருமூச்சு விட்டு நிமிரும் போது

எதிரே நீர்த்தடாகம் தோன்றும். இத்தடாகத்தை நீந்திக் கடந்து சென்றால் தான் நீர்வீழ்ச்சியில் நிம்மதியாகக் குளிக்க முடியும்.

தேனருவி, மலையினின்றும் விழும் இடம் நீங்கலாக நீர்த்தடாகம் உள்ள பகுதி இயற்கையான மலை விதானத்தைக் கொண்டுள்ளது. அம்மலைமேல் விதானங்களில் பிரமிக்கத் தக்க தேன்கூடுகள், சாக்கு மூடைகளாகக் காட்சி அளிக்கும். தேன் கூடுகள் நிறைந்த அருவியாக இருத்தலால் தான் அவ்வருவிக்குத் தேனருவி என்று பெயர் ஏற்பட்டது. இறைவன் படைப்பு அற்புதம் மனிதனைச் சிலையாகத்தான் நிற்க வைத்து விடுகின்றது.

செண்பக அருவி

தேனருவியின் கீழ் அமைந்துள்ளது செண்பக அருவி. செண்பக மரங்கள் சூழ்ந்தவனம் ஆதலின் இது செண்பகக்காடு என அழைக்கப்பட்டது. இவ்வனத்தில் இவ்வருவி வீழ்தலால் செண்பக அருவி என அழைக்கப்பட்டது. இவ்வருவி குளிப்பதற்கு ஏற்றாற் போன்று அமைந்துள்ளது. இவ்வருவியின் முன்பும் ஒரு பெரிய தடாகம் உள்ளது. இந்த அருவியின் பக்கத்தில் ஒரு மண்டபம் உள்ளது. மக்களுக்கு மன மகிழ்வினை ஊட்டும் இயற்கைச் சூழலுடன் கூடிய இப்பகுதி பார்க்க வேண்டிய இடமாகும்.

சிற்றருவி

செண்பக அருவியின் கீழ் அமைந்துள்ளது. பிற அருவிகளைப் போன்று பரந்து விழாமல் ஒரு சிறு இடத்தில் மட்டும் ஓடை போன்று ஓடி வந்து விழுகின்றது. இரு பிரிவாக விழும் சிற்றருவியை இரு குளியல் அறை போன்று தடுப்புச்சுவரால் பிரித்து அமைத்துள்ளனர். மறைவாகக் குளிப்பதற்கு ஏற்ற இடம்.

பேரருவி

இவ்வருவி கோயிலுக்குத் தென்புறத்தில் அமைந்துள்ளது. பெயருக்கு ஏற்பப் பரந்து விழும் காட்சி மேகக் கூட்டங்கள் கை கோர்த்து ஒரே நேரத்தில் கீழே குதிப்பது போன்றும், கடல் நீர் அனைத்தையும் முகந்து வந்து

ஒருசேரக் கொட்டுவது போன்றும் காட்சியளிக்கும். பேரருவி குளித்தாலும் சுகம் தரும். நின்று கண்டாலும் கண்ணுக்கு இனிய காட்சியாக இருக்கும்.

பேரரருவியில் விழும் நீர், இடையில் ஒரு பாறையில் தடுக்கப்படும். அப்பாறையில் நீர் விழுந்து விழுந்து மிக ஆழமான பள்ளம் ஏற்பட்டுள்ளது. அதில் அருவி பாய்ந்து பொங்கி எழுவது கடல் பொங்கி யெழுவது போன்று தோன்றும். இதற்குப் "பொங்குமாங்கடல்" என்று மிகப்பொருத்தமாகப் பெயரிட்டனர். இப்பொங்குமாங்கடலில் இருந்து கீழே விழும் அருவியில் தான் மக்கள் குளிப்பர்.

பேரரருவி விழும் பாறையில் தெய்வச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. புனிதத் தீர்த்தமாகக் கருதப்படும் இவ்வருவியில் குளிப்பவர்கள் குறிப்பாகப் பெண்கள் மஞ்சள் பூசிப் பாறையில் இருக்கும் கடவுளைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு குளிப்பர். ஒருவருக்கு ஒருவர் மஞ்சள் கொடுத்துச் சுமங்கலிகள் பூசி மகிழும் அற்புதக் காட்சி மனத்திற்கு அமைதியைத் தரும். இந்துக்களின் அனைத்துச் செயலும் தெய்வத்துடன் தொடர்புடையது. புரிந்தும், புரியாமலும் தெரிந்தும், தெரியாமலும் அறிந்தும், அறியாமலும் இறைவனுடன் ஒன்றிவிடும் ஆன்மாக்களை அருவிக் கரையில் குளிக்கும் போதும் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக இலிங்க உருவங்களும், முருகனின் அற்புதச் சிற்பங்களும் சூரியனின் சிற்பமும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றனர்.

அருவிக்கரையின் இடப்புறம் பல மண்டபங்கள் உள்ளன.

ஐந்தருவி

குற்றாலத்திற்குச் சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் மேற்கில் அமைந்துள்ளது ஐந்தருவி. இவ்வருவி ஐந்து கிளைகளாகப் பிரிந்து விழுதலால் ஐந்தருவி எனக் காரணப் பெயர் பெற்றது. ஐந்தருவிக்கு வாய்தாமலையினின்றும் நீர்வருகின்றது. வாய்தாமலையில் ஒரு கருப்பசாமி கோயில் உள்ளது. இந்த அருவியைச் சுற்றியும் வரும் வழிகளிலும் இயற்கை எழில் கோலம் கண்ணுக்கு விருந்து; வெயிலின் வெப்பத்தில் தவிக்கும் பல நகர மக்களுக்கும் இது ஒரு சொக்க வாசல்; ஆடிப்பாடி மகிழ்ந்து குளிக்கும் மக்களை உலகத் துன்பங்களினின்றும் விடுபடச் செய்து குழந்தைகளாக்கி

நீர்க் கரங்களால் தாலாட்டுப்பாடும். ஐந்தருவி நீர் சிறு ஆறாக ஓடி வந்து திரு இலஞ்சியில் சிற்றாற்றில் கலக்கிறது.

இவ்வருவியின் அருகில் முருகன், விநாயகர் கோயில்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டுள்ளன. மற்றும் ஒரு சாத்தா ஆலயம் ஒன்றும் உள்ளது. கருவறையில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சாத்தா, அமர்ந்த கோலத்தில் சாட்டையைக் கையில் ஏந்திய நிலையில் காணப்படுகின்றார்.

பழத்தோட்ட அருவி

ஐந்தருவியின் அருகில் குறைந்த உயரத்திலிருந்து விழுகின்ற ஒரு சிறு அருவியுள்ளது. இப்போது இதனருகில் அரசுப் பழத்தோட்டம் அமைந்திருப்பதால் இது பழத்தோட்ட அருவி என அழைக்கப்படுகிறது. அதிக ஆரவாரமின்றிக் குளிக்க விரும்புவோர் இவ்வருவியை நாடிச் செல்வர்.

புலியருவி

குற்றாலம் பேருந்து நிலையத்திலிருந்து பழைய குற்றாலம் செல்லும் சாலையின் வலப்பக்கமாக ஒரு கிலோமீட்டர் தொலைவில் மலையை ஒட்டிப் புலியருவி அமைந்துள்ளது. செண்பக அருவியின் கால் பிரிந்து புலி அருவியாக விழுகின்றது. தொன்மையில் புலிகள் நீரருந்த வரும் பகுதியாக இருந்ததால் புலியருவியாயிற்று.

நல்ல பருவ காலத்தில் இவ்வருவியில் நீர் மிகுதியாக விழும். சிறுவர்கள் விரும்பிக் குளித்து மகிழும் இடமிது.

புது அருவி

இக்காலத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அருவிக்குப் புது அருவி என்று பெயர் ஏற்பட்டது. இது புலியருவிக்கு மேலே உள்ளது. அதிக உயரத்தினின்றும் விழவில்லையாயினும் அமைதியாகக் குளிக்க ஏற்ற அருவியாகும்.

சிற்றாறு

மேற்கு மலைத் தொடரின் தென் கிளையின் மேல் சுமார் 550 அடி உயரத்தில் அமையப் பெற்றுள்ளது. சிற்றாறு குற்றால மலையைக் கடந்து சம நிலத்தை அடைவதற்கு முன் பல அருவிகளாக விழுந்து ஒன்று கூடுகின்றது. சிற்றாறு 200 அடி உயரத்திலுள்ள காட்டிலிருந்து கீழே விழுந்து சம வெளியை அடைகிறது. இது வேத அருவி எனப்படுகிறது. திரிகூட மலையில் தெளிந்த நீராய்த் திரண்டு பல கால்கள் வழியாகத் திசைகள் தோறும் பெருகி ஓடுகிறது. இது பரம தீர்த்தமாகக் கருதப்படுகிறது.

பழைய குற்றாலம் அருவி, ஐந்தருவி ஆகியன சிற்றாற்றுடன் கலப்பது போன்று, புளியறை வழியாக வரும் செங்கோட்டையாறு சிவமது கங்கை எனப் பெறும் சிற்றாற்றில் தென்காசியிலுள்ள முக்கூடலில் சேருகின்றது. முக்கூடலில் தேனாறாகிய செங்கோட்டையாறும் பாலாறாகிய குற்றால ஆறும் ஊற்றாறாகிய பாதால நதி ஆகிய மூன்றும் கூடுகின்றன. வடகரையாறு வீர கேரளான் புதூர்ப் பக்கத்தில் சிற்றாற்றை அடைகிறது. இவ்வாறு பலவகை ஆறுகளும் வந்து கலக்கும் சிற்றாறு, குற்றாலம், தென்காசி மக்களின் வளத்திற்குப் பெரிதும் துணையாக உள்ளது.

பருவகாலம்

தமிழ் நாட்டிற்கு மழைவளம் அளித்துப் பயிர் வளம் காக்கும் இரு பருவக்காற்றுக்கள் தென்மேற்குப் பருவக்காற்றும் வடகிழக்குப் பருவக் காற்றும் ஆகும். தென்மேற்குப் பருவக் காற்று ஜூன்மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் வரையில் மேற்கு மலைத் தொடரின் மேல் பகுதியினைத் தாக்கி மழையைப் பெய்விக்கிறது.

இப்பருவத்தில் பெய்யும் மழை குற்றாலத்திற்குச் சிறப்பளிக்கிறது. இப்பருவத்தில் பல்வகையான மலர்களும் பழங்களும் குற்றாலத்தில் குவிகின்றன. மக்கள் பல பகுதிகளினின்றும் வந்து அருவியாடி மனம் மகிழ்கின்றனர்.

அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை வடகிழக்குப் பருவ மழை பெய்வதால் அருவிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடும். அப்பருவ மழைக் காலம் மக்கள் அருவிகளில் குளிப்பதற்கு ஏற்ற காலமில்லை.

பருவகாலத்தில் குற்றாலம் குளிர்த் தென்றலை வீசி மக்களை மகிழ்விப்பதால் குற்றாலத்தை நாடி வரும் மக்களின் கூட்டத்திற்கு அளவே இல்லை.

குளங்கள்

குற்றாலத்தைச் சுற்றி எண்ணற்ற குளங்கள் உள்ளன. மேலபெட்டைத் தாமரைக்குளம், கள்ளிக் குளம், தட்டான் பெட்டைக்குளம், நெய்வேலி கோனான் குளம், தெற்குத் தாமரைக்குளம், பெட்ண்டக்குளம், கீழபெட்டைத் தாமரைக்குளம், தெற்குப்பெட்டைத் தாமரைக்குளம், மேற்குப்பெட்டைத் தாமரைக்குளம், செட்டிப்பத்துக் குளம் என்னும் குளங்கள் குற்றாலத்தின் நன்செய் நிலங்கள் பாசனத்திற்குத் துணைசெய்கின்றன.

மந்த மாருதம்

மந்த மாருதம் என்றாலே தென்றல் காற்று என்பது பொருள். திருக் குற்றாலத்திற்குத் தென்றல் பேரூர் என்னும் பெயருமுண்டு. திருக்குற்றாலத் தென்றலுக்குத் தனிப் பெருமையும் உண்டு. திருக்குற்றாலத் தென்றலை அனுபவிக்கவே பல்வேறு பகுதிகளினின்றும் திருக்குற்றாலத்தில் கூடுகின்றனர். மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு ஆகிய காலங்களில் வீசும் சாரலோடு கூடிய தென்றல் உடலுக்கும், உள்ளத்திற்கும் இன்பம் தருகிறது.

திரிகூடராசப்பக்கவிராயர் அவர்கள் செண்பக வனத்தில் பிறந்து, அருவியில் நீராடி, மலர்களில் நறுமணம் பெற்று, திருக்கோயிலினுள் தவழ்ந்து வரும் தென்றலைக் குழந்தை என்கிறார்.

"பிரச மாம லர்ச் செண்பகப் பொதும்பரிற் பிறந்து

திரவு பூஞ்சினைத் தொட்டிலாட் டயர்ந்து தேனருவிப்

பரம வாரியிற் படிந்து நீள் பணிலமாக் கோயில்

குரவன் முன்றில் வாய்த் தவழ்வதோர் தென்றலங் குழவி"

என்று போற்றிப் பாடுகின்றார்.

வில்லிபுத்தூராழ்வார் திரிகூட மலையின் தென்றலைப் போற்றிப் புகழ்கின்றார். அருவியின் குளிர்ச்சியும் சந்தன மணமும் கமழுமாறு தென்றல் காற்று வீசுகிறது என்கிறார்.

"இந்துவும் அரவும் உறவு செய் முடிமேல்

இருந்த மந்தா கினி அருவி

வந்து இழிபுனலும் சந்தனம் கமழ

வந்தது மந்த மாருதமே" என்று பாடப்பட்டுள்ளது.

ஞானசம்பந்தர் மணம் நாறுங் குன்றைச் சூழ்ந்த குளிர்ச்சி மிக்க தென்றல் காற்று என்கிறார்.

"தென்னாடு பெற்ற செல்வத்

தென்றலே உன் இன் பத்தைத்

தென்னாட்டுக் கல்லால் வேறே

எந்நாட்டில் தெரியச் செய்தாய்"

என்று பாரதிதாசன் 'அழகின் சிரிப்பில்' தென்றல் என்றாலே அது தென்னாட்டிற்குத், திரிகூட மலைக்குத், திருக்குற்றாலத்திற்குச் சொந்தமானது என்னும் பொருளில் பாடியுள்ளார்.

கமுகொடு நெடிய தென்னை, கமழ்கின்ற சந்தனம் அன்னை சமைக்கின்ற பொதிகை பெற்றெடுத்த தென்றல், திருக்குற்றாலம் வருபவர்களுக்குக் கோடையின் வெப்பத்திற்கு மருந்தாகிறது. தூய காற்றினைச் சுவாசிக்க முடியாத பெரும் நகரங்களில் வாழும் மக்கள் தூய்மையான காற்றை உறைகளில் அடைத்துச் சுவாசிக்கும் அவலநிலை இருக்கும் போது, தூய்மையான காற்றை அள்ளித் தரும் திருக்குற்றாலத்திற்கு இணை வேறு ஒன்றும் இல்லை என்று தான் கூறவேண்டும்.

பாதகன் உயர்கதி பெறுதல்:

திருக்குற்றாலத் தென்றலின் பெருமையால் ஒரு பாதகன் உயர்கதி பெற்ற தலம் திருக்குற்றாலம். சோழ நாட்டில் மறையர் குலத் தலைவனாக அத்திரி என்னும் பெயரில் ஒருவன் வாழ்ந்து வந்தான். இவனுக்கு ஆத்திரேயன் என்னும் மகன் இருந்தான். ஆத்திரேயன் உயர்குலத்திற்குரிய உயர் கல்வியினைக் கற்றான். 12 ஆண்டு வேதம் ஓதினான். எனினும் ஆத்திரேயன் செயற்கரிய சமய நெறியில் நிற்காமல் காமுகனாகச் சுற்றித் திரிந்தான் பெற்றோரின் உறுதி மொழிகளைப் பொருட்படுத்தான். காட்டில் வேட்டையாடிக் கடுமையான கொலை, களவு செய்து தான் செய்யும் தானங்களைச் செய்யாமல் பெருமையிழந்து வாழ்ந்தான். இதன் காரணமாக இவனை அந்தணர்கள் ஊரை விட்டு வெளியேற்றினர். சோழ நாடு, தன்னை வெளியேற்றியதனால் பாண்டிய நாட்டில் உள்ள திருக்குற்றாலம் வந்தடைந்தான். இங்கு உண்ணாது, பசிதுரத்த உடலெல்லாம் பிணி வருத்த துணையின்றி வாடினான். இறுதியில் உடல் உறுப்புகள் அடங்க பேருறக்கம் பெற்றான்.

உயிர் உடம்பினின்று பிரியும் நிலையில் ஆத்திரேயன் உடம்பில் செண்பக வனத்தின் தென்றல் தழுவியது. இறந்த ஆத்திரேயனை எமதூதர்கள் நெருங்கி இழுத்துச் சென்றனர். அப்போது சிவகணத்தார் குறுக்கிட்டு ஆத்திரேயனைத் திருக்கயிலைக்குக் கொண்டு சென்றனர். முன்னோர்கள் செய்து வந்த அறங்களை அழித்தவன், திருக்கோயிலுக்குரிய பொருளைத் திருடியவன், காலை மாலை சந்தியா வந்தனத்தை மறந்தவன், மது அருந்தியவன், குருநிந்தனை செய்தவன், நோன்பு மேற்கொண்ட கன்னியரைக் காமுற்றவன், அறவோர் யோகிகள் மேற்கொண்ட தவங்களைச் சிதைத்தவன், சிவகணத்துடன் கைலாயம் சென்றது யமதூதர்க்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. உடன் எமன் தன் பரிவாரம் சூழ சிவலோகம் சென்று சிவபெருமானிடம் முறையிட்டார். அதற்கு, சிவபெருமான் "திரிகூடவரைத் தென்றல், இம்மறையவன் இறக்கும் போது இவன் உடம்பைத் தடவினமையால், அவன் செய்த பாவங்கள் எல்லாம் நீங்கின. சிவபுண்ணியம் அவனுக்கு உண்டானது. ஆதலால் யாவருக்கும் அடைக்கலமாகிய உயர் கயிலையில் வந்து எமது பதஞ்சேர்ந்தான்" என்று விளக்கம் கூறினார். இக்கதையினின்றும் திருக்குற்றாலத் தென்றலின் மகிமை வெளிப்படுகிறது.

திருக்குற்றாலத்தில் உலாவும் தென்றல், மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகியன நல்கக் கூடிய பயனைத் தன்னகத்தே கொண்டது. திருக்குற்றாலத்திற்கு வரும் மக்களுக்குத் தென்றல் உடல் நோயை நீக்குவதுடன் மன மாசினையும் அகற்றக் கூடியது. சாலோக, சாமீப, சாரூப பந்தங்களை நல்கக்கூடிய வலிமை பெற்றது மென்மையான திருக்குற்றாலத் தென்றல்.

மூலிகை

திருக்குற்றாலம் 2000க்கு மேற்பட்ட மூலிகைகளையும், தாவர வகைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இயற்கையாக மருந்துச் செடிகளையும் கொடிகளையும் மரங்களையும் கொண்டு இலங்கும் குற்றால மலையின் அருவியில் நீராடுவோர் உடல் நலம் பெறுவதாக நம்பப்படுகிறது. நாடோறும் காலையும் மாலையும் மன நோயாளிக்ளை அருவிகளில் நீராடச் செய்யும் மனநோய் மருத்துவ மனைகள் பல குற்றாலத்தில் உள்ளன.

மன நோய்க்கு மூலிகைகளினால் ஆகிய தைலம் பயன்படுத்தப்படுகின்றது. இத்தைலம், பொன்னாங்கண்ணி, கரிசலாங்கண்ணி, குழிதாமரை, மலை நெல்லி, செவ்விளநீர், முசுமுசுக்கை, கருநொச்சி, கொடியார் கூந்தல் ஆகிய மூலிகைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகின்றது.

ஜோதிப்புல்லைச் செந்தூரம் செய்யப்பயன்படுத்துகின்றனர். கீழாநெல்லி, 'அம்மன் ப்ச்சரிசி' போன்றன மஞ்சட் காமாலை நோய்க்குப் பயன்படுகின்றன. நீலம், வெண், நற்சங்குகள் பஸ்பம் செய்ய உதவுகின்றன. குதிரைக்குளம்பு, பளிங்குக் காய், சங்கு, குங்குலியம், கோடகசாலை முதலியன காயம், எலும்பு முறிவு ஆகியவற்றிற்குத் தேவைப்படுகின்றன. தூதுவளை, ஆடாதொடை இருமலுக்கு உதவும்.

யானையின் பற்களை மூலிகைகளின் துணையுடன் புடம் போட்டு அந்தப் பஸ்பத்தைப் பல ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்குக் கொடுத்துப் பயன் பெற்று வருகின்றனர். இந்த மருந்து பல ஆயிரங்களுக்குத் தான் கிடைக்கும். 1800 மீட்டர் உயரத்தில் பல அற்புத மருந்துகள் கிடைக்கின்றன. இந்த உயரத்தில் தான் கல்தாமரை கிடைக்கின்றது.

பல பகுதிகளினின்றும் மருத்துவர்கள் இங்குவந்து மூலிகைகளைக் கொண்டு செல்கின்றனர். மூலிகைகளைப் பற்றிய விவரம் அறிந்தவர்கள் பலர் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். அதில் நன்னகரம் கணபதி என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

குற்றாலத்திலுள்ள மூலிகைகள் கடுமையானதும், குணப்படுத்த முடியாததுமான நோய்களையும், குணப்படுத்திவிடும் மருத்துவத்திறமுடையன. எய்ட்ஸ் நோயினையும் குணப்படுத்தும் மூலிகைகள் உண்டு என்கின்றனர்.

மருத்துவ இரகசியம் கொண்ட குற்றால மலை வியக்கத்தக்க ஒன்று. அரசாங்க மூலிகைப் பண்ணை ஏற்படுத்தி ஆய்வுநடந்து வந்தாலும் மக்களுக்குப் பயன்படும் வகையில் மூலிகைகளின் பயன்களை வெளிக் கொணர்ந்து பயன்பாட்டிற்குரியனவாக மாற்றும் போது பல நோய்கள் குணமடையும்.

சில மருந்துகளைப் பற்றிய செய்திகள் இங்குக் கூறப்பட்டிருப்பது போன்று சில மூலிகைகளின் பெயர்களும் இங்கு பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றது.

அவை

1. அகத்தி
2. அத்தி
3. அமிர்தவல்லி
4. அரணை
5. அரிச்சந்திரபூண்டு
6. அரிவாள் மனைப் பூண்டு
7. அழகுக்கண்ணி
8. அறுகு
9. ஆடா தொடை
10. ஆகாசகருடன்
11. ஆடுதின்னாப்பாளை
12. ஆதண்டம்
13. ஆமணக்கு
14. அற்றுநெட்டி
15. ஆனைச்சுவடு
16. இடம்புரி
17. இண்டு
18. இலவங்கப்பட்டை
19. இலந்தை
20. இறங்கமுஞ்சி
21. உடம்புளி
22. ஊமத்தை
23. எட்டி
24. எட்டு இண்டு
25. ஏரமுஞ்சி
26. ஏலக்காய்
27. ஓரிதழ்த்தாமரை
28. ஒற்றிலைக் கரிப்பான்
29. கடுக்காய்
30. கண்டங்கத்திரி
31. கரிசலாங்கண்ணி
32. கரு ஊமத்தை
33. கருடக்கொடி
34. கருந்துளசி
35. கருநீலி
36. கருநொச்சி
37. கருவமரம்

38. கல்தாமரை
39. கல்துளசி
40. கற்பூரப்புல்
41. கற்றாழை
42. காக்கை கொல்லி
43. காகித்தம்
44. காட்டு எலுமிச்சை
45. காட்டுக் கரணைக் கிழங்கு
46. காட்டுக் கஸ்தூரி
47. காட்டுக்கொள்ளு
48. காட்டுச் சதகுப்பை
49. காட்டுச்சீரகம்
50. கார்த்திகைக் கிழங்கு
51. கிராம்பு
52. குடியோட்டிப்பூண்டு
53. குத்துறுகு
54. குப்பை மேனி
55. குழிதாமரை
56. குருக்கத்தி
57. கூகை நீர்
58. கூதிர்ப்பச்சை
59. கொடிவலி
60. கொடியார்கூந்தல்
61. கோடகசாலை
62. சக்கரவேம்பு
63. சங்கு
64. சங்குபுஷ்பம்
65. சதுரக்கள்ளி
66. சந்தனம்
67. சர்ப்பகந்தி
68. சரக்கொன்றை
69. சாம்பிராணியிலை
70. சித்தாளங்காய்
71. சிந்திக்கொடி
72. சிராப்பிலை
73. சிரிக்கிவரை
74. சிறியாநங்கை
75. சிறு அகத்தி
76. சிறு கீரை
77. சிறுதண்ணீ
78. சிறு நாகப்பூ
79. சிறு நெருஞ்சி
80. சிறு பீழை
81. செங்கத்தாழை
82. செங்கொடுப்பை
83. செண்பகம்
84. செந்நாவல்
85. செம்பரத்தை
86. செம்பருத்தி
87. செம்பை
88. செவிக்கள்ளி
89. சுடுக்காட்டு மல்லி
90. தர்ப்பைப்புல்
91. தவசு முருங்கை
92. தொட்டாவாடி
93. தொழுகன்னி
94. தைவளை
95. நஞ்சுமுறுஞ்சான்
96. பங்கம் பாலை
97. நரிவெங்காயம்
98. நற்சங்கு
99. நன்னாரி
100. நாகதாழி
101. நாகலிங்கம்
102. நாகவல்லி

103. நில அவரை
104. நிலப்பனை
105. நிலவாகை
106. நிலவேம்பு
107. நீர்முள்ளி
108. நீராடிமுட்டு
109. நீல ஊமத்தை
110. நீலம் சங்குபுஷ்பம்
111. நெருஞ்சி
112. நெல்லிக்காய்
113. நோவாளம் கொட்டை
114. பருப்புக் கீரை
115. பாதாளமீலி
116. பிரண்டை
117. பார்லி
118. பிரம்மை
119. புழுவிதை
120. பூச்சிமுள்ளு
121. பூமிச்சக்கரக் கிழங்கு
122. பெரியமான்
123. பெரியாநங்கை
124. பெருங்காயம்
125. பெருநெருஞ்சி
126. பெருமருந்து
127. பேய்த்துளசி
128. பேரரத்தை
129. பேராமுட்டி
130. பொன் ஊமத்தை
131. பொன்முசுட்டை
132. மஞ்சள்
133. மஞ்சள் கொடி
134. மஞ்சள் கரிசலாங்கன்னி
135. மரமஞ்சள்
136. மருதம்
137. மருதோன்றி
138. மலைவேம்பு
139. மாடலைச் செடி
140. மாவிலிங்கம்
141. மான் செவிக்கள்ளி
142. மிளகர் நங்கை
143. மிளகு அரணை
144. மிளகுச் சாரணை
145. முக்குளிக்கீரை
146. முசுமுசுக்கை
147. முப்பிரண்டை
148. மூக்கிரட்டை
149. மேக சஞ்சீவி
150. ராஜகருப்பு வில்வம்
151. வசம்பு
152. வண்டுக்கள்ளி
153. வல்லாரை
154. வலம்புரி
155. வள்ளிக்கிழங்கு
156. வால்மிளகு
157. விழுதி
158. வெண்துளசி
159. வெப்பாளை
160. வெண்மை சங்கு புஷ்பம்
161. வெள்ளறுகு
162. வெற்றிலை

திருக்குற்றாலநாதர் திருக்கோயில் அமைப்பு

தமிழ்நாட்டு நாகரிகமே கோயிலைச் சுற்றி வளர்ந்தது எனலாம். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவையார் வாக்கு. எள்ளுக்குள் எண்ணெய் போன்று, விறகில் தீப் போன்று, பாலிற்படுநெய் போன்று இறைவன் எங்கும் பரவி இருப்பினும், காட்சிக்கு மறைந்து விளங்குகிறான். பசுவின் உடம்பெல்லாம் பால் பரவி இருந்தாலும், மடியிலிருந்து காம்பின் வழியே வெளிப்படுவது போன்று எங்கும் நிறைந்துள்ள இறைவன் ஆலயத்திலுள்ள திருமேனியின் வழியாக நமக்கெல்லாம் அருள் பாலித்து விளங்குகிறான் என்பது ஆன்றோர் வாக்கு.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது முதுமொழி. திருநாவுக்கரசு நாயனார் "திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும், திருவெண்ணீரணியாத திருவில் ஊரும், அவையெல்லாம் ஊரல்ல, அடவிகாடே" என்று (பதிகம் 55, பாட்டு 5) கூறுகிறார்.

கோயில்கள் நாட்டின் உயிர்நாடி. மனிதனை, மனிதனாக வாழச் செய்யும் பண்பாட்டுக் கருவூலம், பக்திப்பெருக்கு கோயில்களாகவும் கலைக்கூடங்களாகவும் அறச்சாலைகளாகவும் வரலாற்று ஆய்வு மையங்களாகவும் உலக மக்கள் கண்டு வியக்கும் வானளாவிய விஞ்ஞானக் கூடங்களாகவும் மன அமைதிக்கு வழிகாட்டும் ஞானமையமாகவும் திகழ்கின்றன.

மன்னராட்சியில் தென்னகத்தில் உயர்ந்து நின்று அரசர்களின் புகழைப் பாடியவை கோயில்களே. மன்னர்கள் போரை மறந்தாலும் ஆலயங்கள் எழுப்புவதை மறக்கவில்லை. சிற்பிகளும், ஓவியர்களும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தென்னகத் திருக்கோயில்களில், கலைஞர்களின் கலைக்கூடமாம் தமிழகக் கோயில்களில் பரதக்கலை வீறுநடை போடுகிறது. இசைக் கலை தமிழிசையாக மலர்ந்து மக்கள் மனத்தை மகிழ்விக்கின்றது.

ஆன்மீகத்துறையில் வழிகாட்டியாக நிற்கும் பாரத நாட்டில் சிவனுக்குரிய சிறப்புடைய கோயில்கள் மொத்தம் 1008. அவற்றுள் பாடல் பெற்றவை 275.

பாடல் பெற்ற தலங்களுள் திருக்குற்றாலமும் அடங்கும். இக்கோயில் அம்பலங்கள் ஐந்துள் ஒன்றாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

கோயில்கள் தோன்றிய இடங்கள், மக்கள் மனத்தை ஒருங்கிணைத்து வழிபாடு செய்யும் இடமாகவே இருந்தன. ஆற்றங்கரைகளிலும், குளத்தின் கரைகளிலும், வளம் மிக்க சோலைகளிலும், மரநிழலிலும், மலைக்குகைகளிலும் கோயில்களை அமைத்தனர். திருக்குற்றாலத் திருக்கோயில் இயற்கை வளம் நிறைந்த அருவிகள் விழும் மலை அருகில் அமைக்கப்பட்டிருப்பது கோயிலின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்.

இயற்கை எழிலைக் கூறும் திரிகூடராசப்பக் கவிராயர்

"தேன் குளிக்கும் தேன்வாவி திரை குளிக்கும் தூவியனம்
கான் குளிக்கும் பசுந்தென்றல் கரைகுளிக்கும் எறி தரங்கம்
மீன் குளிக்கும் புனல்யாறு மிசை குளிக்குங்கருமேதி
வான் குளிக்கும் விரிபாளை மடல் குளிக்கும் விரிவாளை"

என்று திருநாட்டுச் சருக்கம் பக்கம் 31-இல் கூறுகின்றார்.

முதல் நுழைவாயில்

திருக்குற்றாலத் திருக்கோயிலின் முதன்மையான நுழைவாயில் கிழக்கு நோக்கியுள்ளது. இந்நுழைவாயிலுக்கு அழகூட்டும் வண்ணம் சுமார் இருபது அடி தூரத்தில் படித்துறையின் இருபக்கங்களிலும் குறிஞ்சிக் கோபுரங்கள் சிந்தையைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்கு நுழைவாயில் இராச கோபுரத்தைத் தாங்கி நிற்கின்றது. நுழைவாயிலின் கைப்பிடியாக 2 பெரிய யானைகள் கட்டப்பட்டுள்ளன. கோபுரத்தில் பொதுவாக உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் உருவங்களையும் காணலாம் என்றாலும் தோன்றிய கால வரலாற்றினையும் எடுத்தியம்பக்கூடியது. கோபுரநிலைகள் ஒன்றன் மேல் ஒன்றாக ஒற்றைப்படையில் அமைக்கப்பட்டிருக்கும். மூன்று நிலைகளையுடைய கோபுரம் நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளையும், ஐந்து நிலைகளையுடையவை ஐம்பொறிகளையும், ஏழு நிலைகள் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பனவற்றையும் குறிக்கும் எனக் கூறுவர்.

திரிகூடமலையிலுள்ள திருக்குற்றாலநாதர் திருக்கோயிலின் இராசகோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுரத்தில் பல்வேறு சுதையுருவங்கள் அழகு செய்கின்றன. மீனாட்சி கல்யாணக் காட்சியை விளக்கும் சுதைச் சிற்பங்கள், துவாரபாலகர்கள், முனிவர்கள், குதிரை வீரர்களின் உருவங்கள் ஆகிய சுதைச் சிற்பங்கள் இராசகோபுரத்திற்கு அழகூட்டுகின்றன.

நுழைவாயிலுக்கு அடுத்து 12 துண்கள் 4 வரிசையாகக் கிழக்கு மேற்காக உள்ளன. இந்தத் தூண்கள் தாங்கியுள்ள விதானம் வட்டப் பூக்கள் வரிசைக்கு 10 ஆகவும் தெற்கு வடக்காகவும் மொத்தம் 18 வரிசைகள் கொண்டு 180 பூக்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. விதானத்தில் கிழக்கு மேற்காகக் கற்களால் பிரிபோன்று அமைக்கப்பட்டுள்ள கல்கயிறு நுழைக்கப்பட்டிருக்கிறது. 12 தூண்களிலும் சிறு சிறு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த நுழைவாயிலைத் தொடர்ந்து வலப்புறம் யாகசாலைக் குறட்டையும், அலங்காரக் குறட்டையும் உள்ளடக்கிய 100 தூண்களால் ஆகிய திரிகூடப் பெரும் மண்டபம் காட்சி அளிக்கின்றது.

இரண்டாம் நுழைவாயில்

இரண்டாம் நுழைவாயிலில் வரவேற்பு மண்டபம் உள்ளது. இம்மண்டபம் மரத்தால் ஆனது. இம்மண்டபத்தின் தென்புறம் அமர்ந்த நிலையில் பிள்ளையாரும், வடபுறம் ஆறுமுக நயினாரும் சிறு கருவறைக்குள் இருந்து அருள் செய்கின்றனர். மரத்தாலான கோபுரத்தைப் பக்கத்திற்கு எட்டுச் சிறிய தூண்களும் நடுவே கல்தூண் ஒன்றும் தாங்கி நிற்கின்றன. மரக்கோபுரத்தின் உத்திரப்பகுதி யாழியும், குதிரை வீரர்களும், சிம்ம உருவங்களும் பறவைகளும் தாங்கி நிற்பது போலக் காணப்படுகிறது.

தூணின் உச்சியில் போதிகை வாழைப்பூ அலங்காரத்துடன் வடிக்கப்பட்டுள்ளது. அவ்வாழைப் பூக்களைச் சில கிளிகள் கொத்தி நிற்கின்றன. விதானத்திற்கும், உத்திரத்திற்கும் இடையே உள்ள கண்டப் பகுதியில் சிறு சிறு மரச்சிற்பங்கள் பல புராணச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இறைவனின் திருமணக் கோலம், கைலாயக் காட்சி, ரிஷப வாகனம், வீரபத்திரர், கால்மாறி

ஆடிய நடராஜன், தென்முகக் கடவுள் ஆகிய உருவங்கள் குறிப்பிடத்தக்கன.

மரத்தாலான கோபுரத்தின் மேற்குப்புறத் தூண்களில் ஊர்த்துவத்தாண்டவச் சிற்பம் காணப்படுகின்றது. இது தென்காசிக் காசி விசுவநாதர் கோயில் திருவோலக்க மண்டபத்தை அழகுபடுத்தும் சிற்பங்களுள் ஒன்றாகிய ஊர்த்துவ தாண்டவர் சிற்பத்தை ஒத்துள்ளது. தென்காசியிலுள்ள இச்சிற்பம் மதுரை மீனாட்சி கோயிலிலுள்ளதைப் போன்று பொலிவுடன் விளங்குகிறது.

கொடி மண்டபம்

நுழைவாயிலைக் கடந்ததும் காட்சி அளிப்பது கொடிமர மண்டபம். கொடிமரம் ஆன்மாவைக் குறிக்கும். ஆன்மா உள்முகமாக இறைவனை நோக்குகிறது என்பதும், இறைவனை அடைவதே ஆன்மாவின் குறிக்கோள் என்பதும் இக்கொடி மரம் வழி அறியப்படுகிறது.

கொடி மரத்தின் முன் நமஸ்கார மண்டபம் உள்ளது. இது நான்கு தூண்களைக் கொண்ட மண்டபமாகும். இம்மண்டபத்தின் மேல் சுதையாலாகிய அழகிய நான்கு பக்கச் சிகரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் இம்மண்டபம் யாகம் நடத்துவதற்காகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

கொடி மர மண்டபத்தின் மையப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காகப் பலிபீடம், கொடி மரம், நந்தி ஆகியவை இடம் பெற்றுள்ளன. கொடி மரத்தை ஒட்டியுள்ள தென்புறத் தூண்களில் இம்மண்டபம் உருவாகக் காரணமாயிருந்த வடகரை ஆதிக்கம் செம்புலித் தேவன், சின்னணைஞ்சாத் தேவர் ஆகியோரின் உருவங்கள் கூப்பிய கரங்களுடன் காணப்படுகின்றன.

கொடி மர மண்டபத்தின் சன்னதிக்கு வடபுறம் தெற்கு நோக்கி உயரமான நாற்கால் குறடு மண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபத்தில் திருவிழாக் காலங்களில் நடராச மூர்த்தியை எழுந்தருளச் செய்து வழிபாடு நடத்துவது வழக்கமாகும்.

மூன்றாம் திருவாயில்

கொடி மர மண்டபத்தை அடுத்துள்ள சிவன் கோயில் திருச்சுற்று நுழைவாயில் மண்டபத்தின் தென்புறத்தில் நின்ற நிலை விநாயகரும், வடபுறத்தில் முருகனின் திருவுருவமும் இடம் பெற்றுள்ளன. இச்சிவன் கோயிலின் நுழைவாயிலிலுள்ள துவார பாலகர் சிலைகள் இக்கோயில் மிகத் தொன்மையானது என்பதற்குச் சான்றாக உள்ளன.

சிவன் கோயில் அமைப்பு

கருவறை, அரை மண்டபம், மகா மண்டபம் என்ற முறையில் கட்டிடக் கலை அமைப்புடன் சிவன்கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆன்மா லயித்திருக்கும் இடமாகிய ஆலயத்தை மனித அவயவங்களாகச் சைவ சித்தாந்தம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

கர்ப்பகிருகம்	-	சிரசு
அர்த்த மண்டபம்	-	முகம்
ஞான மண்டபம்	-	கழுத்து
மகாமண்டபம்	-	மார்பு
மணி மண்டபம்	-	வயிறு
உட்பிரகாரம்	-	தோள்கள்
வெளிப்பிரகாரம்	-	கைகள்
இரு பிரகார இடைவெளி	-	விலாப்புறங்களுக்கும், கைகளுக்கும் உள்ள இடைவெளி
பிரகாரப் பலகணிகள்	-	செவிகள்
விக்ரகம்	-	ஆன்மா
கர்ப்பகிரக நிலைத் தூண்கள்	-	கண்கள்
சுவர்க் கற்கள்	-	எலும்புகள்
தூண்கள்	-	நரம்புகள்
கோபுரம்	-	ஸ்தூலலிங்கம்

ஏழுமதில்கள்	-	இரத்தம், எலும்பு, சுக்லம்,தசை தோல், மூளை என்ற தாதுக்கள்
ஐந்து மதில்	-	அன்மையம், பிராணமயம், மனோமயம் ஞானமயம், ஆனந்தமயம் என்ற கோசங்கள்
மூன்று மதில்	-	ஸ்தூல, சூக்கும, காரண சரீரங்களின் தத்துவங்கள்

இவ்வாறு கோயிலின் அமைப்புத் தத்துவம் கூறப்படுகிறது.

கோயில்களின் அமைப்பு விதி

கோயில்கள் விமானம், இடைக்கட்டு, முன் மண்டபம், மகா மண்டபம், திருச்சுற்று, பரிவாரக்கோயில், கோபுரவாயில் எனப் பல பகுதிகளைக் கொண்டது. மனையியலில் கூறியுள்ள படி நிலத்தைத் தேர்ந்தெடுத்து "நிலத்தில் ஒரு சதுரம் வரைந்து அதைப் பக்கத்திற்கு எட்டாக மொத்தம் 64 சதுரங்களாக அன்றிப் பக்கத்திற்கு ஒன்பது சதுரங்கள் வீதம் 81 சதுரங்களாக அமைப்பர். இவற்றின் நடுவிலுள்ள சதுரங்களில் விமானத்தையும், ஓரங்களிலுள்ள சதுரங்களில் திருச்சுற்று, பரிவாரம், கோயில் முதலியவற்றையும் அமைப்பர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இடைப்பட்ட சதுரங்கள் வெளியாக இருக்கும்; அவற்றை மர்மத்தானங்கள் என்றும், அங்கு எந்தக் கட்டிடமும் எடுத்தல் கூடாதென்றும் கூறுவர். ஒவ்வொரு சதுரத்திற்குரிய தெய்வத்தையும் சாத்திர நூல்கள் கூறுகின்றன. கட்டிடம் எழுப்புவதில் ஆதாரப் பகுதிகளாக உள்ளவை அதிட்டானம் (பீடம்) சுவர் (கால்) பிரஸ்தாரம் (கூரை) கழுத்து (கிரீவம்), சிகரம் (தலை), மகுடம், ஸ்தூபி என்பவையாகும். இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உடல் அங்கங்களுக்கு உவமிக்கின்றனர். (கழுத்து மேல் பகுதியைச் சிகரம் என்பர்).

கருவறையின் சுவர்ப்பகுதியை மடிப்புகளாக அமைத்து அதில் பொய்க் கோட்டங்களையும், கும்ப பஞ்சரங்களையும், அரைத்தூண்களையும் இடம் பெறச் செய்துள்ளனர். சுவர்ப் பகுதியின் மேலுள்ள கொடுங்கைப் பகுதியின் உட்புறத்தே மரச்சட்டங்களை அமைத்துச் செய்தது போன்று கல்லில் செதுக்கி

வைத்துள்ளமை வியக்கத் தக்கதாகும். கொடுங்கைக்கு மேலுள்ள கூரைப்பகுதி சுதையும் செங்கற்களும் கொண்ட எண்பட்டையுடன் கூடிய திராவிட சிகரமாக அமைந்துள்ளது.

நாகரசிகரம், திராவிட சிகரம், கஜப்பிருஷ்டம் என்ற வகைகளில் திருக்குற்றாலக் கருவறை திராவிட சிகரமாகத் திகழ்கின்றது. நாகரசிகரம் என்பது நான்கு பட்டை அமைப்புக்களையுடையது. திராவிட சிகரம் என்பது எட்டுப்பட்டைககளைக் கொண்டது. கஜபிருஷ்டம் என்பது யானையின் பின் புறத்தைப் போன்றது.

திருக்குற்றாலநாதர் இலிங்கவடிவில் அருள் புரிகின்றார். ஆவுடையார் மட்டும் சிற்பியால் வடிக்கப்பட்டுள்ளது. இலிங்கப்பகுதி சுயம்புலிங்கமாக உருண்டைப் பகுதியாக மிகவும் சிறயதாகக் காட்சியளிக்கிறது.

சிவலிங்கமானது அடியிலிருந்து மேல் நோக்கிப் பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், ருத்ர பாகம் என்ற மூன்று அங்கங்களாக ஒரே அமைப்பில் செய்யப்படும். இவற்றில் பிரம்ம பாகம் திருவுண்ணாழித் தளமட்டத்திற்குக் கீழேயும், விஷ்ணு பாகம் தளமட்டத்திற்கு மேல் ஆவுடையாருக்குள்ளும் மறைந்திருக்கும். மூன்றாவது கூறாகிய ருத்ரபாகம் ஆவுடையாருக்குள்ளும் மேல் மட்டத்திலிருந்து ஓங்கியும் நிற்கும். வெளியே தெரியும் பாகம் பூஜா பாகம் என்றும் பூஜாம்சம் என்றும் அழைக்கப்படும் என்று செந்நூல் கூறுகின்றது. இவ்வமைப்புச் சிற்பிகளால் செதுக்கப் பெறும் மானுஷலிங்கங்களில் அமையும். சுயம்பு பாணிலிங்கங்களில் பிரம்மபாகம், விஷ்ணுபாகம் என்பது இராது.

“சங்க வீதிச் சுயம்புவுக் கோர் மலர்” என்று கவிராயர் பாடுகின்றார். தொன்மையில் சுயம்புலிங்கமாகத் தோன்றிய திருக்குற்றால நாதருக்குப் பின்னால் சிற்பிகளால் ஆவுடையார் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சிவம் லிங்கம் - சிவலிங்கம். சிவம்-கடவுள், லிங்கம்-அடையாளம் கடவுளைக் காட்டும் குறி அல்லது அடையாளம் என்பது பொருள். லிங்கம் என்பதன் விரிந்த பொருள் லி-லியம்-ஒடுங்குதல் கம்-போதம்-தோன்றுதல்

ஒலி முதலிய புலன்களுக்கும் மனோவாக்குகளுக்கும் எட்டாததாய் அளவில்லாத பேரொளியாய்த் தனக்கு மேல் நாயகமில்லாததாய், அருவமாய், நிர்மலமாய், அனைத்து உயிர்களும் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்கும் ஏதுவாய் காரணமாய் இருப்பது.

பாணாசுரனால் பூசிக்கப்பட்டது பாணலிங்கம். இந்திரனால் பூசிக்கப்பட்டது ஐந்திரலிங்கம். அக்கினியால் வணங்கப்பட்டது ஆக்னேயலிங்கம். இராமன் வணங்கியது யாம்யலிங்கம்; நிருதியாற் பூசிக்கப்பட்டது நைருதலிங்கம். வருணலிங்கம், காற்று லிங்கம், கௌபேரலிங்கம், ஈசான லிங்கம், வைணவ லிங்கம், பிரம லிங்கம், என்று கோடானு கோடி லிங்கங்களைச் சாத்திர நூல்கள் பேசுகின்றன. திருக்குற்றாலத் திருக்கோயிலிலுள்ள இலிங்கம் அகத்தியரால் பூசிக்கப்பட்டது என்பர்.

மாமண்டபத்தின் வடபகுதியில் நடராசப் பெருமானின் திருவுருவச் சிலையும் வேறு பல தெய்வத் திருமேனிகளும் காணப்படுகின்றன. இந்த நடராசர் திருவுருவம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பாண்டியர் காலத்தில் உருவாக்கப் பெற்ற செப்புப் படிமங்கள் குறிப்பிடத்தக்கவை. சோமாஸ்கந்தர் சந்திரசேகர், நடராசர், முதலான சிவனின் பல வடிவங்களும், கணபதி, முருகன், துர்க்கை, நாயன்மார்கள் முதலானவர்களின் அழகிய செப்புப் படிமங்களும் முக்கியமானவை. இச்செப்புப் படிமங்களைச் சார்ந்தது திருக்குற்றாலத்திலுள்ள நடராசர் பெருமானின் திருவுருவச்சிலை.

தென்னாட்டின் சிற்ப உருவங்களின் தோற்றம் தமிழர்களது வீர வழிபாட்டின் தொடர்ச்சி ஆகும். முதலில் ஒரு வீரனையோ, மகாசக்தியையோ குறிப்பதான நடுகல்லாகவும், பின்னர்க் கல், மரம், சுதையாலாகிய ஒரு உருவத்தைக் கொண்டதாகவும் இருந்தது. இதன் பிற்பட்ட வளர்ச்சியே கோயில்களில் காணும் சிற்ப உருவங்கள்.

மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள் ஏழாவதாக எண்ணப்படுவது நடராசர் திரு உருவம். இது திரு ஐந்தெழுத்தின் வடிவமானது எனச் சைவ சித்தாந்த நூல்களுள் ஒன்றான உண்மை விளக்கம் எனும் நூல் கூறுகிறது.

சிவபெருமானின் தாண்டவம் வைரவனாகவும், வீரபுத்திரனாகவும் உள்ள அவனுடைய தாமச குணத்தைக் காட்டுகிறது என்று கூறுகின்றனர். அரங்கமாய்ப் பேய்க் காட்டில் பித்தவேடம் கொண்டு ஆடுபவன், தேவியுடன் கணங்களும், பேய்களும் சேர்ந்தாட இடுசுடுகாட்டிலும் ஆடுகிறான். ஆனந்தமா நடனம் தில்லைப் பொன்னம்பலத்தில் நிகழ்கிறது. திருக்குற்றால நடராசரும், ஆனந்தமா நடனமே புரிந்து அருளை வழங்குகின்றார். “ஊறு தோறு மானந்த நடஞ் செய் தானம்” என்று திருக்குற்றாலத் தல புராணம் கூறுகிறது. பொருள் பெருகவும் போதம் பெருகவும் அருள் பெருகவும், சைவ நெறி பெருகவும், நலம் பெருகவும் இறைவன் சித்திர சபையில் ஆடுகிறான்.

மகா மண்டபத்தின் திருச்சுற்றைச் சுற்றித் திருச்சுற்று மாளிகை அமைந்துள்ளது. இதன் தென்பகுதியில் பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி, ஆகிய சப்த கன்னியர் உருவச் சிலைகளும், பைரவர், மகாலெக்ஷ்மி, அய்யனார், நாராயணர், நரசிம்ம மூர்த்தி, பிரம்மா ஆகியோரது சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் விஷ்ணு, ஐயனார், பிரம்மா, இந்திராணி, பிராம்மி, கும்பமுனி ஆகிய சிலைகள் மிக அழகான முக பாவத்துடன் உள்ளன. இவை கி.பி. 8,9ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவை என்பது தொல்லியல் அறிஞர் கருத்து.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர்க் குகைக் கோவில்கள் அல்லது குடவரைக் கோவில்கள் தோற்றுவிக்கும் மரபு வழக்கற்றுக் கட்டுமானக் கோவில்கள் தோன்றலாயின. கி.பி. 9ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து கற்கோயில்கள் பாண்டிய நாட்டில் தோன்றலாயின. கி.பி. 800 முதல் 950 வரையுள்ள இடைக் காலத்தில் முதற்பாண்டியப் பேரரசுக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களுள் ஒன்றாகத் திருக்குற்றாலம் திகழ்கின்றது. திருக்குற்றாலநாதர் கோயில் 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொன்மைமிக்க கோயிலாகும்.

திருச்சுற்று மாளிகையின் தென் மேற்கு மூலையில் கிழக்கு முகமாகக் கன்னி மூலை விநாயகர் சிலை அமைந்துள்ளது. பாசாங்குசம், மோதகம் ஏந்தி முன்னிடக்கை தொடை மீது ஊன்றி, துதிக்கையை இடப் புறமாகச் சுற்றிய நிலையில் உருவாக்கப்பட்ட இக்கன்னிமூலை விநாயகர் சிலையும் தொன்மை வாய்ந்ததே.

மேற்குத் திருச்சுற்று மாளிகையில் சந்திரன், வன்மீகநாதர், சம்புகேஸ்வரர், அண்ணாமலைநாதர், திருக்காளத்தியப்பர், திருமூலநாதர், இராமலிங்கர் ஆகிய தெய்வங்களின் பரிவார ஆலயங்கள் அமைந்துள்ளன. வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வானையுடன் நின்ற கோலத்தில் சுப்பிரமணியரின் சிறு கோயில் அமைந்துள்ளது.

இச்சிவன் கோயில் பாடல் பெற்ற தலமாயிருந்தாலும் மாறஞ்சடையன், இராஜராஜன் போன்ற பல மன்னர்களின் கல்வெட்டுக்களைக் கொண்டிருந்தாலும், அங்குள்ள சிலைகள் 8,9, ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருந்தாலும் இப்போதுள்ள கோயில் பிற்காலத்தைச் சார்ந்ததாகும்.

முதலாம் இராஜராஜன் பாண்டியர்களை வென்று பாண்டிய நாட்டைத் தம் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்த போது தென்பகுதியில் பல கோயில்களைக் கட்டியதுடன் திருப்பணியும் செய்துள்ளான். முதலாம் இராஜராஜன் திருப்பணி குற்றாலத்திலும் நடந்துள்ளது. மேலும் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1381), தான் இக்கோயிலை எழுப்பியதாகக் கூறியுள்ளான். மூன்றாம் முறையாகக் கி.பி. 1387 ஆம் ஆண்டு இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்காலத்தில் கட்டிய சிவன்கோயில் தான் இன்றும் நிலைத்திருக்கிறது. இக்கோயிலைப் பின்னால் கட்டியது திருநெல்வேலிப் பராக்கிரம பாண்டியன் என்றாலும் கோயில் சிறப்பாகத் திகழ வழிவகுத்தவன் தென்காசிப் பராக்கிரம பாண்டியன் வழித்தோன்றலாகிய அதி வீரராமன் என்ற ஸ்ரீவல்லபன்.

அம்மன் திருக்கோயில்

திருக்குற்றாலநாதரின் அருள் தேவியாய் அருள் பாலிப்பவள் குழல்வாய் மொழி அம்மை ஆவாள். இவ்வம்மையின் திருக்கோயில் இறைவன் கோயிலின் தென்பால் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் கருவறை, அரை மண்டபம், முன் மண்டபம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகிறது.

கருவறை கால் முதல் தோள் வரை வழுவழுப்பான கருங் கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. காலத்தால் பிற்பட்ட இக்கோயிலின் விமானப்பகுதி வேசர வடிவில் சுதை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கருவறைச் சுவர்ப்பகுதி சிவன் கோயிலைப் போன்றே மடிப்புகளுடன் படைக்கப்பட்டுள்ளது. சுவர்ப் பகுதியில் பொய்க்கோட்டம், அரைத்தூண், கும்ப பஞ்சரம் போன்றவற்றைக் கவினுற வடித்துள்ளனர் சிற்பிகள்.

கருவறையின் வடபுறத்தில் அதிட்டானப் பகுதியில் கோமுகம் என்றழைக்கப்படுகின்ற அபிடேக நீர் விழும் தூம்பு, தண்டில் தொங்கிக் கொண்டிருக்கும் தாமரை மொக்குப் போல வடிவமைக்கப்பட்டிருக்கும் திறன் கட்டிடக் கலையின் நுட்பத்தினை வெளிப்படுத்துகிறது.

முன் மண்டபத்தின் வலதுபுறம் அண்ணாவிப் பிள்ளை பீடமும், இடதுபுறம் பரிவாரதேவதை பீடமும் உள்ளன. இப்பரிவார தேவதையை 'வீச்சறுவாள்' என்றும் 'வேடன்' என்றும் குறிப்பிடுகின்றனர். அண்ணாவிப்பிள்ளை செங்கோட்டை ஆசிரியர் மகன் என்றும் பிரம்மச்சாரி என்றும் பட்டர்கள் கூறுகின்றனர். அண்ணாவிப்பிள்ளை திருக்கோயிலிலேயே தங்கி வாழ்ந்து வந்த போது, பெற்றோர்கள் அவரை இல்லம் திரும்ப வற்புறுத்தினர். அப்போது அசரீரி 'என்னுடன் ஐக்கியமாகிவிட்டான், அவனைக் கும்பிடுங்கள்' என்று வந்தது. அக்குரலை மதித்துப் பெற்றோர்கள் அப்பிள்ளையைக் கோயிலில் விடுத்துச் சென்றனர்.கோயிலில் வாழ்ந்து வந்த அவர் அவ்விடத்திலேயே அடக்கமானார். அவருக்கு ஆடி, சதுர்த்தசி திதியில் விசேட பூசை நடைபெறுகின்றது. அண்ணாவிப்பிள்ளை போன்று பல ஞானிகள் இத்திருக்கோயிலில் வாழ்ந்துள்ளனர் என்பது சான்றோர்கள் கருத்து. கோயிலைச் சுற்றியுள்ள திருச்சுற்றின் தென்மேற்கில் கைலாசநாதர் கோயிலும் வடமேற்கில் துர்க்கைக்குத் தனிக் கோயிலும் உள்ளன.

கோயிலின் முன் மண்டபம் பல தூண்களைக் கொண்டு விளங்குகின்றது. இம்மண்டபத்தின் தூண்கள் பலபட்டைகளுடனும் பெருந்தாமரை இதழ்களுடனும் கூடியனவாக உள்ளன. இம்மண்டபம் தாங்கியுள்ள கூரையின் கபோதப் பகுதி மரத்தால் அமைந்தது போன்று மிக நுணுக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது.

அம்மன் சன்னதி முன்பு பல தூண்களுடன் அமைக்கப்பட்ட தூண் மண்டபம் உள்ளது. தூண்கள் சிறு சிறு சிற்ப உருவங்களைக் கொண்டு விளங்குகின்றன. இம்மண்டபத்தின் கிழக்கிலும், தெற்கிலும் முறையே

நுழைவதற்காகவும், வெளியேறுவதற்காகவும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அம்மன் கோயிலின் நுழைவாயிலின் இடமும், வலமும் உள்ள சுவர்ப் பகுதியில் உள்ள இரு கல்வெட்டுகள் குழல்வாய்மொழி அம்மன் திருக்கோயில் திருப்பணி வரலாற்றினைக் கூறுகின்றன.

இடதுபுறம் உள்ள கல்வெட்டு

சிவமயம்

"ஸ்ரீகுழல்வாய்மொழி அம்மாள் கோவில் திருப்பணி 1100 ஆண்டு ரக்தாக்ஷி வருடம் தைமாதம் 14ந் தேதி தேவகோட்டை வி.கரு.சித் சோமசுந்தர செட்டியார் அவர்களால் ஆரம்பஞ் செய்து மேற்படியாரவர்கள் குமாரர் காசி விஸ்வநாதஞ் செட்டியார் அவர்களால் திருப்பணி பூர்த்தி செய்து 1108 ஆண்டு ஸ்ரீ முகவருஷம் ஆனி மாதம் 19 ஆதித்த வாரம் சித்திரை நட்சத்திரம் உதயாதி நாழிகை 7-30 க்கு மேல் சிம்ம லக்கனத்தில் மஹாகும்பாபிஷேகம் செய்திருக்கிறது.

மேற்படி கோவில் திருப்பணிக்கும் அம்மன் சந்நதி கதவுகளும் பள்ளியறை கதவுகளும் சப்பர மஞ்சம் வகையராக்களும் வெள்ளியினால் செய்து வைத்திருப்பதற்கும் மேற்படி வி.கரு.சித் அவர்களால் நாலுபங்கு பணமும் மேற்படியால் அரு.பிச.அரு.அரு. அருணாசல செட்டியார் அவர்களால் ஒரு பங்கு பணமும் கொடுத்திருக்கிறது" என்றும்,

வடபுறம் கல்வெட்டு

சிவமயம்

"1109 ஆண்டு ஸ்ரீமுக வருஷம் தைமாதம் 23ந் தேதி சோமவாரம் ஸ்ரீகுழல்வாய்மொழி அம்பாளுக்கும் ஸ்ரீகுற்றாலநாத சுவாமிக்கும் வெள்ளியின்ால் நிலை அங்கிகள், நாகாபரணம், திருக்குவளை, பீடம், பிரபை முதலியவைகள் தேவ்கோட்டை வி.கரு.சீ.த. காசிவிஸ்வநாத செட்டியார் அவர்கள் தாயார் லெக்ஷ்மி ஆச்சியார் செய்து வைத்திருக்கிறது" என்றும் கூறும் கல்வெட்டுக்கள், கி.பி.1925 ஆம் ஆண்டு சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களால் குழல்வாய் மொழி அம்மன் திருக்கோயில் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டு, அவரின் திருக்குமாரர் காசிவிசுவநாதன் செட்டியாரால் கி.பி.1933 ஆம் ஆண்டு குடமுழுக்கு நிகழ்த்தப்பட்டுள்ளது,

என்பதைத் தெளிவு செய்கின்றன. அம்மன் கோயிலில் இலக்குமி ஆச்சியின் வெங்கலச் சிலை உள்ளது. இக்கோயில் பிற்காலத்துப் பணியாய் இருப்பினும் வியக்கத் தக்க கட்டிடக் கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

குறும்பலாநாதர்

அம்மன் கோயிலின் தெற்குவாயிலை அடுத்துக் குறும்பலாநாதர் வீற்றருளுகின்றார். இக்கோயில் வெளித் திருச்சுற்றில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளார். தலவிருட்சத்துடன் குறும்பலாநாதர் அமர்ந்துள்ளார். இக்குறும்பலாநாதருக்குத் தினபூசை உண்டு.

திருக்குற்றாலத்தில் ஆதியில் குறும்பலா மர வழிபாடு இருந்திருக்கின்றது. பிரளயக் காலத்திலும் அழியாத இயல்புடைய குறும்பலா நிழலில் இறைவன் கோயில் கொண்டுள்ளான். சிவ பிரானுக்கும் உமையம்மைக்கும் நறு நிழல் தரும் குறும்பலா ஞானமயமானது.

குற்றாலத்தல விருட்சமாகிய குறும்பலா செப்பேடுகளில் இடம் பெற்றுள்ளது. ஞான சம்பந்தர் திருக்குறும்பலாப்பதிகம் பாடியுள்ளார்.

"திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்தசெல்வர்
இருந்த இடம் வினவில் ஏலங்கமழ் சோலையின வண்டியாழ் செய்
குருந்த மண நறுங் குன்றிடஞ் சூழ்தண் சாரற் குறும்பலாவே"

என்கிறார்.

திருக்குற்றாலக் குறவஞ்சி, குறும்பலா நிழலில் இறைவனும் இறைவியும் எழுந்தருளியுள்ள செய்தியைக் கூறுகின்றது.

"கோடியமதி சூடியநாயகர் குழல்வாய்மொழி புணரழகிய நாயகர்
குறும்பலாவினிற் கூடுவா ராமெனில்"

எனும் பாடல் வழி அறியலாம்.

ஆதியில் திருக்குற்றாலநாதர் கோயிலில் மரவழிபாடு இருந்துள்ளது என்பதற்குத் திருக்கோயிலின் தென்புறம் திரு வெளிச்சுற்றில் நாற்புரச் சுவருக்குள் பழமைவாய்ந்த குறும்பலா மரங்களைப் பாதுகாத்து வருவதே சான்றாக அமைந்துள்ளது.

வேதங்கள் குறும்பலா மரமாக நின்று சிவபிரான் அருளைப் பெறத் தவம் செய்ததாகச் சான்றோர் கூறுகின்றனர். குறும்பலா மரம் திருக்குற்றால மூலக்கோயிலை நோக்கித் தூல பஞ்சாக்கரத்தைப் புகழ்ந்து கூறித் தன் அகத்தே சூக்கும பஞ்சாக்கரப் பொருள் நிலையினை எண்ணித் தவம் செய்ததாக இலக்கியம் கூறுகின்றது.

வேதம் மரமாகவும், இதன் மூலமாகிய பிரணவம் மரத்தின் வேராகவும், கருமம், ஞான, காண்டங்கள் பெருங்கவடுகளாகவும், சுருதிகள் எல்லாம் பருத்த கிளைகளாகவும் உபநிடதம் தளிராகவும் பரிணமித்துள்ளதாக நம்புகின்றனர்.

வேதம் குறும்பலா மரமாக நின்று தவம் செய்தும் இறைவன் காட்சி கிடைக்காமையால் அவனின் ஆயிரத்திருநாமங்களைக் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது.

"கங்கை வார்சடை யோகீ நமோநம
கஞ்சன் மாலறி யாதாய் நமோநம
மங்கை யாமனை பாகா நமோநம
மந்தர ஞான சொரூபா நமோநம
சங்கவீதி விலாசா நமோநம
சம்பு நாதவினோதா நமோநம
செங்கை மான்மழு வாளா நமோநம
செண்ப காடவி நாதா நமோநம"

(குறும்பலாச்சருக்கம் ப. 131)

என்று வேதமாக நின்ற குறும்பலா போற்றிப் பாடிய உடன் சிவபெருமான் உமையம்மையுடன் வெளிப்பட்டருளினான். வேதமாகிய குறும்பலா வேண்டுதற்கிணங்க இறைவன் குறும்பலா மரத்தின் அடிக்கண் அமர்ந்தான்.

குறும்பலா மரத்திற்கு நீர்விட்டவர் தேவர்க்கும் மும்மூர்த்திகளுக்கும் அபிடேகஞ் செய்த பயனை எய்துவர். குறும்பலா நிழலிருந்து படைக்கப்படும் மந்திரம் கோடி உருவாய்ப் பயன் விளைக்கும். குறும்பலா மரத்தின் அடியில் அமர்ந்து தானம் செய்பவரும் பிற அறங்களை இயற்றுபவரும் பெரும்பேறு பெறுவார்கள் என்ற நம்பிக்கை மக்களிடமுள்ளது. குறும்பலா நிழற் கீழிருந்து இறந்தோர்க்குரிய கடனைச் செய்பவர்கள் இருபத்தொரு தலைமுறையினரையும் உயர் கதியில் சேர்ப்பர் என்றால் குறும்பலாவின் சக்தி கூறுவதற்கு எளிமையானதன்று.

வெளித் திருச்சுற்றின் தென்புறத்துச் சுவரில் அறுபத்து மூவர் திருவுருவங்களும், தொகையடியார் ஒன்பதின்மரின் உருவங்களும் வடக்கு நோக்கிக் காணப்படுகின்றன. இச்சுற்றில் கோயிலின் தெற்குவாசல் அமைந்துள்ளது. இவ்வாயில் முதன்மை அருவியில் சென்று இறைவனுக்கும் இறைவிக்கும் அபிடேக நீர் கொண்டுவரப் பயன்படும் வாயிலாகும். இதன் கீழ்ப்புறம் இரு துணைக் கோயில்கள் காணப்படுகின்றன. ஒன்று சைலப்பருக்கென உருவாக்கப்பட்ட கோயிலாகும். இது மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையையும் முன் மண்டபத்தையும் கொண்டு விளங்கும் இக்கோயிலுக்குச் சுதை வடிவிலான விமானம் காணப்படுகிறது. சைலப்பர் லிங்க வடிவத்தில் காணப்படுகிறார். இதனருகில் வல்லப கணபதிக்குச் சிறு ஆலயம் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயிலுக்கும் கருவறை முன் மண்டபம் கொண்டு சைலப்பர் கோயில் போன்றே காட்சி அளிக்கிறது.

பரிவார தெய்வங்களின் ஆலயங்கள்

அறுபத்து மூவரை அடுத்து நன்னகரப் பெருமாளின் சிற்றாலயம் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் இக்கோயில், கருவறையினையும் முன்மண்டபத்தையும் கொண்டுள்ளது. விமானம் சுதையால் வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையினுள்ளே நின்ற கோலத்தில் நன்னகரப் பெருமாள் காட்சி தருகின்றார். இப்பெருமாளின் நாற்கரங்களுள் மேலிரு கரங்கள் சங்கு, சக்கரம் ஏந்தக் கீழிருகரங்கள் காக்கும் முத்திரையிலும் இடையில் வைத்த நிலையிலும் காணப்படுகின்றன. இத்திருவுருவம் காலத்தால் பழமையானது. கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த

பாண்டியர் கலைப்பாணியோடு பொருந்தியது என்று வரலாற்றுத் துறையினர் கூறுகின்றனர்.

வெளித்திருச்சுற்றின் மேற்கில் பாபநாசர், உலகம்மன் சன்னதிகள் அமைந்துள்ளன. இரண்டிற்கும் பொதுவான முன்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சுதையால் ஆன சிகரங்கள் கருவறையில் காணப்படுகின்றன. பாபநாசர் இலிங்க வடிவிலும் உலகம்மன் நின்ற நிலையிலும் தனித்தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளனர். இதனை அடுத்து நெல்லையப்பர், காந்திமதியம்மன் திருச்சன்னதிகளும் காணப்படுகின்றன.

மணக்கோலநாதர் திருச்சன்னதியும் உள்ளது. இக்கோயிலில் காணப்படும் திருவுருவச் சிலைகள் மாறுபட்ட நிலையில் காணப்படுகின்றன. சிவபெருமானின் கரம் பற்றிப் பார்வதி நிற்கத் திருமால் தாரை வார்த்துக் கொடுக்கின்றார். வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர் ஆகியோர் கரங்குவித்து நிற்கின்றனர். கயிலையில் நடந்த திருமணக் காட்சியை அகத்திய முனிவர் திருக்குற்றாலத்தில் கண்டு மகிழ்ந்த வரலாறு திருவுருவச் சிலையாக்கப்பட்டுத் தனிக்கோயிலாக்கப்பட்டுள்ளது. திருமணக்காட்சி சிற்ப வடிவில் காட்டப்பட்டதால் இவர் மணக்கோலநாதர் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

நாறும்பூநாதர், சங்கரலிங்கம், பால்வண்ணநாதர் ஆகியோர் சன்னதிகளும் காணப்படுகின்றன. இவற்றின் கருவறையுள் இலிங்கத் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை அடுத்துச் சொக்கலிங்கம், மீனாட்சி சன்னதிகள் இடம் பெற்றுள்ளன. சொக்கலிங்கரின் கருவறை கிழக்கு நோக்கியும் மீனாட்சி கருவறை தெற்கு நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்துள்ள திருக்கோயில் சாஸ்தாவிற்கு அமைக்கப்பட்டுள்ளது. பிற சாஸ்தா கோயில்களில் எல்லாம் அய்யனாரின் அமர்ந்த கோலத்தில் திருவுருவம் இடம் பெற்றிருக்கும். ஆனால் இங்குச் சாஸ்தா பீட உருவில் சக்தி சொரூபமாகக் காணப்படுகின்றார். சாஸ்தாவின் அருகில் தென்புறத்தில் பெரிய மண்குதிரை காணப்படுகின்றது.

சாஸ்தா சன்னதியின் வடபுறம் தொடர்ந்து மதுநாதேஸ்வரர், அறம் வளர்த்த நாயகி, அகத்தியர், வாசுகி ஆகியோரது சன்னதிகள் இடம் பெற்றுள்ளன. மேற்குத் திருச்சுற்றில் மேற்குப் பார்த்த சிவன் கோயில் உள்ளது.

கருவறையில் காணப்படும் லிங்கத்தின் ருத்ரபாகம் மனிதனால் செய்யப்படவில்லை. இயற்கையாக நதியின் நீரோட்டத்திற்கு ஏற்ப உருண்டு உருண்டு லிங்கவடிவாய் மாறிய உருவமாகும் என்று பட்டர்கள் கூறுகின்றனர். காலத்தால் பழமையானதாகக் கருதப்படும் இக்கோயில் கருவறை மட்டும் கொண்டுள்ளது. எண் பட்டைச் சுதைச் சிகரத்தோடு காட்சி தருகின்றது. காலத்தால் பழமையானதாகக் கருதப்படுகின்றது.

வெளித்திருச்சுற்றின் வடதிசையில் கிழக்கு நோக்கிக் காசி விசுவநாதரும் தெற்கு நோக்கி விசாலாட்சி அன்னையும் அமைந்திருக்கும் வண்ணம் திருக்கோயில் உள்ளது. இதே சுற்றில் வடக்குவாயில் அருகில் மேல்வாசல் சாஸ்தா மேற்கு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சக்தி பீடத்திற்குப் பின்புறம் திருவெளிச்சுற்றின் மேற்கு வெளிச்சுற்றில் கிழக்கு நோக்கிச் சோமலிங்கம், சகஸ்ரலிங்கம், மகாலிங்கம் சன்னதிகள் காணப்படுகின்றன.

திருவெளிச்சுற்றின் மேற்குத் திசையில் 'ஐந்து தரிசன இடம்' உள்ளது. இதைப் பஞ்ச தரிசனம் என்றும் கூறுகின்றனர். மேற்கு விநாயகர், மேற்குமுக ஈஸ்வரன், தெற்கு விமானம், திரிகூடமலை, பேரருவி என்னும் ஐந்தினையும் ஒரே இடத்தில் நின்று தரிசிக்கும் தரிசனத்திற்கு ஐந்து தரிசனம் என்பது பெயர். அருச்சுனன் இத்தரிசனம் பெற்றதாகப் புராணச் செய்தி உள்ளது.

வடகீழ்த் திருச்சுற்றில் மேற்குப் பார்த்த நிலையில் சிவாலய முனிவர் கோயில் காணப்படுகிறது. இக்கோயில் சற்றுத் தாழ்வான நிலப்பகுதியில் உள்ளது. இக்கோயிலுக்கு எதிர்த் திசையில் அவரின் குரு அகத்திய முனிவரின் கோயில் இருப்பதால் மாணாக்கரின் கோயில் சரிநிலையில் இல்லாமல் சற்றுத் தாழ்ந்த நிலப்பரப்பில் அமைக்கப்படவேண்டும் என்ற முறையில் அமைக்கப்பட்டு உள்ளது. இறைவன் திருநீராடலுக்குப் பயன்படும் தைலம் சிவாலய முனிவரால் தான் தொன்மையில் தயாரிக்கப்பட்டதாகக் கருத்து உள்ளது. சிவாலய முனிவர் கோயிலை அடுத்துப் பைரவர் சன்னதி தெற்குப் பார்த்த நிலையில் உள்ளது.

காலம்

பரிவார ஆலயங்களில் சிவாலய முனிவர் கோயிலும் மேற்குப் பார்த்த சிவன் கோயிலும் தவிரப் பிறயாவும் கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கட்டிடக் கலை அமைப்பினைக் கொண்டு உணரலாம். சிவாலய முனிவரின் தோற்றமும், மேற்குப் பார்த்த சிவன் கோயிலின் கட்டிட அமைப்பும் அவை, கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதைக் காட்டுகின்றன.

கிழக்குத் திருச்சுற்றின் வடகீழ் மூலையில் பைரவர் சன்னதிக்கு அடுத்துத் தென்திசை நோக்கிய நிலையில் அமைந்துள்ள ஒரு பெருங்கல் மண்டபம் சிற்சபையில் திருக்கூத்தாடும் நடராசப் பெருமானுக்குத் தென்காசிப் பாண்டியர்களால் எழுப்பப்பட்டதாகும்.

நடராசர் மண்டபத்திற்குத் தெற்கில் நவக்கிரக மேடை அமைந்துள்ளது. இம்மேடையில் ஒன்பது கோள்களின் கல்திருமேனிகள் இடம் பெற்றுள்ளன. இந்நவக்கிரக மேடைக்கு எதிரில் இறைவன் கோயிலுக்கும் சக்தி பீடத்திற்கும் இடையில் ஓர் அகலமான மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தை ஒட்டிக் கிழக்கு நோக்கி ஒரு நீண்ட அறை உள்ளது. அது தொன்மையில் கருவறையாகவோ திருச்சயன அறையாகவோ இருந்திருக்க வேண்டும். இப்போது இந்த அறை கோயில் பொருட்களால் நிரப்பப்பட்டுள்ளது. இவ்வறையின் முன்மண்டபம் அழகிய தூண்களைக் கொண்டு விளங்குகிறது. இம்மண்டபத்தில் ஒரு பெருந்தூண் மூன்று சிறு தூண்களுடன் அமைக்கப்பட்ட மூன்று தொகுப்புத் தூண்களும், ஒரு பெருந்தூண், பத்துச் சிறு தூண்களுடன் அமைக்கப்பட்ட இரண்டு தொகுப்புத் தூண்களும் அழகு செய்கின்றன. சிறிய தூண்கள் அனைத்தும் வெவ்வேறு வடிவங்களில் வேறுபட்ட அளவுகளில் தட்டினால் இனிய இசையை எழுப்பும், இசைத் தூண்களாகக் காட்சி தருகின்றன. இவ்விசைத் தூண்கள் பிற்காலப் பாண்டியர் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இம்மண்டபத்தின் கிழக்குத் திசையில் நாற்கால் மண்டபம் ஒன்றும் உள்ளது. முதல் பாண்டிய மன்னர்கள் காலத்தில் எழுந்து அனைத்து மன்னர்களின் ஆட்சியிலும் திருப்பணி நடந்து பல்வேறு கால கலைநுட்பங்களைக் கொண்டு விளங்கும் திருக்குற்றாலம் ஒப்பற்ற வரலாற்று மையம்.

வடக்கு வாயில்

வடக்கு வாயில் வழியாகவே நடராச மூர்த்தியைச் சித்திர சபைக்கு விழாக் காலங்களில் எழுந்தருளச் செய்கின்றனர். வடக்கு வாயில் எதிரே சற்றுத் தள்ளிப் பதினெட்டாம்படிக் கருப்பசாமி, மேற்கு நோக்கிச் சங்கிலிப் பூதத்தான், தெற்கு நோக்கி இசக்கியம்மன், வடக்கு நோக்கிப் பன்றி மாடசாமி ஆகிய தெய்வங்கள் உள்ளன.

பராசக்தி பீடம்

திருக்கோயில் வெளித் திருச்சுற்றின் வடக்குத் திசையில் குற்றால நாதரின் இடப்புறத்தில் ஞான சக்தியாகச் சக்தி பீடம் தோற்றமளிக்கிறது. பிற இடங்களிலெல்லாம் பீடத்தில் சக்தி இருக்கும். ஆனால் திருக்குற்றாலத்தில் பீடமே சக்தியாக அமைந்துள்ளது. இச்சக்தி பீடம் சிவாலய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்டது என்னும் கருத்தும் நிலவி வருகிறது. சிவாலய முனிவரின் கோயில், சக்தி பீடத்திற்கு அருகில் வடக்கு நுழைவாயில் பக்கம் சற்றுத் தாழ்வான இடத்தில் மேற்கு நோக்கியுள்ளது. சக்தி பீடத்தின் பெருமையினைத் திருக்குற்றாலத் தலபுராணம்,

"அப்பெரும் பீடமன்றே அருள்பரா சக்தி பீடம்
ஒப்பரும் பரமயோகத்து உறைதலால் யோகபீடம்
தப்பிலா அகில மூலந் தரித்தலால் தரணி பீடம்
இப்பெரும் பீடத்துள்ளாள் இறைவர்பால் எம்பிராட்டி" (ப. 123)

என இறைவனும், இறைவியும் பீடமாய் இணைந்து நிற்பதைக் குறிக்கின்றது

பெயர் விளக்கம்

திருக்குற்றாலத்திலுள்ள சக்தி பீடம் அருட்பராசக்தி பீடம், யோக பீடம், தரணி பீடம் என்று பெயர் பெறுகின்றது. இத்தலத்தில் குழல்வாய்மொழியம்மை இறைவனுடன் இணைந்து உறைதலால் யோகபீடம் என்று பெயர் பெறுகிறது. தரணி என்பதற்குத் 'தக்ஷண பெண்', 'மேருவிற்குத் தேவி', 'நித்ய யௌவனத்தோடு கூடியவள்' என்றெல்லாம் பொருள் உண்டு. தாக்ஷாயணி உறையும் பீடம் தரணி பீடமெனப்பட்டது. பரா என்பதற்கு மந்திரத்தின் சக்தி ரூபமாக இருப்பவள் என்பது பொருள். பராசக்தியினின்றும் ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் சக்திகள் இணைந்து உலகப் படைப்பிற்கு உதவுவதால் சக்தி பீடத்திற்கு அருள்பராசக்தி பீடம் என்றும் பெயர் வந்தது.

சிவன் பார்வதிக்கிடையே நடனப் போட்டி வந்தபோது சக்தியினுடைய கை ஓங்கி ஆவேசம் கூடுதலாகி அவளுடைய அங்கம் ஐந்து துண்டுகளாக

மாறி ஐந்து இடங்களில் விழுந்ததாகவும், அந்த ஐந்து இடங்களுள் திருக்குற்றாலமும் ஒன்றாகும் என்றும் கூறப்படுகின்றது. இங்கு விழுந்த உடல் உறுப்பு பார்வதியின் யோனியாகும். 43 முக்கோணச் சக்கரம் என்ற கற்பப்பை அமைப்புத் தான் யோனி பீடம். அதனால் தரணி பீடத்திற்கு உருவம் கிடையாது. தரணி பீடம் ஆதியில் தோன்றியதால் ஆதிபராசக்தி என்னும் பெயர் அதற்கு ஏற்பட்டது.

பீடம்

சிவனுக்குரிய முக்கோணம் நான்கும் சக்திக்குரிய முக்கோணம் ஐந்தும் ஆகிய ஒன்பது முக்கோணங்களும் முறையே மேல் நோக்கியும், கீழ் நோக்கியும் அமைந்து ஒன்றி நிற்றலால் நாற்பத்து மூன்று கோணங்கள் இருக்கும். இவற்றின் மேல் வட்டமும் அதன் மேல் பதினாறிதழும், அவற்றின் மேல் மூன்று வட்டமும் அவற்றைச் சூழ்ந்து பூபுரம் எனப்படும் மூன்று சதுரமும் என ஆகி உள்ளது, சக்தி பீடம். பீடத்தின் மையப்பகுதி பிரமாண்டம்; முக்கோணங்களில் மேல் நோக்கிச் செல்லுவனவும் உண்டு. புள்ளியிலிருந்து வெளிவரும் முக்கோணம் பரிணாம வளர்ச்சியைக் குறிக்கும். புள்ளியை நோக்கிச் செல்வது பிரளயத்திற்குக் காரணமாகின்றது.

சக்தி பீடம் அமைக்கப்பட்டுள்ள கருவறைக்குள் சபீதமாதா, பைரவர், காவல்தெய்வம், பூதகணங்கள், விநாயகர் ஆகிய தெய்வங்கள் இடம் பெற்றுள்ளன. சக்தி பீடத்தின் உக்கிரத்தைத் தணிக்க முன் மண்டபத்தில் காமகோடீஸ்வரர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சக்தி பீட வழிபாடும் பயனும்

திருக்குற்றாலத்திலுள்ள சக்தி பீடத்திற்குச் சித்திரை மாதம் நறுநெய் அபிடேகஞ் செய்து ஆதிசக்தியை வழிபடுபவர் திருமால் பதவியைப் பெறுவர். வைகாசி மாதத்தில் செண்பக மலர் கொண்டு அருச்சிப்போர் சிவபதம் பெறுவர். ஆனி மாதத்தில் மல்லிகையால் பீடத்தை அருச்சிப்போர் பிரமபதம் பெறுவர். ஆடி மாதத்தில் பச்சைக் கருப்பூரம் கலந்த சந்தனத்தைப் பீடத்தில் மந்திரங்களைச் சொல்லிப் பூசுவோர் இந்திரபதம் பெறுவர். பராசக்தி பீடத்தில் ஆவணி மாதத்தில் வெள்ளலரி மலர்களைச் சாத்தி வழிபடுவோர் கலைமகள்

அருளையும், பொன் நிற மலர்களைச் சாத்தி வழிபடுவோர் திருமகள் அருளையும் பெறுவர். பவள நிறமுள்ள மலர் சாத்துவோர் அன்னை ஆதிபராசக்தியின் தெய்வத்திருவருள் பெற்றுச் சிவபதம் பெறுவர். புரட்டாசியில் நெய் கலந்த பொங்கல் நிவேதிப்பவர் சூரிய உலகிற்குச் செல்வர். ஐப்பசி மாதம் சந்தனாதித் தைலம் ஆட்டி அபிடேகம் செய்பவர் நான்முகன் உலகிற்சேர்வர். கார்த்திகை மாதம் நெய்விளக்கு ஏற்றித் தரிசிப்போர் பிறவி அறுத்துக் கொள்வர். மார்கழியில் பருப்புப் பொங்கல் நிவேதிப்பவர் தேவராய் அமுதுண்டு வாழ்வர். தைமாதத்தில் மஞ்சள் காப்புச் சாத்தி வழிபடுவோர் சந்திரலோகம் அடைவர். பங்குனி மாதத்தில் ஐந்து வகையான திருமஞ்சனத்திரவியங்கள் அமைத்து வாசநீர் ஆட்டினவர் அழிவில்லாத பரமபதம் சென்றடைவர்.

சக்தி பீடத்தைக் கையினால் தொழுவோர்க்குக் கையால் செய்த பாவம் நீங்கும். மந்திரங்களைச் சொல்லும் போது மொழியால் விளைந்த பாவம் தொலையும். கண்ணால் ஆதி சக்தியைக் கண்டு மகிழும் போது கண்ணால் விளைந்த பாவம் அழியும். சக்தி பீடத்தை வலம் வருவோர்க்கு எல்லாப் பாவங்களும் நீங்கும். இதனை,

"துய்ய மலர்க் கரங்குவிப் பார் கையினாற் செய்தவினை தொலையும் நாவால்
செய்ய புகழ் வாழ்த்தினர்க்கு வாக்கினாற் புரிபாவஞ்சிதையும் கண்ணால்
உய்ய வெதிர் காண்பார்க்கு விழியினா லிழைத்தவினை யொழியும் ஞானத்
தையல்பரை பீடம் வலம் புரிந்தாரைப் பிரிந்தோடும் சகல பாவம்"

என்று திருக்குற்றாலத் தலபுராணம் கூறுகின்றது.

மந்திரங்கள் சொல்லுவதால் ஏற்படும் பயன்

சக்தி பீடத்திற்கு முன்பு நின்று காயத்திரி மந்திரம் செபித்தால் ஆயிரம் கற்ப அளவு பிரமன் உருப் பெற்று வாழ்வர் என்றும் எட்டெழுத்து மந்திரத்தை உரைப்பவர் மாயோன் உருவம் கொண்டு ஆயிரம் கற்பம் வாழ்வர் என்றும்

சக்தி பீடத்தின் முன்னின்று ஐந்தெழுத்து மந்திரத்தைக் கூறுபவர் பதினாயிரம் கற்பம் சிவனுருப் பெற்றுக் கயிலையில் வாழ்வர் என்றும் கூறப்படுகின்றது. சக்தி பீடத்திற்கு முன் ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லுவதே சாலச் சிறந்ததாகும்.

அற்புத நிகழ்ச்சி

1950 ஆம் ஆண்டு கடையநல்லூரைச் சேர்ந்த ஐந்து வயதுப் பெண்ணிற்கு அன்னை ஆதிபராசக்தி ஊமைத்தன்மையை நீக்கிப் பேசும் அருளைப் புரிந்துள்ளாள். அப்பெண் சென்னையில் வாழ்ந்து வருவதாகக் கோயில் பட்டர் ஒருவர் கூறினார்.

சித்திரசபை

திருக்குற்றாலநாதர் திருக்கோயிலுக்கு வட பகுதியில் சித்திரசபை உள்ளது. இது சிவனின் திரிபுரதாண்டவம் நடைபெற்ற இடமாகக் கருதப்படுகிறது. ஐந்து சபைகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

பூதங்கள் பாடிப்பணியச் செய்ய ஆடும் பாண்டுரங்கமும், தில்லைமன்றில் ஆடும் கூத்தும், காளியின் செருக்கடுக்கும் ஊர்த்துவ நடனமும், தாருகாவனத்தவர் விடுத்த மயில்களை மிதித்து ஆடும் கூத்தும், பிறர் காணச் செய்யும் கூத்துகளாகும். திருக்குற்றால நன்னகரில் உமையம்மைக்கு மட்டும் அறியக் காட்டும் கூத்து. இறைவன் சித்திரசபையில் திருக்கூத்தை உமையம்மை அறிய ஆடியதனால் சித்திரசபையில் ஆடும் திருக்கூத்து மகாபரம இரகசியமானது.

காலம்

சித்திரசபையில் தென்கிழக்குச் சுவரில் இச்சபையை உருவாக்கிய மன்னனுடைய கல்வெட்டு சுண்ணாம்புப் பூச்சின் உள் மறைந்துள்ளது. இக்கல்வெட்டின் வழி கி.பி. 16 ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இச்சபை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளனர்.

தென்காசி பாண்டியனான பராக்கிரம பாண்டியன் சித்திர சபைக்கு ஓடுகள் வேய்ந்தார் என்றும், சின்னணைஞ்சாத்தேவர் செம்பாலான ஓடுகள் வேய்ந்தார் என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன.

கி.பி. 887 ஆம் ஆண்டில் பாண்டியர் முதல் சிற்றோடு வேய்ந்ததாக குற்றாலக்குறவஞ்சி கூறுகின்றது. தென்காசி பாண்டியருடன் போர் செய்த உதயமார்த்தாண்டவர்மா (கி.பி. 1526) சித்திரை சபையினைக் கட்டியிருக்கலாம் என்ற செய்தியும் உண்டு. உதயமார்த்தாண்டன் திருப்பணிகள் பற்றிய கல்வெட்டும் குற்றாலத்தில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில், "வீரமார்த்தாண்ட பராக்கிரம பாண்டியத் தேவர்" என்றும் இம்மன்னனின் வேறு பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. சித்திர சபை பராக்கிரம பாண்டியனால்

(கி.பி. 1422 - 1463) தொடங்கப்பட்டு உதயமார்த்தாண்டவர்மனால் கட்டி முடிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

அமைப்பு

சித்திர சபை கல்லால் அமைந்த பெரும் நுழைவாயில் மண்டபத்தோடு தொடங்குகிறது. சிவபெருமான் நடனம் புரியும் இடமாதலால் நுழைவாயிலின் இருபுறமும் அமைந்த மேடையில் வாசிகை பூண்டு மணித்தோடு அணிந்து சுண்ணம் முகத்தெழுதிய ஆடல் மகளின் சிலைகள் வந்தாரை வரவேற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இசைக் கருவி வாசித்து நிற்கும் மண்டைப்பாணனின் சிலை ஒரு புறம் உள்ளது. வாயிற் கதவுகள் ஒவ்வொன்றிலும் மரச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சக்தி பீடம், பாலூட்டும் பார்வதிதேவி, குழலூதும் கண்ணன், தென்திசைக் கடவுள், ஏகபாத மூர்த்தி, வீரபத்திரர், முருகன், பிள்ளையார், மீனாட்சி, கஜேந்திர மோட்சக் காட்சி, விஷபாரூடர், கங்கனார், இராவண அனுக்கிரகமூர்த்தி, காலனைக் காலால் உதைத்த சிவன் ஆகிய இறை உருவங்களும் அரச உருவங்களும், புராணச் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

ஓவியங்கள்

சித்திர சபையில் வைணவக் கோயில் சைவக் கோவிலாக மாற்றப்பட்டது. இறைவனின் திருமணக்காட்சி, கஜேந்திர மோட்சம் ஆகிய தல வரலாற்றுச் செய்திகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.

உமையின் திருமணத்தைக் காண மூவுலகங்களில் உள்ளவர்களும் இமய மலையில் கூடிய போது வடதிசை தாழ்ந்து, தென் திசை உயர்கிறது. அதனால், இறைவன் வட திசைக்குச் சமமாகத் தென்திசையிலேயே இறைவன் தன்னுடைய திருமணக் காட்சியையும் நடனத்தையும் காட்டுவதாக அகத்திய முனிவருக்கு வாக்குறுதி அளித்தார். அதனால், தென் திசைக்கு வந்த அகத்தியர் “குறுகவே, குறுகவே” என்று திருமாலை அழுத்திச் சிவலிங்கமாக மாற்றினார் என்னும் செய்தி ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியம் மகா மண்டபத்தின் நுழைவாயிலில் உள்ளது. சபாமண்டபத்தில் ஊஞ்சல் நிகழ்ச்சி வரையப்பட்டுள்ளது. சொக்கநாதரும், திருமாலும், பிரம்மனும்

ஊஞ்சலில் "சுகாசனமிட்டு" அமர்ந்திருக்கும் காட்சி மீனாட்சி அம்மன் கரும்பினைக் கையில் பிடித்த வண்ணம் திருமணக் கோலத்தில் இரண்டு கால்களையும் தொங்கவிட்டு ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் காட்சி ஆகியன ஓவியமாக்கப்பட்டுள்ளன.

தாரைவார்க்கும் காட்சி சித்திர சபையில் சபா மண்டபத்தில் இடப் புறச் சுவரில் வரையப்பட்டுள்ளது. சொக்கநாதரும் மீனாட்சி அம்மனும் நிற்க, முனிவர்களும், தேவர்களும் சூழ்ந்திருக்கும் வண்ணம் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. திருமால் சொக்கநாதரின் கையினைப் பிடித்துத் தாரை வார்த்துக் கொடுப்பது போன்றும் பிரம்மன் வேதங்கள் ஓதும் முனிவர்களுடனும் வேதவிற்பன்னர்களுடனும் வேள்வித் தீயினை வளர்ப்பது போன்றும் ஓவியங்கள் காணப்படுகின்றன. மங்கல மடந்தையரும், இசைக் கருவி வாசிப்பவரும், நடனமாந்தரும் ஓவியமாகக் காட்டப்பட்டுள்ளனர்.

அமர்ந்த கோலத்தில் திருமணக் காட்சி சித்திர சபையின் மகா மண்டபத்தின் நுழைவாயிலின் எதிர்புறச் சுவரில் வரையப்பட்டுள்ளது. தேவர்கள் ஒரு புறமும், முனிவர்கள் ஒரு புறமும் சூழ்ந்திருக்க மீனாட்சியும் சொக்கநாதரும் அமர்ந்திருப்பது போன்று ஓவியம் வரையப்பட்டுள்ளது.

கஜேந்திரமோட்சம்

கஜேந்திரமோட்சம் திருச்சுற்றின் முதல் திருப்பத்தின் இறுதியில் வரையப்பட்டுள்ளது. யானையின் காலினை முதலை பிடித்து இழுப்பது போன்றும், யானை "ஆதிமூலம்" என்று அழைப்பது போன்றும், யானை துதிக்கையைத் தூக்கி நிற்க, திருமால் தன் வாகனமான கருடனின் மீது அமர்ந்து தன் சக்கராயுதத்தினை அனுப்புவது போன்றும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மீனாட்சி அம்மன் திருவிளையாடல்

சித்திர சபையில் மகா மண்டபத்தில் மீனாட்சி அம்மன் பால் குடித்து தந்தையுடன் பேசியது, தடாதகை பிராட்டியின் திரு அவதாரம், மீனாட்சி அம்மனின் போர்க் காட்சிகள், மன்னர்கள் மீனாட்சி அம்மனை வணங்குவது

ஆகியனவற்றுடன் கைலாயத்தில் இறைவனும், இறைவியும் அமர்ந்திருப்பது போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றன. மீனாட்சி அம்மன் ரதத்திலும், குதிரையின் மீதும் அமர்ந்து போர் செய்யும் காட்சிகள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் மீனாட்சி அம்மன் ஒரு காலினை மடக்கியும் மற்றொரு காலை நீட்டியும் அமர்ந்து கையினை முன்னால் நீட்டி வில்லினைப் பிடித்துப் போர் செய்வது போன்று உள்ளது.

திருவிளையாடல்

சித்திர சபையின் திருச்சுற்றில் இரண்டாவது திருப்பத்தில் திருவிளையாடல் புராணங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

சித்திர சபையின் வெளிப்புறச் சுவரில் திருப்பாற்கடலைக் கடையும் காட்சியும் முருகன் சூரசம்ஹாரம் செய்யும் காட்சியும் பாண்டவர்கள் சதுரங்கம் ஆடும் காட்சியும் ஓவியமாக்கப்பட்டுள்ளன.

திருமாலின் அவதார ஓவியங்கள்

சித்திர சபையில்,

1. நரசிம்ம அவதாரம்.
2. மூன்றடி மண் கேட்டது.
3. இராமன், இராவணனும் போர் செய்தது.

ஆகியன ஓவியங்களாகி உள்ளன. சித்திர சபையின் திருச்சுற்றில் திருமால் இரணியனை வதம் செய்யும் காட்சி வரையப்பட்டுள்ளது. சித்திர சபையின் திருச்சுற்றின் மூன்றாவது நுழைவாயிலின் இறுதியில் இராமனின் பட்டாபிஷேக நிகழ்ச்சி வரையப்பட்டுள்ளது. அனுமன் முனிவர்கள் சூழ்ந்திருக்க இராமனுக்கு முடிசூட்டுவது போன்று ஓவியம் வரையப்பட்டுள்ளது.

கங்கானநாதர்

கங்கானநாதரின் உருவம் சித்திர சபையின் நுழைவாயிலில் காணப்படுகிறது. நிர்வாண மேனியாய் மண்டை ஓட்டினை மாலையாக அணிந்து காட்சியளிக்கின்ற வகையில் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. மண்,

மழு, கேடயம், உடுக்கை, அம்பு, சூலாயுதம், பிச்சைப்பாத்திரம் முதலியனவற்றைக் கைகளில் தாங்கி இருப்பது போன்று வரையப்பட்டுள்ளது.

துர்க்கை ஓவியம்

துர்க்கை, ஜலதுர்க்கை, மஹிஷாசுர துர்க்கை, விஷ்ணு துர்க்கை, உத்திர துர்க்கை போன்ற துர்க்கையின் எட்டு ஓவியங்கள் சித்திர சபையில் திருச்சுற்றின் நுழைவாயிலில் காணப்படுகின்றன. சக்திபீடம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

பைரவர் ஓவியம்

தாருகாசுரனை அடக்கும் பொழுது காளியின் கோபத்தில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அக்குழந்தையினைக் காளி எடுத்துப் பாலூட்டுகின்றாள். சிவமூர்த்தி, குழந்தையையும், பாவையையும் தம் முன் ஒடுக்குகின்றார். ஒடுக்கிய மூர்த்தியிடமிருந்து எட்டு உருக்கொண்டு பைரவி மூர்த்தி தோன்றுகின்றது. சிவமூர்த்தியின் இந்த எட்டு உருவங்கள் சித்திர சபையின் திருச்சுற்றின் இறுதி நுழைவாயிலில் வரையப்பட்டுள்ளது. இந்த எட்டு வகை பைரவர்கள்:

1. அஜிதாங்க பைரவர்.
2. உன்மத்த பைரவர்.
3. கரூர பைரவர்.
4. குரோத பைரவர்.
5. கால பைரவர்.
6. பிஷ்ணு பைரவர்.
7. சம்ஹார பைரவர்.
8. அநுக்கிரக பைரவர்.

இவருக்கு வேத உருவமாகிய நாய் வாகனம். இத்திருநாமத்து ப, ர, வ, சிருட்டியாதி முத்தொழில்களை உணர்த்துவது.

பிரம்மன் ஓவியம்

இறைவனின் திருமணக் காட்சியில் பிரம்மன் வேள்வித் தீ வளர்ப்பது போன்று வரையப்பட்டுள்ளது. திருமாலின் உந்திக் கமலத்தில் பிரம்மன் யோகத்தில் அமர்ந்திருப்பது போன்று வரையப்பட்டுள்ளது.

கணபதி ஓவியம்

சித்திர சபையின் மஹா மண்டபத்தின் எதிர்புறச் சுற்றில் உட்கார்ந்த தோற்றத்தில் கணபதியின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.

1. தருண கணபதி.
2. பக்தி கணபதி.
3. வீர கணபதி.
4. பிங்கல் கணபதி.
5. உச்சிட்ட கணபதி.
6. சிப்பிர கணபதி.
7. லஷ்மி கணபதி.
8. விக்னேஸ்வர கணபதி.
9. புவன கணபதி.
10. தவஜ கணபதி

முதலிய கணபதியின் உருவங்கள் ஓவியங்களாகக் காணப்படுகின்றன.

நவகிரகங்களின் ஓவியம்

நவகிரகங்களின் ஓவியங்கள் சித்திர சபையில் வரையப்பட்டுள்ளன. சித்திர சபையின் மகா மண்டபத்தின் வாயிலின் இரு புறமும் நவகிரகங்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன.

மன்மதன் ரதி ஓவியம்

சித்திரசபையின் வெளிப்புறச் சுற்றில் மன்மதன் கரும்பு வில்லையும், மலர்கணையையும் கைகளில் ஏந்தி அன்னத்தின் மீது அமர்ந்திருக்கும் காட்சி ஓவியமாக்கப்பட்டுள்ளது. மன்மதனுக்கு அருகில் ரதியின் ஓவியம் காணப்படுகின்றது. ரதி கிளியின் மீது அமர்ந்து வில்லைக் கையில் ஏந்திய வண்ணம் ஓவியம் வரையப்பட்டுள்ளது.

நாயன்மார் ஆழ்வார்கள் ஓவியம்

நாயன்மார்களின் ஓவியங்களும் ஆழ்வார்களின் ஓவியங்களும் சித்திர சபையில் காணப்படுகின்றன.

துவாரபாலகர் ஓவியம்

சித்திரசபையில் காணப்படும் துவாரபாலகர்கள் நாயக்கர்கால கலைத்தன்மையில் ஆடை, அணிகலன்களை அணிந்தவர்களாக வரையப்பட்டுள்ளனர்.

பாவவினாசர், சந்திர சேகர், உமை, விநாயகர், ரிடபவாகனர், நடராசர், மீனாட்சி கல்யாணம், பிச்சாடனமூர்த்தி, மன்மததகனம், காலசம்ஹாரம், பஞ்சமுக கைலாசம் முதலிய ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன.

இறைவனின் திரு நடன ஓவியம்

சித்திர சபையில் இறைவனின் ஆனந்தத் தாண்டவம், திரிபுரத்தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், கால்மாறி ஆடிய தாண்டவம் ஆகிய நான்கு தாண்டவமும் ஓவியத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆனந்த தாண்டவம்

சிவபெருமான் இடக் காலைத் தூக்கியும் வலக் காலை முயலகன் மீது

வைத்தும் நடனம் ஆடுவது போன்று உள்ளது. வலக்கை ரூபயகஷ்தமாகவும், இடது கை வலது கையினை ஒட்டி மார்பிற்குக் குறுக்கே நீட்டப்பட்டுள்ளது. "டோலா ஹஸ்தம்" இடக்கையாகவும், "பதாசஹஸ்தம்" வலக்கையாகவும் வரையப்பட்டுள்ளது. இடக்கையில் எரிந்து கொண்டிருக்கும் அழலினை உள்ளங்கையில் ஏந்தியும் இடையில் புலித் தோலாடை அணிந்து இருக்கும் காட்சியும் விளக்கப்பட்டுள்ளது. இறைவனின் வலப்புறத்தில் காரைக்கால் அம்மையார் அமர்ந்திருக்கிறார். காரைக்கால் அம்மையாருக்கு அருகில் பதஞ்சலி முனிவர் நிற்பது போன்றும் இடப் புறத்தில் ஞானசம்பந்தரும், புலிக்கால் முனிவரும் நிற்பது போன்றும் சிவபெருமானுக்கு இடப்புறம் மீனாட்சியம்மன் தமக்கே உரிய கிளியுடன் நிற்கும் காட்சியும் வரையப்பட்டுள்ளது.

ஊர்த்தவ தாண்டவம்

ஊர்த்தவ தாண்டவம் சித்திர சபையில் வெளிப்புறத் திருச்சுற்றில் வரையப்பட்டுள்ளது. எட்டுக் கைகளுடன் இறைவன் வரையப்பட்டுள்ளான். கையில் பெரிய சூலமும், "அபயஹஸ்தமும்" உடுக்கை, மழு, பாம்பு, தீ முதலியனவும் வரையப்பட்டுள்ளன.

கால்மாறி ஆடிய தாண்டவம்

கால்மாறி ஆடிய தாண்டவம் மதுரையில் இறைவனால் ஆடப்பட்டதால் மதுரைச் சூழலுடன் இத்தாண்டவம் சித்திர சபையின் உட்புறத்தில் வரையப்பட்டுள்ளது. எட்டுக் கைகளிலும் சூலமும், மழு, குறுவாள், நெருப்பு, துடி, பாசம் முதலியனவும் காணப்படுகின்றன.

இயற்கை ஓவியம்

சித்திர சபையில் இயற்கைக் காட்சிகள் ஓவியங்களாக்கப்பட்டுள்ளன. செண்பகா அருவி, தேனருவி, சிற்றருவி முதலியன வரையப்பட்டுள்ளன. கஜேந்திர மோட்சக் காட்சியில் திருக்குற்றாலத்தின் கானக வளமும், கானகத்தில் வசிக்கும் விலங்குகளான புலி, மான் முதலியனவும் வரையப்பட்டுள்ளன. சிவன் சித்தராக வந்து மனிதர்களை விலங்குகளாக

ஆக்கிய காட்சிகளும் சித்திர சபையில் வரையப்பட்டுள்ளன.

மரசிற்ப ஓவியகள்

மரசிற்ப ஓவியங்கள் சித்திர சபையில் விதானங்களிலும், சுவருக்குப் பதிலாக வைக்கப்பட்டிருக்கும் மரத்தாலான அலிகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மர விதானங்களிலும் பூவேலைப்பாடுடைய ஓவியங்கள் காணப்படுகின்றன.

செப்பேட்டு ஓவியங்கள்

குற்றாலத்தில் கிடைக்கப் பெற்ற மூன்று செப்பேடுகளில் குறும்பலா நாதருக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. செப்பேட்டின் மேற்பகுதியில் ஏழு கட்டங்களாகப் பிரித்து அதில் அம்மன், விநாயகர், முருகன், சிவலிங்கம், பீடம், கொடி மரம், குரங்கு, முனிவர்கள் முதலியன உருவங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது செப்பேடு இஸ்லாமியர் ஒருவர் குற்றாலநாதருக்கு நிலத்தினை நன்கொடையாகக் கொடுத்த செய்தி கூறப்படுகின்றது. அதில் இஸ்லாமியர் என்பதால் மூன்றாம் பிறையும், அவன் லிங்கத்தின் மீது கைகளை வைத்திருப்பது போன்றும் ஓவியம் காணப்படுகின்றது. குறும்பலா மரம் மூன்று செப்பேட்டிலும் ஓவியமாக்கப்பட்டுள்ளது.

சுதை ஓவியம்

மண்ணுடன் சுண்ணத்தைக் கலந்து செய்யப்பட்ட உருவங்கள் சுதை உருவங்கள் எனப்படும். அச்சுதை உருவங்களில் சுண்ணக் கலவையினைப் பூசி அதன் பின்னர் வண்ணங்கள் தீட்டுவது வழக்கமாகும். சித்திர சபையில் மகா மண்டபத்தின் விதானத்தில் சுதை ஓவியஙகள் வரிசையாகக் காணப்படுகின்றன.

சித்திர சபையில் இறைவன் நடனம்

சிவபெருமான் சித்திர சபையில் திருச்சிலம்பொலிதரத் திருநடம் புரியும்

வரதனாக உள்ளான். சிற்பரமரகசியத்திரிகூட வரையிலுள்ள சித்திர சபையில் இறைவன் ஆடிய தாண்டவம் திரிபுரத் தாண்டவம் எனக் கருதப்படுகிறது. இத்தாண்டவத்தை,

“ஆயிர முகக் கங்கை யலையெறிந் தாடமல
ராடக் கொன்றை யாட
வரவாட வாலவெண் பிறையாட வெண்டலைக
ளாடவெள் ளறு குமாட
ஞாயிறுத யம்பொரு சடாமகுட மாட வளர்
நகை முகக் கருணை யாட
நாக குண்டலமாட வதனாட வொருகையி
னாத வெண் டுடியு மாட
மேய வொரு கையிலெரியாடிட வமைத் தொருகை
வீசியொரு கையா டவோர்
வீர வொண் கழலாட வுயர் வர்க்க மானந்த
வெள்ளந் திளைத் தாடவே
சேயிதழ்ச் சீறடிச் சிவகாமி யம்மையிரு
திருநயன வண்டு மாடச்
சித்திரசபை தன்னிற் றிருச்சிலம் பொலி தர
திரிநடம் புரிவரதனே” (சித்திர சபை திருவிருத்தம்)

என்னும் பாடல் போற்றிப் பாடுகின்றது.

திரிபுரத்தை எரித்த இறைவன் பிரம்மனுக்கும் காட்டிய நடனம் திரிபுரத்தாண்டவமாகும், இடக்காலை முயலகன் மீது ஊன்றிச் சிறிது வளைத்தும் வலக்காலை மடக்கித் தொடைப் பகுதிக்கு நேராக நீட்டியும், வலக்கை அபயகஷ்தமாகவும் உடுக்கை யேந்தியும் இடக்கை வீசிய கரமாகவும் அழலினை ஏந்தியும் காணப்பட இறைவன் நிமிலிதம் பார்வையுடன் காணப்படுகிறார்.

இறைவனுயை ஆடல் அவன் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைக் குறிக்கின்றன. நடனத்தின் மையக்கருத்து இறைவனுடைய தொழிலாகும். திருமூலர் திரு மந்திரத்தின் ஒன்பதாவது தந்திரத்திலுள்ள திருக்கூத்துத் தரிசனப் பாடல்கள் மையக்கருத்தை விளக்குகின்றது.

பிரபஞ்சம் தோன்றுவதற்குக் காரணமாக நின்று அவை இயற்கையாய் நடப்பது போல் காட்டுகிறவர் இறைவனே. இச் செயலைக் கடவுளின் அருட்செயல் என்பர் அறிஞர். இவ்வருட் செயலின் வடிவே சக்தி எனப்படுகிறது.

சிவனின் நடனத்தை 'நமசிவாய' என்ற பஞ்சாச்சர மந்திரத்தின் வடிவம் என்பர் தத்துவாசிரியர். திருவடி 'ந' கரத்தையும், வயிறு 'ம' கரத்தையும், தோள் 'சி' யையும் முகம் 'வா' வையும் முடி 'ய' வையும் குறிக்கும் என்கின்றனர். சைவ சமயக் கருத்துகளும் சைவசித்தாந்தக் கருத்துகளும் ஒரு சேர அமைந்த திருவுருவமே நடராஜப் பெருமானின் படிமமாகும்.

திருவாதிரை

கூத்திரபிரானுக்கு உரியதாகத் திருவாதிரை நட்சத்திரத்தைச் சொல்லுவார்கள்.திருவாதிரை ஒன்று தான் செக்கச் சிவந்த நட்சத்திரம். அதைச் சுற்றி ஆறு விண்மீன்கள். அவற்றுடன் கூடிய திருவாதிரை நட்சத்திரமே நடராஜ மூர்த்தம் தோன்ற அடிப்படைப் புள்ளியாக அமைந்திருக்கிறது என்பர் சிலர். முக்கண்ணனைச் சுற்றி இருக்கும் நான்கு நட்சத்திரங்களும் சக்தியாக இயங்குகின்றன. நாம் கோயிலைச் சுற்றுகின்றோம். சந்திரன் பூமியினைச் சுற்றுகின்றது. பூமி சூரியனைச் சுற்றுவதுடன் தன்னைத் தானே சுழன்று கொண்டு ஒரு நாளைக்கு ஒரு தரம் சூரியனை 1 டிகிரி சுற்றுகின்றது. சூரியன் பால்வெளி அண்டத்தின் மையத்தைச் சுற்றுகின்றது. அண்டங்களெல்லாம் பிரமாண்டத்தின் மையத்தைச் சுற்றுகின்றன. பிரமாண்டத்தின் மையம் ஓர் உயர் அணு. இதன் இயக்கமே, இறைவன் இயக்கமே, தாண்டவமாக, நடனமாகக் காட்டப்படுகிறது. இறைவனின் இயக்கமே உலகத்தின் இயக்கம் என்னும் தத்துவத்தைக் காட்டுவது திருநடனம். 100 மில்லியன் ஒளி வேகமுடைய அணுவானது மிகுதியான உள் அழுத்தத்தின் கார்ணமாக வெடித்துச் சிதறிய போது உண்டாகிய முதல் ஒலி 'ஓம்' என்ற நாதமே என்று "பிக் பேங்க் கோட்பாடு" கூறுவது சைவசித்தாந்தம் கூறிய ஒன்றே.

பால்வெளி அண்டத்தில் சோதிவடிவாகிய முதற் பொருளின் பாற் சுத்த மாயை விருத்தி ரூபமாய் காரியமாக்கப்பட்ட போது முதற்கண் நாதமும்

நாதத்தில் விந்தும் தோன்ற அவ்விந்துவில் சாதாக்கியமாக முதல்வன் தோன்றிக் குணங்களையும் பெயர்களையும் கடந்து நிற்கின்ற இறைவன் மக்களுக்காகச் சித்திர சபையில் ஆடிக் கொண்டிருக்கின்றான்.

பூசைகள்

திருக்குற்றாலநாதர் கோயிலில் மகுடாகம முறையில் பூஜை நடைபெறுகிறது.

இதை,

"சிவாகம மேல் வைக்கும் குடாகமத்தாற்
கொற்றத் திருப்பூசை கொண்டருளி"

குற்றால நாதர் உலா (ப.6) வழியும்,

"கோலமகு டாகமசங் கரவிசுவ நாதனருள்" (ப.30)

என்று குற்றாலக் குறவஞ்சியின் மூலமும்,

"எங்குமே நிறைந்தோர்க் கிவ்வா றாகம மிருபத் தெட்டும்
அங்கமே யவைகட் கெல்லா மகுடமே யுத்த மாங்கஞ்
சங்கமே மறுகு சூழ்குற் றாலமே தலங்கட்கெல்லாம்
துங்கமே மகுட பூசை தொன்று தொட் டமைந்த தன்றே"

என்றும் தலபுராணம் (ப.387) மூலமும் அறிய வாய்ப்புள்ளது.

இறைவனுக்குச் சிவாகமங்கள் இருபத்தெட்டும் அங்கமாகும். அவற்றுள் மகுடம் (முடி) தலையாய உறுப்பு; சங்க வீதியாக உள்ள திருக்குற்றாலம் தலங்களுள் தலைசிறந்தது என்பதால் மகுடாகம முறையில் பூசை பண்டு தொட்டு இங்கு நடைபெற்று வருகிறது. நித்திய (தின வழிபாடு), நைமித்தியம் (சிறப்பு வழிபாடு), காமியம் (ஒன்றை விரும்பிச் செய்யும் பூசை) என்னும் மூவகை வழிபாடும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு முறைகளையும், தான், இடம், பொருள், மந்திரம், இலிங்கம் என்னும் ஐவகைச் சுத்திகளையும் திருநீற்றுச் சாதன முதலியவற்றையும், எண்வகைப் பத்தியினையும், திருவைந்தெழுத்தும், சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமாகிய நான்கு பயன்களையும், தத்துவம், புவனம், கலை, எழுத்து, பதம், மந்திரம்

என்னும் உயிர்கள் வீடுபேறு அடைவதற்கு வழியாய் இறைவனால் படைக்கப் பெற்ற வழி ஆறினையும் விளக்கி அறிவுறுத்தி, சொன்ன முறையால் இறைவனைத் திருக்குற்றாலநாதர் கோயிலில் வழிபாடு செய்யும்படி அகத்தியர் ஆணையிட்டுள்ளார்.

திருக்குற்றாலநாதர் கோயிலில் நடைபெறும் வழிபாடுகள்;

பூசைகள்	கட்டளைதார்
1. திருவனந்தல்	திருக்கோயில்
2. உதயமார்த்தணம்	திருக்கோயில்
3. விழாபூசை	திருவாவடுதுறை ஆதீனம்
4. சிறுகால பூசை	திருக்கோயில்
5. கால பூசை	பிள்ளையன் கட்டளை
6. உச்சிக் காலம்	மேடை தளவாய்
7. சாயரட்ஷை	திருக்கோயில்
8. அர்த்தசாமம்	ஐயா கு.சுப்பிரமணிய முதலியார்

திருவனந்தல் (காலையில் 6 மணிக்கு)

பள்ளியறையினின்றும் இறைவனையும் இறைவியையும் எழுப்புவதற்குத் திருவனந்தல் என்று பெயர். பட்டர் அவர்கள் பள்ளியறையின் கதவைத் திறந்து "அண்டங்களை ஆண்டருளும் இறைவனே, உலக மக்களுக்கும் நன்மை உண்டாகும் பொருட்டு எழுந்தருள வேண்டும் என்னுடைய தின பூசையை ஏற்றருள வேண்டும்" என்று சமஸ்கிருத மொழியில் சுலோகம் சொல்லுவார். கடவுளின் திருவுருவச் சிலையைப் பள்ளியறையினின்றும் கொண்டு வந்து கர்ப்பக்கிருகத்தில் வைப்பர். வைக்கும் போது தேவாரம் பாடப்பெறும். வாத்தியங்கள் இயக்கப்படும். திருவனந்தல் பூசையில் சோளப்பொரி நைவேத்தியமாகும்.

உதயமார்த்தாணம் : (காலை 7 மணிக்கு)

குற்றாலநாதர் சன்னிதியின் உட்புறம் கிழக்கில் உள்ள சூரியனுக்குப் பூசைகள் நடைபெறும். பிறகுதான் விநாயகர், துவாரபாலகர், நடராசர், உற்சவமூர்த்தி, அம்பாள், பராசக்தி ஆகிய தெய்வங்களுக்குப் பூசை

நடைபெறும். கற்பூர தீபாராதனையுடன் சுத்த அன்னம் நைவேத்தியமாகும்.

விழா பூசை : (காலை 8 மணி)

திருக்குற்றாலநாதர் திருக்கோயிலிலுள்ள அனைத்துத் தெய்வங்களுக்கும் இக்காலத்தில் பூசை நடக்கும். கற்பூரத் தீபாராதனையும் சுத்த அன்ன நைவேத்தியமும் உண்டு.

சிறு கால சந்தி (காலை 9 மணி)

இறைவனுக்கும் இறைவிக்கும் கற்பூரத் தீபாராதனை காட்டப்படும்.

கால சந்தி (காலை 10 மணி)

சிறப்பு ஹோமம் வளர்க்கப்படும். இந்த ஹோமத்திற்கு 'நித்தியாக்கினிஹோமம்' என்று பெயர். நித்தியம் + அக்கினி + ஹோமம் தினந்தோறும் தீ வளர்க்கப்பட்டு நடத்தப்படும் யாகம். இந்த ஹோமத்தில் கும்பம் வைத்துப் பூசைகள் நடைபெறும். ஹோமம் முடிந்தவுடன் குமபத்தில் வைக்கப்பட்டிருந்த புனித நீரால் குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மன், மேருபீடம் மற்றுமுள்ள தெய்வங்களுக்கு அபிடேகம் நடைபெறும். இதற்கு 'ஸ்நாபனம்' எனப் பெயர்.

புனித நீரால் அபிடேகம் செய்யும் போது உடல்நலம், பொருள் வளர்ச்சி மனத்திற்கும், உடலுக்கும் நன்மையினைத்தரும் மன மகிழ்ச்சி ஆகியன ஏற்படும் என்றும், பாவங்கள் அகற்றப்படுகின்றன என்றும் கருதப்படுகிறது. குற்றாலக் குறவஞ்சியில் புனித அபிஷேகம் பற்றிய செய்தி இடம் பெறுகின்றது. இதை

"பெரிதான அபிஷேக மேழுகா லமுமொருவர்
பேசுதற்குச் சமயமல்ல கண்டாய் சகியே"

(ப. 29)

என்னும் பாடல்வரிகளால் அறியலாம்.

திருக்குற்றாலத் தலபுராணம் "அன்னாபிடேகம் அன்னவிருத்தி தரும், வில்வ இதழிட்ட நீர் என்றும் போக மோட்சங்களைத் தரும், சங்கநீர் எல்லாப் பேறுந்தரும், நன்மை மிகுந்த நவகும்ப நீர் அரசருக்கு இன்பம் பெருக்கும், சாந்தி ஓமம் நாட்டிற்கு நன்மை தரும், மந்திரப் பூவும் மந்திரான்னமும் கொள்ளை நோய், அளவு கடந்த பெயல் என்பனவற்றை நீக்கும்" என்று அபிடேகத்தினால் விளையும் நன்மைகளைக் கூறுகின்றது.

குற்றாலநாதர் கோயிலில் உள்ள தூணில், சக ஆண்டு 1498, 1576, பிற்காலப் பாண்டியர் திருநெல்வேலி, ஜடிலவர்மன் என்ற அதிவீரராமன் ஸ்ரீவல்லவர் ஆட்சி ஆண்டு 14-ல் குற்றாலநாதர் அபிஷேகத்திற்கு நிலம் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டுச் செய்தியுள்ளது.

திருக்கோயிலின் வடக்கு வாயிலில் கோடையிலும் வற்றாத நீர் ஊற்று ஒன்று உள்ளது. இந்த நீர் ஊற்றிலிருந்து நேரடியாகத் திருக்கோயில் மடப்பள்ளிக்கு வருகின்றது. இந்த நீர்ஊற்றிலிருந்து வரும் நீரே புனித அபிடேகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த நீர் ஊற்றில் 'கோமந்தன்' எனும் ஒரு முனிவர் தவம் செய்தலால் இந்த இடம் என்றும் வற்றாத இயற்கை நலத்தைப் பெற்றுள்ளது.

அபிடேகத் தைலம்

திருக்குற்றாலநாதருக்குப் பயன்படுத்தப்படும் தைலத்திற்குச் சந்தனாதி தைலம் என்று பெயர். இத்தைலம் நல்லெண்ணெய், வெற்றிவேர், சந்தனம், இலவங்கம் போன்ற பொருட்கள், பசும்பால், வாசனைத் திரவியங்கள், மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. 10 லிட்டர் 3 லிட்டர் ஆகும்படிக் காய்ச்சுவார்கள். தைலஅறையில், தைலம் காய்ச்சுவதற்கு முன்பு நாள் செய்வர். அடுப்புப் பற்ற வைக்க அனுக்கைப் பெறுவதாகக் கூறுகின்றனர். தைலம் இறக்கப்பட்ட பிறகு பூசை செய்யப்படுகிறது. மூலிகைகளை நன்கு ஊறவைத்துப் பின் காய்ச்சும் இத்தைலம் திருக்குற்றாலநாதரின் அபிடேகத்திற்கு நித்தம் பயன்படுத்தப்படுகின்றது. இத்தைலம் கோயில் தேவதானம் பொறுப்பில் விற்கப்படுகிறது. இது தலைவலி, சளி, மூச்சுத் திணறல், வயிற்று வலி முதலான நோய்களை நீக்குவதாக நம்புகின்றனர்.

அகத்திய மாமுனிவர் திருமாலைச் சிவபெருமானாகக் குறுகும் படி அழுத்திய போது ஏற்பட்ட தலைவலிக்கு மருந்தாக இத்தைலம் அன்று பயன்படுத்தப்பட்டு இன்றும் தொடர்ந்து காலையில் சிவபெருமானுக்குப் பூசப்படுகின்றது. அகத்தியர் ஐந்து விரலையும் கொண்டு அழுத்தியமைக்கு அறிகுறியாக இன்றும் சிவலிங்கத்தின் மீது ஐந்து விரல்களின் அடையாளம் தெரிகின்றது. சிறிது பள்ளம் உள்ளது என்றும் கர்ப்பக்கிருகத்தில் பூசை செய்பவர்கள் கூறுகின்றனர்.

கால பூசையில் அபிடேகம் முடிந்த உடன் கோயிலின் பிரகாரத்தை மூன்று முறை விக்கிரகம் சுற்றிவந்த பிறகு பூசை தொடங்குகிறது விநாயகருக்கும் கற்பூரத் தீபாராதனை காட்டிய பிறகு சிவலிங்கத்திற்குப் பூசை நடைபெறுகின்றது. தீப ஆராதனைகளும் கற்பூரத் தீபாராதனைகளும் நடைபெறுகின்றன. இறுதியில் ஆரத்தி எடுக்கும் முறையில் இறைவனுக்குக் கற்பூரத் தீபம் காட்டப்படுகின்றது. தேவாரம், பஞ்சபுராணம், இசைக்கப்படுகின்றன.

பூசைகள் முடிந்த பிறகு, கோயிலின் இராஜகோபுர நுழைவாயிலின் தெற்குப்புறம் சற்று உள்ளடங்கி இருக்கும் விநாயகருக்குப் பூசை நடைபெறும். கங்கா பூசையும் உண்டு. முதன்மை அருவியில் இப்பூசை நடைபெறும்.

உச்சிக்காலம் (பகல் 12 மணி)

விநாயகர் பூசை முடிந்த பிறகு சிவபெருமானுக்குப் பூசை நடைபெறும் தேவாரம் பாடப்படுகிறது. விழாக்கால விக்கிரகங்களுக்கும இக்காலத்தில் பூசை உண்டு. உச்சிக் காலப் பூசைக்குப் பிறகு திருக்கோயிலின் கதவு பகல் 12-30 மணிக்கு மூன்று முறை சங்கு ஒலிக்க நடை அடைக்கப்படும், மீண்டும் திருக்கோயிலின் கதவு மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மீண்டும் இறைவனுக்கு, தேவிக்கு, பராசக்திக்கு அபிடேகமுண்டு என்று கூறுகின்றனர்.

சாயரட்ஷை (மாலை 6 மணி)

முதலில் விநாயகருக்குக் கற்பூரத் தீபமும் நைவேத்தியமும் காட்டப்படுகிறது. பிறகு குற்றாலநாதருக்குப் பூசை நடைபெறும்.

அர்த்தசாமம் (இரவு 8 மணி)

குற்றாலநாதருக்கு மட்டும் இளநீர், தேன், பால், அபிடேகம் உண்டு. நைவேத்தியம் உண்டு. கற்பூரத்தீபாராதனை காட்டப்படுகிறது. உற்சவகால விக்கிரகங்களுக்கும், நடராசருக்கும் பூசைகள் உண்டு. தேவாரம் இசைக்கப்படும்.

ஏகாந்தம் (இரவு 8-15 மணி)

இரவு பூசைக்குப் பிறகு குற்றாலநாதரைப் பள்ளியறைக்குப் பல்லக்கில் கொண்டு செல்வர். கற்பூரத்தீபம் காட்டப்படுவதுடன் பால், பழம் நைவேத்தியம் செய்யப்படும். இறைவனும், தேவியும் ஊஞ்சலில் ஆடும் நிலையில் அமர்த்தப்படுவர்.

கோயிலின் நடை அடைப்பதற்கு முன் பைரவருக்குப் பூசை உண்டு. பைரவருக்குப் பாராசக்தி பீடத்திற்கு முன்பு தெற்கு நோக்கிய தனிக் கோயில் உள்ளது. தொன்மைக் காலத்தில் பூசைகளை முடித்துக் கதவுகளைத் தாழிட்டுப் பூட்டி திறவு கோலினைப் பைரவா கோயிலுக்குள் வைத்துச் செல்வது வழக்கம் என்று பூசை செய்யும் பட்டர்கள் கூறுகின்றனர்.

சிறப்புச் சந்தி

நித்தியபூசைகளைத் தவிர சிறப்பு பூசைகளும் நடைபெறும். இதைச் சிறப்புச் சந்தி என்கின்றனர். இது அரசர்களாலும், அரச வம்சத்தராலும் அரசு அதிகாரிகளாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சந்தி தானம் கொடுத்தவர்களின் பெயரிலேயே இருக்கும். இதற்குச் சான்றாகக் கீழ்க்காணும் கல்வெட்டுச் செய்திகள் உள்ளன.

1. "மாறவர்மன் என்ற திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவன் காலத்தில் தென்வாரி நாடு குற்றாலம், கைக்கோலன், இருப்பிடமாகிய வடவாரின் நாட்டில் அமைந்துள்ள கடையநல்லூரில் "காலு முக்கால தோளன் சந்தி" என்னும் பெயரில் குற்றாலநாதர் திருக்கோயில் வழிபாடு

நடந்துள்ளது. *(412, 1918, பக். 38)*

2. இரவித் தேவர் என்ற கண்டியாத் தேவர் என்பவரும் தனிச் சந்தி அமைத்ததாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது.

3. பராந்தக வள நாட்டில் வென்று முடி சூடிய சுந்தர பாண்டிய பட்டிணம் அருகில் திருச்சிற்றம்பலத்தில் பூசை வழிபாட்டிற்குச் சந்தி ஏற்பாடு செய்ததாகக் கல்வெட்டு கூறுகிறது. *(415, 1918 பக் 39)*

திருக்கோயிலில் பூசை செய்பவர் ஒருவராகவும் மந்திரம் படிப்பவர் மற்றொருவராகவும் இருக்கின்றனர். மந்திரம் சொல்பவர் 'ஆதி சைவப்பட்டர்' என்று அழைக்கப்படுகிறார். திருக்குற்றாலத்தில் நித்திய பூசைகளும், சிறப்பு வழிபாடுகளும் தடையின்றி நடந்து வருகின்றன. விழாக் காலங்களில் மட்டும் சிறு வேறுபாடுகள் பூசை முறையில் பின்பற்றப்படும் என்கின்றனர்.

திருவாவடுதுறை அறக்கட்டளை

திருக்குற்றாலத் திருக்கோயிலுக்கு விழா பூசை திருவாவடுதுறை கட்டளையாகும். சித்திரை, ஐப்பசி, மார்கழி மாதங்களில் நடைபெறும் விழாக்களில் ஏழாவது திருநாள் திருவாவடுதுறை ஆதின மடத்தினால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருக்குற்றாலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் நூல்நிலையங்கள் அமைத்தும், தேவாரப்பாடசாலை அமைத்தும் கல்விப்பணி செய்யும் திருவாவடுதுறை ஆதீனம் மகேசுவர பூசை செய்து அறத்தொண்டும் ஆற்றிவருகின்றது. குற்றாலத்தில் நந்தவனங்களை அமைத்து பூசைக்கு மலர்களை வழங்குகிறது. கி.பி. 1753-ஆம் ஆண்டிலேயே திருக்குற்றாலத் திருக்கோயில் பூசைகளை மேற்கொண்டு நடத்தும் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் அறப்பணி ஏட்டில் அடங்கா ஒன்று.

விழாக்கள்

திருக்குற்றாலநாதர் திருக்கோயிலில் விழாக்கள் முறையாகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றன.

"வருநாளி லொரு மூன்று திருநாளும் வசந்தனும்
மாதவழி வருஷ வழிச் சிறப்புஞ் சகியே"

என்று குற்றாலக் குறவஞ்சி (ப.29) கூறுகின்றது. இக்கோயிலில் ஆண்டு முழுவதும் விழா நடைபெறுகிறது. ஒவ்வொரு தமிழ் மாதமும் திருக்குற்றாலத்தில் விழா எடுக்கப்படுகிறது.

சித்திரை மாதம் வசந்த உற்சவம்

வசந்த காலம் சித்திரை, வைகாசிப் பருவம். வசந்தம் என்றால் இளவேனில் ஆகும். தென்றல் காற்றை - வசந்த காலத்தை வரவேற்பதற்காக நடத்தப்படும் உற்சவம். இந்த உற்சவம் கோடையைத் தணிப்பதற்காக நடைபெறுகிறது. சித்திரை மாதம் பௌர்ணமிக்கு முன் தினம் கொண்டாடப்படும். அலங்கரிக்கப்பட்ட குற்றால நாதரும் குழல்வாய் மொழியும் வீதி உலா வருவார்கள். தொன்மையில் இந்த உற்சவம் சித்திரை சபைக்கு முன்புள்ள தெப்பக்குள மண்டபத்தில் நடைபெற்று வந்தது. தற்போது குழல்வாய் மொழி அம்மன் சந்நிதியில் நடைபெறுகிறது.

சித்திரை விசு

சித்திரைவிசு விழா பங்குனி மாதம் 22 அல்லது 23 தேதிகளில் ஒவ்வொரு ஆண்டும் மாத நாட்களுக்கு ஏற்ப (30 அல்லது 31) நடைபெறும். துவாஜஸ்தம்பத் (கொடிக்கம்பம்) தில் கொடியேறும். கொடியேறியதிலிருந்து பத்து நாட்கள் விழா நடைபெறும். இதைக் கவிராயர் உலா,

"மேல் விடபத்து விண்ணிடப மேறியெனக்
கொல் விடபக்கொடியேற்றி-ஆலையத்தும்
மேவா மரமும் விலங்கொடு புள்ளும் பரவித்
தேவாம் பெரிய திரு நாளிற் - பூவாழு
மூவேந்தர் தங்கள் முறையியற்ற வந்து வந்து
தேவேந்தர் போற்றுந் திருநாளிற்-பாவேந்தர்
முத்திரைசெய் பங்குனியில் மும் மூன்று னாளுல விச்
சித்திரை நீராடுந் திரு நாளில்"

(திருக்குற்றாலநாதர் உலா ப.73)

என்று வருணிக்கிறது. திருநாளில் ஏழாவது நாள் காலை 9-30 மணிக்கும், மாலை 7-00 மணிக்கும் தாண்டவ தீபாராதனை நடைபெறும். எட்டாவது நாள் நடராச திருமூர்த்திக்குப் பச்சை சாத்தப்படும். உற்சவமூர்த்தி வீதி உலா வந்தருள்வார். பத்தாவது திருநாள் அன்று குற்றால நாதர் கோயிலின் மேற்குப்புறமுள்ள குழலார் மண்டபத்தில் குற்றால நாதரும், குழல்வாய் மொழி அம்மையும் எழுந்தருளுவார்கள். அப்போது, சிறப்பு வழிபாடு நடைபெறும்.

வைகாசி விசாகம்

குற்றாலநாதர் திருக்கோயிலில் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் முருகப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

ஆனி

1108 கொல்லம் ஆண்டு, ஆனி மாதம் 19-ஆம் தேதி கும்பாபிடேகம் நடந்தது. எனவே ஒவ்வொரு மாதமும் ஆனி மாதம் வருடாபிடேகம் நடைபெற்றது. அந்நாளில் சிறப்பாக யாகங்கள் நடத்தப்படும். குற்றாலநாதர் அபிடேகத்திற்கு 1008 சங்குகளில் புனித நீரும், 108 சங்குகளில் குழல்வாய் மொழி அம்மனுக்கு அபிடேக நீரும் வைத்துப் பூசை செய்வர். வருடாபிடேக நாளில் ரிஷப வாகனத்தில் இறைவனும் இறைவியும் எழுந்தருளி வீதியுலா வருவர். இதன்பின் அர்த்தசாம பூசை நடைபெறும்.

ஆனி உத்திரம்

ஆனி மாதம் உத்திர நட்சத்தித்தில் இறைவன் நடராசருக்குச் சிறப்பு அபிடேகம் நடைபெறும். நடராசருக்குத் திருக்குற்றாலக் கோயிலில் வருடத்தில் ஆறு முறை அபிடேகம் நடைபெறும். அவை:

1. சித்திரை மாதம் சபாபதி அபிடேகம்.
2. ஆனியில்திருமஞ்சன அபிடேகம்.
3. ஆவணியில் சபாபதி அபிடேகம்.
4. புரட்டாசியில் சபாபதி அபிடேகம்.
5. மார்கழியில் ஆருத்திர தரிசன அபிடேகம்.
6. மாசியில் சபாபதி அபிடேகம்.

நடராசமூர்த்திக்கு நித்த அபிடேகம் இல்லை. சித்திரை விசு, வைகாசி விசுவில் ஏழாவது நாள் இறைவன் நடராசப்பெருமானுக்குக் காலையில், மாலையில் சிறப்பு அபிடேகம் உண்டு. ஏழாவது நாள் இரவு இறைவன் நடராசர், சிவகாமி அம்மை, மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், குற்றால நாதர், குழல்வாய்மொழி அம்மன் ஆகிய உற்சவத் திருவுருவங்கள் ஊர்வலமாக வீதி உலா வந்தருள்பாலிப்பர்.

ஆடிப்பூரம்

திருக்குற்றாலநாதர் திருக்கோயிலில் ஆடிப்பூரம் மனோன்மணி அம்மைக்குரிய விழா நாளாகும். விழாநாளில் நாட்டுப்புறத் தெய்வப்பாடல்கள் பாடப்படும்.

திருக்குற்றாலநாரின் திருக்கோயிலில் ஆடி அமாவாசையில் திருக்குற்றால நாதருக்குச் சிறப்பு அபிடேகம் நடைபெறும். திரிசூலத்திற்குப் பூசை செய்யப்படும் முதன்மை அருவிக்குத் திரிசூலம் கொண்டு வரப்பட்டு கங்கா பூசை நடத்தப்படும். "தீர்த்தவாரி" என்னும் பெயரில் மீண்டும் கோயிலுக்குத் திரிசூலம் எடுத்துச் செல்லப்படும். ஆடி அமாவாசை அன்று இரவு திருக்கோயிலில் இலட்ச தீபம் ஏற்றப்படும். வெள்ளி ரிஷப வாகனத்தில் சிவபெருமானும், அன்னையும் எழுந்தருளி வீதி உலா வந்து அருள் செய்வார்கள்

ஆவணி மூலம்

ஆவணி மூலமன்று திருக்குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மைக்கும் சிறப்பு அபிடேகம் நடைபெறும். அன்று கடவுள் சந்திரசேகரர் வீதி உலா வருவார். வெள்ளிக் குதிரையில் உலா வந்தருள்வார்.

விநாயக சதுர்த்தி

வசந்த வீதியில் இருக்கும் செண்பகவிநாயகருக்கு சிறப்பு அபிடேகம் நடைபெறும். உற்சவ மூர்த்தி வெள்ளி மூசிக வாகனத்தில் வீதிஉலா வந்தருள்வார்.

புரட்டாசி

புரட்டாசி விழா பத்து நாட்கள் கொடியேற்றத்துடன் நடக்கும். நவராத்திரி விழா மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. பத்து நாட்களும் இலட்சார்ச்சனை உண்டு. இறைவியின் மிகுந்த உக்கிரம் தணிக்க நவராத்திரி வெள்ளிக் கிழமை குங்கும அபிடேகம் நடைபெறும். நவராத்திரி 9 நாட்களும் பராசக்திக்குச் சிறப்பு வழிபாடு உண்டு. நவாபரண பூசையுமுண்டு. நவசக்தி வழிபாடும் இடம் பெறும்.

விஜயதசமி அன்று மதியம் 12 மணிக்கு ரத்தபானம் (குங்குமம் கலக்கப்பட்ட சிவப்பு சாதம்) நடைபெறும். பிரகாரத் தூண்கள், பலி பீடம் ஆகியனவற்றில் சிவப்பு சாதம் வைக்கப்படும். மஹா பலி பீடத்தில் ஒரு கட்டிச் சாதம் இடுவர். ஒன்பது நாட்களும் சிறப்பாக விழா நடைபெற்ற பிறகு அனைத்துத் தெய்வங்களையும் சாந்தப்படுத்துவதற்கு உயிர்ப்பலிக்குப் பதிலாகக் குங்குமம் கலந்த சிவப்பு சாதம் வைக்கப்படுகின்றது. திருஷ்டிக்காகவும், உக்கிரத்தைத் தணிக்கவும் இம்முறை வழக்கில் உள்ளது.

ஐபபசி விசு

ஐப்பசி முதல் தேதி இறைவன் குற்றாலநாதர். இறைவி குழல் வாய்மொழி ஆகியோர் ஏகசிம்மாசனத்தில் எழுந்தருளி வீதி உலா வருவர்.

இல்லத்துப்பிள்ளைமார் மண்டபத்தில் உற்சவ மூர்த்தியை எழுந்தருளச் செய்து விழா நடத்தப்படும்.

ஐப்பசிபூரம்

ஐப்பசி பூரத்தில் இறைவன் குற்றாலநாதருக்கும் குழல்வாய் மொழி அம்மைக்கும் திருக்கல்யாணம் நடைபெறும். ஊஞ்சல் விழா என்ற சிறப்பு விழா மூன்று நாட்கள் நடைபெறும்.

மார்கழி

திருக்குற்றாலத் திருக்கோயிலில் மிகப்பெரும் விழாவாக மார்கழியில் நடைபெறும் விழா ஆருத்திரா தரிசனம். கொடியேற்றப்பட்டு பத்து நாட்களும் இவ்விழா சிறப்பாக நடத்தப்படும். இவ்விழாவின்போது தெற்கு நோக்கி இருக்கும் மணி மண்டபத்தில் இறைவன் நடராசமூர்த்தியின் விக்கிரகத்தை எழுந்தருளச் செய்து தாண்டவத் தீபாராதனை நடத்துவர். இவ்விழாவை திருவெம்பாவை நோன்பு என்று கூறுவர். இறைவன் சிவபெருமான் சித்திர சபையில் திருபுரத் தாண்டவம் ஆடுவதாகப் புராணச் செய்தி இருப்பதால் இவ்விழாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இறைவனின் நடனத்தைக் குறிக்கவே தீப ஆராதனையின் தாண்டவம் காட்டப்படுகிறது. ஏழு அடுக்குத் தீபத்தட்டில் 108 தீபங்களை ஏற்றி ஆடச் செய்கின்றனர். ஆடும் போது நாலுகாலம் வாசிக்கப்படும். இராகம் ஆனந்த பைரவி. தவில் கிடையாது. ஓம் வடிவத்தில் வரும்படித் தீபத்தைக் காட்டுவர்.

தாண்டவ தீபாராதனை செய்யும் பொறுப்பாளர்கள் காப்புக் கட்டிக் கொண்டு கோயிலிலேயே தங்கிவிடுவர். பத்து நாட்களுக்கும் வீட்டிற்குச் செல்வதில்லை.

ஏழாவது நாள் வெள்ளை சாத்தி இறைவனை வழிபடுவர். எட்டாம் நாள் பச்சை சாத்துவர். திருவாதிரை அன்று சித்திரசபை இறைவன் நடராசருக்குப் பூசை உண்டு. திருவாதிரை அன்று இறைவன் நடராசருக்குச் சித்திரசபையில் ஆராதனை நடைபெறும். காராம் பசுவிற்கும் அன்று பூசைகள் செய்வர். திருப்பாவை, திருவெம்பாவை இசைக்கப்டும்.

கொடி இறக்கப்பட்டுப் பின் திருவாதிரைக்கு அடுத்த நாள் பட்டர்கள் காப்பு அவிழ்த்து இறைவனை வழிபடுவர். காவல் தெய்வம், வீர பாண்டிஅம்மன், தங்கம்மன், அடிதிட்டப் பிள்ளையார், யானைப் பாலத்துப் பிள்ளையார், உலகம்மன் ஆகிய தெய்வங்களுக்கு விடலை போடுவார்கள். அப்பம், வடை ஆகியனவற்றைப் பலியாக இடுகின்றனர்.

ஆருத்திரா தரிசனம் முடிந்தவுடன் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பட்டர்கள் பலியிடுகின்றனர். பலியிடும் பொருள் அப்பம், வடை ஆகும். இறைவனைச் சாந்தப்படுத்துவதற்காகப் பலியிடுகின்றனர்.

தெப்ப உற்சவம்

திருக்குற்றாலத்தில் தெப்பஉற்சவம் மாசி மாதம், மகம் நட்சத்திரத்தில் நடைபெறும். சித்திர சபைக்கு முன்புள்ள தெப்பக்குளம் அலங்கரிக்கப்படும். தெப்பத்தில் இறைவன் திருக்குற்றாலநாதர் இறைவி குழல்வாய்மொழி இலஞ்சி முருகன் எழுந்தருள 11 சுற்றுகள் தெப்பம் சுற்றி வரும். அப்போது வேதம் ஓதப்படும், தேவாரம் இசைக்கப்படும்.

தைப்பூசம்

திருக்குற்றாலநாதருக்கும், இறைவிக்கும் "தீர்த்தவாரி" உண்டு. தை அமாவாசைக்கும் "தீர்த்தவாரி" உண்டு.

மாசிமகம்

மாசிமகம் சிறப்பான முறையில் கொண்டாடப்படும். மாசி மகத்தன்று அனைத்து நதிகளும் சித்திரா நதியில் ஒன்று கூடுவதாக நம்புகின்றனர்.

பங்குனி

பங்குனி மாதம் பதினெட்டாம் படி கருப்பசாமிக்கும், ஐயனாருக்கும் விழா எடுக்கப்படும்.

பிரதோசம்

தமிழ் மாதத்தில் பதினைந்தாவது நாள் உற்சவ மூர்த்தி திருக்கோயிலின் பிரகாரத்தைச் சுற்றியருளச் செய்வர். இதற்குப் பிரதோஷ பூசை என்று பெயர். இறைவன் அருள் பெற குற்றாலநாதருக்கும் நந்திக்கும் பூசை நடைபெறும். பௌர்ணமி பிரதோஷத்தை விட அமாவாசை பிரதோஷம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இரண்டு பிரதோஷ காலத்திலும் திருக்குற்றாலக் கோயிலில் பூசை நடைபெறுகிறது.

பௌர்ணமி

சக்தி பீடத்தில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் 108 தீபங்கள் ஏற்றப்படும். விளக்குப் பூசையும் நடைபெறும்.

முருகக் கடவுள் எழுந்தருளல்

திருக்குற்றாலநாதர் திருக்கோயிலில் நடைபெறும் சித்திரை, ஐப்பசி, தை மாதத்திருவிழா காலத்தில் இலஞ்சியினின்றும் முருகன் குற்றாலநாதர் கோவிலுக்குத் தம் இரு தேவியருடன் எழுந்தருளும் முறை உள்ளது. விழா முடிந்தவுடன் இறைவன் நடராசர், விலை மதிப்பற்ற பொருட்களை வழங்க முருகக் கடவுள் பெற்றுக் கொண்டு, பெற்றோர்களை வலம் வந்து மீண்டும் இலஞ்சி செல்லும் வைபவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

விழாக்காலங்களில் பயன்படும் வாத்தியங்கள்

விழாக்காலங்களில் தேவாரம், திருமுறைகள், வேதங்கள், திருப்பாவை, திருப்பல்லாண்டு, திருவெம்பாவை, சிவபுராணம் ஆகியன இசைக்கப்படுகின்றன. இதைத் திருக்குற்றாலநாதர் உலா (ப. 76),

"தேவாரப் பண்ணுந் திருவாசகத் தமிழும்
பாவார் திருவிசைப் பல்லாண்டும்- நாவாம்

சிவபுராணக் கவியுஞ் சேரர் கோன் பாட்டுஞ்
சிவபிரான் கொண்டருளிச் செய்து". என்று கூறுகிறது.

பல வகையான வாத்தியக் கருவிகள் இறைவன் வீதி உலா வரும் போது இசைக்கப்பட்டன என்பதற்குத் திருக்குற்றாலநாதர் உலா (ப. 78) சான்றாக உள்ளது.

"பம்பை தடாரி பதலை துடிதி மிலை
வெம்படகந் தக்கை வியன் முழவம் - பம்பு
கரடிகை சல்வலரி கல்லவட மொந்தை
முருடி திடிமன் முழங்கத் - திரள்வாணன்
ஓரா யிரங்கை முரசொலிப்பப் பானுகம்ப
வீரா யிரங்கையிற் சங்கொத்திசைப்ப - நேரே
செவியிலிரு வரிசைத் தேன்பொழிய யாழோர்
அவிசொரியும் பண்ணமுத மாட்ட"

என்று பாடியுள்ளார்.

வாகனங்கள்

சித்திரை, ஐப்பசி மாதங்களில் திருக்குற்றாலத்தில் நடைபெறும் திருவிழாக்களில் இறைவன் வீதி உலா வரும் போது பல்வேறு வாகனங்களில் எழுந்தருள்வார். வாகன அறையில் இன்றும் பல்வகையான வாகனங்களைப் பாதுகாத்து வைத்து உள்ளனர். மரத்தாலும், வெள்ளியாலும் வாகனங்கள் உண்டு. இந்த வாகனங்கள் அளவில் பெரியதாகவும் உள்ளன.

முதல் இரண்டு நாட்கள் விக்கிரகங்கள் வெள்ளி ஏக சிம்ம வாகனத்தில் எழுந்தருளுகின்றன. மூன்றாவது நாள் பூதவாகனத்தில் இறைவனும், சிம்ம வாகனத்தில் அம்பாளும், வெள்ளி மயில் வாகனத்தில் முருகக் கடவுளும் எழுந்தருள்வர். நான்காவது நாள் வெள்ளி ரிஷப வாகனத்திலும், ஐந்தாவது நாள் பூத வாகன ரதத்தில் இறைவனும், கிளி வாகனத்தில் அம்பாளும், ஆறாவது நாள் யானை வாகனத்தில் சுவாமியும், அன்ன வாகனத்தில் அம்மையும், ஏழாவது நாள் வெள்ளை சாத்தி அலங்காரத்தில் வெள்ளி ஏக சிம்ம வாகனத்தில் இறைவனும், ஒன்பதாவது நாள் பூத வாகனத்தில்

இறைவனும், காமதேனு வாகனத்தில் இறைவியும், பத்தாவது நாள் ரிஷப வாகனத்தில் இறைவனும், இறைவியும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிவார்கள்.

திருக்குற்றாலஉலா இறைவனின் திருவீதி உலாக் காட்சியை,

"சித்திரை நீராடும் திருநாளில் - அத்தனார்
காட்டிடுமெய்க் காட்டொருநாட் கண்டி டுவோ
ரிந்திரர்க்குஞ்
சீட்டுமா திக்கத் திருநாளில் - வேட்டொருநாள்
பூமேலயானாகிப் புண்டரிகக் கண்ண னெனத்
தாமே யிரண்டு நாட் சார்ந்தருளி - மாமூன்றிற்
போத வுருத்திரராய்ப் போந்தருளி நாலாநாட்
சீதவயல் சூழ்கிழவைச் சின்னனணைஞ்சான் - காதெலனாம்
பேகன் வீரப்பன் பெரிய சுவாமி தந்த
வாகன் வெள்ளேற்றின் மகே சர ரா-யாகு நாள்
ஐந்திற் சதாசிவமே யாகியருள் செய்வரென" (ப.74)

என்று கூறுகிறது. வாகனங்கள் வழங்கியவர்கள் பெயர்களும் இந்த உலாவில் இடம் பெற்றுள்ள. திருக்குற்றாலக் குறவஞ்சி.

"அண்டர் கூட்டமு முனிவர் கூட்டமும்
அசுரர் கூட்டமு மனிதராகிய
தொண்டர் கூட்டமும் இமைப்பி லாரெனச்
சூழ்ந்து தனித்தனி மயங்கவே
பண்ட நரரிவர் தேவ ரிவரெனப்
பகுத்து நிறுவிய வேளை தொறுந் தொறும்
மண்டலீ கரை நந்தி ப்ரம்படி
மகுட கோடியிற் புடைக்கவே" (ப. 5)

என்று இறைவன் பவனி வரும் போது சூழும் கூட்டத்தினைக் கூறுகிறது.

"கனக தம்புரு கின்ன ரங்கிளி
யாசை வீணை மிழற்றவே" என்றும்

கொத்து மலர்க்குழற் றெய்வ மங்கையர்
குரவை பரவையை நெருக்கவே
யொத்த திருச்செவி யிருவர் பாடல்க
ளுலக மேழையு முருக்கவே
மத்த ளம்புயல் போன்மு ழங்கிட
மயில னார்நடம் பெருக்கவே

சத்தி பயிரவி கௌரி குழன்மொழித்
தைய லாளிட மிருக்கவே" (ப. 7-9)

பவனி வந்தார் என்றும் கூறுகிறது.

சிற்பங்கள்

திருக்குற்றாலநாதர் கோயிலிலுள்ள சிற்பங்கள் அனைத்தும் ஆடற்கலை இலக்கணங்களைக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகளுள் ஒன்று ஆடற்கலை இலக்கணங்களை இக்கலையில் ஏற்றுக்கொண்டமையாகும். எனவே, சிற்ப வடிவங்கள் நின்றாலும், கிடந்தாலும் அமர்ந்தாலும் வேறு எந்த அமைதியில் தோன்றினாலும் அவை பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்தைப் பின்பற்றியே அமைந்திருப்பதை குற்றாலநாதர் கோயிலில் காணமுடிகின்றது, நமஸ்கார மண்டபத்தூண்கள் அம்மண்டபத்தின் உத்திரம், கவோதம் ஆகியனவற்றின் மேல் தெற்கிலும் வடக்கிலும் உள்ள பாந்துக்களிலும் இராசகோபுரத்திற்கு வடக்குப் பகுதியிலுள்ள திரிகூட மண்டபத்தூண்களிலும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

திரிகூட மண்டபம்

திரிகூட மண்டபம் 100 தூண்களைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் மூன்று சிறு மண்டபங்கள் உள்ளன. கிழக்கு மேற்காக நீண்ட நான்கு படிகளோடு கூடிய மண்டபத்தில் உற்சவமூர்த்தியை விழாக் காலங்களில் மக்கள் தரிசனத்திற்காகக் கொண்டு வந்து வைப்பர். இம்மண்டபத்தில் துவாரபாலகர்கள் உண்டு. இரண்டு யாக மண்டபங்களும் உள்ளன. இம்மண்டபங்களில் தூண்கள் சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றன.

திரிகூட மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் முதல் தூண் வரிசையில் நான்காவது தூணில் பிள்ளையார் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் பூக்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேல் இரண்டு இலைகள் கீழ் இரண்டு இலைகள் கயிறு கோத்தது போன்று கல்லில் அமைந்து இருப்பது குறிப்பிடதக்கது. ஐந்தாவது தூணில் மன்மதன் சிற்பமும் கிருஷ்ணனின் காளிங்க நர்த்தனமும் சிற்பமாக்கப்பட்டுள்ளன. ஆறாவது தூணில் சிவலிங்கம், சங்கு, அமர்ந்த நிலையில் குரங்கு பழம் உண்ணுவது போன்ற சிற்பங்கள் உள்ளன. ஏழாவது தூணில் தவழும் கண்ணன், குறும்பலாவின் கீழ் அமர்ந்திருக்கும் சிவலிங்கம் ஆகியன சிற்பங்களாக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் இரண்டாவது வரிசையில் மூன்றாவது தூணில் முருகன்,

மயில் வாகனம், புல்லாங்குழல் கண்ணன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. அமர்ந்த நிலையில் ஒரு காலைப் பிகுவாகத் தொங்கவிட்டு ஊன்றி மற்றொரு காலை அதன் மீது படுக்கக் கிடத்தி நீட்டி உடலைச் சமநிலையில் கொண்டு நிமிர்த்தி ராஜநோக்குடன் வீராசனத்தில் அமர்ந்திருக்கும் இராஜராஜேஸ்வரி சிற்பம் உள்ளது. இதே தூணில் சிவலிங்கச் சிற்பம் உள்ளது. இச்சிவலிங்கத்தின் மேல் வலது உள்ளங்கை பதிந்திருக்க இடக்கை மடக்கிய நிலையில் கொண்டை ஜடாபந்தமாக முனிவர் சிற்பம் உள்ளது. அகத்தியர் விஷ்ணுவை சிவனாகக் குறுகச் செய்த புராணச் செய்தி சிற்பமாக்கப்பட்டுள்ளது. இதே தூணில் குதிரை ஒன்று முன் இரு கால்களைத் தூக்கி முதுகுப்புறம் முகத்தை வளைத்து நிற்கும் சிற்பக் காட்சியும், முனிவர் ஒரு முகம், நான்கு கால்கள் ஆனால் இரு கைகளுடன் விளங்க, கை சிவலிங்கத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கும் சிற்பத் திறனும் சிற்ப நுணுக்கத்தைக் காட்டுகின்றது, நான்காவது தூணில் முனிவர் ஒருவர் ருத்திராட்ச மாலையுடன் காணப்படுகின்றார். முனிவர் உருவம் வலக்கை இடக்கையினைத் தலைக்கு மேல் மணிக்கட்டைப் பிடித்து முகம் வலப்பக்கம் திருப்பி வளைந்து நிற்கும் சிற்பம் அழகாக உள்ளது. இதற்கு மேல் சிவ மூர்த்தி ஒன்று அமர்ந்த நிலையில் இடக்கால் குத்துக்கால் இட்டு மடித்த முழங்காலில் இடக் கையினை வைத்து விரிசடையுடனும் ஜடாபந்தத்துடனும் காணப்படுகின்றார். இச் சிற்பம் அமர்ந்திருக்கும் நிலைக்குச் சுகாசனம் என்று பெயர். இம் மூர்த்தியை ஒரு உருவம் வணங்கி நிற்கும் நிலையில் சிற்பம் உள்ளது.

ஐந்தாவது தூணில் காளிங்கநர்த்தனம் மற்றும் முனிவர் ஒருவர் இரண்டு கைகளையும் மேல் தூக்கி கும்பிடும் வகையில் சிற்பம் உள்ளது. ஜடா பந்தத்துடன் கூடிய தலை அலங்காரம், ஆறாவது தூணில் இராமர் உருவம், சேனாதிபதி உருவம், ஒரு பெண் சோகமாக அமர்ந்திருக்கும் காட்சி, குரங்கு அமர்ந்து கனி உண்ணும் நிலை ஆகியன சிற்பங்களாக்கப்பட்டுள்ளன.

ஏழாவது தூணில் சிவலிங்கத்தைத் தூக்கிக் கொண்டு செல்லும் அமைப்பில் ஓர் உருவம், இச்சிற்பம் நிற்கும் நிலையினை ஆலீடாசனம் எனலாம். அரச உருவமும், வாள் ஏந்திய உருவமும் உள்ளன. மூன்றாவது வரிசையில் அமைக்கப்பட்ட நாற்கால் மண்டபத்தில் கிழக்குத்தூணில் சிறிய அரசர் உருவமும் வீரர் உருவமும் உள்ளன. மேற்குத் தூணில் சடை அணிந்த ஒரு பெண் உருவமும் இடக்கை தலை மேல் இருக்கும் படியாகச்

செதுக்கப்பட்டுள்ளது. வடக்குத் தூணில் சிவனடியார் போன்ற அரசபரம்பரை உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது தூணில் நெஞ்சில் இரு கை கூப்பி (அஞ்சலி ஹஸ்தம்) வணங்கும் உருவம், அருகில் வாள் ஏந்திய வீரர் உருவம் உள்ளதால் மேல் கூறப்பட்ட சிற்பம் அரச பரம்பரையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். தாடியுடன் கூடிய ஒரு வீரரின் உருவம் இடுப்பில் செருகியுள்ள உடை வாளைப் பிடித்துள்ளது. இடக்கை தலைக்கு மேல் சுரிகை ஏந்தியுள்ளது.நான்காவது தூணில் குழல் ஊதும் கண்ணன், தாமரையில் சரஸ்வதி உள்ளன. ஐந்தாவது தூணில் ஐந்து தலைகள் பத்து கைகள் கொண்ட சதாசிவ சிற்பம் காணப்படுகின்றது. ஆறாவது தூணில் இராமர் சிற்பம் உள்ளது. நெஞ்சில் கை கூப்பிக் கும்பிட்டு நிற்கும் உருவம், வீரன் ஒருவன் இடக்கையில் கேடயம் ஏந்தி வலக்கை உடைவாளைப் பிடித்து முன் கொண்டையுடன் காட்சித் தரும் நிலையில் சிற்பமாக்கப்பட்டுள்ளது.

நான்காவது வரிசை

நான்காவது வரிசையின் நான்காவது தூணில் சிவலிங்கம் அமைக்கப்பட்டு ஓர் ஆண் உருவம் வணங்கி நிற்கும் வகையில் உள்ளது. ஐந்தாவது தூணில் சரஸ்வதி வீணையுடன் நின்ற நிலையில் காட்சி அளிக்கின்றது. ஆறாவது தூணில் இராமர், தாமரை மலரில் இலக்குமியின் உருவம் ஏழாவது தூணில் நான்கு பாம்புகள் ஒன்றுடன் ஒன்று முடி போட்டுப் பின்னி அமைக்கப்பட்டிருக்கும் காட்சி சிற்பியின் கை வண்ணத்தைக் காட்டுகின்றது. எட்டாவது தூணில் ஒரு பெண் தலைக்கு மேல் இடக்கையினை வைத்துக் கொண்டு நிற்கும் காட்சி சிற்பமாக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது வரிசை

முதல் தூணில் மட்டும் அனுமான் சஞ்சீவிப் பர்வதத்தைத் தாங்கி நிற்கும் சிற்பம் காணப்படுகின்றது. ஒரு பெண் சிற்பம் இடுப்பை நன்கு வளைத்து இடக்கால் ஊன்றி வலக்கால் தூக்கிக் கட்ட விரல் ஊன்றி நிற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் நளினம் வெளிப்படுகின்றது. ஐறாவது வரிசையில் வணங்கி நிற்கும் ஆண் உருவமும்,

எட்டாவது வரிசையில் ஆறாவது தூணில் சிவபெருமான் சிற்பமும் ஓர் உருவம் வணங்கி நிற்கும் நிலையும் ஒன்பதாவது வரிசையில் நான்காவது தூணில் ஒரு கும்பிட்ட உருவமும் பத்தாவது வரிசையில் ஐந்தாவது தூணில் ஒரு பெண் உருவமும் காணப்படுகின்றன.

தெற்கு நோக்கியிருக்கும் திரிகூட மண்டபத்தின் மேற்குப் பகுதியில் ஆறு அறைகள் உள்ளன. இவை அனைத்தும் அறக் கட்டளை அறைகளாக இருந்துள்ளன. வட மேற்கில் தைல அறை உள்ளது. இதை தைலப்பிறை என்றழைக்கின்றனர். இரண்டு பெரிய அடுப்புகளும் தைலம் காய்ச்சும் இரண்டு பெரிய பித்தளை அண்டாக்களும் உள்ளன. மண்டபத்தின் வடக்குப் பகுதியில் மத்தியில் நீண்ட வாகனப் பிறை உள்ளது.

திரிகூட மண்டபத்திலுள்ள தூண்கள் அதிஸ்தஹா, நாகபந்தா, கும்பம், கலிசா, ஹலகா என்னும் உறுப்புகளையும் அடிபாகம் ஜகடி, பத்மம், கந்தம், குமுதம், ஹல்டிகா போன்ற அமைப்புகளையும் கொண்டு விளங்குகின்றன. தூணின் மேற்பகுதியில் மீனும், செண்டு, என்ற போர்க்கருவியும் செதுக்கப்பட்டுள்ளன. இவை பாண்டியர் காலத்தைச் சார்ந்தவை என்று கருதப்படுகின்றது.

நுழைவாயில்

கோயிலின் நுழைவாயிலில் மரத்தால் செய்யப்பட்ட சிற்ப மண்டபம் ஒன்று உள்ளது. இம் மண்டபத்தை வரவேற்பு மண்டபம் என்றும் கூறுகின்றனர். இம்மண்டபம் கோயில் நுழைவாயில் கதவிற்கு முன் உள்ளது. இம் மண்டபத்தில் தெற்கும் வடக்கும் அலங்கார வேலைப்பாடுகளுடன் ஆன சுதையால் உருவாக்கப்பட்ட பெண் உருவங்கள் உள்ளன. ஆபரணங்களுடன் கூடிய வண்ணச் சிலையாக உள்ளன. இவை 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறப்படுகின்றது. வரவேற்பு மண்டபத்தின் தூண்களுள் நடுவில் அமைந்துள்ள நாற்புறத்தூண்களும் கருங்கல் தூண்கள். ஒவ்வொரு திசையிலுள்ள கருங்கல் தூண்களைச் சுற்றி இசைத் தூண்கள் அமைப்பில் மரத்தால் ஆகிய தூண்களால் இணைக்கப்பட்டுள்ளன. வரவேற்பு மண்டபத்திலுள்ள மரச் சிற்பங்கள் அனைத்தும் கோயிலில் வடக்கு நுழை வாயிலின் மரக்கதவுச் சிற்பங்களை ஒத்துள்ளன.

நமஸ்கார மண்டபம்

குற்றாலநாதர் திருக்கோயிலின் நுழைவாயிலை அடுத்து நமஸ்கார மண்டபம் உள்ளது. அதனை முக மண்டபம் என்றும் கூறுகின்றனர். அரசர்கள் காலத்தில் இம் மண்டபத்திற்கு எழுந்தருளி மன்னர்கள் கீழே விழுந்து இறைவனை வணங்கி வந்ததால் நமஸ்கார மண்டபம் என அழைக்கப்பட்டது. தற்காலத்தில் யாகக் குண்டத்திற்கும், உற்சவக்கால உற்சவமூர்த்தியை எழுந்தருளச் செய்யவும் இம் மண்டபம் பயன்படுகிறது. இம் மண்டபம் பத்து அடி சதுர அளவுடையது. நமஸ்கார மண்டபத்தை முதலை தாங்கிக்கொண்டுள்ளது. நான்கு திசைகளிலும் முதலையின் நான்கு கால்கள் மண்டபத்தைத் தாங்குகின்றன. தலைப்பகுதி கிழக்கு நோக்கியுள்ளது. வால் பகுதி மேற்கு நோக்கி உள்ளது. மண்டபத்தின் அடிப்பகுதியினைச் சிறு சிறு பூத கணங்கள் தாங்கிக் கொண்டுள்ளன.

நமஸ்கார மண்டபத்தின் கோபுரம் சுதையால் ஆனது. இது துவிதள விமானம் கோபுரத்தின் நான்கு மூலைகளிலும் கூட (கர்ன ஓடு) விமானங்கள் உள்ளன. இடைப்பகுதிகள் காளா (சாளரம்) விமானத்தால் ஆகியன. இம் மண்டபத்தில் மொத்தம் 30 தூண்கள் உள்ளன. அவற்றுள் ஒன்பது தூண்களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. தெற்குப் பகுதியில் அமைந்துள்ள முதல் தூணில் கிழக்குப் பகுதியில் பிச்சாடணமூர்த்தி உள்ளது. 1 அடி உயரத்திற்கு மழு, சங்கு ஏந்தி அபய ஹஸ்தம், வரதஹஸ்தங்களுடன் சிற்பம் உள்ளது. இச்சிற்பம், அரிதாகக் காணக்கூடியனவற்றுள் ஒன்று என்று கருதப்படுகின்றது. குறும்பலா மரத்தின் கீழ் சிவலிங்கம் ஐந்து தலை நாக பீடத்தில் அமர்ந்திருக்கும் சிற்பம், சிற்பியின் கற்பனை ஆற்றலைக் காட்டுகிறது. அதே தூணில் சிவவேடத்தில் அரச உருவம் ஒன்றுள்ளது.

தெற்குத் திசையிலுள்ள மூன்றாவது தூணில், இம்மண்டபத்தைக் கட்டிய சின்னணைஞ்சாத் தேவர் (1660-1721) சிலை உள்ளது. இச் சிலை கும்பிட்டு (அஞ்சலி ஹஸ்தம்) நிற்கும் நிலையில் உள்ளது. இதே தூணில் இடக்கை வாள் ஏந்தி வலக்கை அதைத் தாங்கி மன்னரைக் காட்டுவது போன்று ஒரு வீரர் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பணிப் பெண்ணின் உருவமும் மன்மதன் உருவமும் உள்ளன.

நான்காவது தூணில் இராஜகோபாலத் தேவரின் உருவம் உள்ளது. அதே தூணில் வீரன் வலக்கையில் வாள் ஏந்தி இடக்கையினைத் துடையில் வைத்து நிற்கிறான். ஒரு பெண் வணங்கி நிற்கிறாள். தெற்குப் பகுதியில் தட்சிணாமூர்த்தி உள்ளது.

ஐந்தாவது தூணில் ஒரு பெண் சாமரம் வீசுகிறாள். வலக்கையில் சாமரம் இடக்கை துடையின் மேலுள்ளது. தெற்குத் திசை தூணின் வடக்குப் புறம் ஒரு பெண் உருவமுள்ளது. இப்பெண்ணின் மார்பகத்தில் கயிற்றில் கோத்த திருமாங்கல்யம் காணப்படுகின்றது. வலக்கால் ஊன்றி இடக்கால் தூக்கி பாதம் வெளிப்புறம் தெரியும் வண்ணம் அமைக்கப்பட்ட நிலை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இப்பெண்ணின் தலைஅலங்காரம் குறிப்பிடத்தக்க வகையிலுள்ளது.

கொண்டை உருண்டை வடிவத்தில் மேல் நோக்கி உள்ளது. அடிப்பாகத்தில் முத்துமாலை வைத்துக் கட்டி, கொண்டையின் நுனி சுருட்டி விடப்பட்டுள்ளது.

அதே தூணில் தெற்கு நோக்கி ஒரு முனிவர் சிற்பம் காணப்படுகின்றது. மூன்று நிலையில் உடலை வளைத்து நிற்கின்றது. (திரிபங்கம்). இடுப்புப் பகுதி வளைந்து இடக்காலையும் வலக்காலையும் ஊன்றி அற்புதமாக அமைந்துள்ளது. கூர்மையாக மூக்கு, பக்கங்களில் வளைந்துள்ள நீண்ட மீசை, குறுந்தாடி, வாய்திறந்த நிலையில் வெளியில் தெரியும் பற்கள் செம்மையாகச் செதுக்கப்பட்டுள்ளது. காது, விலா எலும்புகள் தெரிகின்றன. முகம் வலப்பக்கம் முழுமையாகத் திரும்பிச் சற்றுக் கீழ் நோக்கியுள்ளது. மிகவும் ஒல்லியான உருவமாக இருக்கும் இச்சிற்பம் மகாபலிபுரத்திலுள்ள சிற்பங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கது என்று ஒரு ஸ்தபதி கூறினார். இத்தூணில் மேற்குப் பகுதியில் இராமர் சிலை ஒன்றும் காணப்படுகின்றது.

வடக்குப் பகுதி

நமஸ்கார மண்டபத்தின் வடக்குத் திசையிலுள்ள தூண்களுள் முதல் தூணில் அரச பரம்பரையைச் சார்ந்த ஓர் உருவம் காணப்படுகின்றது. இராமரின் திருவுருவம் சிற்பமாக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தூணில் காமன் உருவம் காணப்படுகின்றது. இதே தூணில் முனிவர் வலக்கையில் சிவலிங்கம் தாங்கி, இடக்கையினை மடக்கி ஐந்து விரலுடன் விரித்த உள்ளங்கை வெளிப்புறம் தெரியும் படி அமைக்கப்பட்டுள்ளது. வலப்பாதத்தைச் சற்று தூக்கி கட்டை விரலால் ஊன்றி நின்று, இடப்பக்கம் முகம் சிறிது வளைந்து நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தூணிலேயே வலக்கால் ஊன்றி, இடக் காலைத் தூக்கி ஐந்து விரலாலும் ஊன்றி நிற்கும் ஒரு வீரர் உருவம் காணப்படுகின்றது. கையில் சுரிகை உள்ளது.

மூன்றாவது தூணில் அகத்தியர் உருவம் உள்ளது. முனிவர் ஐந்து தலை நாகத்தின் கீழ் நிற்பது போன்ற அமைப்பு உள்ளது. வளைந்த நிலையில் இரண்டு கைகளையும் மேல் தூக்கி இணைத்து நிற்கும் தோற்றக் காட்சி வலக்கால் நேர் கோட்டில் வயிறு, நெஞ்சுப் பகுதியில் தொடும் வண்ணம் தூக்கி ஏகபாதஸ்தானமாக நிற்கும் தோற்றத்தில் சிற்பம் உள்ளது. மற்றும் இதே தூணில் ஒரு பெண் நடு விரலை மூக்கின் மேல் வைத்து மலர்ந்த முகத்துடன் நிற்கும் காட்சியில் அமைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

நான்காவது தூணில் ஒரு முனிவர் உருவம் சடா முடியும் வணங்கிய கையுமாக உள்ளது. மேல் பகுதியில் ஓர் உருவம் பரசு ஏந்தி மகாராஜ லீலாசனத்தில் அமர்ந்திருக்கும் நிலையைக் காணமுடிகின்றது. காமதேனு சிவலிங்கத்தின் மேற் பகுதியில் வாயினை வைத்திருக்கும் காட்சி உள்ளது. இத்தூணில் வட திசையில் ஓர் இடையர் உருவம் உள்ளது. தூணின் இவ்வுருவம் காது வளர்த்து உச்சிக் கொண்டையுடன் நீண்ட கம்பு ஊன்றி அதில் வலக்கையைத் தாங்கிப் பிடித்து இடக்கையில் ஒரு பாத்திரம் தாங்கி உள்ளது.

ஐந்தாவது தூணில் சாமரப் பெண் உருவம் காணப்படுகின்றது. மேற்பகுதியில் கண்ணனின் காளிங்க நர்த்தனம் உள்ளது.

மகா மண்டபத்தில் நுழைவாயில்

மகா மண்டபத்தின் நுழைவாயிலில் தெற்குத் திசைகளிலும் வடக்குத் திசைகளிலும் துவாரபாலகர்கள் உருவங்கள் கலை நுட்பத்துடன் உள்ளன.

நமஸ்கார மண்டபத்திலுள்ள சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ள கற்களுக்கும் துவார பாலகர்கள் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ள கற்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. பார்வையில் வசீகரம் உள்ளது. மூக்கு கூர்மையாகச் செதுக்கப்பட்டுள்ளது. விரல்களில் சிற்ப நுட்பம் உள்ளது. எனவே இவை சோழர்காலத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும். சோழ நாட்டினின்றும் கொண்டுவந்து இங்குச் சுவற்றில் பொருத்தி வைக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணவும் வாய்ப்புள்ளது. தெற்குத் திசையிலுள்ள துவார பாலகர் சூசி முத்திரையுடன் வடக்குத் திசையிலுள்ள துவார பாலகர் வியாக்கியான ஹஸ்தமாகவும் உள்ளனர். துவார பாலகர்கள் இரண்டு கைகளைக் கொண்டு விளங்குகின்றனர்.

வடக்கு நுழைவாயில் கதவு

திருக்குற்றால நாதர் திருக்கோயிலின் வடக்கு நுழைவாயிலின் மரக் கதவில் கலை மரச்சிற்பங்கள் காணப்படுகின்றன. புராணச் செய்திகளைச் சிற்பங்களாக வடித்துள்ளனர். சட்டக் கதவின் மையப் பகுதியில் எட்டு வரிசைகளில் 32 சிற்பக் கூட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கதவும் 16 சிற்பங்களைக் கொண்டுள்ளன. கதவின் இடப்பக்கம் மேற்பகுதியிலிருந்து

1. இமயமலையின் தட்சிணாமூர்த்தி அமர்ந்த நிலை.
2. வள்ளி தெய்வானையுடன் முருகன்.
3. கஜலெக்ஷ்மி.
4. சம்ஹார மூர்த்தி.
5. கஜேந்திர மோட்சம்.
6. நடராசர்.
7. மோகினி.
8. பிச்சாடண மூர்த்தி.
9. பார்வதி திருக் கல்யாணம்.
10. சிவலிங்கத்தை வழிபடும் இராமர், இலக்குமணன், சீதை.
11. அனந்த சயனம்.
12. பரிவாரங்கள் சூழ்ந்திருக்க விஷ்ணு, ஸ்ரீதேவி, பூ தேவியுடன் அமர்ந்திருத்தல்.

இடது பக்கக் கதவில்

1. வல்லப விநாயகர் சுகாசனத்தில் வலப்பக்கம் தேவி ஏந்தி அமர்ந்திருத்தல்.
2. சிவபார்வதி.
3. வைகுந்த காட்சி.
4. வேணு கோபாலன் புல்லாங்குழலுடன்.
5. நடராசர், வீரபாகு.
6. நரசிம்ம அவதாரம்.

பாந்துவில் சிற்பங்கள்

நமஸ்கார மண்டபத்தின் உத்திரம், கபோதம் ஆகியவற்றிற்கு **மேல்** வடக்கு, தெற்குத் திசைகளில் பந்தத்தில் சிறிய கற்சிற்பங்கள் **உள்ளன. மொத்தம்** முப்பத்திரண்டு சிற்பங்கள் உள்ளன.

தெற்குத் திசைகளில் மூன்று மனிதர்கள் ஒன்றாக இணைக்கப்பட்ட உருவம், பூத கணங்கள், துடையில் ஐந்து விரலும் பதிய ஓர் ஆண் உருவம், பத்மாசனத்தில் அமர்ந்து வியாக்கியான ஹஸ்தமாக இறை உருவம், 'மகாராஜ லீலாசனத்தில்' ஒரு சிற்பம், விநாயகர் ஆகியன இடம் பெற்றுள்ளன.

வடக்குத் திசையில், பார்வதி திருக்கல்யாணம், நடராசர், முனிவர் கும்பிட்ட கையுடன் இடக்காலை ஊன்றி, வலக் கால் தோளில் படும் படியாக வளைத்துக் கையினால் பிடித்து நிற்கும் ஏக பாதஹஸ்தானகம் மரத்தைப் பிடித்துக் கொண்டு ஓர் உருவம் நிற்றல், நடராசர் நடனம், முனிவர் வணங்கி நிற்கும் உருவம், திருமாலின் அனந்த சயனம், ஸ்ரீதேவி, பூதேவி உருவங்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

நமஸ்கார மண்டபத்தின் இரண்டாவது தூணில் போதிகையில் யானையின் மேல் இரு உருவங்கள் அமர்ந்துள்ள சிற்ப நுணுக்கம் போற்றத் தக்க ஒன்றாகும். ஒரு யானை உருவத்தில் இரண்டு யானைகளின் தோற்றம் அழகுடன் உள்ளது.

சோழர், பாண்டியர் காலத்திற்குரிய சிற்பக்கலை இடம் பெற்றுள்ளது. 17-18 ஆம் நூற்றாண்டுச் சிற்பக்கலையும் காணப்படுகின்றது. திருக்கோயிலில் முனிவர் சிற்பங்களின் எண்ணிக்கை அதிகம். முனிவர்களின் உருவம் ஒல்லியாகவும், ஏக பாத ஸ்தானகமாகவும், கீழ் நோக்கிக் கூர்மையான தாடியும், ஜடாபந்தம், விரிசடை, உச்சிக் கொண்டை போன்ற தலைக் கோலங்களும் கொண்டு அஞ்சலி ஹஸ்தமாக உள்ளன. இம்முனிவர்களைத் தாருகாவனத்து முனிவர்கள் என்றும் கூறலாம். மோகினி உருவமும், பிச்சாடண மூர்த்தியும் இடம் பெற்றுள்ளதால் தாருகாவனத்து முனிவர்களாகவே இருக்கலாம்.

குற்றாலத்தில் குரங்குகளின் கூட்டம் அதிகம் என்பதால் சிற்பிகளின் கவனம் அதில் அதிகமாகச் சென்றுள்ளது என்பதைக் கோயிலிலுள்ள குரங்குச் சிற்பங்கள் காட்டுகின்றன. கனியுடன் கூடிய குரங்குகளே சிற்பங்களாக்கப்பட்டுள்ளன. குறும்பலா ஈஸ்வரர், இராமர் திருஉருவங்கள் மிகையாகக் காணப்படுகின்றன. விஷ்ணு கோயில் சிவன் கோயிலாக மாற்றப்பட்டது என்னும் வரலாறு பேசப்பட்ட காலத்தில் கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிற்பங்கள் என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

அரச திருஉருவங்கள் அமைக்கப்பட்டுள்ள தூண்களின் சேனாதிபதி அல்லது வீரர் வீரச் சங்கிலியுடனும் உடைவாள்,சுரிகை முதலியவற்றுடனும், இடம் பெறுவதுடன் பணிப் பெண்களும் அமைக்கப்பட்டுள்ளனர். இந்த அமைப்பினை அரச திருஉருவங்கள் உள்ள அனைத்துத் தூண்களிலும் காணமுடிகிறது. அரசர், வீரர், பணிப் பெண் என்ற அமைப்பில் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும் நிலையினைக் காணமுடிகிறது.

பூக்கள், பாம்புகள் அமைப்பில் கயிறு முடிச்சுகள் போன்று செதுக்கியிருக்கும் கற்பனைத் திறன் பாராட்டத்தக்கது.

இலக்கியங்களில் திருக்குற்றாலம்

ஞான சம்பந்தர்

தென்பகுதி வந்த ஞான சம்பந்தர் இயற்கை எழில் சூழ்ந்த திருக்குற்றாலத்திற்கு வருகை புரிந்துள்ளார்.

ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த திருஞான சம்பந்தர் சிவபிரான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களையும் இறைவனையும் பக்தியோடு பாடி மகிழும் திருக்குற்றாலப்பதிகமும், திருக்குறும்பலாப் பதிகமும் பாடியுள்ளார். திருக்குற்றாலப் பதிகத்தில் திருக்குற்றாலத்தின் இயற்கை அழகையே மிகுதியும் பாடியுள்ளார். ஒவ்வொரு செய்யுளின் முதல் இரண்டு வரிகளில் இயற்கை அழகையும் கடைசி இரண்டு வரிகளில் இறைவனைப் பற்றியும் பாடியுள்ளார்.

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ் செய் குற்றாலம்
அம்பா னெய்யோ டாடலமர்ந்தான் அலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்கான்"

என்று ஞானசம்பந்தர் பதிகத்தினைத் தொடங்குகின்றார்.

"பக்கவாழைப் பாய்கனியோடு பலவின்றேன்
ஆகாக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்"

"மலையார் சாரல் மகவுடன் மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்"

என்று திருக்குற்றாலத்தின் எழிலைப் பாடியுள்ளார்.

"நீலநெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
கோல மஞ்ஞை பேடை யோடாடும் குற்றாலம்"

என்று திருக்குற்றாலத்தின் எழிலைப் பாடியுள்ளார்.

திருக்குற்றாலப் பதிகத்தில் ஒவ்வொரு செய்யுளின் இரண்டாவது வரியின் இறுதிச் சொல் குற்றாலம் என்று முடிகிறது. இதே போன்று நான்காவது வரியின் இறுதிச்சொல் 'நன்னகர்' என்று வருகிறது. எனவே, திருக்குற்றாலத்திற்குக் 'குற்றாலம்' என்னும் பெயருடன் 'நன்னகர்' என்னும் பெயரும் முக்கியத்துவம் பெற்றிருந்தது ஞானசம்பந்தர் காலத்து என்பது தெளிவாகின்றது.

திருக்குறும்பலாப் பதிகத்தை,

"திருந்த மதிசூடித் தெண்ணீர் கடைக் கரந்து தேவிபாதம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் ஏலங் கமழ் சோலை யின வண்டி யாழ்செய்
குருந்த மண நாறுங் குன்றிடஞ் சூழ் தண் சாரற் குறும்பலாவே"

என்று திருஞானசம்பந்தர் தொடங்கியுள்ளார்.

திருக்குற்றாலப் பதிகத்தில் இல்லாத பக்திச் சுவை திருக்குறும்பலாப் பதிகத்தில் விஞ்சி நிற்கிறது.

"பால் வெண்மதிசூடிப் பாகத்தோர் பெண்கலந்து பாடிபாடிக்
காலனுடல் கிழியக் காய்ந்தாரிடம் போலுங் கல்சூழ் வெற்பில்"

"நீற்றே துதைந்திலங்கு வெண்ணூலர் தண்மதியம் நெற்றிக் கண்ணர்
கூற்றேர் சிதையக் கடிந்தரரிடம் போலுங் குளிர் சூழ் வெற்பில்"

"ஏந்து தினி திண்டோள் ராவணனை மால்வரைக் கீழடர வூன்றிச்
சாந்தமென நீறணிந்த சைவரிடமும் போலுஞ் சாரற் சாரல்"

என்று பாடியுள்ள ஞானசம்பந்தர் பாடல்கள், ஞானசம்பந்தர் வாழ்ந்த நூற்றாண்டில் திருக்குற்றாலத்தில் மரவழிபாடும் இருந்திருக்க வேண்டும் என்று கருத வாய்ப்புள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார்

சுந்தர மூர்த்தி நாயனாரும்,

"கொங்கிற் குறும்பிற் குரக்குத்தளியாய் குழகா குற்றலா" என்று பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் (ஏழாம் நூற்றாண்டு)

திருநாவுக்கரசுநாயனார் அருளிய திரு அங்கமாலை
"உற்றாரா ருளரோ - உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத் துறை கூத்தனல் லானமக்
குற்றா ராருள ரோ"

என்று பாடுகிறார்.

"கொடுமுடி குற்றாலங் கொள்ளம் புதூர்"
(சேத்திரக் கோவை)
"குழலார் கோதை வரைமார்பிற் குற்றாலத் தெங் கூத்தனை"
(4. தி.மு. 15. பதிகம். 7 பா)
"கொல்லியான் குளிர் தூங்கு குற்றாலத் தான்"
(5-34-1)
"குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக் கூத்தாட
வல்லானை" - *6-1-9*
"கொங்கிற் கொடுமுடியார் குற்றாலத்தார்"
-6-2-1
"செல்வப்புனற்கெடில வீரட்ட முஞ் சிற்றேமமும்
பெருந்தண் குற்றாலமும்" *-6-7-1*
"கோடி காவுங் குரங்கணின் மட்டமுங் குறும்பலாவும்"
6-7-8
"கொங்குவார் மலர்க்கண்ணிக் குற்றாலன் காண்"
6-24-4

"குரவங் கமழுங் குற்றாலர் தாமே"
6-36-3
"குற்றாலங் கோகரணம் மேவினானை
6-43-2
"குற்றால மேய கூத்த"
6-44-6
"குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தன் கண்டாய்"
6-81-4

என்றெல்லாம் திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

"உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்று மனமுருகிப் பாடுகின்றார்.

மாணிக்கவாசகரின் திருக்கோவையாரில் திருக்குற்றாலத்தைப் பற்றி இரு பாடல்கள் உள்ளன.

"எழில் வாயின வஞ்சியும் விரும்பும் மற்றிறை குறை யுண்
டழல்வா யவிரொளி யம்பலத் தாடு மஞ் சோதியந் தீங்
குழல்வாய் மொழி மங்கை பங்கன் குற்றாலத்துக் கோலப் பிண்டிப்
பொழில் வாய் தடவரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே"

என்றும்

"வழியும் அது அன்னை யென்னின் மகிழும் வந்தெந்தையும் நின்
மொழியின் வழி நிற்குஞ் சுற்ற முன் னேவய மம்பலத்துக்
குழிஉம்ப ரேத்து மெங்கூத்தன் குற்றால முற்றும் மறியக்
கெழியும்ம வேபணைத் தோள் பலவென்னோ கிளக்கின்றதே"
என்றும் பாடியுள்ளார்.

கபிலர் பாடிய சிவபெருமான் திருவந்தாதியில் திருக்குற்றாலம் பற்றி மூன்று பாடல்கள் உள்ளன.

"கோப்பாடி யோடாதே நெஞ்ச மொழிக் கூத்தன்
கோப்பாடிக் கோகரணங் குற்றாலங் - கோப்பாடிப்
பின்னைக்காய் நின்றார்க் கிடங்கொடுக்கும் பேரருளான்
பின்னைக்காம் எம்பெருமான் பேர்"

"கூற்றும் பொருளும் போற் காட்டியென் கோல் வளையைக்
கூற்றின் பொருள் முயன்ற குற்றாலன் - கூற்றின்
செருக்கழியச் செற்ற சிவற்கடிமை நெஞ்சே
செருக்கழியா முன்னமே செய்"

"சூதொன் றுனக்கறியச் சொல்லினேன் நன்னெஞ்சே
சூதன் சொலற்கரிய சோதியான் - சூதின்
கொழுந்தேன் கமழ்சோலைக் குற்றாலம் பாடிக்
கொழுந்தே இழந்தேன் குருகு"

என்றெல்லாம் பாடி மகிழ்ந்துள்ளார்.

பட்டினத்தார்

பட்டினத்தார் அவர்கள்

" காலன் வருமுன்னே கண்பஞ் சடை முன்னே
பாலுண் கடைவாய் படு முன்னே - மேல் விழுந்தே
உற்றார் அழு முன்னே ஊரார் சுடு முன்னே
குற்றாலத் தானையே கூறு"

என்று பாடினார்.

"கூறுமின் தொண்டர் நெய்த்தானந்துருத்தி அம்பேர்"
என்று திருஏகம்பமுடையார்திருவந்தாதியிலும் குற்றாலம் இடம் பெறுகிறது.

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர், திருப்புகழில் நான்கு பாடல்கள் திருக்குற்றாலத்தைப் பற்றிப் பாடியுள்ளார்.

(1)

வேகத்திற் கேள்வியிலாதது பேதத்திற் காணவெரணாதது கதியாளர்
வீசத்திற் தூரமில்லாதது
வீதித்துத் தேடரிதானது ஆதித்தற் காயவொணாதது சுடர்கானம்
வேகத்துத் தீயில் வெகாதது
வாதத்துக் கேயவியாதது காதத்திற் பூவியலானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறு
மாயத்திற் காயமதாசில தீதர்க்குத் தூரமதாகிய
வாழ்வைச் சற் காரமதா இனி யருள்வாயே
காதத்திற் காயமதாகும தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணார்
காணப்பட் டேகொடு நோய்கொடு வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே
கோதைப்பித் தாயொருவே டுவ ரூபைப்பெற்றே வனவேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே
கோதிற்பத் தாரொ டுமாதவ சீலச்சித்தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமாளே.

(2)

ஏடுக்கொத் தாரலர் வார்குழ
லாடப்பட் டாடை நிலாவிய
ஏதப் பொற் றோள்மிசை மூடிய சுரமாதர்

ஏதத்தைப் பேசுப ணாளிகள்
வீசத்துக் காசைகொ டாடிகள்
ஏறிட்டிட் டேணியை வீழ்வீடு முழுமாயர்

மாடொக்கக்கூடிய காமுகர்
மூழ்குற்றுக் காயமொ டேவரு
வாயுப்புற் சூலைவி யாதிய் ளிவை மேலாய்

மாசுற்றுப்பாசம்வி டாசம
னூர்புக்குப் பாழ்நர கேவிழு
மாயத்தைச்சீ வியு னாதர வருள்வாயே

தாடுட்டுட் டூடுடு டீடிமி
டுடுட்டுட் டுடுடு டாடமி
தானத்தத் தானத னாவென வெகுபேரி

தானொத்தப் பூத பசாசுகள்
வாய்விட்டுச் சூரர்கள் சேனைகள்
சாகப்பொற் றோகையி லேறிய கதிரோனே

கூடற்கச் சாலைசி ராமலை
காவைப் பொற் காழிவெ ளூர்திகழ்
கோடைக்கச் சூர் கருவூரிலு முயர்வான

கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக் குற்றால முலாகிய பெருமாளே.

(3)

முத்தோ லைதனைக் கிழித்தயி
லைப் போரி கலிச்சிவத் துமு
கத்தா மரையிற் செருக்கிடும் விழிமானார்

முற்ற திளகிப் பணைத் தணி
கச்சார மறுத்த நித்தில
முத்தார மழுத்து கிர்க்குறி யதனாலே

வித்தாரக வித்திறத் தினர்
பட்டோலைநி கர்த்திணைத் தெழு
வெற்பான தனத்தில் நித்தலு முழல்வேனோ

மெய்த்தேவர்து தித்தி டத்தரு
பொற்பார் கமலப்ப தத்தினை
மெய்ப்பாகவ ழுத்திடக்ருபை புரிவாயே

பத்தான முடிதத்த லைக்குவ
டிற்றாட வரக்க ருக்கிறை
படாவி விடச் செயித்தவன் மருகோனே

பற்பாசன் மிகைச் சிரத்தைய
றுத்தா தவனையச்சி னத்துறு
பற்போக வுடைத்த தற்பரன் மகிழ்வோனே

கொத்தார் கதலிப் பழக்குலை
வித்தார வருக்கை யிற்சுளை
கொத்தோடு திரக்கு தித்தெழு கயலாரங்

கொட்டா சுழியிற் கொழித்தெறி
சிற்றாறு தனிற் களித்திடு
குற்றால ரிடத்தி லுற்றருள் பெருமாளே

(4)

சீசிமுப்புரக் காடு நீறெழச்
சாடி நித்திரைக் கோசம் வேறுச்
சீவன் முத்தியிற் கூடவே களித தநுபூதி

சேரஅற்புதக் கோல மாமெனச்
சூரியப்புவிக் கேறி யாடுகச்
சீலம்வைத் தருட்டேறி யேயிருக் கறியாமற்

மாசம்விட்டு விட்டோடி போனதும்
போது மிப்படிக் காகிலேனினிப்
பாழ்வழிக் கடைக்காமலே பிடித் நடியேனைப்

பாரடைக் கலக்கோல மாமெனத்
தாபரித்து நித்தார மீதெனப் +
பாதபத்ம நற்போதை யேதரித் தருள்வாயே

தேசில் துட்டநிட்டூர கோதுடைச்
சூரைவெட்டி யெட்டாசை யேழ்புவித்
தேவர் முத்தர் கடகேதமே தவிர் தருவோனே

சீர்படைத் தழற்சூல மான்மழுப்
பாணிவித் துருப்பாத னோர் புறச்
சீர்திகழ்ப் புகழ்பாவை யீனபொற் குருநாதா

காசிமுத்த மிழ்க்கூட லேழ்மலைக்
கோவலததி யிற்கான நான்மறைக்
காடுபொற்கிரிக் காழி யாரூர் பொற் புலிவேளூர்

காள அத்தியப்பால் சிராமலைத்
தேசமுற்று முப்பூசை மேவிநற்
காமகச்சி குற்றாலமேவு பொற் பெருமாளே

திரிகூடராசப்பக் கவிராயர்

மேலகரத்தைச் சார்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் அவர்கள் 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். திருக்குற்றாலத் தல புராணமியற்றியவர். 14 நூல்கள் இயற்றியுள்ளார். அவை அனைத்தும் திருக்குற்றாலத்தின் பெருமையினையே பேசுகின்றன.

அவை:

1. திருக்குற்றாலக் குறவஞ்சி.

2. திருக்குற்றாலத் தலபுராணம்.
3. திருக்குற்றால மாலை.
4. திருக்குற்றால சிலேடை.
5. திருக்குற்றால யமகவந்தாதி.
6. திருக்குற்றால நாதர் உலா.
7. திருக்குற்றால ஊடல்.
8. திருக்குற்றாலப் பரம் பொருள் மாலை.
9. திருக்குற்றாலக் கோவை.
10, குழல்வாய்மொழி கலிப்பாமாலை.
11. கோமள மாலை.
12. வெண்பாவந்தாதி.
13. பிள்ளைத்தமிழ்.
14. நன்னகர் வெண்பா.

திரிகூடராசப்பக் கவிராயர் அருள்

திரிகூடராசப்பக் கவிராயர் அவர்கள் திருக்குற்றாலநாதருக்கு நாள்தோறும் உழவாரப் பணி செய்து வந்த போது திருக்குற்றாலத்து இறைவன் ஒரு முனிவர் வேடந்தாங்கி இவர் முன் தோன்றி "நாக்கை நீட்டு" என்று கட்டளையிட இவர் பயந்து நாக்கை நீட்டவும், முனிவர் இவர் நாக்கில் பிரணவ மந்திரத்துடன் திரு ஐந்தெழுத்தை எழுதி 'என்னைப்பாடு' என்று ஆணையிட்டு மறையவும், இறைப்பணியாற்றி வரும் கவிராயர் மெய்மறந்து இறைவனைப் பாட ஆரம்பித்தார்.

கவிராயர் அவர்கள் இயற்றிய பாக்களுக்குப் பொருள் அறியா மத்தள் மயக்கம் கொண்டு இவருக்கும் பித்த நோய் பிடித்து விட்டதென்று அதிகாரிகளிடம் முறையிட அவர்களும் அவர் பெருமையறியாமல் பித்தனென்றே முடிவு கட்டி காலிற்றளை பூட்டிச் சிறைப்படுத்தினர். உடன் அதிகாரிகள் உன் காலில் பூட்டப்பட்ட விலங்கு தெரிக்கப் பாடு என்று கேலி செய்ய, கவிராயர் அவர்கள் பாடவும் உடனே விலங்கு இரண்டு துண்டுகளாய் தெரித்து விட்டது. ஆணவ முற்றிருந்த அதிகாரிகள் இவர் வித்தைக்காரரோ என்று ஐயமுற்று, பக்கத்தில் நின்ற மரம் பட்டுப் போகப் பாடு என்று சொல்ல இவர் பாடியவுடன் மரமும் பட்டுப் போயிற்று.

அதிகாரிகள் மதி மயங்கினர். இதற்குள், திருக்குற்றாலத்திறைவன், சொக்கம்பட்டி சின்னஞ்சத்தேவர் கனவிற் தோன்றித் தன்னடியாராகிய திரிகூடராசப்பருக்குற்ற இடுக்கணைக் களையத் திருவாய் மலர்ந்தருளவும், உடனே அவர் வந்து அடியவரை விடுவித்தார் என்ற செய்திகள் மேலகரம் வாழ் மக்களிடம் பேசப்படுகின்றன.

திரிகூடராசப்பக் கவிராயர் பெற்ற பட்டங்களும் பரிசுகளும்

இறைவன் கட்டளைக்கிணங்கி சொக்கம்பட்டிக் குறுநிலமன்னர் சின்னணைஞ்சாத்தேவர் மேலகரம் சென்று கவிராயர் அவர்களுக்காக மூன்று வீடுகள் கட்டி, வேண்டிய பொருள்களும் நிலங்களும் அளித்தார். இம் மூன்று வீடுகளில் ஒன்று ‘நடு வீடு’ என்றழைக்கப்படுவது தெற்கே பார்த்த வீடு. இந்த வீட்டில் கவிராயர் அவர்கள் குலத்தில் பிற்காலத்தில் துறைசை மகா சன்னிதானமாகிய சுப்பிரமணிய தேசிகர் (மகா சந்நிதானமாக இருந்த காலம் 1869-1888) அவதரித்தார். மற்ற இரண்டு வீடுகளும் அடுத்து மேற்கே வடக்கே பார்த்த இரட்டை வீடுகள். இதில் ஆசிரியர் வழி வந்தவர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

மேலகரத்தில் வடக்குத் தோட்டம், கிழக்கே நந்தவனத் தோட்டம், கீழ்த்தோட்டம், நன்னகரம், மாதளைவிளை, புளியந்தோப்பு, மதகடி நந்தவனத் தோட்டம், குற்றாலப்பேரி விளை பாட்டப்பத்தில் நன்செய் நிலங்கள் முதலியன சொக்கம்பட்டி மன்னரால் கவிராயர் அவர்களுக்கு அளிக்கப்பட்டவையாகும்.

தென்னாட்டை ஆண்டு வந்த முத்து விஜயரெங்க சொக்கநாத நாயக் கரவர்கள் கவிராயர் அவர்களின் கவிதைகளைக் கண்டு களித்துப் பற்பல மரியாதைகள் செய்து போற்றுவராகி, திருக்குற்றாலக் குறவஞ்சியென்ற நூலை அரங்கேற்றுவித்துப் பற்பல சிறப்புச் செய்து, முற்றூட்டாக நன்செய் நிலமும், சன்னதி பிரபந்த வித்துவான் என்ற பட்டமும் கொடுத் துள்ள செய்தி தாமிர சாஸனம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

“சாலிவாகன சகாப்தம் 1640-க்குச் செல்லா நின்ற கொல்லம் 891-ம் ஆண்டு தைமீ 11உ ராஜமானிய ராஜஸ்ரீ முத்து விஜயரெங்க சொக்கநாத

நாயக்கரவர்களோம், திருக்குற்றாலம் ராஜப்பன் கவிராஜருக்குப் பொறுப்புப் பட்டயம் எழுதிக் கொடுத்தபடி சுவாமி திருக்குத்தாலநாத சுவாமி பேரில் குறவஞ்சி நாடகம் பாடி அரங்கேத்தினதற்கு, மேலச் செண்பகக்காவில் கருப்பு கட்டி ஊத்து மேட்டில், கல் 12ல் சங்கிலி அளவு ஹீஙவயும் ருஉயும் விட்டுக் கொடுத்தபடியினாலே பொறுப்புகளுக்கு தீர்வை வீதம் கொடுத்து கையாடிக்கொண்டு சன்னதி பிரபந்த வித்துவானாக நடந்து வருவாராகவும். இந்த நிலத்துக்கு வேற வரி நாட்டுச் செலவு, காவல் கூலி போர் நெல் கொடுக்க தேவையில்லை என்று கட்டளையிட்டபடியினாலே இந்தப் படிக்கு கையாடிக் கொள்ளவும்'' என்று எழுதி அக்காலத்து முத்திரையும் போடப்பட்டிருக்கிறது. இப்பட்டயத்தின் காலத்தைக் கொண்டு கவிராயர் அவர்கள் கி.பி.1716க்கு முற்பட்டவர் எனத் தெரிகிறது.

குற்றாலத்தின் பெருமை

திருக்கூடராசப்பக்கவிராயர் அவர்கள் பாடிய அனைத்துப் பாடல்களும் குற்றாலத்தின் பெருமை பேசுவனவாக உள்ளன.

“கீத யாழிசைக் கின்னரர் கானமும்
காதல் விஞ்சையர் பண்ணிசைக் கானமும்
சீத மால்வரைத் தீங்குரற் கானமும்
வேத கானமு மிக்கது திக்கெல்லாம்”

“சிவமது கங்கைத் தானஞ் சேர்ந்தனர் வானோர் சித்தர்
மவுனர் செண்பகத்த டாகம் வதிந்தனர் புவியின் மாந்தர்
தவவட வருவித் தானஞ் சார்ந்தன ஏதனா வவ்வூர்
புவமைந் தரமு மேலாஞ் சவர்க்கமும் பொருவிற் றன்றே”

என்றெல்லாம் திருக்குற்றாலத் தலபுராணம் போற்றிப் பாடுகின்றது.

“கிளைகளாய்க் கிளைத்த பலகொப்பெலாஞ் சதுர் வேதங் கிளைக ளீன்ற
களையெலாஞ் சிவலிங்க சொரூபமாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை வேண்டு”
என்று திரிகூட மலையின் சிறப்பையும்

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
சமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின் வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே

முழங்கு திரைப் புனலருவி கழங் கென முத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றசைக் கொண்டோடும்

என்று குற்றால மலைவளத்தையும்,

நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
கழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடித்துக் காண்பது கொல்லையின் முல்லை
யோங்கக் காண்பது மங்கல பேரிகை
யீச ராரிய நாடெங்கள் நாடே"

என்று குற்றால நாட்டு வளத்தையும் திரிகூடராசப்பக் கவிராயர் பாடி மகிழ்ந்துள்ளார்.

சுப்பிரமணிய முனிவர்

தொட்டிக் கலை மதுரகவி, சுப்பிரமணிய முனிவர் திருக்குற்றாலம் பற்றிப் பாடியுள்ளார். இவர்

"நிரந்தர நிராமய நிராலம்ப நிர்க்குண
  நிரேதுகா ருண்ய நிமலா
பரம்பர திகம்பர பராபர க்ருபாகர
  பரப்பிரம சிற்சொ ரூபனே
யிரந்தவ ரிதம்பெற யிரங்கியு ளிருந்தரு

ளிரும்பரிபு ரச்சர ணனே
திரம் பெறு சுகந்தரு சிதம்பர நடேசனே
தில்லையம் பலவாணனே”

என்று பாடியுள்ளார்.

இவர் “திருக்குற்றாலச் சித்திர சபைத்திருவிருத்தம்” வழி சித்திர சபையின் பெருமையினைப் பாடியுள்ளார்.

புத்தமு தருந்திடும் புத்தேளி ருலகிற்
பொருந்துதிரி கூட கிரியிற்
புதுமதி யுடைந்தமுத மொழுகிவழி கின்றெனப்
பொங்குசிவ மது கங்கையின்
றத்துமரு வித்திரள் கொழித்துவரு நித்திலந்
தண்சித்ர நதிய ருகெலாந்
தவளச் சுடர்ப்படலை யிருளகல நிலவிடத்
தண்குமுதம் வாய்தி றக்கு
நத்துலவும் வாவிசூழ் நன்னகர்க் குற்றால
நற்குறும் பலவி னுறைவோ
னாதங் கடந்துபா வேதங் கடந்தவொரு
நடுவெளியின் மறைமு றையிடச்
சித்திரப் பொற்றொடிச் சிற்றிடைச் சத்திநற்
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவரதனே.
நானீண்டு சுழல்கின்ற யோனிவகை யெண்பத்து
நான்கு நூ றாயி ரமெனா
நண்ணும் வழி யெல்லா மடைத்தெனக் குய்யுமொரு
நல்வழி தெரித்த பெருமான்
வானீண்ட சுருமந்தி விண்டமது ரப்பலா
வண்சுளை யருந்தி யோடி
மாங்கனி யுதிர்த்திடவு முடைமடையி னிற்சாறு
வாரியாய் வருதல் காணூஉக்

கானீண்ட செண்பகக் காவூடு திரியுமுது
களிறினம் பிடியினுக்குக்
காதலிற் றிரடுளைக் கையால் முகந்தூட்டு
காட்சியின் வளம்பொ லிந்த
தேனீண்ட வருவிசொரி திரிகூட வரையிடைச்
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிந்தவனே.

ஈவதுஞ் சகலபுவ னப்பரப் பெல்லாம்பி
னுறுதியி லொடுக்கு வது முன்
னிலகுதிரு விளையாட் டெனச் சற்று முணராத
விருண்மனக் கசட ரொடுசேர்ந்
தாவது மகிழ்ந்துவிடுவது மான வுடலெடுத்
தன்றுமுத லின்று காறு
மலக்கழிந் தேனைப் பெருங்கருணை வைத்தாண்ட
வற்புதம தென் சொல்லுகேன்
கூவிய குறச்சிறுமி மாரெலாம் வயிரங்
கொழித்துக் குவித்து மலையாக்
குதிகொண்ட வடவருவி முழ்கிவிளை யாடுதிரி
கூடவரை யிற்குட முழாத்
தேவதுந் துபிணையொலியி னண்டமுக டுடைபடச்
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவ ரதனே.

அரக்கெறி முருக்கல ரிதழ்க் கொடி நுகப்பினா
ராசைக் கடற்குண் மூழ்கி
யறியாமை மேலிடச் செம்மாந் திளைக்குமெனை
யாண்டகரு ணைக்கென் செய்கேன்
மருக்கணிமருப்பவர் நெருப்பன குருக்காந்தண்
மலர்மிசைச் சொரிய வறுகால்
வண்டின மருண்டேகி மாதங்க மதநீரை

வாய்மடுத் துண்டு கண்டோர்
விருப்புறு களைக்குவளை மெல்லிதழ்த் தவிசேறி
விரிசிறைப் பேட்டி னோடு
மென்குறிஞ் சிப்பண் பயின்றுகண் டுயில்கொள்ள
மேவுதிரி கூட வெற்பிற்
திருக்கடைக் கண்ணருள் சுரந்துயிர் களைப் பெற்ற
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவ ரதனே.

சூலுண்ட கொண்டலந்த திருமேனி வண்டுழாய்த்
தொடையவனு மயனு மறியாத
துரியங் கடந்தபா மானந்த வெள்ளந்
துளைந்தாட லென்று பெறுவேன்
கோலுலவு விற்கரச் செங்கட் கருங்குறவர்
கூவிளியி னோனச கேட்டுக்
குதிகொண்ட மதவருவி சிந்திடப் பிடியினொடு
கொலையானை வெருவி யோடி
வாலுளைக் கோளரிப் பேழ்வாய் முழைப்புக
வயக்குருளை யிடிமுழக்கால்
வண்பொங்கு மாகடலில் வான்மீ னதிர்ந்துகும்
வளங்கொடிரி கூட வெற்பிற்
சேலுலவு செந்தா மரத்திரு முகந்தன்னை
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலித்தரத்
திருநடம் புரிவ ரதனே.

ஓக்கலைப் பொரு ளைமனை மக்களைப் பற்றியே
யுழிதருங் கொடிய னேனை
யுபயபரி புரசரண மலரளித் தாட்கொண்ட
வுன்னருட் கொப்பு முளதோ
மைக்கட் குறச்சிறுமி மாரெலாம் வெயிலுமிழு
மரகதப் பாறை நடுவண்

மதகரி மருப்பினாற் செந்தினை யிடித்துமது
வாக்குபு பிசைந்து சூட்டுக்
குக்குடக் கொடியுடைய முருகவேண் முன்றிலிற்
கொடுவந் தடுத்து வளருங்
குலமயி லினங்கள் விட் டிரவுபக லிடையறாக்
குரவைவிளை யாட்ட யறுந்
திக்கெட்டு நிறைபுகழ்த் திரிகூட வரையிடைச்
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவ ரதனே.

கற்புரையு நெஞ்சக் கடும்பாவ மூடரைக்
காரியோடு பாரி யெனவுங்
காரென்று மணியென்று சங்கென்று கோவென்று
கற்பதரு வைந்தென் றுமே
பற்பல பிதற்றியே பாழுடற் கிரைதேடு
பாவியேன் றன்னை யென்னோ
பங்கயச் சேவடிகள் பாடும் படிக்கருள்
பதித்தெடுத் தாண்ட கருணை
பொற்புடைய கற்றைப் புதுத்தோகை நாகம்
புழைக்கையிற் கொண்டலகிடப்
பொறியரவ மாணிக்க மணிவிளக் கேத்த
போதனர்கள் யோகி ருக்குஞ்
சிற்பரம ரகசியத் திரிகூட வரையிடைச்
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடனம் புரிவ ரதனே.

கள்ளவிழி வள்ள முலை வெள்ளை நகை நள்ளிருட்
கற்றைக் கருங்கு ழலினார்
கலவி குடைந்துபன் னரகிற் படர்ந்து பின்
கருவுட் கிடந்து சுழல்வேன்
பள்ளமடை வெள்ளமென வுள்ளுருகி யன்பு நீர்

பாய்த்தியிரு வினைபழுக்கப்
பக்குவ முதிர்ந்து சிவ புண்ணயி நிரம்பிநின்
பாதபது மம்பெறு வனோ
துள்ளுமிர லைக்கன்று வல்லியப் பறழினொடு
துயல்வரு கறிக்கொடியெலாந்
துழைத்துழக் கிச்சினை யசோகத்தி னீழலிற்
றுயிலுமுக் கூடவரையிற்
தெள்ளமுத மொழியுடைத் துடியிடைப் பிடிநடைச்
சிவகாம வல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவரதனே.

உரையாடு மறைவழியை யுற்றுச் சிவாகமத்
துண்மையினை நம்பி யொழுகா
வுன்மத்த மேமிகுந்த தெனதென்றும் யானென்றும்
மொன்றிய செருக்கின் வழியாப்
புரையாடு மிருவினைப் போகம் புசித்து புசித்து நான்
பொய்ச்சடல மினியெடாமற்
பூரண சுகோதயப் பெருவாழ் வெனக்கருள் செய்
பொன்னம் பலத்தி றைவனே
வரையாடு தாவிமே யும்பசுங் கொடிய லது
மைக்கருங் கொடிய ணுகுறா
மகிமைசேர் திரிகூட வரையிற் சுயம்பைந்து
மன்னுகுற்றால மதனிற்
றிரையாடு கடல் வந்த திருவாணியைத் தந்த
சிவகாமவல்லி மகிழச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவரதனே.

ஆயிர மூங்கங்கை யலையெறிந் தாடமல
ராடகக் கொன்றையாட
வரவாட வாலவெண் பிறையாட வெண்டலைக
ளாடவெள் ளறுகு மாட
ஞாயிறு தயம்பொரு சடாமகுட மாடவளர்

நகைமுகக் கருணை யாட
நாகருண்ட டலமாட வதளாட வொருகையி
னாகவெண் டுடியு மாட
மேயவொரு கையிலெரி யாடிட வமைத் தொருகை
வீசியொரு கையா டவோர்
வீரவொண் கழலாட வுயிர்வர்க்க மானந்த
வெள்ளந் திளைத்தாடவே
சேயிகழ்ச் சீறடிச் சிவகாமி யம்மையிரு
திருநயன வண்டு மாடச்
சித்ரசபை தன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவ ரதனே.

சிதம்பர முனிவர்

காஞ்சிபுர சிதம்பர முனிவர் இயற்றிய க்ஷேத்திரக் கோவைபிள்ளைத் தமிழ் திருமால் சிவபிரானாக மாறிய தலவரலாற்றினைக் கூறுகின்றது.

குரு வாயகத்திய ருன்னைப் பணிந்திடக்
கூடும் வைணவர் நாணவே
குளிரச் சித்திரா நதிக் குற்றாலமாகு திரி
கூடா சலப் பதிக்குள்
மருவார் துழாய் மௌலியுஞ் சங்கு சக்கரமும்
மணி வண்ணமுங் காணவே
வளர்நெடிய மால்வடிவு குறுகு குறுகென்றே
மகாலிங்க வடிவமாக்கி
பெருவான மதிநதி முடிக்குஞ் சடாடவிப்
பெம்மானை யம் மானிடம்
பிரியாத எந்தை தனையைந் தா னனத்தனைப்
பெருமானை யர்ச்சி யென்றே
திருவாய் மலர்ந்தருள் செய் தென்னிலஞ்சிக்குமர
செங்கீரை யாடியருளே
சிறியனே னறிவினுட் குடிகொண்ட தெய்வமே
செங் கீரையாடி யருளே"
என்று பாடியுள்ளார்.

வரலாற்றுச் செய்திகள்

கி.மு. 500 இல் தொடங்கி கி.பி. 300 வரை உள்ள காலத்தைச் சங்க காலம் என்பர். இச்சங்க காலத்தில் பல பாண்டிய மன்னர்கள் வாழ்ந்தார்கள் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். சங்க காலப் பாண்டியர்களுள் சிறந்தவனாகக் கருதப்படுபவன் பாண்டியன் நெடுஞ்செழியன். இவன் கடைச்சங்ககாலத்தைச் சார்ந்தவன்.

சங்ககால முடிவிற்கும் பல்லவர் காலத் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலத்தைக் களப்பிரர் இடையீட்டுக் காலம் என்பர். சங்கத்தின் கடைசி மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி; அவனுக்குப் பின் தமிழகத்தை 300 ஆண்டுக் காலம்(கி.பி. 250 முதல் 550 வரை) களப்பிரர்கள் ஆண்டு வந்தனர். வேள்விக்குடிப் பட்டயத்திலிருந்து களப்பிரர் ஆட்சி கி.பி. 575இல் பாண்டியன் கடுங்கோனால் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது என்று தெரிகிறது.

கடுங்கோவின் மகன் மாறவர்மன் அவனி சூளாமணி (கி.பி. 600-625) தந்தைக்குப் பின் ஆட்சி பீடத்தில் அமர்ந்தான். இவன் காலம் முதல் பாண்டியர்கள், ‘மாறவர்மன்’, ‘சடையவர்மன்’ என்ற பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து வருவாராயினர். மாறவர்மன் என்ற பட்டத்தை முதலிற் புனைந்து கொண்டவன் இவ்வேந்தனேயாவான். இவன் மகன் செழியன் சேந்தன், ‘சடையவர்மன்’ என்ற பட்டம் புனைந்து கி.பி. 625 முதல் கி.பி. 640 வரையில் பாண்டி நாட்டில் அரசாண்டான். இவன் மதுரையை ஆண்ட போது யுவான்சுவாங் காஞ்சிக்கு கி.பி. 640இல் வந்ததாக மதுரைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. (Ins. 358 of 1959-60 - Introduction - P.24 India)

செழியன் சேந்தன் இறந்த பின்னர் அவனுடைய புதல்வன் அரிகேசரி என்பவன் கி.பி. 640 ஆம் ஆண்டில் பட்டம் எய்தினான். இவன் மாறவர்மன் என்ற பட்டம் புனைந்தான். இவனைச் சுந்தரபாண்டியன் எனவும், கூன் பாண்டியன் எனவும் திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. இவன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு உயர் நிலையை அடைந்தது. இவன் சேரர்களையும், பரவரையும், குறுநில மன்னர்கள் சிலரையும், பாழி, நெல்வேலி, செந்நிலம்

முதலான இடங்களில் வென்றவன் என்றும், ஒரு பகலிற் சோழர்க்குரிய உறையூரைக் கைப்பற்றினான் என்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. சோழனை வென்ற பிறகு, அம்மன்னனின் மகள் மங்கையர்க்கரசியாரை மணந்துள்ளான்.

மாறவர்மன் அரிகேசரி என்பன் கி.பி. 670 ஆம் ஆண்டில் சிவபெருமான் திருவடி நிழல் எய்தவே, அவன் மகனாகிய கோச்சடையன் ரணதீரன் அரியணை ஏறினான். இவனைச் செங்கோற்றென்னன் எனவும், வானவன் எனவும், செம்பியன் எனவும், மதுரகருநாடகன் எனவும், கொங்கர் கோமான் எனவும், மன்னர் மன்னன் எனவும் வேள்விக்குடிச் செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. இச்சிறப்புப் பெயர்களை நோக்கும் போது இவன் சேர, சோழ நாடுகளையும், கருநாடகத்தையும் வென்றுள்ளான் என்பது தெரிகின்றது.

கோச்சடையன் ரணதீரன் இறந்த பிறகு, அவன் மகன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் பட்டத்திற்கு வந்தான். இவன் முதலாம் இராசசிம்மன் எனவும் வழங்கப்பட்டான். இவன் கி.பி. 710 - 765 வரை ஆட்சி செய்தான். இவன் காலத்தில் சோழநாடு பல்லவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவன் காலத்தில் நந்திவர்மபல்லவன் தொண்டை மண்டலம், சோழ நாடு ஆகியனவற்றை ஆண்டு வந்தான்.

அரிகேசரி பராங்குச மாறவர்மன் சிவபக்தன். அந்தணர்களைப் போற்றி நிலங்கள் வழங்கினான். இம்மன்னனின் கல்வெட்டுகள் அம்பாசமுத்திரம், விஜயநாராயணம், திருப்புடைமருதூர், கோயில்குளம், சீவலப்பேரி, கோட்டைக்கருங்குளம் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.

நெடுஞ்சடையன் பராந்தகன்

இவன் காலத்து வட்டெழுத்துக் கல்வெட்டுத் திருக்குற்றாலநாதர் திருக்கோயிலின் முதல் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் உள்ள ஒரு தூணில் காணப்படுகின்றது. தென்வர நாட்டைச் சார்ந்த திருக்குற்றாலம் என்ற குறிப்பு இருப்பதுடன் ஸ்ரீகுற்றாலம் என்று குற்றாலத்திற்கு ஸ்ரீ என்னும் அடை கொடுத்து எழுதப்பட்டுள்ளது. (A.R.E. No. 416 of 1918 P.39)

இத்திருச்சுற்றிலேயே மற்றொரு தூணில் இவனின் 9ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று விளக்கு எரிப்பதற்கு எருமைகள் வழங்கப்பட்ட செய்தி வட்டெழுத்தில் உள்ளது. இக்கல்வெட்டில் தென்வட நாட்டைச் சார்ந்த திருக்குற்றாலத்திலுள்ள மகாதேவருக்கு அரை விளக்கு எரிப்பதற்கு மன்னி நாட்டு இடைவை என்னும் ஊரைச் சார்ந்த வாணிகன் புயலன்காட்டன் என்பவன் ஆறு எருமைகள் வழங்கினான்'' (A.R.E. No. 417 of 1918 P.39) என்று கூறுகின்றது. கோயிலுள்ள ஒரு விளக்கு எரிவதற்கு இருவர் தானம் செய்யும் மரபு இருந்திருக்கிறது என்பது தெரிகின்றது. இக்கல்வெட்டில் 'ஸ்ரீ', 'திரு' என்று மாற்றித் திருக்குற்றாலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இத்திருச்சுற்றிலேயே 3-ஆவது தூணில் 11-ஆம் ஆட்சி ஆண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுக் காணப்படுகின்றது. "தென்வர நாட்டைச் சார்ந்த நல்லூர் பாண்டிக்குடியிலுள்ள ஒரு வணிகன் அரை விளக்கு எரிய ஆறு எருமைகள் வழங்கினான். (A.R.E. No. 418 of 1918 P. 39) என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது.

நெடுஞ்சடையன் பராந்தகனுடைய புதல்வன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியன். இவன் கி.பி. 790-792 வரை இரண்டு ஆண்டுகள் ஆண்டான் மாறவர்மன் என்ற பட்டம் புனைந்து அரசாண்டான். இவனுடைய மகன் வரகுண மகாராசன். இவனுக்கு மாறன், சடையன் என்னும் பெயரும் உண்டு. இவன் ஆட்சிக் காலத்தில் மாணிக்கவாசகப் பெருமான் இருந்தனர். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அம்பாசமுத்திரம், தளபதி சமுத்திரம், கழுகுமலை, ஏர்வாடி என்ற ஊர்களில் இவனது ஆட்சியின் கல்வெட்டுகள் உண்டு. இவன் மகன் சீமாறன் சீவல்லவன் கி.பி. 835 ஆம் ஆண்டில் முடிசூடி ஆட்சி புரியத் தொடங்கினான். இவனுக்கு மாறவர்மன் என்னும் பட்டமுண்டு. இவன் மகன் வரகுணவர்மன், 'சடையவர்மன்' என்னும் பட்டமுடையவன். இவனை இரண்டாம் வரகுண பாண்டியன் என்றும் கூறுவர். இவ்வரகுணன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகவேள் திருவடிகளில் பெரிதும் ஈடுபாடுடையவன். இவன் அப்பெருமானுக்கு ஆண்டு முழுவதும் நாள் வழிபாடு நடத்துவதற்கு ஆயிரத்து நானூறு பொற்காசுகளை நிவந்தமாக வழங்கினான்.

சீமாற சீவல்லபனுடைய இரண்டாம் புதல்வன் பராந்தக வீர நாராயணன் கி.பி. 880 ஆம் ஆண்டில் அரியணை ஏறினான். தளவாய்புரச் செப்பேடுகள் இம்மன்னனுடைய ஏழாவது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டவை. இவன்

பல பிரமதேயங்கள், தேவதானங்கள் செய்து வந்தான். வைணவ சமயப் பற்றுடையவன். இவன் பட்டத்தரசி சேரகுல இளவரசி வானவன் மாதேவி என்பவள் ஆவாள். இவ்வரசியின் பெயராலேயே தான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊர் ஒன்று சேரன்மாதேவி என அழைக்கப்படுகிறது. பராந்தக வீரநாராயணன் மகன் இரண்டாம் இராசசிம்மன் (கி.பி. 900-920) இவன் சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளை வழங்கினான். இவன் காலத்தில் சோழ நாட்டில் ஆட்சி செலுத்திய சோழ மன்னன் முதலாம் பராந்தகன். பாண்டிய மன்னன் இரண்டாம் இராமசிம்மனுடன் முதல் பாண்டியப் பேரரசு முடிவடைந்து விடுகின்றது. இவன் தன் நாட்டை இழந்தான். இலங்கை அரசனிடம் தன் மகுடத்தையும் அரச சின்னங்களையும் வைத்து விட்டுத் தாய் வானவன் மாதேவியின் பிறந்த நாடாகிய சேர நாட்டிற்குச் சென்று தங்கி இருந்தான் என்று மகாவம்சம் கூறுகிறது.

சோழ மண்டலத்தில் கி.பி. 907இல் முடி சூடிக் கொண்ட முதற்பராந்த சோழன், அவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் 'மதுரை கொண்ட கோப்பர கேசரி' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளான். எனவே இரண்டாம் இராமசிம்மன் (கி.பி. 920) காலத்தில் பாண்டிய நாடு முதற்பராந்த சோழன் ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இவனது கல்வெட்டுக்கள் பாண்டிய நாட்டில் அதிகமாகக் கிடைத்துள்ளன.

முதற்பராந்தக சோழன் (கி.பி. 907-953) கல்வெட்டுக்கள் மொத்தம் பத்து குற்றாலநாதர் கோயிலில் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டினைத் தவிர மற்றனைத்தும் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களே.

"25 ஆடுகள் திருக்குற்றாலத்துத் தேவருக்கு நந்தா விளக்கிற்கு" வழங்கிய செய்தி உள்ளது.(A.R.E. No. 438 P. 40)

"26 பசுக்கள் குற்றாலத்துப் பெருமான் அடிகளுக்கு நந்தா விளக்கு தென் வரநாட்டு மாணிக் கிராமம் தர்மச் செட்டி என்ற சடையங்கனவயன் என்பவன் வழங்கினான்." (A.R.E. No. 439 P. 40)

"சூரிய கிரணத்தில் விளக்கு எரிப்பதற்காக தென்வர நாட்டைச் சார்ந்த கந்தன் இரவி என்பவன் குற்றாலம் கோயிலுக்கு நந்தா விளக்கிற்கு நிலம்

வழங்கியுள்ளான்." (A.R.E. No. 441 P. 41)

"களக்குடி நாட்டைச் சார்ந்த திருக்கமஞ்சர் என்னும் ஊரினின்றும் நந்தா விளக்கிற்குப் பணம் வழங்கப்பட்டுள்ளது." (A.R.E. No. 443 P. 41)

"திருக்குற்றாலத்துப் பெருமானுக்கு நந்தா விளக்கிற்காகப் பசுக்களும், ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன." (A.R.E. No. 444 P. 41)

"பராந்தக மன்னனால் திருக்குற்றாலம் கோயில் நந்தா விளக்கிற்குப் பொன் வழங்கப்பட்டது" (A.R.E. No. 445 P. 41)

"மால நாட்டைச் சார்ந்த வல்லபுரம் என்னும் கிராமத்தைச் சார்ந்தவன் நந்தா விளக்கிற்கு 6 எருமைகள் வழங்கினான்". (A.R.E. No. 447 P.41)

"கீழநல்லூர் உறத்தூக் கூற்றத்துத்தலைவன் இரண்டு விளக்குகள் தானம் செய்தான்." (A.R.E. No. 448 P.41)

போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பராந்தகனுடைய இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு அரையன் ஆதித்தனாகிய மூவேந்தப் பல்லவராயன் என்பவன் திருக்குற்றாலத்து இறைவனுக்கு நந்தா விளக்கு ஒன்று வைத்த செய்தியைத் தருகின்றது. இவனது மனைவியும் நந்தா விளக்கு ஒன்றைத் தானமாகக் கொடுத்துள்ளாள். (A.R.E. No. 442 P.41)

இம்மன்னனது 35-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இக்கோயிலில் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டின் மூலமாக இம்மன்னனது ஆட்சிக்காலம் முழுவதும் பாண்டி நாடு இவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்று கொள்வது பொருந்தும்.

முதலாம் பராந்தகனுக்கு இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், அரிகுலகேசரி, உத்தமசீலி என்ற மக்கள் இருந்தனர். பராந்தகன் இறந்த பிறகு கண்டராதித்த சோழன் (கி.பி. 955) ஆட்சிக்கு வந்தான். இவர்

பாண்டியர், இராட்டிரகூடர் தொல்லையைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. இவர் சிறந்த சிவபக்தர். தில்லைப் பெருமானிடம் சிறந்த பக்தியுடையவர். இவர் இறக்கும் போது, இவரது மகன் மதுராந்தகன் சிறுவனாக இருந்தமையால் அரிஞ்சயன் அரியணைஏறினான். இவன் இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் மகன் சுந்தர சோழன் (957 - 965) பட்டத்திற்கு வந்தான். இவனை இரண்டாம் பராந்தகன் என்றும் அழைத்தனர். இவனுடன் போர்ச் செயலுக்கு இவனுடைய மகன் ஆதித்த கரிகாலன் துணை நின்றான். சுந்தர சோழன் மதுரை கொண்ட ராஜகேசரி என்ற பட்டம் பூண்டான். 'வீர பாண்டியன் தலை கொண்டான்', 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்ற பெயர்களை ஆதித்த கரிகாலன் பெற்றான்.

சுந்தர சோழன் காலத்தில் சோழ நாடு விரிவடைந்தது. சுந்தர சோழன் ஆதித்தகரிகாலன் ஆகியோர் இறந்த உடன் இராஜராஜ சோழனின் சிறிய தந்தை உத்தம சோழன் (கி.பி. 970-985) பட்டத்திற்கு வந்தான். இச்சோழ மன்னனுக்குப் பின் முதலாம் இராஜராஜன் (கி.பி. 985-1012) பட்டத்திற்கு வந்தான். இவனுடைய கல்வெட்டு ஒன்று திருக்குற்றாலக் கோயிலில் காணப்படுகின்றது. ஆனால் இவனது கல்வெட்டு ஏதோ ஒரு காரணத்தால் சிதைவுறவே கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் மறுபடியும் அக் கல்வெட்டுப் படியெடுத்து எழுதப்பட்டிருப்பது இக்கோயில் திருச்சுற்றின் மேற்குச் சுவரில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு மிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியினைத் தருகின்றது. இம் மன்னனது காலத்தில் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டுக்களின் செய்திகளைத் தமிழ் எழுத்தில் மீண்டும் பொறிக்கும்படிக் கட்டளையிட்டுள்ளான். இராசராசன் தன் காலத்தில், திருக்குற்றாலம் கோயிலைத் திருப்பணி செய்து கல்வெட்டுக்களைப் புதுப்பித்துள்ளான் என்பது தெரிகின்றது. மீண்டும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'திருமகள் போல' என்று தொடங்குகிறது.

"ஈழமங்கலம் எனும் துணைக் கோட்டத்தில் விண்ணன்டை என்ற விக்ரம பாண்டிய நல்லூர் என்ற கோட்டூர் கிராமத்தைச் சார்ந்தவர் குற்றாலநாதர் கோயில் நந்தா விளக்கிற்கு நிலம் வழங்கினார்" என்னும் செய்தி இடம் பெறுகிறது. (A.R.E. No. 454 of 1918 P. 41)

இராசராசன் எப்பொழுதும் தன் ஆளுகைக்கு உட்பட்ட நிலங்களை அளந்து, ஒரே வகையான அளவுகள் நிலவ வேண்டும்; ஒரே வகையான அளவுகள் கையாளப் பட வேண்டும், என்ற எண்ணம் கொண்டவனாக இருந்தான். இக்கருத்தை நடைமுறைப்படுத்தவும் செய்தான். தமிழகத்து வடபகுதியில் சில இடங்களில் காடி என்ற அளவினைமாற்றிக் கலம் என்ற அளவினை நடைமுறைப்படுத்தினான் என்பதைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அவ்வகையில் வட்டெழுத்தைத் தமிழாக மாற்றியதும் தமிழ் மொழியின் மீது கொண்ட வேட்கையாகவும் இருக்கலாம்.

முதலாம் இராசேந்திரன் கி.பி. 1012-1044

முதலாம் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன். இவன் பாண்டிய நாட்டில் சோழநாட்டுப் பிரதிநிதிகளைச் சோழ பாண்டியர் என்ற பட்டத்தோடு ஆளச் செய்தவன். இவனுடைய 2 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று குற்றாலம் கோயிலில் உள்ளது. பாகூரைச் சார்ந்த வெள்ளால தேவன் பட்டழகன் என்பவன் ஒரு நொந்தா விளக்கு குற்றாலத்து இறைவனுக்குக் கொடுத்தான்" என்று உள்ளது. (A.R.E. No. 479 of 1917 P. 44)

இரண்டாம் பாண்டியப் பேரரசு

நீண்ட நாள் உள்நாட்டுக் கலகங்களாலும், சோழன், சிங்களவர் முதலானோரின் ஊடுருவல்களாலும் அல்லலுற்று அவதியுற்ற பாண்டியப் பேரரசு, புத்துயிர் பெற்றுப் புதியநிலை பெற்றது. மூன்றாம் குலோத்துங்கச் சோழனுக்குப் பின் வலிமை மிக்க சோழ அரசர் யாரும் இல்லாத அரசியல் சூழ்நிலைகள் பாண்டியருக்குச் சாதகமாக அமைந்தன. இது வரை இருந்த அடிமைத்தளையை அறுத்து வடக்கே கடப்பை, நெல்லூர்ப் பகுதிகள் வரை ஆதிக்கத்தைப் பரப்பினர். இரண்டாம் பாண்டியப் பேரரசு நீண்ட நாட்களுக்குப் பின் அரசியலில் வலிமை பெற்றது.

சடையவர்மன் சீவல்லபன் (கி.பி. 1090 - 1116) ஆட்சி கி.பி. 1090 - இல் தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. 'திருமடந்தையும் ஜெய மடந்தையும்' என இவன் மெய்க்கீர்த்தி தொடங்குகிறது. இவனுக்குப் பின் மாறவர்மன் பராக்கிரம ப்பாண்டியன் (கி.பி. 1087-1110) ஆட்சியில் இருந்தான்

இவனுடைய கல்வெட்டுகளில் 'திருமகள் பொறை' என்று தொடங்கும் மெய்க் கீர்த்தி காணப்படுகின்றது. இவனுக்குப் பின் சடையவர்மன் பராந்தக பாண்டியன் ஆட்சி செய்தான். இவன் குலோத்துங்கச் சோழன், விக்கரம சோழன் முதலானவருடன் நட்புடன் இருந்தான். மாறவர்மன் சீவல்லபன் (1132-1163) என்னும் பாண்டிய மன்னன் கல்வெட்டு 'பூமகள், ஜெயமகள்' என்ற மெய்க்கீர்த்தங்களைக் கொண்டது. திருவாங்கூர்ப் பகுதியை ஆண்ட ரவிவர்மன் திரை செலுத்தி வந்தான். சடையவர்மன் குலசேகரன் (கி.பி. 1163 - 1177) கல்வெட்டுகளில் "பூதல மடந்தை" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி காணப்படுகின்றது. இவன் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த போது மதுரையைத் தலைநகராகக் கொண்டு பராக்கிரம பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். சடையவர்மன் குலசேகரன் (கி.பி. 1190-1217) பூதல மடந்தை, பூவின் கிழத்தி, பூதல வனிதை என்று மூன்று வடிவங்களில் மெய்க்கீர்த்தி தொடங்குகிறது. இவனது தம்பி முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216 - 1239) கி.பி. 1216இல் பட்டத்திற்கு வந்தான். பாண்டியர் ஆதிக்கம் மீண்டும் தலை தூக்கக் காரணமானவர்களுள் இவனும் ஒருவன் இவன் மெய்க் கீர்த்தி அழகிய தமிழ் நடையில் 'பூமருவிய திருமடந்தை, பூமருவிய திருமாலும்', முதலான சொற்றொடர்கள் கொண்டு தொடங்குகிறது.

இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1239 - 1251)

இவன் இரண்டாம் சடையவர்மன் குலசேர பாண்டியனுக்குப் பின்னர் கி.பி. 1239 இல் முடிசூடப் பெற்று கி.பி. 1251 வரையில் அரசாண்டான். இவன் மெய்க்கீர்த்தி, 'பூமலர்திருவும் பொரு ஜெய மடந்தையும்' என்று தொடங்குகிறது. குற்றாலநாதர் கோயிலின் வடக்குச்சுவரில் 'பூவுந்திருவும்' என்று (A.R.E. No. 429 of 1918 P. 40) தொடங்கும் இவனுடைய கல்வெட்டு ஒன்று உள்ளது.

திருக்குற்றாலம் கோயில் சபையில், விளை நிலங்களுக்கு மட்டும் கடமை செலுத்த வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்ட இன்றியமையாத குறிப்பு உள்ளது. இவன் காலத்தில் நிலத்தை அளக்கும் கோலுக்குச் 'சுந்தர பாண்டியன் கோல்' என்று பெயர் சூட்டப்பட்டது என்னும் செய்தி குற்றாலநாதர் கோயில் கல்வெட்டில் உள்ளது. வடக்குச் சுவரிலிலுள்ள மற்றொரு கல்வெட்டுக் குலசேகரச் சக்கரவர்த்தி என்ற வணிகர் குற்றாலம்

கோயிலுக்கு வெள்ளிப் பாத்திரங்கள் வழங்கினார் என்று கூறுகின்றது. (A.R.E. No. 425 of 1917 P. 40) வழங்கப்பட்ட தானத்திற்குப் பிடிபாடு (ஒப்பந்தம்) எழுதப்பட்டுள்ளது.

இம்மன்னனின் குற்றாலநாதர் கோயிலிலுள்ள 5-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறுமலை நாட்டைச் சார்ந்த சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைச் சார்ந்த இலக்குமணன் தேவநாயகன், இலக்குமணன் ஆண்டபிள்ளை என்ற, குற்றாலநாதர் கோயில் அந்தணர்களுக்கு நிலம் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட நிலத்தில் பயிர் செய்து கடமை கோயிலுக்குச் செலுத்த வேண்டும் என்று உறுதிசெய்யப்பட்டது என்னும் செய்தியைக் கூறுகின்றது. (A.R.E. No. 426 of 1917 P.40) இம்மன்னன் குற்றாலம் திருக்கோயிலுக்கு இறையிலி நிலம் வழங்கிய செய்தி உள்ளது. (A.R.E. No. 428 of 1917 P. 40) உற்றப்பன் குறிச்சி என்ற குலசேகர நல்லூரில் உள்ள நிலம் திருக்குற்றாலநாதர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. ஆரியன் மழவராயனுக்கு நிலநல்லூர் என்ற குலசேகர சதுர்வேதி மங்கலம் கொடுக்கப்பட்டிருந்த செய்தியும் இடம் பெறுகிறது.

சடாவர்மன் வீரபாண்டியன்

இவன், முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1253 முதல் 1268 வரையில் சோழ நாடு, நடுநாடு, தொண்டை நாடுகளில் பிரதிநிதியாயிருந்து அரசாண்டவன். இவன் மெய்க்கீர்த்திகளுள் 'திருமகள் வளர்' என்று தொடங்குவது மிகப் பெரியது. இவனுடைய 3-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, குறுமுறை நாட்டைச் சார்ந்த சுந்தர பாண்டியாபுரம் கிராமத்திலுள்ள நகரத்தாரிடம் (வாணிகம்) நிலத்தைக் குற்றால நாதர் கோயிலுக்காக விலைக்கு வாங்கி ஆண்டாள் பிள்ளை என்பவருக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. ஆண்டாள் பிள்ளை, நிலத்தில் சாகுபடி செய்து கொண்டு கடமை செலுத்த வேண்டும். என்னும் வரலாற்றைக் கூறுகின்றது. (A.R.E. No 432 of 1917 P.40) கோயில் நிர்வாகத்திற்கு நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியும் கல்வெட்டிலுள்ளது.

தனிமனிதனுக்கும் திருக்குற்றாலச் சபைக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகளைத் தீர்த்துக் கொள்வதற்குச் சந்தித்துக் கொள்ளும் இடத்திற்கு

திருமக்கள் வட்டம் என்று பெயர் எனத் திரு.நீலகண்டசாஸ்திரி அவர்கள் கூறுகின்றார்.

சடையவர்மன் வீரபாண்டியன் குற்றாலத்து மலையில் பாண்டிய மன்னனின் அரசுச் சின்னமாகிய மீனைப் பொறித்த செய்தியை 'திரிகோணமலையிலும், திரிகூடகிரியிலும் உருகெழு கொடி மிசை இருகயல் எழுதி' என்று இம்மன்னனின் மெய்க்கீர்த்தி சிறப்பித்துக் கூறுகின்றது.

மாறவர்மன் குலசேகரம் (கி.பி. 1268 - 1318)

மாறவர்மன் குலசேகரப் பாண்டியனுக்குக் 'கொல்லங்கொண்ட பாண்டியன்' என்ற சிறப்புப் பெயருண்டு. இத்தாலிய வெனிசு நகரப் பயணி மார்க்கோ போலவும் வாசப் என்ற முஸ்லிம் பயணியும் இவர் காலத்தில் தான் வருகை புரிந்தனர். "எம் மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ குலசேகர பாண்டியர்'' என்று அழைக்கப்பட்டார். இம்மன்னனுடைய ஐந்து கல்வெட்டுக்கள் கோயிலில் உள்ளன.

வடவாரி நாட்டைச் சேர்ந்த கடையநல்லூர்க் கைக்கோளர்கள் குற்றாலநாதர் சன்னதியில் கலமுக்கள் 'தோழன் சந்தி' என்ற பெயரில் பூசை செய்வதற்காகத் தானம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது.

இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டுப் பராந்தக வள நாட்டிலுள்ள வென்று முடிசூடிய சுந்தர பாண்டியப் பட்டிணம் என்பதற்கு அருகிலுள்ள திருச்சிற்றம்பலம் பகுதியிலுள்ளவருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் கூறப்பட்டுள்ளது. (A.R.E. No. 415 of 1917 P. 39) மன்னனின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு வழிபாட்டிற்குத் தனியாக ஆட்கள் நியமனம் செய்யப்பட்ட செய்தியும் இடம் பெற்றுள்ளது.

மாறவர்மன் குலசேகர பாண்டியன், புதல்வர்கள் இருவரும் தம்முட் பகை கொண்டு போர் புரிந்தனர். சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 1303 முதல் 1319 வரை ஆண்டதாகவும், சடையவர்மன் வீர பாண்டியன் கி.பி. 1296 முதல் 1342 வரை ஆட்சி புரிந்தார் என்றும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

14 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென் பாண்டி நாட்டில் அரசு செலுத்திய பாண்டியர்களுள் பராக்கிரம பாண்டியன் என்ற பெயருடைய மூவர் இருந்தனர். (The Pandyan Kingdom PP 246 - 248) அம்மூவருள் கி.பி. 1387 இல் திருக்குற்றாலத்தில் திருப்பணிபுரிந்தவன் ஒருவன். கி.பி. 1384 - 1415 வரையில் அரசாண்டவன் மற்றொருவன். கி.பி. 1401-1454 வரையில் ஆட்சிபுரிந்தவன் மற்றொருவன். அக்காலப்பகுதியில் சடையவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் விக்கரம பாண்டியன், திருநெல்வேலி பெருமாள் வீரபாண்டியன் என்ற வேறு மூன்று மன்னர்களும் இருந்தமை அறியத்தக்கது. இவர்களுள் குலசேகர பாண்டியன் கி.பி. 1395 இல் பட்டம் பெற்றான். இவன் கல்வெட்டு ஒன்று கரிவலம்வந்தநல்லூரில் உள்ளது. விக்கிரம பாண்டியன் 1401-1422 வரை அரசு செலுத்தியவன். இவன் கல்வெட்டுக்கள் திருக்குற்றாலத்தில் உள்ளன.

மூன்றாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1368-1387)

இம்மன்னன் கல்வெட்டு கி.பி. 1387 ஆம் ஆண்டைச் சார்ந்தது இது இவனின் இருபதாம் ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது. இவன் விமானம், கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகியனவற்றைக் கட்டிக் குடமுழுக்கு செய்ததோடு இறைவழிபாடுகள் தடையின்றித் தாராளமாக நடைபெறத் தானங்கள் பல வழங்கியதையும் அறிய முடிகின்றது. இம்மன்னன் இக்கோயிலுக்கு வந்த போது கோயில் பழுதற்று இருந்திருக்க வேண்டும். இம்மன்னன் தன்னுடைய 34 வயது ஆட்சி ஆண்டில் நிலத்தைத் தானமாக வைத்தியநாதன் என்ற வாமதேவன் என்பவனுக்குக் கொடுத்துக் கோயிலைப் பழுது பார்க்கச் செய்திருக்கின்றான். (A.R.E. No. 420 of 1917 P. 39) வழிபாட்டிற்கு ஆட்களை நியமனம் செய்துள்ளான். வட்டெழுத்துக்கள் தமிழில் மாற்றிப் பொறிக்கப்பட்டுள்ளன. (Tranvancore Archaeological Series, Vol. I, P. 286)

பராக்கிரம பாண்டியன் : (கி.பி. 1383 - 1415)

இவனது கல்வெட்டு கி.பி 1415 ஆம் ஆண்டினைக் குறிக்கின்றது. ஆட்சி ஆண்டைக் குறிப்பிடுகையில் 33வது அண்டு என்று குறிக்கப்படுகிறது. எனவே இம்மன்னன் கி.பி 1383இல் ஆட்சி பீடம் ஏறி இருக்க வேண்டும். குற்றாலம் கோயிலில் பூசை செய்து கொண்டிருந்த குருக்கள் பூசை செய்யாமல்

தூரதேசத்திற்குப் போய்விட்டார்கள். அவர்களை மீண்டும் அழைத்துக் கோயில் பணி பார்க்க ஆணையிட்டதை இவனது இரு கல்வெட்டுக்கள் தெரிவிக்கிறன. இவன் மூன்றாம் சடையவர்மன் பராக்கிரமபாண்டியனுடன் இணைந்து ஆட்சி செய்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

மூன்றாம் மாறவர்மன் குலசேகர தேவன் (கி.பி. 1396-1421)

இவன் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். இம்மன்னனின் கல்வெட்டுக்கள் நெல்லை மாவட்டத்தில் நெல்லை, கரிவலம் வந்தநல்லூர், குற்றாலம் முதலான இடங்களில் காணப்படுகின்றன.

ஒரு கல்வெட்டுப் பதினோரு வேதியர்களுக்கு வேதம் ஓதுவதற்கு நிலம் தானமாக வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. குலசேகர சதுர்வேதி மங்கலம், திரிகூடாலயச் சதுர்வேதி மங்கலம் ஆகிய சதுர்வேதி மங்கலங்கள் இருந்ததை இக்கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது.

மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவன்: (கி.பி. 1429 - 1479)

தென்காசிக் கோயில் எடுப்பித்த அரிகேசரி பராக்கிமபாண்டியன் என்ற மன்னனின் சகோதரர்கள் பலர் அவருடன் சேர்ந்து ஆட்சி செய்துள்ளனர். அவர்களுள் ஒருவன் ஸ்ரீவல்லபன். இவனுக்கு "அழகன் பெருமாள் குலசேகரன்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. இம்மன்னனின் மூன்று கல்வெட்டுகள் குற்றாலம் கோயிலில் உள்ளன. கோயிலில் பூசை செய்வதற்குப் போதிய குருக்கள் இல்லாத நிலையினை உணர்ந்து புதிய குருக்களை நியமனம் செய்த செய்தி இடம் பெறுகிறது. மற்றும் குழல்வாய் மொழி அம்மன், செண்பகாதேவி ஆகிய தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவன் தன்னுடைய ஆணையை மும்முடிச் சதுர்வேதி மங்கலத்திலிருந்து கொண்டு வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

வீரபாண்டியன் (கி.பி. 1456)

அரிகேசரி பராக்கிரமபாண்டியனுடன் ஆண்ட தம்பியருள் இவனும்

ஒருவன். இவனது கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு ஒவ்வொரு மாதத்திலும் முதல் பத்துத் தினங்களுக்குத் தேவாரப்பண் இசைப்பதற்காக் கூத்தன் பெத்த பெருமாள் ருத்திர தேவன் என்பவனுக்கு நிலம் தானமாக வழங்கிய செய்தியினைத் தருகிறது.

பூதல வீத உதயமார்த்தாண்டன் (கி.பி. 1501 - 1547)

வீரமார்த்தாண்டனே பராக்கிர பாண்டியன் பெயரைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டான் என்று கூறலாம். இம்மன்னனின் கி.பி. 1532 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று மேலகரம் ஆகிய திரிகூடாலயச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த அந்தணன் நாராயண கைலாசநாத பட்டனுக்கு வேதம் ஓதுவதற்காக நிலம் வழங்கிய செய்தியைத் தருகிறது. பராக்கிரம பாண்டியன் சந்தி என்ற பெயரில் சிறப்பு வழிபாடு நடைபெறும் போது வேதம் ஓதப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. மற்றும் ஒரு விளக்குத் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தருகிறது.

பராக்கிரம பாண்டியகுலசேகரம் (கி.பி. 1551-1562)

இவன் அபிராமி பராக்கிரம பாண்டியனின் மகனாவான். இறந்த காலம் எடுப்பித்த ஸ்ரீவல்லபனின் தம்பியாவான். இவனுக்கு 'வீர வெண்பா மாலை' என்றும் 'திருநெல்வேலைப் பெருமான்' என்றும் சிறப்புப் பெயருண்டு. இவன் தமிழ்ப் புலமைமிக்கவன். தென்காசி விசுவநாதர் மேல் வெண்பாப் பாடியதால் 'வீரவெண்பாமாலை' என்ற சிறப்புப் பெயர் பெற்றான். இவனது ஒன்பது கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. கோயில் நிர்வாகம் செய்வதற்குத் தனி நபருக்குத் தானம் வழங்கப்பட்டுள்ளது. (A.R.E. 469 of 1917 P. 43) சிந்தாமணியைச் சார்ந்த மெய்கண்ட தேவன் என்பவனைத் திருஞான சம்பந்தரின் திருப்பதிகம் ஓத நியமித்து அவனுக்கு நிலத் தானம் வழங்கப்பட்டுள்ளது. (A.R.E. No. 453 of 1917, P. 41) குழல்வாய்மொழி அம்மனுக்கு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடைக்கலன் காட்டன் என்பவன் கோயிலை நிர்வாகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.அவனுக்கு அதற்காக ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. குழல்வாய்மொழிக்குப் பூசை செய்பவர்க்கு நிலத்தானம் வழங்கியதுடன் குடியிருப்பு வசதியும் செய்யப்பட்டுள்ளது. (A.R.E. No 474 of 1917, P.43) கோயில்

பணிகளை மேற் பார்வையிட "சோழிய தரையன்" என்பவன் நியமிக்கப்பட்டான். திருவிழாக் காலங்களில் கோயிலில் புராணம் வாசிப்பதற்கு நிலத்தானம் வழங்கப்பட்டுள்ளது.

தென்ஆரி நாட்டுப் புலியூர் கிராமத்தில் உள்ள நிலங்களை சுவாமிநாத தேவன் என்பவன் தானமாகப் பெற்றுள்ளான். இந்நிலத்தானமும் மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்டது எனத் தெரிகிறது.

அதிவீரராம பாண்டியன் : (கி.பி. 1564 - 1606)

இவனும் திருநெல்வேலிப் பெருமானின் மகனாவான். இவனது ஆட்சி காலத்தில் எவ்வித இடையூறும் இன்மையால் இறை பணியிலும் இலக்கியப் பணியிலும் ஆழமாக ஈடுபட்டான். தென்காசியில் தன் தந்தையின் பெயராலேயே "குலசேகர பாண்டியர் கோயில்" என்ற சிவன் கோயிலைக் கட்டினான். தென்காசி விசுவநாதர் கோயில் திருச்சுற்றில் சொக்கநாதர்க்கென்றும், சீவலவிண்ணகர் ஆழ்வார் என்ற பெருமாளுக்கும் தனித் தனியே சிற்றாலயங்கள் அமைத்தான்.

இம்மன்னனுடைய பதினொரு கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இம்மன்னனின் 7ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இங்குள்ள மன்னனின் கல்வெட்டுக்களில் பழமையானது. அக்கல்வெட்டு, மேலகரத்தைச் சார்ந்த "முத்தி அதிவீரராம மழவராயர்" என்பவரைக் குற்றாலமுடையார் கோயிலுக்குக் கணக்கராக நியமித்ததைக் குறிக்கிறது.

ஆறு கல்வெட்டுக்கள் இக்கோயிலுக்கு நிலத்தானம் அளித்ததையும், ஒரு கல்வெட்டுப் பிராமணர்களுக்கு உணவிற்காக நிலத்தானம் வழங்கியதையும், வேறு ஒரு கல்வெட்டுக் கோயில் நிலங்கள் சிலவற்றிற்கு வரி விலக்கு (இறையிலி) அளித்ததையும் குறிப்பிடுகின்றன.

இரண்டு கல்வெட்டுக்களில் குறிப்பிடத்தக்க சில செய்திகள் உள்ளன. அவற்றுள் ஒன்று கி.பி. 1590இல் வெம்பூர் நாட்டு இடத்து வேலி என்ற ஊரினன், குற்றாலமுடைய நாயனார் கோயிலில் "சகஸ்ரலிங்கம்" ஏற்படுத்திய செய்தியாகும். அதற்கு குணராம நல்லூர் கிராமத்தில் இம்மன்னர் நிலத்தானம்

வழங்கியுள்ளான் என்ற செய்தியைத் தருகின்றது.

மற்றொன்று பச்சையப்ப நாயக்கன் என்பவன் கி.பி. 1591இல் குற்றாலக் கோயில் வளாகத்தில் கட்டிய "சியாமநாத நாகேஸ்வரி" கோயிலுக்கு இம்மன்னன் குணராம நல்லூர் என்ற கிராமத்தில் நிலத்தானம் வழங்கியதைத் தெரிவிக்கிறது.

வரகுணராமன் குலசேகரன் (கி.பி. 1615)

இவன் கி.பி. 1615இல் அரியணை ஏறிய தென்காசிப் பாண்டியனாவான். இவன் அந்தணர்களைக் கொண்டு "சோமயாகம்" செய்தமையால் "குலசேகரர் சோமயாஜி" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். இம்மன்னனது கல்வெட்டுக்கள் குற்றாலம், தென்காசி ஆகிய கோயில்களில் காணப்படுகின்றன.

பெரிய செம்புலி சின்னணஞ்சாத் தேவர் (கி.பி. 1660-1721)

குற்றாலத்திற்கு அருகிலுள்ள வடகரையில் சிற்றரசராகத் திகழ்ந்தவர் சின்னணஞ்சாத் தேவர். தென்காசிப் பாண்டியர்களுக்குப் பின் குற்றாலநாதருக்குத் திருப்பணிகள் ஏராளமாகச் செய்துள்ளார். இக்கோயிலின் கொடி மர மண்டபம், சபாபதி மண்டபம் ஆகியவற்றை இவர் உருவாக்கினார். கொடி மர மண்டபத்தில் இவரது உருவமும், இவரது தம்பி வடகரை ஆதிக்கம் சின்னபட்டம் இராசகோபாலத் தேவரின் திருவுருவமும் காணப்படுகின்றன.

சின்னணஞ்சத் தேவர் சித்திரை சபையின் முகப்பு மண்டபத்தை எழுப்பியுள்ளார். இம்மண்டபத்தின் முன்னுள்ள தெப்பக்குளமும் இவரால் உருவாக்கப்பட்டதாகும். இவர் இக்கோயிலுக்காக ஐந்து தேர்களையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

ஸ்ரீவலகுணராமன் (கி.பி.1753)

இம்மன்னன் தன்னை இறந்தகாலம் எடுத்த பெருமான் என்று கூறிக் கொள்கின்றான். இம்மன்னனது காலத்துச் செப்பேடுகள் இரண்டு குற்றாலம்

கோயிலில் உள்ளன. இவை இரண்டும் கி.பி. 1753இல் வெளியிடப்பட்டவை ஆகும். அச்செப்பேட்டில் கருநாடக ராசாக்கள் உபய இராணுவத்தார் குடி படை செய்வார்கள் வழங்கிய தானத்தைத் குறிப்பிடுவதால் இம்மன்னன் குற்றாலத்திற்கு அருகிலுள்ள நாட்டை ஆண்டவன் என்று தெரிகிறது.

செப்பேடு

திருக்குற்றாலம் கோயிலில் மூன்று செப்பேடுகள் உள்ளன. அவற்றில் இரண்டு 'ஸ்ரீ அழகன் பெருமாள் இறந்த காலம் எடுத்த ஸ்ரீவலவரகுணராம பாண்டிய குலசேகர தேவ தீஷிதர்' என்று ஒரு மன்னனுடைய செப்பேடு உள்ளது. செப்பேட்டின் காலம் கி.பி. 1753 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவராமன் புதல்வன் கி.பி. 1534 - 1543 வரையில் சடையவர்மன் சீவல்லப பாண்டியன் அரசாண்டான். இவனுக்கு இறந்தகாலமெடுத்தவன் என்ற பட்டம் உண்டு. இவன் காலத்தில் திருவாங்கூர் இராச்சியத்திலிருந்த உதயமார்த்தாண்டவர்மன் என்ற சேரமன்னன் ஒருவன் தென் பாண்டி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். தன் நாட்டை இழந்த சீவல்லப் பாண்டியன், விசயநகர வேந்தனாகிய அச்சுத தேவராயனிடம் முறையிடவே அவனும் பெரும் படையோடு தென்னாட்டிற்கு வந்து உதயமார்த்தாண்டவர்மனைப் போரில் வென்று அவன் கைப்பற்றியிருந்த தென்பாண்டி நாட்டைக் கைப்பற்றிப் பாண்டியருக்குக் கொடுத்தான். இந்நிகழ்ச்சியினால் பாண்டியருக்குப் பழைய பெருமையும் சிறப்பும் மீண்டும் உண்டாகுமாறு தான் செய்து விட்டதாக எண்ணி இறந்தகாலமெடுத்தவன் என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டான்.

இச்செப்பேடு வழங்கிய காலம் கி.பி. 1753. இக்கால கட்டத்தில் மதுரை நாயக்கர் ஆட்சியும் முடிந்த காலமாகும். விஜயரங்க சொக்கநாதரின் மனைவி மீனாட்சி (கி.பி. 1736) யுடன் நாயக்கர் ஆட்சி முற்று பெறுகின்றது. கி.பி. 1753-இல் வாழ்ந்த வடகரை ஆதிக்கத்தாராக இம்மன்னன் இருந்திருக்க வேண்டும்.

இச்செப்பேடு, கர்நாடக ராசாவும் துணை இராணுவத்தைச் சார்ந்த பணியாளர்களும் தானமாகக் கொடுத்த பணத்தை வைத்துக் குற்றாலநாதருக்கு

மாலை வேளைப் பூசைக் கட்டளை நிகழ்த்த வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. வருடம் ஒன்றுக்குப் பல்லக்குக்காரர் ஒரு பணமும், குதிரை மற்றும் சுருட்டிக்காரர் மூன்று பணமும், குடிபடைக்காரர் ஒரு பணமும் இந்தக் கட்டளைக்காக வழங்கி வருதல் வேண்டும் என்று இச்செப்பேடு தெளிவாகக் கூறுகின்றது. திருவாவடுதுறை ஆதினம் பரிபாலனம் செய்ய வேண்டும் என்றும் இச்செப்பேட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

குற்றாலாநாத சுவாமிக்கு மாலை வேளைக் கட்டளைக்காகக் 'காராள குலதிலகம் கங்கர் குலதாசன் பிள்ளைமார்' கொடுத்த தானத்தைக் குறிப்பிடுகின்றது.

முகமதியச் செப்பேடு

மூன்றாம் செப்பேடு காலத்தால் பிந்தியதாக இருப்பினும் அரிய செய்தி ஒன்றினைத் தருவதாக அமைந்துள்ளது. முகமதிய வணிகர்கள் பலர் கூடி குற்றாலநாதர் நாள் வழிபாட்டிற்காகத் தானம் வழங்குவதெனத் தீர்மானித்த செய்தியினைத் தருகின்றது. இது ஆசாதுவாலா சாயபு, இராவுத்தர் முதலான முகமதியர்கள் பலராலும் எழுதிக் கொடுக்கப்பட்டது.

தென்காசி, ஆயம் பேட்டை, செங்கோட்டை, பண்பொழி, கடையநல்லூர், சிவராமபேட்டை, சுரண்டை முதலான சந்தைகளில் ஆயம் வசூலித்து அவ்வசூலில் இருந்து இந்தக் கட்டளை இடைவிடாது நடத்தப் பெற வேணும் என்று அவர்கள் தீர்மானித்ததை இச்செப்பேடு விளக்கி நிற்கின்றது.

இம்மூன்று செப்பேடுகளையும் கொண்டு பார்க்கும் போது திருக்குற்றாலநாதர் திருக்கோயில் பூசைக்கு இடையூறுகள் ஏற்பட்டு அதைப் பொதுமக்களும், மற்றுமுள்ள பணியாளர்களும் இணைந்து இடையூறுகளைக் களைந்து பூசைகளைத் தவறாது நடைபெறும்படிச் செய்யும் ஓர் சூழல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படுகிறது.

அ/மி குற்றால நாத சுவாமி திருக்கோயில் - குற்றாலம்
ஷே கோயிலில் உள்ள செப்பேடுகள் மூன்று

செப்பேடு 1 நீளம் 31.5 செ.மீ. அகலம் 20.5 செ.மீ.

குறிப்புரை

செப்பேட்டின் ஒருபுறம் மட்டும் எழுதப் பெற்றுள்ளது. தமிழ் எழுத்துக்கள். செப்பேட்டின் மேற்புறம் தெய்வ உருவங்கள் ஓவியமாக வெட்டப்பட்டுள்ளன. மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலிரு பிரிவிலும் ஏழு, ஏழு, தெய்வ உருவங்களும் மூன்றாம் நிலையில் உழவன் வயலில் உழுவதைப் போன்று காட்டப்பட்டுள்ளது. நாற்று நட்ட நிலையில் ஒரு வயல் காட்டப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1753

1. உ சாலிவாகன சகார்த்தம் சூசாள யெருன் மேல்ச்செ
2. ல்லா நின்ற கொல்லம் சுகசு (சுபமஸ்து) திரிபவனேக வீரசந்திர
3. குலப்ரதீப மதுரா மகேந்திர சேந்த மங்கலப்புர
4. ா வலதீசுர செய மாசூர நாரசிங்க கேரளதமோதி
5. வாகர சோள சிந்து வடவர் நல சங்கீத சாயுத்தியச
6. ாறுரப பூ(ர்) வ தெய்வப் பிராமன தாபனா சாரிய கோ சடி
7. ல வன்மரான திரிபுவனச் சக்கிர வர்த்தி கோனேரின்மை
8. கொண்டான் ஸ்ரீ பெருமாள் அளகம் பெருமாள் யிற
9. ந்த காலமெடுத்த சீவலவர் குணராம பாண்டிய குலசேக
10. ரதேவ தீட்சருக்கு ஆண்டு ஆவது கொல்லம் சாறஙய
11. ளு பவளு கார்தி மீ மிஉயசா ஆதித்த வாரமும் உத்திர
12. நட் செத்திரமும் நவமியும் ஆயுட் கிரண நாமயோ
13. கமும் கெசகரணமும் சுபயோக சுபகரணமும் பெ
14. ற்ற புண்ணிய தனத்தில் சுவாமி குத்தால நாத சுவா
15. மி கோவில்ச் சாயலட்சை கட்டளைக்கு இராசாக்க
16. ள் கர்னாடக மத்த உபயாரனு (ப) வங் குடிபடை செய்
17. தொளிலாளியளுங் கட்டளை வைத்துக் கொடுத்த
18. து வருஷம் ஒன்றுக்குப் பல்லக்குக் காரருக்குப் ப

19. த்துப் பணமும் குதிரை சுறுட்டிக் காரருக்கு மூன்
20. று பணமும் ராணுவத்துக்கு ஒரு பணமும் மத்தத்துக்குப்
21. படைக்கு ஒரு பணம் வீதம் இந்தப் படிக்குக் குடுத்த
22. நடத்தி வருவோ மாகவும் உ இந்தப் படிக்கு உபய
23. ராணுவத்தார் தர்மத்தைப் பரிவானம் பண்
24. ணின பேர் தெய்வ பிரதிட்டை பண்ணின புண்ணி
25. யத்தில் அடைவாராகவும் இதற்கு அகிதம் பண்ணி
26. ன பேர் மாதா பிதாவுக்குங் குருவுக்கும் அகிதம்
27. பண்ணின தோஷத்திலேயும் கங்கைக் கரையிலே
28. ஹோ கத்தி பிரம கத்தி (ஸ்) திரி கத்தி பண்ணின தோ
29. ஷத்திலேயும் போவாராகவும் உ இப்படி (க்)குத்தா
30. ல நாதர் கட்டளைக்கு உபய ராணுவத்தார் பட்ட
31. யம் எழுதிக் கொடுத்தோம் இந்த தருமத்திற்குக் க(ா)
32. ரியம் திருவாடுதுறை மடத்துப் பாரிசஞ்செ
33. திரு பாதாளத்தார் தர்மம் பரிபாலனமாக நட
34. விச்சுக் கொள்வாராகவும் உ குத்தாலனா(த்)
35. சுவாமித் துணை.

குற்றாலம் அ/மி திருக்குற்றால நாத சுவாமி திருக்கோயிலில் உள்ள செப்பேடுகள் மூன்றில் இரண்டாவது செப்பேட்டின் நீளம் 32.5 செ.மீ. அகலம் 20.5 செ.மீ

குறிப்புரை

செப்பேட்டின் இருபுறமும் எழுதப் பெற்றுள்ளது. தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்ட இச் செப்பேட்டின் மேற்பகுதியில் தெய்வ உருவங்கள் ஓவியங்களாக வெட்டப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1753

1. உ சாலிவாகன சகார்த்தம் கூ சாள எயருன் மேல் செல்
2. லா நின்ற கொல்லம் சுககு (சுபமஸ்து) திர்புவனேக வீர சந்திர குலப்பிர

3. தீப மதுரா மகேந்திர சேந்த மங்கலப் புராவல தீசு வரசெ
4. ய மாசுர நாரசிங்க கேரளத் தமோதி வாகர சோள சிந்து வட
5. வர் நலசங்கீத சாயுத்த சாருவ தெய்வப் பிரமானத்
6. தாபனாச் சாரிய கோ சழல வன்மரான திரிபுவனச் சக்கரவவர்த்
7. தி கோனேரின்மை கொண்டான் ஸ்ரீ பெருமாள் அளகம் பெ
8. ருமாள் இறந்த கால மெடுத்த ஸ்ரீவல வரகுணராம பாண்டி
9. ய குல சேகர தேவ தீட்சிதருக்கு ஆண்டு ஆவது கொல்லம் சா
10. றநயளு பவளு கார்த்திகை மீஉம் உய்சா ஆதித்த வாரமும் உத்தி
11. ர நட்சத்தி(ர) மும் நவமியும் ஆயுட் கிரண நாம யோகமும்
12. கெச கரணமும் சுபயோக சுபகரணமும் பெற்ற புண்ணிய
13. தனத்தில் சுவாமி குத்தாலனாத சுவாமி கோவில் சாயலட்சை
14. கட்டளைக்கு காராள குலதிலகமானக் கங்
15. கர் குலத்தாசான் பிள்ளைமார் கட்டளையாக வச்சுக்
16. குடுத்தது பல்லவர்க்குக் காரர் ளுக்கு ஙை கமும் குதிரை
17. சுறுட்டிக் காரருக்கு ருமும் தொளில் செய்துவருகிறபே
18. காரடல் பட உமும் சொத்துக் காரர் வருஷத்தில் ய கமும்
19. க இந்தப் படி(க்கு) சூ குத்தாலனாத சுவாமி சாயலட்சைக்
20. கட்டளைக்குக் குடுத்து நடத்தி வருமோ மாகவும் யிந்தப்
21. டிக்கு பிள்ளைமார் தருமத்தை பரிபாலனம் பண்ணின
22. பேர் தெய்வ பிரதிட்டை பண்ணின புண்ணியத்தில் அடை
23. வாராகவும் யிதற்கு அகிதம் பண்ணின பேர் மாதா பித
24. ாவுக்குங் குருவுக்குங் அகிதம் பண்ணின தோஷத்திலே
25. யும் கங்கைக் கரையிலே கோகத்தி பிரமகத்தி திரிக
26. த்தி பண்ணின தோஷத்திலே போவாராகவும் உ
27. இப்படிக்கு தான சாதனமாகப் பட்டயம் எ
28. ா யலட்சை கட்டளைக்குப் பட்டயம் எ
29. ழுதிக் கொடுத்தோம் இந்தத் தருமத்திற்கு காரியம் காளாஞ்
30. சிப் பண்டாரம் வொத்துக் கொண்டு சந்திராதித்தர் உ
31. ள வரைக்கு மித்தரும காரியம் பரிபாலணம் செய்து
32. வருவாராகவும் இப்படிக்கு குத்தாலனாத சுவாமி துணை
33. இந்தப்படிக்கு முதலிமார் பிள்ளைமார் தருமத்தை நடத்திவரு
34. வோமாகவும் உ

பக்கம் 2

35. இந்த தருமம் திருவாடுதுறை மடத்து பாரிசன்
36. செய்திருப்பதால்த் தரும பரிபாலணமாக நடத்தி
37. விச்சுக் கொள்வாராகவும் குழல்வாய் மொளி
38. யம்மன் துணை உ இந்த சாயலட்சைக் கட்டளை
39. த் தருமம் பிள்ளை மார்க்கு சபாபதி துணைஉ

குற்றாலம் அ/மி திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயிலில் உள்ள செப்பேடுகள் மூன்றில், மூன்றாவது செப்பேட்டின் நீளம் 32 செ.மீ அகலம் 14.5 செ.மீ

குறிப்புரை

செப்பேட்டின் இருபுறமும் தமிழ்மொழியில் எழுதப்பட்ட இச்செப்பேடு முகமதியர்களால் கொடுக்கப்பட்ட தானத்தைக் குறிக்கிறது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1775

1. உ சாலிவாகன சகார்த்தம் ௲ எறன்
2. யனளூச் செல்லா நின்ற கொல்லம் சாற
3. சாயச ளூ கீலகளூ கார்த் மீ உயரு
4. ஸ்ரீ குத்தாலனாத சுவாமி கட்டளைக்கு ஆசாது வா
5. லா சாயபு அபது பேட்டை மியம் இ
6. சுமால் ராவுத்தர் முதலான பலரும்
7. யம் எழுதிக் கொடு(கு)த்த படி பட்டயமா
8. வது (சு,கு) சுவாமிக்கு நித்தியல் விளாபூசையும்
9. கட்டளை வைத்து நடத்தி வரும் படி படி
10. த்தரம் படிக்கு நடத்தி வரும் (களூ) கட்டளைக்குனாங்
11. களெல்லோரும் சம்மதித்து வகை
12. வைத்துக் குடுத்து யேறு சாற்று யிர
13. ங்கு சாற்றுக் கச்சை ஒன்றுக்கு
14. கால்மாகாணி வீதமும் கடைக்கு
15. மீ வுனாச் சட்டை யொன்றுக்கு மா
16. காணிப் பணம் வீதமுஞ் சின்னொன்று

17. க்கு அரை மாகாணி வீதமும் தினப்ப
18. டிக்கு த்திருனெல்வேலி காந்திமதியம்
19. மன் திருகால சந்தி மகமைப் ப
20. டிக்கு தென்காசி ஆயுப் பேட்டை
21. யிலும் ஸ வணித சேகரஞ் செங்
22. கோட்டை புளியரை பண்பி
23. ளிகடைய நல்லூர் சிவராம
24. பேட்டை சுறண்டைச்
25. சந்தை முதலான துறை
26. யிலும் மகமை வைத்துக்

பக்கம் 2

27. கொடுத்த படியினாலேய்யும்
28. உள்ள பணம் துறை மளியி
29. ல்க் கணக்குப் பார்த்து வாங்கிக்
30. கொண்டு (சூளு) (தினத்துக்கு)க் கட்டளையெ
31. ன் றென்றைக்கும் நடத்தி வருவோ
32. மாகவும் இப்படி நடத்திவரு
33. கிற கட்டளை தற்மத்துக்கு யா
34. தாமொருவர் விக்கினஞ் செய்
35. தால்ப் பளமையாய் உள்ள ப
36. ட்டயப்படிக்கு பஞ்சாட்சர
37. ததுக்குள் பட்டவன் கெங்கை
38. கரையிலே காராம் பசுவைக்
39. கொன்ற தோஷத்திலும் யிசுல
40. ா மானபேர் மக்கத்தில் தாய்க்கு விக்கி
41. னஞ் செய்த தோஷத்திலும் போ
42. வாராகவும் இந்த படிக்குச் சம்மதித்துவி
43. ளா பூசை கட்டளைக்குப் பட்டயம் எ
44. ழுதிக் கொடுத்தோம் பேட்டை மி
45. யும் யிசுமால் இ(ராவுத்தர்) முதலான பல
46. ரோம் யிந்தப் பட்டயம் எழுதினேன்
47. மாடன் செட்டியார் தானாபதி அம்
48. மைநாதன் எழுத்து இந்தப் படிக்கு

49. இசு மாலி (இஷ்) (இராவுத்தர்) பலர் காணு கோயில்
50. சனாக்குமாருப் பிள்ளை யிந்தச் செப்பு
51. ப் பட்டயஞ் செய்து வைத்தது
52. எயகூளு தென்காசி வூ கூ சேகர
53. ம் யூ சுடவைமுத்துப் பிள்ளைக்கு
54. தி கூட உதி ஸ ஹாய தி உ

பிற ஆலயங்கள்

திருக்குற்றாலத்தைச் சுற்றி எண்ணற்ற கோயில்கள் உள்ளன. கோயில்களுள் சில மட்டும் பிற ஆலயங்கள் என்னும் தலைப்பில் விளக்கப்படுகின்றன.

1. இலஞ்சிக் கோயில்
2. திருமலைக் கோயில்
3. தென்காசிக் கோயில்
4. செண்பகாதேவி அம்மன் கோயில்
5. கூத்தர் கோயில்

திருமலைக் கோயில்

திருமலை என்ற இடம் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் குற்றால மலையின் வட மேற்குத் திசையில் மேற்குத் தொடர்ச்சி மலையை அடுத்துக் குற்றாலத்திற்கு வடமேற்காய் அமைந்திருக்கிறது. பண்பொழில் என்னும் சிற்றூரை அடுத்து அமைந்துள்ள ஒரு குன்றின் பெயரே திருமலை என்பதாகும். இக்குன்றின் மேல் தான் திருமலைக்குமாரசுவாமியினுடைய அழகிய கோயில் சிறப்புடன் விளங்குகிறது. மலையின் உச்சியில் நின்று கொண்டு பார்த்தால் வெள்ளிய முகில்களின் கூட்டமும், செழுமையான மரங்களின் கூட்டமும் வயல் வெளிகளும் கண்ணுக்கு விருந்தளிக்கும்.

திருமலைக்குக் கரவிமலை என்ற பெயரும் உண்டு. பழங்காலத்தில் இம்மலையில் வாலாமஸ்தான் என்ற சித்தர் ஒருவர் வாழ்ந்து மக்களின் துயர் நீக்கி விபூதி அளித்து வந்ததாகக் கூறப்படுகிறது. திருமலை முருகனை, மக்கள், திருமலை ஆண்டவன், திருமலைச்சாமி, திருமலையாதிபன் திருமலைபாலசுப்பிரமணியன், திருமலை வாலசுப்பிரமணியன் எனப் பல பெயர்களால் அழைத்து மகிழ்கின்றனர்.

கோயிலின் அமைப்பு

திருமலைக் கோயில் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் குன்றின் மேல் சுமார் 400 அடி உயரத்தில் இருக்கிறது. இக் கோயிலுக்கு நடந்து செல்ல 627 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. படிகள் அனைத்தும் அந்தக் குன்றின் பாறையிலேயே செதுக்கப்பட்டவை ஆகும். படிகளில் ஏறிச் செல்லும் போது கீழே தவறி விழுந்து விடாத படியும் காற்று அதிகமாக அடிக்கும் போது விழுந்து விடாதபடியும் படிக்கட்டுகளின் இருபுறமும் கையால் பிடித்துச் செல்லக் கம்பிகள் நீண்ட வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.

குன்றின் மேலே செல்லும் போது மக்கள் அதிகமாகத் துன்பப் படக்கூடாது என்பதற்காகவும் வயது சென்றோர் மேலே ஏறும்போது அனைத்துப் படிகளையும் ஒரே நேரத்தில் ஏறிச் செல்லமுடியாது என்ற காரணத்தாலும் இரண்டு மூன்று இடங்களில் சற்று உட்கார்ந்து இளைப்பாறிச் செல்ல மண்டபங்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன. படிக்கட்டுகள் மலையின் அடியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லுமாறு செதுக்கப்பட்டுள்ளன.

மலையடிவாரத்தில் வல்லப விநாயகர் கோவில் கிழக்கு நோக்கி வனப்புடன் விளங்குகிறது. திருமலைக்குமரனை வழிபடச் செல்வோர், முதலில் இவ்விநாயகரை வழிபட்டபின்தான் மலையேறுவது மரபு. வல்லபை விநாயகர் கோவிலுடன் இணைந்து சங்கிலிமாடன் மண்டபம் உள்ளது. வல்லப விநாயகரை வழிபட்டுப் படியேறிச் செல்லும் போது படிக்கட்டின் மேல்புறம் நடுவட்ட விநாயகர் கோவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அதையடுத்துச் சில படிகள் மேலேறிச் செல்லும் போது படிக்கட்டின் மேற்புறம் இடும்பன் கோவில் கிழக்கு நோக்கி அமைந்து உள்ளது. இடும்பன் கோவிலை ஒட்டி நந்த கோபர் மண்டபம் ஒன்று இருக்கிறது. மலையின் உச்சியை அடைந்ததும் 16 படிக்கட்டுகளின் மேல் அமைந்துள்ள கோவிலில் உச்சிப் பிள்ளையார் கிழக்கு நோக்கு அமர்ந்திருக்கின்றார்.

மலை உச்சியின் வட திசையில் காளியம்மன் கோவில் இருக்கிறது. கோவிலின் ஸ்தல விருக்ஷமாகிய புளியமரம் மலையின் உச்சியில்தான் காணப்படுகின்றது. இக்கோயிலின் ஸ்தல-விருக்ஷம் புளியமரம் என்பதால்

தான் அதன் அருகில் உள்ள ஊர் பண்புளி என அழைக்கப்படுகிறது. ஸ்தல விருட்சத்தின் அடியில், உத்தண்ட வேலாயுதம் ஆதிமூல நிலையம் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்கு வடபுறம் கோவிலின் மேற்குத் திசையில் பூங்குவளைச் சுனை ஒன்று உள்ளது. சுனையின் கரையில் சப்த கன்னியர்களின் உருவங்கள் காணப்படுகின்றன.

மலையின் உச்சியில் திருமலைக் குமரனுடைய திருக் கோயில் தெற்கு நோக்கி அமைந்திருக்கிறது. கோவில் முகப்பில் "சண்முக விலாசம்" சிங்கார வனப்புடன் காணப்படுகிறது. சண்முக விலாசத்திற்குள் பிரவேசித்த உடனேயே கேட்டவர்க்குக் கேட்ட வரமளிக்கும் சண்முகக் கடவுள் கருணைப் பொலிவுடன் தம் தேவியர் இருவருடன் அமர்ந்திருக்கிறார். சண்முக விலாசத்தை ஒட்டி அகன்று விரிந்து கிடக்கும் வசந்த மண்டபம் காற்றோட்டத்துடனும் நல்ல வெளிச்சத்துடனும் காணப்படுகின்றது.

கருவறை

கோயிலினுள் திருமலைக்குமரனுடைய கருவறை கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. மூலவர் சிலை கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. மயில் பின்னே நிற்கத் திருமலைக் குமரன் மயிலுடன் சேர்ந்து நிற்கும் கோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகின்றார். மூலவர் சிலை திருவடியிலிருந்து மணிமகுடம் வரை 3அடி 11½ அங்குலம் உயரமுடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

கோவிலுள் இருக்கும் ஒரே பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் 5 அடி ½ அங்குல உயரத்தில் கபால பைரவர் சிற்பம் காணப்படுகிறது. சிலகாலங்களுக்கு முன்னர் வரை கோவிலின் திருநடைக் கதவுகளைப் பூட்டிச் சாவியைப் பைரவர் பாதங்களில் வைத்து விடுவது வழக்கமாய் இருந்ததாகவும் உரியவர் உரிய காலத்தில் எடுக்க முடியுமே தவிர வேறு எவரும் அந்தச் சாவியை எடுக்க முடியாத நிலையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. கோயில் பிரகாரத்தில் கன்னி விநாயகர் திருமலைக் குமரனின் அண்ணனாக வீற்றிருக்கிறார்.

முருகன் அடியார் பற்றிய புராணச் செய்தி

முருகன் அடியாரான தண்டபாணி சுவாமிகள் திருமலைக் கோவிலில் முருகனின் திருவருளை வேண்டித் தவம் இருந்து அவன் அருள் கிட்டாது போக மிகவும் வருந்தி மனம் உடைந்து கோவிலின் கீழ் வாசலிலிருந்து உருண்டு மலையின் அடிவாரத்தில் போய் விழவும் அவருடைய உடல் தீங்குறாது எழுந்து வந்து, கந்தன் கருணையை இச்செய்யுள் மூலம் உலகம் அறியும்படிப் பாடினார்.

"வட திசையில் தலை வைத்து மறலிதிசை கால்நீட்டி
உடலையந்தத் திருமலையின் உச்சியினின் றுருட்டி விட்டேன்
விடலையிடும் தேங்காய்போல் வேறுபட்டுச் சிதறாமல்
மடமடெனக் கொண்டங்கோர் மண்தரையில் தங்கியதே"

தண்டபாணி சுவாமிகள் மலையிலிருந்து உருண்டதனால் உண்டான சிறிய சிராய்ப்புகளையுங் கூட ஸ்ரீ வள்ளியம்மை நாச்சியாரே மருந்திட்டுக் குணப்படுத்தினார்கள் எனக் கூறப்படுகிறது.

கோயில் கட்டப்பட்ட வரலாறு

திருமலைக்குச் சற்று வடபுறத்தில் புதர்கள் அடர்ந்த ஓர் இடத்தில் புழுதி ஆற்றுக் கோட்டை என்னும் ஓர் கோட்டை இருந்திருக்கிறது. அது சில காலத்திற்குப் பின் இடிந்து அழிந்து போய் விட்டது. அந்தக் கோட்டையில் முருகன் கோவில் இருந்திருக்க வேண்டும். பின் அக்கோட்டை இடிக்கப்பட்ட போது கோவிலும் அழிந்து விட்டது. முருகனின் திருஉருவச்சிலை மட்டும் ஆற்று மணலில் பல ஆண்டுகள் புதையுண்டு யாருக்கும் தெரியாமல் மறைந்து கிடந்திருக்கிறது.

பூவன் பட்டர் என்பவர் திருமலையின் மேல் உள்ள காளியம்மன் கோவிலில் பூசை நடத்தி வந்திருக்கிறார். இவர் ஒரு சிவபக்தர் ஆவார். ஒரு நாள் காளியம்மனுக்குப் பூசை நடத்திவிட்டு அங்குள்ள புளிய மரத்தின் அடியில் சற்று இளைப்பாற வேண்டும் என நினைத்துப் படுத்திருக்கிறார். உடனே கண் அயர்ந்து உறங்கிவிட்டார். அப்போது முருகன் சிறு பாலகனாகப்

பூவன் பட்டர் கனவில் தோன்றித் தம்முடைய திருஉருவம் ஆற்று மணலில் புதைந்து கிடப்பதாகவும் அதை எடுத்துக் கொண்டு வந்து திருமலையின் மீது வைத்துத் தன்னை வழிபட வேண்டும் என்றும் அக்காலத்தில் தமிழகத்தை ஆண்டு வந்த பந்தள மன்னனின் கனவில் தோன்றிக் கூறி இருப்பதாகவும் பூவன் பட்டரிடம் முருகன் கூறியிருக்கிறார். உடனே விழித்துக் கொண்ட பூவன் பட்டர் பந்தள மன்னனிடம் ஓடித் தான் கண்ட கனவு பற்றிக் கூறியிருக்கிறார். உடனே பந்தள மன்னனும் முருகன் தன் முன் தோன்றிக் கூறிய செய்தியைப் பூவன் பட்டரிடம் கூறி உடனே புழுதி ஆற்று மணலுக்குச் சென்று முருகனின் திரு உருவத்தைக் கண்டு எடுத்துக் கொண்டு வந்து திருமலையில் ஒரு சிறிய கருங்கல்லால் ஆன கோயிலை ஏற்படுத்தி அதனுள் முருகனுடைய திருவுருவம் அமைத்தார்.

பந்தள மன்னனால் முதல் முதலாகக் கட்டப்பட்ட இக் கோவிலானது பின் பலரால் புதுப்பிக்கப்பட்டது. அர்த்த மண்டபம் அம்பலவாண முனிவர் என்ற சைவப் பெரியாரால் கட்டப்பட்டது. கடைசியாக நெடுநாட்களாகச் சிவகாமி அம்மையார் இக்கோவிலை நடத்தி வந்திருக்கிறார்கள். சிவகாமி அம்மையார் பண்பொழிக்கு அருகில் உள்ள நெடுவேலியில் வாழ்ந்து வந்தார் என்றும் அவருடைய மூன்றாம் தலைமுறையினர் இப்போதும் அங்கு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

கி.பி. 1729 முதல் கி.பி. 1751 வரையிலும் வடகரை சமஸ்தான மன்னர்கள் கோயிலைக் கண்காணித்து வந்ததாகவும் திருமலைக் கோவிலிலுள்ள பூங்குவளைச் சுனையைச் சற்று விரிவுபடுத்தினார் என்றும் திருமலைக்குமாரப்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கோவில் பணிகள் சிலவற்றையும் இவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள் என்றும் செய்திகள் உள்ளன. கி.பி. 1752 - கி.பி. 1760 க்குள் பண்பொழியில் திருமலைக் குமரனுக்குத் தேர் செய்வித்து மகோற்சவம் சிறப்பாய் நடைபெறும் வண்ணம் வடகரை ஆதிக்கத்தரால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சுக்கிர வாரந்தோறும் ஆண்டிகளுக்கு அரிசி கொடுப்பதற்காகச் சுக்கிர வார மண்டபங் கட்டப்பட்டது. சுனையின் அருகில் சுனைக்கரை மண்டபமும் அதன் பக்கத்தில் பூசுரர்க்கும் சைவருக்கும் சங்கமருக்கும் பொருந்தின படி விருந்தளிக்கும் ‘நித்ய சோபன’ என்னும் பெயரில் அன்னசத்திரமும் நாலுகால் மண்டபமும் கட்டியுள்ளனர்.

சுனையில் பூ எடுத்தல், புண்ணிய வாசனம், அபிஷேகக் கட்டளை ஆகியவற்றிற்காக மொத்தம் செலவான தொகை கி.பி. 1730 ஆம் ஆண்டு, 7101 பொன் எனக் கூறப்படுகிறது. பெரியசாமித் தேவர் என்ற மன்னனின் மனைவியாகிய பூவாத்தாள் என்பவள், சுனைக் கரை மண்டபம் கட்டி முடிக்கத் தன் ஆபரணங்களை எல்லாம் கழற்றிக் கொடுத்து இருக்கிறாள். சொக்கம்பட்டிப் பாளையப்பட்டுக்காரர் திருமலைக் கோவிலிலுள்ள பல மண்டபங்களைக் கட்டி இருக்கின்றார். முருகனுக்கு அலங்காரம் செய்ய வேண்டிய ஆடை ஆபரணங்களையும் இவர் கொடுத்திருக்கின்றார். கோவில் பூசை நடத்துவதற்கு வேண்டிய பாத்திரங்களையும் செய்து கொடுத்துள்ளார்.

பசுமனை கட்டப்பட்ட வரலாறு

சொக்கம்பட்டி சமஸ்தானத்தைச் சேர்ந்த பூவாத்தாள் நாச்சியார் என்ற அரசி ஒரு நாள் திருமலைக் குமரனை வழிபட வேண்டுமென எண்ணி வந்திருக்கிறார். அப்போது அதிகமாக மழை பெய்யக் கோவில் பசுக்கள் எல்லாம் ஒதுங்க இடமின்றி மழையில் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டு நின்றனவாம். அதனைக் கண்டு மனம் உருகிய பூவாத்தாள் நாச்சியார் தன்னுடைய ஆபரணங்களை எல்லாம் கழற்றிக் கொடுத்துத் தான் மறுமுறை கோவிலுக்கு வருமுன் பசுக் கூட்டங்கள் சென்று அடைவதற்கான மாட்டுத் தொழுவத்தைக் கட்டி முடித்திருக்க வேண்டும் எனக் கூறிவிட்டுப் போய் விட்டார்களாம். அரசி இட்ட கட்டளையை உடனே நிறைவேற்றும் பொருட்டுப் பசுமனை ஒன்று உடனே கட்டப்பட்டது. இப்பசுமனை இன்றும் உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்குப் புறத்தில் காணப்படுகிறது.

சொக்கம்பட்டி மண்டபம்

அக்காலத்தில் சொக்கம்பட்டி சமஸ்தானத்தின் தானாதிபதியாக இருந்த பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் திருமலைக்குமாரனிடம் அதிகப் பக்தி உடையவராக இருந்திருக்கிறார். இவர் கோவிலுக்காகப் பல பணிகளை மேற்கொண்டிருக்கிறார். இவருடைய திருப்பணியால் கோவிலின் நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடைபெற்று இருக்கிறது. திருமலையின் மேற்புறத்தில் இவர் ஒரு மண்டபம் கட்டியிருக்கிறார். அம்மண்டபம் சொக்கம்பட்டி மண்டபம் என அழைக்கப்படுகிறது. இது சுனையின் கீழ்ப்புறத்தில் அமைந்திருக்கிறது.

18- ஆம் நூற்றாண்டில் மலையின் மேல் பகுதியில் வள்ளல் பிச்சைப் பிள்ளையால் தைப்பூச மணடபம், சான்றோர் மடம், வள்ளியம்மை ஆதிமடம், சொக்கநாதன் மடம் போன்ற பல மடங்கள் கட்டப்பட்டிருந்திருக்கின்றன. காலப் போக்கில் கோவிலைப்புதுப்பிக்கும் போது இவையெல்லாம் அழிக்கப்பட்டு விட்டன. திருமலைக்குச் செல்லும் படிகளின் மத்தியில் உள்ள மண்டபம் நந்த கோபாலர்கள் என்ற யாதவ மக்களால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோவிலைச் சுற்றிலும் முன் காலத்தில் மேடுபள்ளங்களாக இருந்திருக்கிறது. இப்போது அவை எல்லாம் சமப்படுத்தப்பட்டுக் கோவிலைச் சுற்றிலும் வெளிப் பிரகாரம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட தெய்வங்கள்

கோவிலினுள்ளே பல்வேறுபட்ட தெய்வ உருவங்கள் உள்ளன. அவை முறையே ஸ்ரீ சண்டிகேஸ்வரர், ஸ்ரீ கௌரிலெட்சுமி, ஹரிஹரபுத்திரர், உற்சவ மூர்த்திகள், ஸ்ரீ விநாயகர், சுப்பிரமணியர், வீரபாகு, வீரமகேந்திரர், அப்பர், சேரமான் பெருமாள், கன்னி விநாயகர் முதலியோரின் திரு உருவங்களாகும். பூங்குவளைச் சுனையில் சப்த கன்னியர்களின் திருஉருவங்கள் காணப்படுகின்றன.

மரவழிபாடு

தல விருட்சமானது கோவிலின் தென்மேற்குப் பகுதியில் நிற்கின்றது. பிளவு சிறிது கூட இல்லாத கரும் பாறையில் இந்த மரமானது வேரூன்றிச் செழிப்பாக ஓங்கி வளர்ந்து நிற்கின்றது. இந்த மரம் இதுவரை ஒரு காய் கூடக் காய்த்ததில்லை. இந்தப் புளியமரத்தின் அடியில் உத்தண்ட வேலாயுதம், காணப்படுவதாகவும் சப்த கன்னியர்கள் அதை வழிபட்டதாகவும் கூறுகின்றார்கள். காளிக்குப் பூசை நடத்தவந்த பூவன் பட்டர் இப்புளிய மரத்தின் அடியில்தான் உறங்கிக் கொண்டிருந்ததாகவும், முருகன் அவர் கனவில் தோன்றித் தன் திருஉருவம் ஆற்று மணலில் புதைந்து கிடப்பதாகவும், அதைக் கொண்டு வந்து இம்மலை மீது வைத்து வழிபடச் சொன்னதாகவும் கூறப்படுகிறது. இம்மரத்தின் அடியில் வந்து நின்ற இரண்டு பக்தர்கள் தங்களுடைய நாக்கைத் துண்டித்து முருகனுக்குப் படைத்ததாகவும், பின் அந்த நாக்கானது சில மணி நேரத்தில் இயற்கை நிலை எய்தியதாகவும் கூறப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் இடைகாலைச் சேர்ந்த ஒரு பக்தன் தனது நாக்கைத் தல விருட்சத்தின் முன் துண்டித்து வைத்ததாகவும் பின் அந்நாக்குத் தானே சென்று ஒட்டிக் கொண்டதாகவும் பட்டர் கூறினார்.

தீர்த்தங்கள்

முன் காலத்தில் சரவணப் பொய்கை என்ற ஒரு பொய்கை மலையின் அடிவாரத்தில் இருந்ததாகவும் தற்சமயம் அது தூர்ந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. திருமலைக்கு ஏறும் படிகளில் இடும்பன் கோவிலுக்கு எதிரில் இடும்பன் சுனை என்று ஒரு சுனை காணப்படுகிறது. மலையின் உச்சியில் திரு முருகன் கோவிலுக்கு மேற்குப் புறத்தில் பூங்குவளைச் சுனை என்ற ஒரு சுனை இருக்கின்றது. முன் காலத்தில் இச்சுனையில் தினமும் ஒரு மலர் பூத்ததாகவும் அகத்தியனின் கட்டளைப்படிச் சப்த கன்னியர்கள் அந்த மலரைப் பறித்து வந்து புளிய மரத்தின் அடியில் காணப்படும் உத்தண்ட வேலாயுதத்திற்குப் படைத்து வழிபட்டதாகவும் செவிவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இப்போதும் இச்சுனையில் மூன்று தீர்த்தக் குழிகள் இருக்கின்றன. முற்காலத்தில் தீர்த்தக் குழிகளுக்குச் சோழன், சூரியன், அக்கினி என்று பெயிட்டு அழைத்து வந்தார்களாம். அச்சுனைக் குழிகளில் இப்போது நீர் சுரப்பதில்லை. இப் பூங்குவளைச்சுனை நீரைத் திருமலைக்குமரனின் அபிடேகத்திற்குப் பயன்படுத்தினர்.

சிற்பங்கள்

திருமலைக் கோயிலின் திருவெளிச் சுற்றின் ஈசானத் திக்கில் கம்பீரமாய்ப் பார்ப்பவர் மனதில் அச்சம் விளைவிக்கும் பாவனையில் 5 அடி ½ அங்குலம் உயரத்தில் நிற்கும் கபால வயிரவரின் சிற்பம் இக்கோயிலின் தனிச் சிறப்பு ஆகும். தென் இந்தியக் கோவில்களிலேயே மிகப் பெரிய வயிரவர் சிற்பமுடைய கோயில் திருமலைக் கோயிலேயாகும்.

முருகன் அடியவர்கள் சிலரின் வரலாறு

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன் புளியங்குடியில் வாழ்ந்து வந்த சங்கரக்குமார் ஆச்சாரி என்பவர் நோய் வந்து அதிகமாக அவதிப்பட்டுக்

கொண்டிருந்திருக்கிறார். எவ்வளவோ மருந்து கொடுத்தும் நோய் தீர வழியில்லை. கடைசியில் ஆண்டவனே தஞ்சம் என எண்ணித் தன் நோய் தீரும் பொருட்டாகத் திருமலைக்கு வந்து நோன்பு நோற்றுத் தன் நாக்கைத் துண்டித்து முருகனுக்குக் காணிக்கையாகச் செலுத்தி விட்டார். உடனே அவருடைய தீராத நோய் தீர்ந்து விட்டது மட்டுமின்றித் துண்டிக்கப்பட்ட நாக்கும் வளர்ந்து பழைய நிலைக்கு மாறிவிட்டது, எனத் திரு.பரமசிவம் என்பவர் கூறினார்.

1939ஆம் ஆண்டு கொட்டாகுளத்தைச் சேர்ந்த பிள்ளை என்பவரும் குன்ம நோயால் பீடிக்கப்பட்டு இருந்தார். அவரும் குன்ம நோய் தீர வேண்டித் தன் நாக்கைத் துண்டித்து முருகன் திருவடிகளுக்கே செலுத்திவிட்டார். உடனே அவர் நோய் தீர நாக்கும் திரும்பப் பெற்றார் எனக் கோயில் பணியாளர்கள் கூறினார்கள். அக்காலத்தில் இறைவனுடைய அடியவர்கள் இறைவன் மீது நீங்காக் காதலும், நம்பிக்கையும் கொண்டு இருந்தார்கள் என்பது மேற்கூறிய முருகன் அடியவர்கள் சிலர்து வாழ்க்கை வரலாற்றால் நமக்குப் புலனாகிறது.

கல்வெட்டுக்கள்

திருமலைக் கோவிலில் கல்வெட்டுக்கள் எதுவும் தென்படவில்லை. ஆனால் திருமலைக் கோவிலைப் பற்றிய செய்திகள் பொறிக்கப்பட்ட பத்துக் கல் வெட்டுக்கள், நகரீசுவரமுடையார் கோயிலிலும் ஒரு கல்வெட்டு சுந்தரராஜப் பெருமாள் கோவிலிலும் கிடைத்துள்ளன. இக் கல்வெட்டுக்களில், பெரும்பாலும் அக்கால மன்னர்கள் கோவிலுக்குச் செய்துள்ள நற்பணிகளைப் பற்றிப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள செய்திகள்

1. சகம் 1425 (18-1-1504) ஜடாவர்மன் அழகன் பெருமாள் பராக்கிர பாண்டியன் - அவிட்டத் திருநாள் வடவாரி நாட்டில் பண்பொழில் எனும் காங்கேயக் குலக்காலபுரத்தில் உள்ள நகுலீசுவரமுடையார் ஆலயத்திற்கு நிலம் தானம் செய்ததாக ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

2. சகம் 1466 (1-2-1545) பழைய முறையைத் தழுவிய ஜடாவர்மன் ஸ்ரீ

வல்லவ தேவன் வடவாரி நாட்டுப் பண்பொழில் பட்டினத்து நகரீசுவரர் ஆலயத்தில் பூஜை செய்வதற்காக அசுவதி நட்சத்திரத்தில் பிறந்த திருநெல்வேலிப் பெருமாள் என்ற அரச குமாரனுடைய உத்திரவின் படி நிலம் அளித்தது பற்றி 2-ஆம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் நான்காம் கல்வெட்டுக்களிலும் மேலே கூறப்பட்ட செய்திகளே இடம் பெற்றுள்ளன. பத்துக் கல்வெட்டுக்களே பண்பொழிலில் உள்ள கோவில்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. சுந்தர ராஜப் பெருமாள் கோயிலில் கிடைத்த கல்வெட்டில் ஜடாவாமன் வீரபாண்டியத் தேவர் காங்கேய குலகாலபுரம் என்ற பண்பொழிலில் இருந்த தண்டனைக்கு நல்லான் திருமலை மெய்யன் என்ற இருவரும் நகரீசுவரமுடையார் கோவிலில் உள்ள திரிபுவன சுந்தர மூர்த்தியின் படித்தரத்திற்காகத் தேவதானமாக நிலம் கொடுத்தது பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது எனத் திருமலைக்குமார சுவாமி திருக்கோவில் தல வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்களின் மூலமாக நாம் அறிந்து கொள்ளக் கூடிய செய்திகள்

பண்பொழில் என்ற பகுதி வடவாரி நாட்டைச் சார்ந்துள்ளது. பண்பொழிலுக்கு வேறு பல பெயர்களும் இருந்தன என நமக்கு தெரிகிறது. அவை முறையே பைம்பொழில், பண்புளிப்பட்டணம், பண்பொழிலில் உள்ள நகரீசுவரமுடையார் கோவில் நகுலீசுரமுடையார் கோவில் காங்கேய குல காலபுரம் என்பதாகும். திருவாகீசுவரமுடையார் கோவில் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. பண்பொழிலில் உள்ள சுந்தரராஜப் பெருமாள் கோவில் மூர்த்திக்கு எதிரில்லாப் பெருமாள் என்ற மற்றொரு பெயரும் இருந்ததாக இக்கல்வெட்டுக்களின் மூலமாக அறிய முடிகிறது.

சிவகாமி அம்மையார்

சிவகாமி அம்மையார் நீண்ட நாட்களாகத் திருமலை கோவிலைக் கண்காணித்து வந்திருக்கிறார். கோவிலில் செயற்கரிய பல அரும் பணிகளைச் செய்தவர். கோவில் மேல் தளத்தில் சண்முக விலாசம் கட்டியும் மற்றும்

பல திருப்பணிகள் செய்தும் புளியறை கிராமத்தில் சுமார் 150 ஏக்கர் நஞ்சை நிலத்தைச் செப்புப் பட்டயத்தின் ஆதாரத்தை வைத்து எவ்வித வாகன வசதியும் இல்லாத அன்றைய நாளில் திருவனந்தபுரம் வழக்கு மன்றத்தில் நீதியை நிலை நாட்டி, முருகன் அருளால் திருமலைக் குமாரனின் அத்தனை சொத்துக்களையும் அவனுக்கே உடமையாக்கித் தன் வாழ்நாள் அனைத்தையும் அவன் தொண்டிற்கே அர்ப்பணித்தார். சிவகாமிஅம்மையார் அவர்களுக்கு வண்டாடும் பொட்டலில் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுத் தினப் பூஜைகளும், வைகாசியில் சிறப்புப் பூஜையும் நடைபெற்றது.

சிவகாமி அம்மையார் பெற்றுத் தந்த சொத்து விபரம் பற்றிய செப்புப் பட்டய நகல் ஒன்று உள்ளது. அதில் கீழ்க்காணும் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ பீகாவேம் 1643-ன் மேல் செல்லாநின்ற கொல்லம் ஸ்ரீ புலனேகவீர சந்திரகுல பிறத்திய மதுரு மகேந்திர செந்தமங்கலாபுரவலாதீசுவர ஜெயமங்கள நாறசிங்குள தமோதிவாகர சோளசிந்துவடவாணல சங்கீத சாயுத்தியா வித்தியா வினோத சார்வபூம தேவ பிராமண தாவனாசாரிய கோரி சடிலவரமான ஸ்ரீ புவனசக்கிரவர்த்திகளின் கோனோமை கொண்டான் ஸ்ரீ அழகமமுமாள இறநாத காலமெடுத்த சீவல வரகுணறாமறான் பாண்டிய குலசேகர தே தீகூஷித்ற்கு ஆண்டு 108 ஆவது கொல்லா நின்ற கொல்லம் 867 டம் ளு பிலவ ளு பங்குனி ஸ்ரீ 4 உ சுக்கிரவாரமும் கிருஷ்ண பச்சத்து துவாதேசியும் உத்திராட நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற சுபதினத்தில் பாண்டாமண்டலம் தெஷனா தேசத்துக்குள் கர்த்தறான விஜய ரெங்க கிருஷ்ண முத்து வீர சொக்கனாத நாயக்கரய்யனவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான பிரதானி அய்யனவர்களுக்குப் புண்ணியமாக அளகப்ப முதலியாரவர்களோம். சுவாமி திருமலைக் குமாரருக்கு சருவ மானியமாக உதைய மார்த்தாண்டங் கட்டளை விட்டுக் குடுத்த நிலம் புளியரையில் தத்துவப்பிரகாச பண்டாரம் பயிரிட்டு வந்த கத்தியூர் திருத்து தன்னம்பி கரிசலுள்பட கார் வரை கோட்டை பிசானம் தாமரைக்குளம் கோளிகுண்டி புறுவல் திருத்து தடியுள்பட விரைக்கோட்டை 25 ஆக கார் பிசானம் விரை 65ல் தத்துவ பரிகாச பண்டாரம் வயலு கார்டனுவிரை 5 போக நீக்கி விரை 60ம் புளியரை ஆத்துக்கு தெற்கு சாத்தா பண்டாரத் தெல்கைக்கு மேற்கு கடை இஞ்சி பத்துக்கும் வடக்குதின்னம்பி காலுக்கும் கிழக்கு இந்த

நான் கெல்லைக்குள்பட்ட புஞ்சையும் மாவடையும் மறவடையும் ஆயத்துரைக்கு ழீக்குடியிருப்பு தைத்திருவிழாவுக்கு 905 மீ ளூ தை மீ 21 உ விட்டு குடுத்து பண்பிரி ஊர் பரிசைவ கைத்தடிப் படிக்கு கார் விரை கோட்டை 20ல் ஷை தாழை விரை கோட்டை 20ம் பால் கஞ்சி கட்டளை 1901 ஆம் ளூ தை மீ 5 உ விட்டுக்குடுத்து விரை 1-ம் விசையதசமி தை திருவிழா மண்டப கட்டளைக்கு விடடுக் குடுத்து சுத்தபடி ஊர்பத்து சிறுமடை மேடு கைத்தடிப்படிக்கு விரை 2-ம் சூரசங்கார மண்டப கட்டளைக்கு தீஷ தரய்யனவர்கள் மணியத்தில் விட்டு குடுத்தது கைத்தடிப்படி ஊர் பத்தில் விரை 3¼ ம் விழா பூசை காலசந்தி கட்டளைக்கு முன் 871 ளூ யுவ ளூ பங்குனி ஞ் 22 வெங்கிடாத்திரி நாயக்கரவர்கள் மணியத்தில் விட்டுக் குடுத்து சுத்தடி கீழப்பலாரு முருக மங்கலம் ஊர் சுத்தடி விரை 11-ம் உச்சிகாலக் கட்டளைக்கு மாயூரநாத பிள்ளையவர்கள் விட்டுக்குடத்து திருமலைக்கு வடக்கு தாமாரக்குளம் விரை 12-ம் 878 ளூ சித்திரபானு ளூ ஆவணி மீ 12உ திருவெங்கிடனாத முதலியார் மணியத்தில் ஊரார் விட்டு தடுத்தது சங்கரமூர்த்தி நாடான் குடியிருப்பும், சாணான் புதுக்குளம் நஞ்சையும விரைப்பம் 8-ம் ஷை நஞ்சை புஞ்சையும் சீவல நாடான் குடியிருப்பு அதினுடனே சொந்த புஞ்சையும் நெரிஞ்சி பரும்புக்காட்டு புஞ்சையும் இது முதலான தெல்லாம் சருவானியயமாக தானம் செய்து குடுத்தபடியினாலே சந்திராதித்தர் உள்ள வரைக்கு அர்த்த ஆகாமிய நிதி நிச் செப ஜெய தரு பாசானம் உள்ளதும் கயிதமாக அட்ட போத சுவாமி யங்களுக்கு தானாகி விக்கிரயங்களுக்கு திருமலைக் குமார சுவாமி கோவில் அனுபவித்துக் கொண்டு கோவில் பூஜை நெய்வேத்தினம் முதலானதும் உதயமார்த்தாணட்வம் கட்டளையும் பால் கஞ்சி கட்டளையும் தை திருவாளவும் மண்டகப்படிகளும் தாளவில்லாமல் நடத்திப் பிச்சுக் கொண்டு வருவீராகவும். இந்த தர்மங்களைப் பரிமானம் பண்ணின பேர் தெய்வப் பிரதிஷ்டை பணிணின புண்ணியத்திலே அடைவாராகவும். இதற்கு அதிகம் பண்ணினபேர் மாதா பிதாவுக்கும் குருவுக்கும் அதிகம் பண்ணின தோசத்திலேயும் கெங்கைக் கரையிலே கோகத்தி பிரம கத்தி தரிகத்தி பண்ணின தோசத்திலேயும் போவாராகவும். இந்த தான சொத்தின் மேலெல்லாம் கையாடி கோவில் தலத்தாரில் பதுனாத சுப்பிரமணிய பட்டரும் தானத்தாரில் விக்கிர பாண்டிய ஈச்வரபட்டருமாக கட்டளை முதல் அர்த்த சாமம் வரைக்கும் சுவாமிக்கு அபிஷேக நெய்வேத்தினம் திருவிளாவும் தாளவில்லாமல் நடத்தி வருவராகவும்.

இப்படிக்கு அளகப்பா என்று எழுதியிருக்கிறது.

திருமலை முருகன் பள்ளு, திருமலை முருகன் பிள்ளைத் தமிழ், திருமலை யமக அந்தாதி, திருமலை ஆண்டவர் குறவஞ்சி, திருமலைக் குமாரசுவாமி திருப்புகழ் போன்ற பல இலக்கியங்கள் திருமலை முருகன் எழுந்தருளியுள்ளதைப் பற்றிப் புகழ்ந்து பாடியிருக்கின்றன.

"சைவ சிகாமணி கந்த சுவாமி பொன் தான் எனக்குக்
கைவசமாக தரும்சே வகன் குந்தி காதலராம்
ஐவர் சகாயன் முருகன் திருமலை ஆறுமுகத்
தெய்வ சகாயம் உண்டே வருமோ கொடுந்தீவினையே"

எனத் திருமலை முருகன் பள்ளுக் கூறுகிறது.

"இது முது குரவர் நாப்பண் இளமை யொடு இருந்து சேய் என்று
ஒருவரும் பெயரும் வேறே ஒருவரும சாய ஆசுக்
குருபரன் இறைஞ்சி உண்மைக் கொடுத்து ஒரு சாமி என்னும்
பொருவரும் பெயரும் பூண்ட புனிதனைப் புகழ்ந்து வாழ்வோம்"

என்றும் பாடப்பெற்றுள்ளது.

"பழனி யிலஞ்சி வளர்ந்தோனே மறை
புகழ வெழுந்து சிறந்தோனே பரை
பதும கரங்க ளுன்றள் தோனே நல முடையோனே"

என்று திருமலைக் குமார சுவாமி திருப்புகழ் போற்றுகிறது.

தினப்பூஜைகளும் காலமும் அந்நேரங்களில் மூர்த்திக்குப் படைக்கப்படும் நைவேத்தியங்கள் விபரப் பட்டியல்

காலம்	பூஜை	பிரசாதம்
காலை 6 மணி	திருவனந்தல்	பொரி, சர்க்கரை
காலை 7 மணி	உதயமார்த்தாண்டம்	சுத்தன்னம்
காலை 8 மணி	சிறுகால சந்தி	புளியஞ்சாதம்
காலை 9 மணி	காலசந்தி	தோசை, பருப்புக்கஞ்சி
காலை 12 மணி	உச்சிக்காலம்	சர்க்கரைப்பொங்கல் தயிர்ச்சாதம், அதிரசம், தேங்குழல்
மாலை 6 மணி	சாயரஷை	சுத்தன்னம்
மாலை 8 மணி	அர்த்த சாமம்	மிளகு சம்பா, அப்பம், வடை
மாலை 8¼ மணி	ஏகாந்தம்	பால், பழம், தாம்பூலம்

முருகப் பெருமானை வழிபடும் முறைகள் பற்றிக் கோவிலில் உள்ள கரும்பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

அவை பின்வருமாறு:

1. நீராடித் தூய ஆடைகளை உடுத்திச் சமயச் சின்னங்கள் திருநீறு, உருத்திராட்சம் அணிந்து செல்ல வேண்டும்.

2. மலர்கள், தேங்காய் , பழம், சூடம், சாம்பிராணி, வாசனைப்பத்தி, தீபமிட எண்ணெய், நெல் இவைகள் எவையேனும் கொண்டு போக வேண்டும்.

3. கோபுர வாயிலுள் செல்லும் முன் கை கால்களைக் கழுவிப் பின் தலைமேல் இரு கைகளையும் கூப்பிக் கோபுரத்தை வணங்கி உட் செல்லவேண்டும்.

4. ஐந்தெழுத்தை மனதில் ஓத வேண்டும்

5. முதலில் கொடி மரத்தின் பக்கமாகப் பூமியில் விழுந்து வணங்கவேண்டும்.

6. தல விநாயகரைத் தரிசிக்க வேண்டும். தலையில் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போட வேண்டும்.

7. கொடி மரம், பலிபீடம், நந்தி, இவைகளை வணங்கிய பின் துவார பாலகரின் உத்திரவு பெற்று இறைவன் சந்நிதி அடைய வேண்டும்.

8. மூல மூர்த்தியை வணங்கிய பின் சந்திரசேகரர், நடராஜர், சிவகாமியம்மை, சோமஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகளை வணங்க வேண்டும்.

9. பின்னர்ப் பிரகாரத்திலுள்ள துர்க்கை சண்டேஸ்வரர், நாயன்மார், தட்சணாமூர்த்தி, முருகன், நவக்கிரகம் முதலியோரை வழிபட வேண்டும்.

10. அம்பிகை சந்நிதியடைந்து தேவியை வழிபட வேண்டும்.

11. இறைவன், தேவி, இவர்களின் கோயில்களைக் குறைந்தது மூன்று முறையாவது வலம் வர வேண்டும்.

12. ஒவ்வொரு சந்நிதியிலும் அந்தந்தத் தெய்வத்துக்குரிய தோத்திரப் பாடலை, வழிபடும் மற்றவரின் அமைதிக்குப் பங்கமில்லாமல் பாட வேண்டும். மற்ற நேரத்தில் ஐந்து எழுத்து மந்திரத்தை ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். அல்லது திருவாசகத்தில் உள்ள சிவபுராணத்தை ஓதிக் கொண்டும் வரலாம்.

13. கடைசியாகக் கொடி மரத்தருகில் வந்து பூமியில் விழுந்து வணங்கி இறைவனிடம் விடை பெற வேண்டும்.

14. வணங்கிய பின் சற்றுத் தூரத்தில் அமர்ந்து ஐந்து எழுத்தை 108 முறைக்குக் குறையாமல் ஓதிய பின் கோயிலை விட்டகல வேண்டும்.

தென்காசி ஆலயம்

திருநெல்வேலி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ளது, தென்காசி வட்டம். இவ்வட்டத்தின் தலைநகர் தென்காசி. இவ்வூரின் தென்மேற்கே குற்றாலம் உள்ளது. தென்காசி பெரிய இரயிலடிச் சந்திப்பு. மேற்கே செங்கோட்டை, கொல்லம், தெற்கே கடையம், அம்பை, கிழக்கே பாவூர், நெல்லை, வடக்கே கடையநல்லூர், இராசபாளையம், சங்கரன் கோவில் ஆகிய இடங்களுக்கு எல்லாம் இரயில் போக்குவரத்து வசதி இருக்கிறது.

வரலாற்றுச் செய்திகள்

தென்காசி ஊர், முதலில் செண்பகவனமாக இருந்தது. மாறன் மங்கலம் என்ற ஊரை ஆண்டிருந்த குலசேகரபாண்டியர் முதன்முதலாகத் தென்காசி காசிவிசுவநாதரையும், உலகம்மையையும் வழிபட்டு உலகநாதன் என்ற ஆண்மகவைப் பெற்றார். உலகநாதனுக்கு உலகம்மை, குழல்வாய் மொழி என்ற பெயருடன் இரு மகளிர் பிறந்தனர். உலகநாத பாண்டியருக்குப் பின் பல பாண்டியர்கள் மாறன் மங்கலத்திலிருந்து ஆண்டதாகத் தலபுராணம் கூறுகின்றது.

பராக்கிரம பாண்டியன் காலம் வரை தென்காசி இறைவன் செண்பக மரத்தடியில் இருந்து வந்தார். உலகம்மை பவளவல்லி நிழலில் இருந்தாள். காசி கண்ட பராக்கிரம பாண்டியன் கடவுள் ஆணைப்படித் தென்காசிக் கோயிலைக் கட்டி முடித்து நகரமும் அமைத்தார். தென்காசித் திருக்கோவில் கட்டப்பெற்ற காலம் சாலிவாகன சகாப்தம் 1368ம் ஆண்டு எனத் தலபுராணம் கூறுகின்றது.

கி.பி. 1524இல் திருவாங்கூரைச் சேர்ந்த ஜெபதுங்க நாட்டு மன்னர், சங்கர நாராயண பூதல வீரமார்த்தாண்ட ராமவர்மன் இக்கோவிலிற் பழுதுகள் பார்த்துச் செப்பனிட்டுப் பூஜைகளும் மற்ற நிர்வாகங்களும் ஒழுங்காய் நடைபெற ஏற்பாடு செய்ததாகவும் சென்னை அரசாங்கக் கல்வெட்டுத்துறை 6-9-18இல் வெளியிட்ட குறிப்பு அறிவிக்கிறது.

கொல்லம் ஆண்டு 1023-கி.பி 1848 இல் இக்கோயிலில் ஒரு கும்பாபிஷேகம் நடந்திருப்பதாகச் செய்தியுள்ளது.

மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், சுந்தரர் (9ஆம் நூற்றாண்டு) குற்றாலத்தைப் பற்றிப் பாடியுள்ளனர். ஆனால் தென்காசி பற்றிப் பாடவில்லை. எனவே பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் தான் தென்காசி என்ற நகரமே உருவாக்கப்பட்டுள்ளது.

கோயிலைப் பற்றிய கதை

ஒரு நாள் முருகப் பெருமான் முனிவர் வடிவம் கொண்டு பராக்கிரம பாண்டியர் படுக்கையறையில் துயின்றார். முருகனையும், வள்ளி, தெய்வானையையும் வழிபட்டிருந்த மன்னருக்கு முருகப் பிரானுடைய உடலிலிருந்து ஒரு புது மணம் வீசியது. அதைக் கண்ட பாண்டியர் தூங்குவார் போல இருந்த முருகனைக் கண்டவுடன் ஓர் உருண்டை முருகப்பிரான் திருவாயினின்றும் வெளிவந்தது. ஆறுமுகன் அக்குளிகையைப் பாண்டியரிடம் கொடுத்து மந்திரமும் அருளி மறைந்தார். மன்னன் அம்மந்திர உதவியால் நாள்தோறும் காசி சென்று பிறர் அறியாவண்ணம் வழிபட்டுவர தன்னையும் அழைத்துச் செல்லுமாறு அரசி வில்வவதியும் வேண்டினாள். முருகனும் தோன்றி 'அது செய்' என்று கூற மன்னன், மனைவி வில்வவதியையும் அழைத்துச் சென்று வழிபட்டான். மீண்டு வரும் வழியில் அரசனும், அரசியும் மதுரைச் சொக்கநாதரை வழிபட்டனர். உடன் இறைவன் 'ஊர்ப்பக்கத்தில் காசி காண்' என அருளினர். மன்னர் ஊரை அடைந்து செண்பகவன முனிவரைக் கண்டு காசி காட்ட வேண்ட அப்போது வானொலி "சித்தராஜி உலகேசன் உனக்கு அருளுவான்" என்று ஒலித்தது. அன்றிரவு பாண்டியன் கனவில் உலகநாதர் தோன்றி,

"உன் முன்னோன் குலசேகரனுக்கு யாம் அருள் செய்தோம். அவன் மகன் உலகநாதனுக்கு மகளாகிய குழல்வாய் மொழியாளை மணந்தோம். இங்கிருந்து மேற்கே அரைக்காத தூரத்தில் யாங்கள் இருக்கிறோம். அவ்விடமே தென்காசி. நாளை இங்கிருந்து ஓர் எறும்பு ஒழுக்கு இவ்விடம் வரையில் போகும். அதைத் தொடர்ந்து செல். நாமும் விடை மேல் வந்து அருளுவோம்" என்றருளினர்.

பராக்கிரம பாண்டியன் இங்குத் தென்காசி இருந்தும், இறைவன் என் குல தெய்வமாக இருந்தும் நான் அவரைக்காணாது இருந்தேனே என்று மகிழ்ந்து வழிபடு கடவுளாகிய ஆறுமுகக் கடவுளையும் வாழ்த்தினான். விடிந்தவுடன் எழுந்து பாண்டிய மன்னன் வானொலி கேட்ட இடம் அடைந்தான். சித்திரையாற்றின் கரையிலே நந்தியைக் கண்டு அதனருகில் இருந்த மடுவிலே சிவலிங்கப் பெருமானையும் கண்டார். பின் இறையருளால் கோவிலும் கட்டித் தென்காசி நகரையும் அமைத்துப் புரப் பெருமானைத் தினந்தோறும் வழிபட்டு அருள் பெற்றார். இப்பாண்டிய மன்னனுக்குக் காசி கண்ட பராக்கிரம பாண்டியர் என்ற பெயருமுண்டு. இப்போதுள்ள சித்திரையாறு கோயில் முன்பாகவே ஓடியுள்ளது. தற்போது தான் திருக்குற்றாலத்திலிருந்து இலஞ்சி வழியாகத் தென்காசி வரும் சித்திரா நதி திருக் கோயிலின் பின் பக்கமாகச் சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஓடுகின்றது.

புராணச் செய்திகள்

நாரதமுனி ஒரு நாள் இந்திரன் அவையை அடைந்து புகழ்பாட அரிமித்திரன் பொறாமை அடைந்து திருமாலை அடைந்து ‘உன்னையும் இந்திரனையும் சமப்படுத்தி நாரதன் பாடினான்’ என்று உரைக்கத் திருமால், ‘நாரதன் யாழிசையும் கண்டமும் அழிக’ எனச் சபிக்கப் பின் அவன் தன்னைச் சரணடைந்த நாரதனைத் தென்காசி சென்று பணிந்தால் சாபம் நீங்கும் என்று அனுப்ப, நாரதன் தென்காசி நாதனைப் பணிந்து சாபம் நீங்கப் பெற்றுப் பெருமான் முன் பாடி நின்றான்.

பின், பெருமான் அசரீரியாக உரைத்தபடி நாரதன் வடகிழக்குத் திசையிலுள்ள தீர்த்தத்தில் நீராடிக் கன்னிமார் காட்டக் கண்டு கூகை வடிவமாக வந்த கௌசிக முனியின் அருளுபதேசமும் பெற்றான்.

மிருகண்டு

மிருகண்டு தவம் புரியத் திருமால் அவன் முன் தோன்றி “மிருகண்ட! நீ தென்காசி போய் உலகநாதன் அடி பணிந்து அருள் பெற்று மணம் செய்” என்று உரைக்க, மிருகண்டு அவ்வாறே செய்து மருத்துவவதியை

மணந்து மார்க்கண்டேயனைப் பெற்றுத் தென்காசிப் பெருமான் திரு அருளைத் துதித்திருந்தான்.

வாலி

கிட்கிந்தை மன்னன் வாலி; இவன் தென்காசியில் உள்ள வாலியம் பொற்றையை அடைந்து அங்குள்ள குகையில் தங்கி முக்கடலில் முழுகி விசுவநாதனை வழிபட்டு, ஆறுமாதம் தவமிருந்து 'எதிர்த்தவர் பலம் பாதி உனக்கு எய்தும்' எனும் வரமும் பெற்றான். இவ்வாறு தென்காசியைப் பற்றிய பல புராணங்கள் மக்களிடையே நிலவி வருகின்றது.

தென்காசிக் கோயில் அமைப்பு

தென்காசி ஊரின் நடுவே தென்வடல் அகலமாக 318 அடியும் கிழமேல் நீளமாக 411 அடியும் பரப்பினைக் கொண்டு தென்காசிக் கோயில் அமைந்துள்ளது. நுழைவாயில் இராசகோபுரம் ஒன்பது நிலையினைக் கொண்ட மிக உயர்ந்த வானளாவிய வண்ணக் கோபுரமாகத் திகழ்கின்றது. நுழைவாசலை அடுத்துப் பரந்த வானவெளி இடமுள்ளது. திருவிழாக் காலங்களில் ரிஷபவாகனக் காட்சியைக் காண மக்கள் இங்குக் கூடுவர். வானவெளியின் வடபுறத்தே காலியான மண்டபம் உள்ளது. வானவெளியை அடுத்துத் திருவோலக்க மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் மகா 'பலி பீடம்' உள்ளது. இத்திருக்கோயில் முகப்பு மண்டபத்தில் எட்டுப் பெரிய தூண்களில் தெற்கு வரிசையில் மேற்கிலிருந்து கிழக்காக 1. அகோர வீரபுத்திரா, 2. மன்மதன் மகாவிஷ்ணு, காளி ஆக நான்கு பெரிய சிலைகளும் வடக்கு வரிசையில் மேற்கிலிருந்து கிழக்காக அக்னி வீரபுத்திரன், ரதிதேவி, மகாதாண்டவ நடேசன், ஊர்த்துவ தாண்டவ நடேசர் ஆகிய நான்கு பெரிய திருவுருவச் சிலைகளும் உள்ளன. தென்காசிக் கோயிலிலுள்ள சிற்பங்கள் கலைநயத்துடன் கூடியவைகளாக உள்ளன.

கோவில் நோக்கி மேற்குமுகமாக வட தூணிலும், தென் தூணிலும் அழகே உருவான இரண்டு தமிழ் அணங்குகள் காணப்படுகின்றனர். இச்சிலைகள் தவிர சுவாமி சன்னதி நந்தி மண்டபத்தில் கிழக்குப் பார்க்க வடதிசை, தென்திசைத் தூண்களில் 'கவரி' வீசும் பெண்களின் அழகிய

சிலைகள் இரண்டு உள்ளன.

பலி மண்டபத்தை அடுத்து இரண்டாம் நிலைக் கோபுரமும் அதனை அடுத்து நந்தி மண்டபமும் உள்ளன. நந்தியின் பெரிய திருவுருவம் இவ்விடம் உள்ளது. நந்தி மண்டபத்தின் கீழ்ப்புறத்தில் சூரிய பகவானும் அதிகார நந்தியும் உள்ளனர்.

நந்தி மண்டபத்தின் ஒரு தூணில் அனுமார் சிலை உள்ளது. சாமகானத்தால் இறைவனை மகிழ்வித்த இராவணன் புகும் போது நந்தியை வழிபடாமல் அலட்சியமாக இறைவனைக் காணச் சென்றதாகவும் நந்தி தனது பெருமூச்சினால் இராவணனை அங்கும், இங்கும் அலைக் கழித்ததால் கோபம் கொண்ட இராவணன், 'அட குரங்கே' என்று கூறியதாகவும் 'உன்னை நான் குரங்காக வந்தே பாடம் கற்பிக்கின்றேன்' என நந்தி கூறி அனுமாராக அவதாரம் எடுத்து சம்ஹாரத்திற்குக் காரணமாக நந்தி அமைந்தார் எனவும் புராணங்கள் கூறுகின்றன.

நந்தி மண்டபத்தில் நந்தியும், அவரது அவதாரமாகிய அனுமார், மணி மண்டபத்திலும் இக்கோயிலில் உள்ளனர்.

மணி மண்டபத்தை அடுத்து மகா மண்டபமும், அதனை அடுத்து அந்தரான மண்டபமும், அர்த்த மண்டபமும் உள்ளன. மகா மண்டபத்தில் திருவிழா மூர்த்திகள் - பஞ்சலோக விக்கிரங்கள் நடராசப் பெருமான் திருஉரு முதலியன உள்ளன. அர்த்த மண்டபத்தை அடுத்துக் கர்ப்பகிருகம் உள்ளது. இங்கு சுவாமி லிங்க உருவமாக எழுந்தருளியுள்ளார்.

சுவாமி கோயில் தென்புறத்தே பால முருகன் சன்னதி உள்ளது. இச்சன்னதியின் முகப்பு மண்டபத்தில் உள்ள தூண்களில் பஞ்ச பாண்டவராகிய தர்மர், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் இவர்களது சிலைகளும் கர்ணனின் சிலையும் உள்ளன.

பாலமுருகன் கோயிலுக்குத் தென்புறம் லோகநாயகி எனும் உலகம்மன் வீற்றிருக்கும் அம்பாள் கோயில், கருப்பகிருகம், அர்த்த மண்டபம், அந்தரான அண்டபம், மணி மண்டபம், மாமண்டபம், பிரகார மண்டபம் இவைகளுடன்

விளங்குகின்றது. அம்மன் சன்னதி இரண்டாம் நிலைக் கோபுரத்திற்கு முன்பு திருக்கல்யாண மண்டபம் உள்ளது. இங்கு ஐப்பசி மாதம் உத்திர நாளில் அம்மனுக்கு திருமண விழா சிறப்புடன் நடைபெறும்.

இக்கோயிலின் திருவெளிச் சுற்றும் பிரகாரத்தின் வடபுறம் தென்னை மரங்களும் நந்தவனமும் உள்ளன. சுவாமி சன்னதி நந்தி மண்டபத்தின் தென்பகுதியில் திருக்கோயில் ஸ்தலவிருட்சமாகிய 'செண்பக' மரமும் வடபகுதியில் பலாமரமும் உள்ளன. திருக்கோயில் பெரிய திருமதிலைச்சுற்றி மாடவீதிகளும் அதனை அடுத்து ரத வீதிகள் நான்கும் அமைந்துள்ளன.

பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு

தென்காசிக் கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டியனைப் பற்றிய கல்வெட்டுக் கோபுரத் தென்சுவரில் உள்ளது.

"கோதற்ற பத்தி யறுபத்து மூவர் கூட்டத்திலோ
சீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ செம்பொன் அம்பலத்தோ
வேதத்திலோ, சிவலோகத்திலோ, விசுவனாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்கிரம பாண்டியனே"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பராக்கிரம பாண்டியன் திருக்கோயில் எடுப்பித்த புண்ணியத்தால் அறுபத்தி மூவருடன் நாயன்மார்கள் கூட்டத்திலோ சிற்றம்பலமாகிய வெள்ளி அம்பலத்திலோ பொன்னம்பலத்திலோ வேதங்களின் சபைகளிலோ சிவலோகத்திலோ விசுவநாதரின் இரு பாதார விந்தங்களிலோ புகுந்தான் எனப் பெருமைப்படுத்திக் குறிப்பிடப்படுகின்றது.

தீர்த்தம்

தென்காசித் திருக்கோயிலைச் சார்ந்த தீர்த்தங்களுள் முதன்மையானவையாக மொத்தம் ஏழு கூறப்படுகின்றது. உலகம்மை முன்புறம் ஆனந்த தீர்த்தம், பின்புறம் இருப்பது சகத்திரேச தீர்த்தம், கோவிலுள்ளே வடக்கே இருப்பது காசி தீர்த்தம், மடைப் பள்ளியில் இருப்பது அன்னபூரணி

தீர்த்தம் இவை ஐந்தும் அகத்தீர்த்தங்கள் ஆகும். கோவிலுக்கு வடகிழக்கில் இருக்கும் பொய்கையே ஈசான தீர்த்தம் எனப்படும். முக்கூடல் துறை முதலிய பல தீர்த்தங்கள் சித்ரா நதியில் அமைந்துள்ளன என்று கருதப்படுகின்றது.

தென்காசிக்குரிய பிற பெயர்கள்

தென்காசியைச் சச்சிதானந்தபுரம், முத்துத்தாண்டவநல்லூர், ஆனந்தக் கூத்தனூர் சைவமூதூர், தென்புலியூர், குயின்குடி, சித்தர்வாசம், செண்பகப் பொழில், சிவமணவூர், சத்தமாதரூர், சித்திர மூலஸ்தானம், மயிலைக்குடி, பலாலிங்கப்பாவு, வசந்தக்குடி, கோசிநகர் எனப் பல பெயர்களால் குறிப்பிட்டுள்ளனர்.

கோயில் உருவாகிய காலம்

பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து, பதினேழாம் நூற்றாண்டின் இறுதி வரை தென்காசி, பாண்டிய மண்டலத்தின் தலைநகரமாக விளங்கி உள்ளது. அதிலும் கி.பி. 1430 கி.பி. 1534 வரை மிகப் புகழுடன் விளங்கியதாகத் தெரிய வருகிறது. கி.பி. 1310ஆம் ஆண்டிற்குப் பின்னரே அதாவது மாலிக்காபூரின் மதுரைப் படையெடுப்பிற்குப் பின்னர்த் தான் தென்காசி பற்றிய செய்திகள் வரலாற்றில் தெரிய வந்தது. அரிகேசரி சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் கி.பி. 1411 முதல் கி.பி. 1463 வரை தென்காசியை ஆட்சி செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தென்காசிக் கோயிலைக் கட்டிய பராக்கிரமனைப் பற்றி,

"உடையார் விசுவநாதன் உத்தரகாசியில்
எழுந்தருளியிருந்த சிவாலயம் ஜீர்ண
மாகையாலே தென்னாரி நாட்டுச் சித்ர நதி
உத்திர தீர்த்தத்திலே தக்ஷிண காசியாக ஆலயம்
செய்து தரவேணும் என்று எங்கள் கர்த்தர்
பெருமாள் அரிகேசரி தேவர் என்ற திருநாமம்
உடைய பொன்னின் பெருமான் பராக்கிரம பாண்டிய
தேவர் இருந்தருளிய இடத்தின் உடனே
திருவுள்ளம் பற்றி அருளுகையாலே"

எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

சாலிவாகன சகாப்தம் *1368 - 1446* இல் தென்காசி விசுவநாதர் ஆலயம் எடுப்பித்தான். இதற்கு சான்றாகக் கோயில் கோபுரச்சுவர்க் கல்வெட்டுக்களில் பதினான்கு பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று,

"அன்பினுடன் சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று
அறுபத்தி எட்டின் மேல் வைய் காசித் திங்கள்
மன்தியதி ஈரைந்தில் பூவரு பக்க
மருவு தெசமி யில் வெள்ளி வாரந்தன்னில்
மின் திகழ உத்திர நாள் மீனத்தில் வாகை வேல்
அரிகேசரி பராக்கிரம மகிவன்
தென்திசையில் காசிநாதர் கோயில் காணச்
சென்று நின்று தரிசனை தான் செய்வித்தானே"

என்று கூறுகின்றது. சாலிவாகன ஆண்டுக்கு *(1368)* ஆங்கில ஆண்டு *77* அதிகம் (1367 + = 77 = 1445) அகி கி.பி. *1445* ஆம் ஆண்டே ஆலயம் எடுப்பிக்கப்பட்டுள்ளது. கி.பி. *1456*இல் மன்னன் பராக்கிரம பாண்டியனால் இராசகோபுரத் திருப்பணி துவக்கப்பட்டு ஆறு ஆண்டுக்குப் பின் திருப்பணி முடிவாகாமல் நின்றது. பின் பட்டத்திற்கு வந்த பராக்கிரம பாண்டியனின் தம்பி சடையவர்மன் குலசேகர பாண்டியன் இராசகோபுரத் திருப் பணியை மீண்டும் ஆரம்பித்து கி.பி. *1505* இல் முடித்ததாக வரலாறு கூறுகிறது.

"விண்ணாடர் போற்றும் தென்காசி
பொற் கோபுர மீதில் எங்கள்
அண்ணாழ்வி செய்த பணி
இப்படி குறையாய்க் கிடக்க
ஒண்ணாது என கண்டுயர்ந்த
தட்டோ டெங்கு மூன்று வித்தான்
மண்ணாளும் மால் அழகன்
குலசேகர மன்னவனே" - எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

குலசேகரப் பாண்டியனால் ஊரின் கிழக்கே குலசேகர நாதர் என்னும்

சிவாலயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பராக்கிரம பாண்டியன் காலத்திலும் குலசேகர பாண்டியன் காலத்திலும் எடுக்கப்பட்ட இராசகோபுரம் கி.பி. 1824 - 1825 இல் சிதைந்து பல ஆண்டுகள் மொட்டைக் கோபுரமாகவே நின்று பின் 1990ஆம் ஆண்டு ஒன்பது நிலை இராசகோபுரம் எடுக்கப்பட்டுக் குடமுழுக்கும் நடத்தப்பட்டது.

கல்வெட்டுக்கள்

தென்காசிக் கோயிலில் அநேகக் கல்வெட்டுக்கள் உள்ளன. பெரும்பாலானவை 16, 17ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பாண்டிய மன்னரையும், இக்கோவில் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டிய மன்னரையும் அவர் வம்சத்தாரையும் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுக்களை எடுத்தெழுதிச் சென்னை அரசாங்கம் கல்வெட்டு இலாகா அதிகாரிகள் 1948ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி ஜி.ஏ. 1172 இல் வெளியிட்டிருக்கின்றனர். இராபர்ட் சூ வெல் எழுதி அரசாங்க ஆணைப்படிச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள தென் இந்திய சரித்திர சாசனங்கள் என்ற நூலில் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் தவிரக் கிழக்கேயுள்ள குலசேகரமுடையார் கோயில் சுவர்களிலும் சிதம்பரேஸ்வரர் கோயில் சுவர்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

"எண் 480 சகா 1489 ஜடிலாவர்மன் ஸ்ரீவல்லவதேவன் தெஷணகாசி கீழ்ப்பக்கம் சிற்றாற்றின் வடகரையில் குலசேகர நாதர் குழல்வாய்மொழி மங்கை நாச்சியார் கோயில்களும் சுற்றுக் கோயில்களும் கட்டி நித்திய பூசைகள் நடைபெற நிலங்கள் மானியம்'' என்னும் கல்வெட்டுக் குலசேகரநாதர் ஆலயம் பற்றிக் கூறுகிறது.

விண்ணவரம் பெருமாள் கோவிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் ஸ்ரீவல விண்ணவர் எம்பெருமான் என்ற அழகர் கோயில் கட்டி நிலங்களை அளித்தது.

"எண் 500 சகா 1493 இக்கோயிலில் விழாக்களும் ஸ்ரீபலிக்கும் நிலம் அளித்ததும் கோயில் முன் ராமானுஜக் கூடம் கட்டி நிலம் அளித்ததும்'' கூறப்பட்டுள்ளது.

செண்பகாதேவி அம்மன் கோவில்

செண்பகாதேவி அம்மன் கோவில், திருக்குற்றால மலையின் மேலுள்ளது. செண்பக அருவிக்கு அருகிலுள்ள இந்த அம்மன், சக்தியின் திருவுருவாக அமைந்துள்ளது. செண்பக வனத்தில் எழுந்தருளியிருக்கும் அம்மன், செண்பகாதேவி என்னும் திருப்பெயருடன் அங்குச் செல்வோர்க்கு அருள்புரிந்து வருகின்றது.

தாய்த் தெய்வ வழிபாடு

பண்டைக் காலந்தொட்டே மக்களிடையே தாய்த் தெய்வ வழிபாடு வழக்கத்தில் இருந்துள்ளது. தாயாகவும் கன்னியாகவும் வழிபட்டனர். தைத்திரிய ஆரண்யகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே தாய்த் தெய்வ வழிபாடு இருந்ததாகக் கூறுகின்றது. இந்தியாவில் தாய்த் தெய்வ வழிபாடு இருந்தமையைச் சிந்து கங்கைச் சமவெளி அகழ்வாய்வும் உணர்த்துகிறது.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கண இலக்கியங்கள் தாய்த் தெய்வத்தைப் பற்றிக் கூறுகின்றன. தொடக்கத்தில் கொற்றவையைத் தாய்த் தெய்வமாக வழிபட்டனர். இந்தியஆரியரது கலப்பால் காளி வழிபாடு தோன்றியது.

"கானமர் செல்வி அருளலின்" (அகம் - 345)

"காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை"
(- பொருநராற்றுப் படை, 41-42)

"வெற்றி வெல் போர்க் கொற்றவன் சிறுவ" (- திருமுருகாற்றுப்படை)

"மோடியுறையுங்காடு" (- தக்கயாகப் பரணி)
ஆகிய நூல்கள் கொற்றவை பற்றிக் கூறுகின்றன.

"பொதியின் மலைச் சந்தனமும் காடும், இமயத்து அகில் வனமும் தாய்த் தேவி எழுந்தருளியிருக்கும் வனமாதலால் மற்ற மரங்கள் இக்காடுகளில்

இல்லை" என்று தக்கயாகப்பரணி கூறுவதினின்றும் ஒரே வகை மரங்கள் வளரும் காடுகள் தேவிக்குரியவையாகக் கருதும் கோட்பாடு இருந்தமை தெளிவாகின்றது. செண்பகாதேவி எழுந்தருளும் காடும் ஒரே வகையான செண்பக மரங்கள் சூழ்ந்த அடவியே. எனவே இப்பகுதியை அம்மன் எழுந்தருள ஏற்ற இடமாகக் கருதியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

கோயில் அமைப்பு

செண்பகா தேவி அம்மன் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்னும் அமைப்புடன் உள்ளது. கருவறை செண்பகாதேவி அம்மனைக் கொண்டு இலங்கினும் வாலைக்குமரி, திரிபுரசுந்தரி போன்ற தாய்த் தெய்வங்களையும் கொண்டுள்ளது. 1996-ஆம் ஆண்டு சனவரி மாதம் இக் கோயிலுக்குக் குடமுழுக்கு நடந்தேறியது.

கோயில் தோன்றிய வரலாறு

அடர்ந்த சோலை வனத்தில் அமர்ந்துள்ள செண்பகா தேவி அம்மன் தோற்றத்திற்குப் பல்வேறு கதைகள் வழங்குகின்றன. இக்கோயிலுடன் செங்கோட்டைப் பிச்சைக்கண்ணு மூப்பனார் வகையராக்கள் தொடர்புபடுத்தப்படுவதினின்றும் இக்கோயில் எழுவதற்கு அவர்கள் காரணமாக இருந்துள்ளனர் என்பது முடிவாகிறது.

திருக்குற்றாலக் கோயிலில்தான் தொன்மையில் இந்த அம்மன் கோயில் கொண்டிருந்தாள் என்று கூறுகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் திருவிழா முடிந்த பிறகு பூசை செய்த குருமார் சிவபதி அடைவது வழக்கமாக இருந்ததால் நன்கு முதிர்ந்தவருக்கே காப்புக் கட்டி விழா நடத்தச் செய்துள்ளனர். தொடர்ந்து நடக்கும் துன்ப நிகழ்வினைத் தடுத்து நிறுத்துவதற்குக் கேரளாவினின்றும் நம்பூதிரி அழைக்கப்பட்டுப் பிரசன்னம் கேட்டுள்ளனர். இத்தீநிமித்தத்திற்குக் காரணம் அம்மையின் மிகுந்த சக்தியே என்பது உணரப்பட்டதாம். அன்னையும் "நான் குற்றாலநாதர் தங்கை. என்னை ஒரு பொன் செம்பில் ஆவாகனம் செய்து செண்பகக் காட்டில் புதைத்து விடுங்கள் நான் 100 ஆண்டிற்குப் பின் வெளிப்படுவேன்" என்று கூறியதையும் மனதில் கொண்டு ஆவாகனம் செய்யப்பட்ட குடத்தினைக் கொண்டு செண்பகக்

காட்டில் புதைத்து வைத்தனர்.

செங்கோட்டைப் பிச்சை மூப்பனார் வகையராக்களுள் ஒருவர் மாடு மேய்க்க நாளும் செல்வது வழக்கம். அவ்வாறு சென்று வரும் போது ஒரு நன்னாளில் ஒரு பொன் குடம் வெளியே வந்துள்ளது. அம்மாடு மேய்க்கும் அன்பர் புதையல் என்று எண்ணிக் கொண்டிருந்த போது வானின்றும் ஒரு குரல் எழுந்தது. 'கோயில் அமைத்து என்னைப் பிரதிட்டை செய்து வழிபாடு செய்' என்றது அக்குரல். அவரும் அக்குடத்தைப் பிரதிட்டை செய்து ஒரு சிறு மண்டபம் கட்டி வழிபட்டார் என்று கூறப்படுகின்றது. காடுறை தெய்வமாகச் செண்பகாதேவி இருப்பதால் காட்டில் வாழ்வதையே அந்த அன்னை விரும்பினாள் என்னும் கதை பொருத்தமானதாகவே உள்ளது. நாட்டுப்புறக் கதைகள் எல்லாம் ஓர் உண்மையை மையமிட்டே பின்னப்பட்டுள்ளன என்பது உறுதி.

ஆதியில் செண்பகக் காட்டில் சூலம், தண்டுடன் கூடிய ஒரு குத்துக்கல்லையே அம்மையாக எண்ணி வழிபட்டிருந்துள்ளனர்.

செங்கோட்டையைச் சார்ந்த பெரியசாமி என்பவர் அங்கு அடக்கம் ஆகியுள்ளார் என்றும் கூறுகின்றனர். இவர் செங்கோட்டைப் பிச்சைக்கண்ணு வகையராவைச் சேர்ந்தவர் என்றும் அன்னையை வழிபட நாளும் வரும் இவர் இறுதியில் இங்குத் தங்கி அன்னையின் அருள் பெற்று வாழ்ந்து முக்தியடைந்துள்ளார் என்றும் கருத்துக்கள் நிலவுகின்றன. இந்தப் பெரியசாமிக்கு அன்னை 100 ஆண்டுக்குப் பிறகு வெளிப்பட்டுக் காட்சி அளித்தாள் என்றும் கூறுகின்றனர்.

ஔவையார்க் குகை

செண்பகா தேவி அம்மன் கோயிலுக்கு அருகில் ஔவையார்க் குகை உள்ளது. இக்குகையில் முள்ளிக் குளத்தைச் சார்ந்த சடச்சிப் பாட்டி என்பவர் வெகுகாலம் வாழ்ந்து வந்துள்ளார். இவர் முள்ளிக்குளம் கோனார் வம்சத்தைச் சார்ந்தவர். கணவனை இழந்து ஞானம் பெற்றுத் தான் இருக்க வேண்டிய இடம் செண்பகாதேவி ஔவையார்க் குகையே என்பதை உணர்ந்து வந்ததாகக் கூறுகின்றனர்.

ஏழு குளத்து மண் கொண்டு செய்யப்பட்ட இரண்டு மண் பீடங்கள் இக்குகையில் உள்ளன. குற்றாலத்தைச் சுற்றியுள்ள கிராமத்துப் பெண்கள் ஒன்று கூடிவந்து இக்குகையில் ஔவையார் நோன்பு நோற்றுச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

பாறைகள்

செண்பகா தேவி அம்மன் கோயிலுக்கு மேல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எண்ணற்ற செய்திகள் புதைந்து கிடக்கின்றன. தெற்கு மலை எஸ்டேட்டில் அடுக்காலப் பாறை என்னும் பகுதியில் தட்சிணா மூர்த்தி, அகத்தியர், லாட சந்நியாசி சிற்பங்கள் உள்ளனவாம். வருடத்திற்கு ஒரு முறை வழிபாடு அங்கு நடத்தப்படுகின்றது. பரதேசிப் பாறை என்பது ஞானியர் தவம் செய்த இடமாகும். தெய்வ அருள் பெற்றவருக்கே இந்தப் பாறை இடம் அளிக்கும்; போலிச் சாமியாரை இனம் கண்டு வெளியேற்றிவிடும் மகத்துவம் கொண்டது இப்பாறை என்கின்றனர். நீர் நிலையுடன் கூடிய இப்பாறையில் தமிழ் எழுத்து முறைமாறி எழுதப்பட்டுள்ளது. இங்குக் கோயிலுக்கு அருகில் தட்சிணாமூர்த்தி குகை உள்ளது. 'பரதேசி' என்றால் வெளிநாட்டார் என்பது பொருள். அந்நியர் இப்பாறையில் தங்கியிருந்துள்ளனர் என்பது உறுதி.

பூசைகளும் விழாக்களும்

செண்பகா தேவி அம்மனுக்குத் தினபூசையும் விழாக் காலங்களில் சிறப்பு வழிபாடும் உண்டு. பௌர்ணமி பூசை சிறப்பாக நடைபெறுகின்றது. சித்ரா பௌர்ணமிக்கு அனைத்துத் தெய்வங்களுக்கும் காப்புக் கட்டிச் சிறப்பாக விழா நடைபெறுகின்றது. சித்ரா பௌர்ணமியில் அகத்தியர், சிவசக்தி திருமணக் காட்சியைக் கண்டு மகிழ்ந்ததாகக் கருதுகின்றனர். ஆதியில் இச்சித்ரா பௌர்ணமியில் மஞ்சள் மழை பெய்ததாகக் கூறுகின்றனர்.

காஜிமேசர்புரம், இலஞ்சி, கட்டளைக் குடியிருப்பு, செங்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள அன்பர்கள் விழாப் பொறுப்பாளர்களாக இருக்கின்றனர்.

செண்பகவனத்தில் உறையும் அன்னை ஆதிசக்தி அனைவரையும் காத்தருளும் காடுறை தெய்வம். இத்தெய்வத்தை நாடிச் சென்று தவம் மேற்கொள்பவர்களுள் பெண்களும் உண்டு என்பது குறிப்பித்தக்கது.

கூத்தர் ஆலயம்

கூத்தர் ஆலயம், ஐந்தருவிக்குச் செல்லும் வழியில் குற்றாலம் காவல் நிலைய பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலுள்ளது. இக்கோயில் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இதை ஆதியில் தோன்றிய கோயில் என்று கூறுகின்றனர். அகத்தியர் குற்றாலம் வந்தபோது இக்கூத்தர் ஆலயப் பெருமானைத் தரிசனம் செய்துவிட்டுப் பழையகுற்றாலம் சென்றதாக மக்கள் கூறுகின்றனர்.

சின்னணஞ்சாத் தேவர் அவர்கள் இப்பகுதியில் வேட்டைக்கு வந்தபோது சின்னணஞ்சா என்று பெயரிட்டு அழைத்த குரலை கேட்டுத் திடுக்கிட்டு நம்மைப் பெயர் இட்டு அழைப்பது யார்? என்று எண்ணியிருந்த போது ஆலமர் செல்வன் குற்றாலநாதன் சித்திர சபையில் அன்னைக்காக ஆடியவன் எனக்குக் கோயில் எழுப்பவும் என்று கூறியதாகவும் கதை வழங்குகின்றது.

சித்திர சபைக்குச் செல்லும் வழியில் அமைந்திருக்கும் இத்திருக்கோயிலில் கூத்தர் பெருமான் குழல்வாய்மொழியுடன் அமர்ந்தருள் புரிகின்றார். கருவறையும் முன்மண்டபமும் கூடிய சிறிய கோயிலாகக் கூத்தர் ஆலயம் உள்ளது. இறைவன் கருவறை கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கக் குழல்வாய் மொழி கருவறை தெற்கு நோக்கியுள்ளது.

குற்றாலநாதர் கோயில் தோன்றுவதற்கு முன் தோன்றிய பழமையான திருக் கோயிலாகக் கூத்தர் ஆலயம் கருதப்படுகின்றது. திருக்குற்றாலத்தில் எண்ணற்ற கோயில்கள் உள. குற்றாலம் ஒரு வரலாற்று மையம். அகழ்ந்தெடுத்தால் ஆயிரம் உண்மைகளைக் காணலாம்.

மன்னர்களும், வள்ளல்களும் வாழ்ந்த குற்றாலம் வளமான புண்ணிய பூமியாக இருந்ததால் சான்றோர்கள் கோயில்களை எழுப்பிச் சமயத் திருத் தொண்டு செய்துள்ளனர். ஆயிரம் விஞ்ஞான அற்புதங்கள் நடந்தாலும்

ஆன்மாவிற்கு முதலிடம் கொடுக்கும் பூமியாகக் குற்றாலம் விளங்கியுள்ளது என்று கூறுவது மிகையன்று. நீர்வளமும், நிலவளமும் கொண்ட குற்றாலத்திற்கு ஒப்பு வேறு ஒன்று உண்டோ?

இலஞ்சிக் குமார கோயில்

இலஞ்சி என்னும் சிற்றூர் என்பது திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி வட்டத்தில் குற்றாலம் அருகில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. குற்றாலத்திற்கு அருகிலிருக்கும் தொன்மை வாய்ந்த ஊர். அகத்திய முனிவரால் பிரதிட்டை செய்யப்பட்ட இரு வாலுக நாயகரென்னும் சிவலிங்கப் பெருமான் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார்.

இலஞ்சி என்ற சொல் ஏரி, குளம், மடு, பொய்கை, மதில், மகிழமரம் எனப் பல பொருள்படும். அருணகிரிநாதர்,

"இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று இலஞ்சி ய்மர்ந்த பெருமானே "

என்று உணர்ச்சி ததும்பப் பாடியுள்ளார். கவிராயர் அவர்கள் "தாமரை மாமலர் இலஞ்சி தனிற் பூத்து" என்று குறிப்பிடுகின்றார். பண்டைய நாள் முதல் இன்று வரை 'இலஞ்சி' என்னுஞ் சொல் பொருள் வேறுபாடின்றி அருள் கொடை அழகு வாய்ந்த நீர் நிலையை முக்கியமாக உணர்த்தி வருகிறது.

இலஞ்சி என்னும் கிராமம் நான்கு பக்கங்களும் நீரினாலும் வயல்களாலும் சூழப்பட்டுள்ள அழகிய கிராமமாக உள்ளது. மா, பலா, வாழை, கமுகு, தென்னை முதலிய மரங்கள் செறிந்த சோலைகளால் சூழப்பட்டது. தெற்கே சிற்றாறு என்னும் சித்திரா நதியும் வட்க்கே வடக்காறு என்னும் செங்கோட்டையாறும் பாயும் நீர்வளம் நிரம்பிய நிலவளமுடையது.

'சோலை வளைந்து சாலி விளைந்து சூழும் இலஞ்சி' என்ற திருவாக்கின் படி எம்மருங்கும் செந்நெற் பயிர் செழித்து வளரும் செல்வமிக்க பூமி. கல்வி, நாகரிகம் ஆகியன இணைந்து விளங்கும் ஊர்களுள் இதுவும் ஒன்று. மீறு

இலஞ்சி, பொன்னிலஞ்சி, தென்னிலஞ்சி என்று கவிகளால் புகழப்பட்டது.

இலஞ்சி என்னும் ஊர் தொன்மையில் குமாரர் கோயிலுக்கு அருகிலேயே இருந்ததாகவும், இப்போதுள்ள இலஞ்சி பின்னால் தோன்றியதாகவும் செய்திகள் நிலவுகின்றன. இலஞ்சி ஊரில் தொண்டைமான் என்ற பெயருடைய அரசன், கோட்டை, கொத்தளங்களுடன் இங்கிருந்து ஆண்டதற்குரிய சில சான்றாதாரங்கள் உள்ளன. அக்கோட்டைத் தளவரிசை அண்மைக்காலத்தில் இடிக்கப்பட்டதாக நாறும் பூநாத தேசிகரவர்கள் கூறியுள்ளார். இன்றும் யானை கட்டிய கட்டுத்தறி காணப்படுகின்றது. கோட்டைக் கிணறு கோட்டை மாடன் முதலிய பெயர்கள் நிலவுகின்றன. இவ்வூருக்குத் தெற்கே குற்றாலம் சாலையின் கீழ்ப்புறமுள்ள குளம் தொண்டைமான் குளம் என்று இன்றும் அழைக்கப்படுவது இதற்குச் சான்றாகும்.

திருக்குற்றாலத்திற்கும் இலஞ்சிக்கும் இடையில் ஐந்தருவியும் சிற்றாறும் கலக்குமிடத்தில் கிழக்கே சோலையும் வயலுஞ் சூழ்ந்த இடத்தில் இக்குமார கோயில் அமைந்துள்ளது. தென்காசி இரயில் நிலையத்தில் இருந்து தென்மேற்கே 2½ மைல் தூரத்திலும் இலஞ்சி ஊருக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்திலும் குற்றாலத்துக்கு வடக்கே 1½ மைல் தூரத்திலுமிருக்கின்றது. இலஞ்சி குற்றாலம் சாலை கோயிலுக்கு மேற்குப்புறம் செல்கின்றது.

சிற்றாறு வலம் வந்து கோயிலின் வனப்பை மிகுவிக்கின்றது. இந்நதியில் நீராடுவதற்குரிய படித்துறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. மண்டபங்களும் உண்டு. கோயிலைச் சுற்றி உள்ள செறிந்த மரங்கள் சூரியனின் கதிரினை உட்புகவிடுவதில்லை. அதனால் என்றும் குளிர்ந்த நிழல் சூழ்ந்த எழில் மிக்க இத்திருக்கோயில் கண்ணுக்கு விருந்து.

இக்கோயில் திருக்குற்றாலக் கோயிலோடு தொடர்புடையது. இதன் கீழ் மேல் நீளம் அடி 285; தென்வடல் அகலம் அடி 176.

கோயிலின் கிழக்கு வாயில் முதன்மை வாயிலாக அமைந்துள்ளது. மேற்கு வாயில் நதியினை நோக்கி உள்ளது. நுழைவாயிலை அடுத்துள்ள நடைபாதையில் வலப்புறம் கல்யாண மண்டபமும், இடப்புறம் விருட்சத்துடன்

கூடிய சிறிய சோலையும் உள்ளது. இக்கோயிலுக்கு மகிழமரம் தலவிருட்சமாக விளங்குகின்றது.

நடைபாதையினைக் கடந்த உடன் கொடி மர மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தைக் கடந்தவுடன் இரண்டாவது நுழைவாயில் உள்ளது. இரண்டாவது நுழைவாயிலை அடுத்துத் திருச்சுற்று மாளிகையைக் கடந்து மூன்றாவது நுழைவாயிலை அடைந்தால் இறைவனின் கருவறை அர்த்த மண்டபம், மகாமண்டபம் உள்ளன. இங்கு எழுந்தருள் பாலிப்பவர் இரு வாலுக நாயகர் ஆவார். இவர் இலிங்க வடிவில் உள்ளார். அன்னை குழல்வாய்மொழி தெற்கு நோக்கி நின்றருள் செய்கின்றார். இக்கோயிலின் இடதுபுறம் முருகப் பெருமானின் அழகிய திருக்கோலம் பக்தர்களைப் பரவசமடையச் செய்கிறது.

திருமாளிகைச் சுற்றின் தென்புறம் தெக்ஷணாமூர்த்தி, அறுபத்து மூவர், அபிராமி, வராகி, சாமுண்டி, மகேஸ்வரி, நாராயணி, இந்திராணி, கௌமாரி முதலிய சப்தமாதர்களும் சுரதேவர் முதலியோரும் பக்தர்கள் வழிபட்டு அருள் பெற வீற்றிருந்தருள்கின்றார்கள். மேற்குத் திருச்சுற்றில் கன்னி விநாயகர், வள்ளி தேவயானையுடன் உற்சவமுருகன், வேணு கோபாலர் காசி விஸ்வநாதர், விசாலாட்சி, திருக்குற்றாலநாதர், குழல்வாய்மொழியம்மை அகத்தியர், ஐயனார், சப்த கன்னிகள், ஆறுமுக நயினார் முதலியவர்களின் திருவுருவங்கள் உள்ளன. வடக்குச் சுற்றில் சனீஸ்வரர், சண்டேஸ்வரர், உற்சவ ஆறுமுகநயினார், வயிரவர் ஆகியோர் அருள்புரிகின்றனர்.

நடராசப் பெருமான் அம்மன் சந்நிதிக்கு மேற்கிலிருக்கிறார். உற்சவமூர்த்தி இருவாலுக நாயகர், மூலவருக்கு வலப்பக்கத்திலிருக்கிறார். இறைவன் குமாரர் இருவர் சந்நிதிகளும் தனித் தனியே கிழக்கில் உள்ளன. இவ்விரு சந்நிதிகளுக்கு முன் முறையே நந்தியும் மயிலும் இருக்கின்றன. தனித் தனியே கொடி மரமும் உண்டு.

குமாரக் கோயிலின் திருவெளிச் சுற்று மிகப் பிரமாண்டமாக மரங்களாலும் செடிகளாலும் சூழப்பட்டுள்ளது. தெங்கு, செண்பகம், கொன்றை முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து அணிவகுத்து நிற்கின்றன. மற்றொரு பக்கம் பிச்சி, முல்லை, அல்லி, ரோஜா முதலிய செடிகள் படர்ந்து

மலர்ந்து மணம் வீசும். இக்கோயிலின் திருவீதிகள் சாலி கொழிக்கும் கழனிகளைச் சூழ்ந்தும் உயர்ந்த மரங்கள் தழுவியும் வெண்முகிலும் கருமுகிலும் குடைப்பிடிக்க இருக்கும் சால்புடையன.

திருப்பணி

குமாரக் கோயில் மிகத் தொன்மையானது. திருக்குற்றால நாதர் கோயில் தோன்றுவதற்கு முன்பே இக்கோயில் தோன்றியதாகக் கருதுகின்றனர். ஆயின் கோயிற் கட்டடங்கள் எப்பொழுது எழுந்தன என்பதை அறியச் சான்றுகள் இல்லை. கி.பி. *1409*- ஆம் ஆண்டு மாறவர்மன் குலசேகர பாண்டிய மன்னன் இக்கோயிலைப் பழுது பார்த்து விரிவாகக் கட்டினான் என்று *1911* ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற ஒரு கல்வெட்டு வழி அறியக் கிடக்கின்றது. சுற்றுப் பிரகாரம் வடகரை ஆதிக்கம் சொக்கம் பட்டி ஜமீன்தார் மூன்றாம் பட்டம் காளத்தியப் பாண்டியனால் கொல்லம் ஆண்டு *658* இல் *(கி.பி. 1483)* ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு *660* -இல் *(கி.பி. 1485)* முடிக்கப்பட்டது. இதற்குச் செலவு சுமார் *7000* பொன் ஆகியிருக்கிறதென்று தெரிகிறது. இவர் காலத்திலேயே சிற்சில திருப்பணிக் குறைகளும் பூர்த்தியாகின.

இலஞ்சி சுப்பிரமணிய பிள்ளை குமாரர் முத்துக்குமாரசுவாமியா பிள்ளை என்ற ஓர் அன்பர் கோவில் மேலவாசல் கட்டி வைத்தார். சில கட்டளைகளையும் ஏற்படுத்தினார். அவர் உறவினர் சோமசுந்தரம் பிள்ளை என்பவர் நதியில் படித்துறையும் மடமும் கட்டி நிலமும் நிதியுங் கொடுத்தார். மேற்கூறிய முத்துக் குமாரசுவாமியா பிள்ளையின் மகனார் சுப்பிரமணிய பிள்ளை என்பவர் கோவிலுக்குச் செல்லப் பாதை அமைத்தும் பாலம் கட்டியும் கோயிலைச் சுற்றி மதிற்சுவர் அமைத்தும் வெள்ளி மயில் வாகனஞ் செய்வித்தும் இறைவன் அருள் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

கோயில் வரலாறு

திருப்பணிகள் பற்றிய குறிப்புக்களைத் தவிரப் பிற கல்வெட்டு ஆதாரங்கள் இன்றளவும் குமாரக் கோயிலைப் பற்றியில்லை என்றே கூற வேண்டியுள்ளது. ஆனால் திருக்குற்றாலத் தலபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் இலஞ்சி

முருகன் உலா மற்றும் சில தனிப் பாடல்கள் இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

"புரந்தரன் மகளை வெற்பின் புள்ளிமான் மகளை வேட்டுப்
பரங்கிரி தனிலே மேவிப் பரவுகுன்றிடந் தோறாடி
வரங்கெழு கயிலை நண்ணிக் கந்தவெற் புறை தன்மான
வரன் றிரி கூடம் போற்றி இலஞ்சியிலமர்ந்தான் ஐயன்"

என்று திருக்குற்றாலத் தலபுராணமும்

"கற்பக நா டாளி கருதி யிணைமலர்த்தாள்
அற்பகலு நாடி யருச் சித்துப் - பொற்புடனே
போற்றாரை யெங்கோன் பொருதுவெல்லப் பொன்னாட்டை
மாற்றா தடி வணங்கி வாழ்ந்திருந்தான் - ஏற்றார் வாழ்
குற்றாலமிந்தக் குவலயத்துண் டாகு முன்னே
பற்றாயிருந்த பழைய பதி"

என்று திரு இலஞ்சி முருகனுலாவும் திருக்குமாரக் கடவுளின் சிறப்பினைத் தொண்டர்கள் கேட்டரருள் பெறப் பாடியுள்ளன.

பிற்காலத்தில் அருணகிரி நாதர் வந்து இக்கோயிலை வழிபட்டிருக்கிறார். பிரமதேவர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர் என்றும் இந்திரன் அருச்சித்து வாழ்ந்த இடம் என்றும் புராணங்கள் கூறுகின்றன. காசிப முனிவர் கபிலமுனிவர், துருவாச முனிவர் ஆகியோருக்குத் தத்துவப் பொருள்களின் நுணுக்கங்களை அருளியவர் இலஞ்சியில் இன்று கலியுக மக்களுக்கு நின்றருள் புரிகின்றார்.

பூசை விழாக்கள்

குமாரர் கோயிலில் தினந்தோறும் திருவனந்தல், விழாபூஜை, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்று ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத் திருவிழா பத்து நாட்கள் சிறப்பாக

நடைபெறுகின்றது. மாசி மாதம் மேலகரத்தில் நடக்கும் நாள் கதிர் கொள்வதற்குக் குற்றாலம் தென்காசி கோயில்களிலிருந்து வருகின்ற அஸ்திர தேவர்களுடன் இங்குள்ள அஸ்திரதேவரும் செல்வார். மாசிமகத்தில் பக்தி யுலாத் திருநாள் நடைபெறுகின்றது. தைமாதம் இரண்டாம் நாளும் விஜயதசமி அன்றும் பாரி வேட்டை நடக்கும். ஒவ்வொரு மாதக் கார்த்திகைத் திரு நட்சத்திரத்திலும் குமாரருக்குச் சிறப்பு வழிபாடு நடந்து வருகிறது.

ஐப்பசி மாதம் கந்த சஷ்டித் திருநாள் நடக்கும். முதல் நாள் அயனாகவும் இரண்டாம் நாள் அரியாகவும் மூன்றாம் நாள் அரனாகவும் நான்காம் நாள் மகேஸ்வரனாகவும் ஐந்தாம் நாள் சதாசிவனாகவும் கோலங் கொள்வார். ஆறாம் நாள் வெள்ளி மயிலூர்தியேறிச் சூர சங்காரஞ் செய்வார். இங்குச் சூரர் வேடம் அணிபவர் திருநாள் தொடங்கும் நாளிலிருந்து விரதமிருந்து சஷ்டியன்று புராண வர்லாற்றுப் படிப் படைகள் திரட்டி எதிர்த்துப் போர் புரிவது காணத் தக்க காட்சியாகும். இவ்விழாவைப் பற்றித் திருக்குற்றாலக் குறவஞ்சி,

“மீறுலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்
வேட் குறவன் முதல் வேட்டைக்குப் போன நாள்
ஆறுநா ட்கூடி யொரு கொக்குப்பட்டது
அகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியிற்
சாறாக வைத்தபின் வேத ப்பிராமணர்
தாமுங்கொண்டார் சைவர் தாமுங் கொண்டார் தவப்
பேறா முனிவரு மேற் கொண்டார்”

என்று பாடுகின்றது.

திருக்குற்றாலத் திருக்கோயிலுக்கும் இலஞ்சிக் குமார கோயிலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைப் புராணங்கள் வழி அறியமுடிகின்றது. திருக்குற்றாலத் திருநாட்களுக்கு இலஞ்சி முருகப் பெருமான் எழுந்தருளி மீளும் வைபவங்கள் உள்ளன. இரண்டு ஆலயங்களும் பல் வகையிலும் இணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கது. சைவம் தழைத்தோங்கிய காலத்துக் கிராமங்களும் ஆற்றோரங்களும் மலையடி வாரங்களும் திருக்கோயில்களைக் கொண்டு எண்ணற்ற சைவப் பணிகளும் தமிழ்ப்

பணிகளும் செய்து மக்களைப் பண்படுத்தின.

சமயம் என்பது பண்பை வளர்ப்பது; கட்டுப்பாட்டினையும் நன்னெறியினையும் போதிப்பது; அலை மோதும் மனதை ஒரு முகப்படுத்துவது; வாழ வழிவகுப்பது; நாகரிகத்தைப் போதிப்பது; மனிதனை மனிதனாக வாழச் செய்வது; தன்னலமற்ற தொண்டினைச் செய்யத் தூண்டுவது; அன்பு உள்ளத்தை வளப்பது; அனைவரையும் அரவணைத்துச் செல்வது; கருணை ஊற்றினை உருவாக்குவது; சுய நலத்தைத் தகர்ப்பது; நான் என்னும் அகங்காரத்தை அகழ்வது; அத்தகைய சிறப்பு மிக்க சமயமாம் சைவம் தழைத்தோங்கக் குற்றாலமும் இலஞ்சியும் செயலாற்றின என்பது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும்.

குற்றாலத் திருக்கோயில் விக்கிரகங்களின் விவரப் பட்டியல்

விக்கிரகம்	உலோகம்	உயரம்
சபாபதி	ஐம்பொன்	105 செ.மீ
சிவகாமியம்மன்	,,	77 செ.மீ
மாணிக்கவாசகர்	,,	53 செ.மீ
காரைக்கால் அம்மையார்	,,	27.5 செ.மீ
கீழச்சபாபதி	,,	82 செ.மீ
கீழச்சிவகாமியம்மன்	,,	78 செ.மீ
கங்காள நாதர்	,,	61 செ.மீ
சந்திரசேகரர்	,,	84 செ.மீ
கோமளவல்லியம்மன்	,,	56 செ.மீ
அப்பர்	,,	54 செ.மீ
சுந்தர மூர்த்தி நாயனார்	,,	77 செ.மீ
திருஞான சம்பந்தர்	,,	57 செ.மீ
சேரமான் பெருமாள்	,,	63 செ.மீ
அகத்தியர்	,,	52 செ.மீ
ஸ்ரீபலி நாயகர்	,,	37 செ.மீ
அஸ்திரத் தேவன்	,,	55 செ.மீ
மனோன்மணி அம்பாள்	,,	91 செ.மீ
விநாயகர் (நிற்றல்)	,,	60.5 செ.மீ
சுப்பிரமணியர்	,,	56 செ.மீ
தெய்வயானை	,,	48 செ.மீ
வள்ளி	,,	47 செ.மீ
சண்டேஸ்வரர்	,,	60 செ.மீ

சோமாஸ்கந்தர்

சிவன்	ஐம்பொன்	65 செ.மீ
சோமாஸ்கந்தர்	,,	29 செ.மீ

பார்வதி	”	53 செ.மீ
குழல்வாய்மொழி அம்மன்	”	91 செ.மீ
விநாயகர் (இருக்கை)	”	16 செ.மீ
அதிகார நந்தி	”	56 செ.மீ
ருக்மணி	”	73 செ.மீ
சத்யபாமா	”	71 செ.மீ
பழைய குழல்வாய்மொழி அம்மன்	”	85 செ.மீ

பழைய சோமாஸ்கந்தர்

சிவன்	”	56 செ.மீ
சோமாஸ்கந்தர்	”	33 செ.மீ
பார்வதி	”	47 செ.மீ
அம்மன் சொக்கர்	”	12 செ.மீ
சுவாமி சொக்கர்	”	12 செ.மீ
சபாபதி (சித்திர சபை)	”	69 செ.மீ0
சிவகாமி அம்மன் - சித்திர சபை	”	59 செ.மீ
அழகிய நாச்சியார் (இருக்கை)	”	17 செ.மீ
செண்பகவல்லி	”	47 செ.மீ
திருநீலகண்டர்	”	47.5 செ.மீ
அன்னபூரணி	”	48 செ.மீ
திருஞான சம்பந்தர்	”	41 செ.மீ

கல் விக்கிரகங்களின் பெயர்

திருக்குற்றாலநாதர் (மூலஸ்தானம்) அனுக்ஞை விநாயகர் சிவலிங்கம் மற்றும் அம்மன்

சுவாமி சன்னதி கோவிலில் உட்பிரகாரத்திலுள்ள விக்கிரகங்கள்

அதிகார நந்தி, அம்மன், சிவன் மற்றும் அம்மன், சூரியன்,

தெற்குப் பிரகாரத்தில் தென் வரிசையில் சிறிய சுவாமிகள் விக்கிரகங்கள்-25.

தெட்சிணாமூர்த்தி
கன்னி விநாயகர்

சந்திரன்
வான்மீக நாதர் மற்றும் அம்மன்
சம்புகேஸ்வரர் மற்றும் அம்மன்
அண்ணாமலைநாதர், அம்மன் மற்றும் நந்தி
காளத்தியப்பர், அம்மன் மற்றும் நந்தி
திருமூலநாதர் மற்றும் அம்மன்
ராமலிங்கர் மற்றும் அம்மன்
முருகன், வள்ளி, தெய்வானை, சிவன் மற்றும் அம்மன்
பிரம்மா
சனீஸ்வரர்
சண்டிகேசுவரர்
மூலஸ்தானம் முன்பு சிறிய நந்தி
கொடிமரம் அருகிலுள்ள பெரிய நந்தி

சன்னதி முகப்பிலுள்ள விக்கிரகங்கள்

துவார விநாயகர்
துவார சுப்பிரமணியர்
மடைப்பள்ளியில் உள்ள அன்ன பூரணி அம்மன்

அம்மன் சந்நிதியிலுள்ள விக்கிரகங்கள்

விநாயகர்
குழல்வாய் மொழி அம்மன்
நந்தி
கைலாசநாதர்
துர்க்கையம்மன்

வெளிப்புறத்திலுள்ள விக்கிரகங்கள்

குறும்பலாநாதர்
விநாயகர் மற்றும் தீபச்சிலை
தெற்கு பிரகாரத்திலுள்ள 73 திருமூர்த்திகள்
விநாயகர் மற்றும் கைலாசநாதர் உட்பட 75 சைலப்பர் மற்றும் நந்தி
வல்லப விநாயகர்
நன்னகரப் பெருமாள் மற்றும் விநாயகர்
நவநீத கிருஷ்ணசாமி

பாப விநாசர் மற்றும் பெரிய சிவலிங்கம்
உலகம்மன்
விநாயகர்
நந்தி
நெல்லையப்பர், காந்திமதியம்மன் மற்றும் நந்தி
மணக் கோலநாதர்
நாறும்பூ நாதர்
விசாலாட்சி அம்மன்

வடக்கு வாசல் சமீபம்

விநாயகர், பெருச்சாளி மற்றும் நந்தி சிவாலய முனிவர் மற்றும் விநாயகர்

அன்னை பராசக்தி சந்நிதியிலுள்ள விக்கிரகங்கள்

தரணி பீடம், அனுக்ஞை விநாயகர் 2,
சப்த மாதர்கள்7, பைரவர்3, பூதநாதர்2,
சுப்பிரமணியர்
துவார சக்தி
சிவலிங்கம்
பைரவர்
நவக்கிரகங்கள்

கோயில் முகப்பு (திரிகூட மண்டபம்)

அம்பல விநாயகர்
ஆறுமுக விநாயகர்
கோயில் தென்பக்கம் செண்பக விநாயகர் (பெரிய

சித்திர சபையிலுள்ள விக்கிரகங்கள்

விநாயகர், பன்றிமாடசாமி, சங்கிலிபூதத்தார், குறவன், குறத்தி, கொடிரதி குற்றால நங்கையம்மன், செண்பகாதேவி அம்மன், விநாயகர், கருப்பன் பைரவர், 18-ம் படி கருப்பசாமி, சின்னத்தம்பி, வரசித்தி விநாயகர்